உள்ளடக்கம்

30-4-1979 **பக்கங்கள்**

1. வினாக்கள் — விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 575—591

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. 591—715

2. அறிவிப்புகள்—

(அ) சட்டசபை குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் குறித்து .. 716—718

(ஆ) மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி குறித்து .. 719

(இ) உறுப்பினர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து .. 752—766

(ஈ) சென்னை பல்கலைக்கழக, மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1979. .. 787

(உ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1979. .. 790

(ஊ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல் கால்நடை பாதுகாப்புச் சட்ட முன்வடிவு 1979 819

(எ) பேரவையின் நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரம் 840

3. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து .. 720, 746—752

(ஆ) அமைச்சர் அவர்கள் சொன்னபடி விவர அறிக்கை வைக்கப்படாதது குறித்து. .. 746

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.—

மதுரையில் தனியார் ஆரம்பப் பள்ளிக் கட்டிட கூரை சரிந்து குழந்தைகள் காயமுற்றது குறித்து. .. 720—726

பக்கங்கள்

5. அரசினர் தீர்மானம்.—

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல். .. 727

(ஆ) பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப் பெறுவது குறித்து 841

6. கவன ஈர்ப்புகள்—

(அ) மேற்குத் தாம்பரம், ரயில் நிலையமருகில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து .. 727—728

(ஆ) இராதாபுரம் தொகுதியில் புயலால் ஏற்பட்ட சேதம் குறித்து .. 728—731

(இ) சென்னை ஓட்டலதிபர்கள் பலகாரங்கள் விலையை உயர்த்த அறிவிப்பு கொடுத்திருப்பது குறித்து .. 731—734

(ஈ) தர்மபுரி காவேரி ரப்பர் தொழிற்சாலை கதவடைப்பு குறித்து .. 734—734

(உ) புளியங்குடி நகர விசைத்தறி நெசவாளர்கள் உண்ணா விரதம் குறித்து .. 734—740

(ஊ) திருச்சி துறையூர் கிராமத்தில் ரெட்டியார் என்ற உயர் சாதியினர் கொண்டாரெட்டி என பொய் சான்றிதழ் பெற்று பிற்பட்ட வகுப்பினர்களுக்கான சலுகைகள் பெறுவது குறித்து .. 740—746

7. அரசினர் தனித் தீர்மானங்கள்—

(அ) நகர்ப்புற நிலவரிச் சட்ட திருத்தம் குறித்து — 766—767

(ஆ) அரசின் வணிக அமைச்சகம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை திருத்தக் கோரியுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து .. 767—787

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சென்னை பல்கலைக் கழகம் மதுரை—காமராசர் பல்கலைக் கழகத் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 787—790

(ஆ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவு, 1979 .. 791—792

பக்கங்கள்

8. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 793—806

(ஈ) அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த (சட்டமுன்வடிவு, 1979 .. 806—816

(உ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 816

(ஊ) மாநகரச் சிறுவழக்கு நீதி மன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு, நீதி மன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பீடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 816—817

(எ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு 1979 .. 818

(ஏ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல், கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1979 .. 819—839

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 841—843

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

சட்டமன்றப் பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

575

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல், 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1 வினாக்கள் விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தல்.

குறுகிய கால வினா எண். 56—திரு. இரா. அமிர்தராஜ்
திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) நடப்பாண்டில், தமிழகத்தில் உள்ள துணை வட்டங்களில் எத்தனை முழு அளவு வட்டங்களாக உயர்த்தப்படும்?

ஆ) புதிதாக உருவாகும் வட்டங்களின் எல்லைகள் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 29 துணை வட்டங்கள் இருக்கின்றன. அந்த 29-ல், 14 இன்றைக்குத் தனி வட்டங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றன. தனி வட்டங்களாக ஆக்கப்படும்போது அங்கே இருக்கும் ஜனத்தொகை, பரப்பளவு, பின்தங்கிய பகுதியா என்பதையெல்லாம் பார்த்து வட்டங்களாக ஆக்கப் பட்டிருக்கின்றன.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனி வட்டங்களாக உயர்த்தப்பட்டதில், சாத்தாங் குளமும் தனி வட்டமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஏற்கெனவே திருச்செந்தூர் வட்டத்தோடு இணைந்திருந்த உடன்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களை சாத்தாங்குளத்தோடு இணைத்திருப்பதாகக் கூறப்படுவது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி எந்தெந்த துணை வட்டங்கள் தனி வட்டங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தந்தத் துணை வட்டங்களிலேயே இருக்கும் கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக எந்தக் கிராமமும் எந்த இடத்திலும் கிராமங்கள் சேர்க்கப்படவில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நல்ல அறிக்கையை அமைச்சர் அவர்கள் தெரிவித்து உள்ளார்கள். அதற்கு என் நன்றி. ஆனால் ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். தற்போது துணை வட்டங்கள், அப்படியே எந்தவித மாற்றமும் இல்லாமல், தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு மாறுபட்டு உடன்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகள் சாத்தன்குளத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

திரு. செ. சிவசாமி : 29 துணை வட்டங்களில் 14 துணை வட்டங்கள் தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. கிழக்கு மாவட்டம் பகுதியில் எந்தெந்த தாலூக்காக்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது சொல்லப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான கேள்வியைக் கேட்க வேண்டாம். அப்படிக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம். நான் ஏற்கெனவே பலமுறை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் அவரிடம் பதில் இல்லாமல் இருக்கலாம். மொத்தத்தில் எத்தனை துணை வட்டங்கள் தனி வட்டங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பது கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்குப் பதில் என்னிடத்தில் இருக்கிறது. நான் பலமுறை ஏற்கெனவே இதற்குப் பதில் கொடுத்திருக்கிறேன். காலத்தை வீணாக்காமல் குறிப்புகளைப் படிக்க வேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 30]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு வட்டங்கள் பிரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தாலூக்காவில் 4 லட்சம் மக்கள் கொண்ட பகுதி . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊருக்கு ஊர் பற்றிய கேள்விகளைக் கேட்டு கொண்டு இருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. வீ. கே. கோதண்டராமன் : இந்தக் கேள்வியில் தமிழகம் முழுவதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் அமைச்சர் அவர்களும் தன்னிடத்தில் விவரங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நீங்கள் ஏன் தடை செய்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்கள் இருக்கின்றன என்று சொன்னதற்காக ஒவ்வொரு ஊரைப்பற்றியும் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்க அனுமதிக்க முடியாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர் தான் பதில் இருக்கிறது, சொல்லுகிறேன் என்று சொல்லுகிறாரே........

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கேள்வி நெல்லை மாவட்டத்தைப்பற்றி கேட்டதாகும். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சிவகிரி இப்போது சப் தாலூகாவாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் சம்பந்தம் இல்லாத கேள்வி. அடுத்த கேள்வி—874.

சிறுதொழில்களுக்கு மின்சக்தி வழங்கல்.

* வினா எண். 874—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாலை 6 மணி முதல் 9 மணி வரையில் உள்ள மின் வெட்டினால் சிறு தொழில்கள் பாதிக்கப்படுவதால் அதை நீக்க வேண்டி அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) மின் வாரிய மட்டத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டு சிறு தொழில்களுக்கு காலை மாலை உச்சகட்டங்களில் தற்போதுள்ள மின் தடையை நீக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

திரு. துரை. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களை நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் தடைகளை நீக்கி, சிறு தொழில்களில் ஈடுபடுகின்றவர் களுக்கு அந்தத் தொழிலில் ஊக்கம் ஏற்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் தடைகளை நீக்க வேண்டும் என்ற வகையில்தான் இந்தக் குழுவை அமைத்து, எந்தெந்த வகையில் இப்படிப்பட்ட தடைகளை நீக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறோம். அதோடு மட்டு மில்லாமல், சிறு தொழில்களானாலும், பெரும் தொழில் களானாலும் இப்போது நலிவுற்ற நிலைமையில் தொழில் நடத்துகின்றவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தைச் செலுத்தாமல் போய்விடுகிறார்கள். ஆகவே, இதைப் புதிதாக அந்த இடத்தில் தொழில் ஆரம்பிக்கின்றவர்கள் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதையும் நீக்கி, புதிதாக தொழில் நடத்த வருகின்றவர்களுக்கு உடனடியாக மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற மின் கட்டணத்தை செலுத்தாதவர்களிடமிருந்து ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் அடிப்படையில் அதை வசூலிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதால், இதன் மூலம் தொழில் வளர்ச்சி பெருகும் என்று நம்பலாம்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தமிழ்நாட்டில் எ. பி. சுவிட்ச் கிடைப்பது சிறு தொழில் நடத்துகின்றவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. இதன் அடிப்படையில்தான் உரிமங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் கிராமங்களிலுள்ள சிறு தொழில்களை நடத்துகின்றவர்களுக்கு பகல் நேரங்களில் சரியாக மின்சாரம் கிடைப்பதில்லை. இரவு 6 முதல் 12 வரையிலும், மதியம் 12 முதல் மாலை 6 மணி வரையிலும் மின்சாரம் கொடுக்கப்பட்டு வருவதால், அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. இதனால் இங்கு வேலை செய் கின்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே காலை யிலிருந்தே மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைதான். கிராமங்களில் சிறு தொழில்களை நடத்துகின்றவர்களுக்கு பகல் முழுவதும் மின்சாரம் கிடைக்கப்பெறவில்லை என்கின்ற குறை நீண்ட நாளாக இருந்து வருகிறது. இந்தக் குறை போகப் போக நிவர்த்தி செய்யப்படும். தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களில் அதிகமாக தொழில்கள் உருவாக வேண்டும் என்ற வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முதல் கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற தொழில்களுக்கு உரிமம் பெறுவதற்கு யூனிட்டு ஐந்து பைசா லெவி போடப்பட்டிருக்கிறது. எ. பி. சுவிட்ச் களைப்பற்றிய தகவல்கள் இப்போது இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவையில் என்னுடைய கேள்விகள் இருக்கின்றன. ஆகவே, முதலாவது அங்கு சென்று விட்டு வந்து பின்னால், இங்கு என்னுடைய கேள்விகளை எடுத்துக்கொள்ளலாம் அல்லவா? அதற்கு தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் மேலவைக்குப் போகலாம். தங்களுடைய கேள்விகள் இங்கு கடைசியில் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சர்களை இப்படி இன்னொரு இடத்திற்கு தாங்கள் அனுப்புவது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மின்சாரத் துறையைப்பற்றித்தான் கேள்விகள் கேட்கிறீர்கள். அந்த அமைச்சருடைய கேள்விகளை பின்னால் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி : எந்த நேரத்தில் மின்வெட்டு வரும் என்பது தெரியாமல் இருப்பதால் ஏற்கெனவே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல திரைப்பட படப்பிடிப்பு நிலையங்களில், அதாவது ஸ்டுடியோக் களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு திடீர் திடீரென்று மின் வெட்டு ஏற்படுவதால், வாகினி ஸ்டுடியோ, ஏ. வி. எம். ஸ்டுடியோ போன்ற ஸ்டுடியோக்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இது குறித்து எந்தெந்த நேரத்தில் மின்வெட்டு இருக்கும் என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

[1979 ஏப்ரல் 30

(முற்பகல் 9·10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்வெட்டு இல்லாமல் மின்சாரம் வழங்க வேண்டும் என்பது தான் குறிக்கோள். மின்வெட்டு ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி மின்வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது இரண்டு நாட்கள் விரிவாக விவாதித்துள்ளோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் மின்வெட்டினால் குடிநீர் பிரச்னை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் இறைக்கின்ற மின்சார மோட்டாரோடு இது இணைக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, இதைப்பற்றி மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தக்க முயற்சி எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓவர் ஹெட் டாங்கில் தண்ணீரைச் சேர்த்து வைத்துக் கொள்ளும்படி விழுப்புரம் நகராட்சிக்கு மாண்புமிகு உறுப்பினர் ஆலோசனை சொல்லலாம்.

திரு, சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த விவசாயிகள் மத்தியிலே குறிப்பாக நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோவில் வட்டாரத்தில் 1 மணி நேரம் கூடினால் 2 மணி நேரம் பாயக்கூடிய அளவுக்குத்தான் மின்சாரம் வழங்கப்படுவதால், அங்குள்ளவர்கள் அமைச்சர் அவர்களுக்கு புகார் அனுப்பியிருக்கிறார்கள். இரண்டு மணி நேரத்திற்கு மேல் மின்சாரம் பாசனத்திற்கு வழங்கப்படாததால் பயிர்கள் தீய்ந்து போகின்றன, ஆகவே, 4 மணி நேரம் மின்சாரம் வழங்குவதற்கான அளவுக்கு சங்கரன்கோவில், கோவில்பட்டி தாலூகா பகுதிகள் பாசன வசதி பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்களா? அதற்கான உடனடியான நடவடிக்கைகள், உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக நமக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. 400

1979 ஏப்ரல் 30]

மெகா வாட் கிடைத்த இடத்திலே, 100 மெகா வாட்கூட கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நெய்வேலி நிர்வாகத்தோடு அரசு தொடர்பு கொண்டது. போதுமான அளவுக்கு நிலக்கரி இல்லை என்கிறார்கள். இருந்தாலும் இந்த கோடை காலத்தில் நெய்வேலி இப்படி நம்மை கைவிடக் கூடாது.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, உடன்குடி பகுதி வெற்றிலை சங்கத் தலைவர் அவர்கள் ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். 24 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை மின்சாரம் அங்கே கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றி கவனிக்கப்படும்.

சென்னையில் உள்ள காமதேனு, சிந்தாமணி சிறப்பங்காடிகள்.

*வினா எண். 875 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள காமதேனு, சிந்தாமணி ஆகிய சிறப்பங்காடிகளுக்கான 1975 முதல் 1977 மார்ச்சு முடிய உள்ள கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் அறிக்கை சபையில் வைக்கப்படுமா?

(இ) இந்தச் சிறப்பங்காடிகளில் ஜவுளி கொள்முதலுக்கென தனியே குழு ஏதும் அமைக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சென்னையில் காமதேனு சிறப்பங்காடியின் கணக்குகள் தணிக்கை கூட்டுறவு ஆண்டு 1975–76-க்கு முடிக்கப்பட்டுள்ளது. 1976–77-க்கான தணிக்கை நடந்து கொண்டு இருக்கிறது.

சிந்தாமணி சிறப்பங்காடியின் 1975-76-க்கான தணிக்கை முடியும் தருவாயிலுள்ளது. 1976–77-க்கு தணிக்கை நடந்து கொண்டிருக்கிறது.

(ஆ) தனிப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை அறிக்கைகள் சபை முன் வைக்கப்படுவது வழக்கமல்ல. அவை சட்ட அவைகளின் நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

(இ) இல்லை.

திரு. வி.கே. கோதண்டராமன்: சார், 1975–76ஆம் ஆண்டுக்கு மட்டிலுமே தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதற்குமேல் தணிக்கை செய்யப்படாததற்குக் காரணம் என்ன ? போதுமான அளவுக்கு தணிக்கை அதிகாரிகள் இல்லையா ? அப்படியில்லை என்று சொன்னால், போதுமான அளவுக்கு தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா ? இப்படி பல ஆண்டு காலமாக தணிக்கை செய்யப்படாமல இருப்பதன் காரணமாக பல ஊழல்கள் மூடி மறைக்கப்படுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை உண்டாகிறது. எனவே, அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தணிக்கை காலம் காலதாமதமாவதால்' உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், இதிலே சில முறை கேடுகள் ஏற்படுகின்றன. இவைகள் அரசின் கவனத்திற்கு வந்து, அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு வீடுகள்

*வினா எண். 876—திரு ஏ. எம், பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு இதற்கு முன்னர் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இம்மாநிலத்தின் பல மாவட்டங்களிலுமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூபாய் 110 இலட்ச மதிப்பீட்டில் படிப் படியாக மூன்றாண்டுகளில் 1978–79-ல் 44 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 200 குடியிருப்புகள் 1979–80-ல் 33 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 150 குடியிருப்புகள் 1980–81-ல் 33 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 150 குடியிருப்புகள் கட்டிட, வகை செய்யும் விதத்தில் வீட்டு வசதி மற்றும் நகர முன்னேற்றத் துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இவ்வாண்டுக்கான பணி நடந்து வருகின்றது.

திரு. அ. மா. பரமசிவன் : பிர்க்கா மையங்களில் வருவாய்த் துறை ஆய்வாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா ?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பிரிக்காவின் எந்த இடத்தில் வீடு கட்டுவது பொதுமக்களுக்கு நன்மை விளைவிக்குமோ அதற்கேற்ற வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அலுவலகத்திற்கும் இடம் ஒதுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி 877 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

எஸ். கொடிக்குளம் பஞ்சாயத்து

*வினா எண். 878 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி எஸ். கொடிக்குளம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி பற்றி அண்மையில் அரசுக்கு புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) புகார் மனு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்துள்ளது.

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரி தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான குற்றச்சாட்டுகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : அந்தக் குற்றச்சாட்டுகள் நகரசுத்தித் தொழிலாளர்களுடைய சம்பள ரூபாயை பொய்க் கையெழுத்திட்டு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள இ. ஓ. சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடைபெறும்போது பெருமாள் என்ற ஒரு ஆள் ஊழலில் சம்பந்தப்பட்டவர் பெரிய இடத்துப் பிள்ளை என்ற காரணத்தால் சில சிபாரிசுகளின் மூலமாகப் பணியில் சேர்க்கப் பட்டிருக்கிறாரா ? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரூராட்சி சிப்பந்திகள் சம்பளப் பட்டுவாடா விதிகளுக்குப் புறம்பான முறைகள் பின்பற்றப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நிர்வாக அதிகாரி தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார், இளநிலை உதவியாளர் சுகாதார மேஸ்திரியிடம் சமாதானம் பெற்று அதன் அடிப்படையில் ஊதிய உயர்வு ஓராண்டுக்காலம் நிறுத்திவைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார். தவறுசெய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. முறைகேடு எதுவும் இல்லை.

வடுகப்பட்டியல் பூமிதான நிலங்கள்

* வினா எண். 879 திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் ஈரோடு தாலுக்கா வடுகப் பட்டி கிராமம் வினோபாஜிநகர் அரிசன மக்களுக்கு பூமிதானத் துறை மூலம் அண்மையில் நிலம்ஏதேனும் வழங்கப்பெற்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சொ. ந. பழனிசாமி : அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால் அரிசன மக்களுக்கு வடுகப்பட்டி கிராமத்தில் பூமி தானம் நிலம் கொடுக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தற்போது கொடுக்கப் படவில்லை. அது பரிசீலிக்கப்படும்.

இறுதி சடங்குகளுக்கான மானியம்

*வினா எண். 880 திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்டோர் இனத்தில் யாரேனும் இறந்து விட்டால் அவர்களது இறுதி சடங்குகளுக்கென ரூ. 50— வழங்க படும் என்று அரசு உத்தரவிட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் அதை ரூ. 100— ஆக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசனஈ, மலைவாழ் மற்றும் அரிசனத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்கள் குடும்பத்தி ல்யாராவது இறந்தால் இறப்பு ஒவ்வொன்றிற்கும் ஈமக்கடன் செய்வதற்கென அரசு ரூ. 50— மானியம் வழங்கும் திட்டம் 1978-79 முதல் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

(ஆ) நிதி உதவியினை ரூ. 100— ஆக அதிகரிக்க உத்தே சம் தற்போது இல்லை

1979 ஏப்ரல் 30]

திரு. வே. கருணாமூர்த்தி : இதுபற்றி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா? வந்திருக்கிறது என்றால் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது 50 ரூபாய் வழங்கப்பட்டு வருவது போதாது என்றும் அதை 200 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்றும் கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை : அரிசனங்கள், மலைவாழ் மக்கள் ஈமச் சடங்குக்காகக் கொடுக்கப்படக்கூடிய 150 ரூபாய் கூட ஊராட்சித் தலைவர்களைக் கேட்டால் ஒன்றிய ஆணையாளரைக் கேள் என்றும் ஆணையாளரைக் கேட்டால் ஊராட்சித் தலைவரைப் போய் கேள் என்றும் அவர்களை அலைக்கழிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதுபற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? இதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கிராமப் பகுதிகளில் ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான் வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அப்படி எந்த ஊராட்சியிலாவது வழங்கவில்லை என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு ஆண்டில் இந்தக் கணக்கின்படி எவ்வளவு செலவு அரசுக்கு ஏற்படுகிறது? 50 ரூபாயை 100 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்துவதற்கு அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20.]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை கிடைத்திருக்கிற தகவலின்படி 3 ஆயிரத்து 857 நபர்களுக்கு 1 லட்சத்து 92 ஆயிரத்து 850 ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது இந்த அரசால். 1978–79 ஆம் ஆண்டில் 4 லட்சத்து 33 ஆயிரம் ரூபாயும் 79-80 ஆம் ஆண்டு 5 லட்சம் ரூபாயும் இதற்கென ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு இருந்தால் எந்தப் பகுதியிலே என்று சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். என் தொகுதியிலே பாண்டலம் கிராமத்திலே சண்முகம் என்ற ஒரு அரிசன நபர் இறந்துவிட்டார். அதற்காக பஞ்சாயத்திடம் பணம் கேட்டால் யூனியனிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். யூனியனிடம் கேட்டால் தாலுகா ஆபீசில் கேளுங்கள் என்று சொல்கிறார்கள், தாலுகா ஆபீஸிலே

கேட்டால் டவுன் பஞ்சாயத்துக்கு அனுப்பிவிட்டார்கள். இந்த நிலைமையில் இதுவரையில் கிடைக்கவில்லை. அதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்ற முறை தெரியாமல் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரோ அல்லது தாலுகா தாசில்தாரோ இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கான விதிமுறைகள் என்ன என்பதைப்பற்றி விளக்கமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்திலே உள்ள தலைவர்கள் தான் அந்த நிதியை வழங்க வேண்டும். அதற்கென சான்றிதழ் பெறவேண்டும். அந்தச் சான்றிதழை முனுசீப் அல்லது ஊராட்சி மன்ற உறுப்பினர் அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் வழங்கலாம். அந்தச் சான்றிதழைப் பெற்ற பிறகு இறந்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அந்த மனுவை ஊராட்சி மன்றத் தலைவரிடம் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லையென்றால் ஒன்றிய ஆணையரிடம் புகார் செய்து அதைப் பெற்றுக் கொள்ளலாம், அதுவும் இல்லையென்றால் அரசின் கவனத்திற் குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர், அந்த நபர் இறந்து பல மாதங்கள் ஆகியும் இன்றைக்குத்தான் கேள்வி மூலம் சொல்லியிருக்கிறார் கள். ஏன் உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வில்லை என்பதற்கு அவர்தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரிசனங் கள் இறந்துவிட்டால் இறுதிச் சடங்கிற்காக 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 100 ரூபாயாக ஆக்க வேண்டும். ஆனால் அந்த நிதியை ஊராட்சிமன்றத் தலைவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவரிடம் பத்து ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆகவே அவர் கொடுக்க முடியாது. வேறு இடத்திலேயும் கேட்டு வாங்க முடியாது. ஆகவே இறந்த உடனே அந்தத் தொகையை பெறு வதற்கு வேறு ஏதாவது ஏற்பாடுகள் செய்வதற்கு உத்தேசம் உண்டா ? அல்லது இதற்காக ஊராட்சி மன்றத்திடம் தனியாக நிதி வைத்திருக்க வேண்டுமென்றும் இறந்துவிட்டால் உடனே கொடுக்க வேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதற்கென 100 ரூபாய் கையிருப்பில் வைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடப்பட்டிருக்கிறது. ஏன் ஊராட்சி மன்றத் தலைவர் அதைத் தரவேண்டுமென்று நியமித்திருக்கிறோம் என்றால் அவர் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் குடியிருப்பவராக இருப்பார், அத்தோடு மக்கள்

1979 ஏப்ரல் 30]

எளிதாக அணுகக்கூடியவராக இருப்பார். தாசில்தார்கள் போன்றவர்களிடம் இதை விட்டால் இழுத்து அடிக்கக் கூடிய நிலைமை வரும், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற காரணத்தால் இப்படி ஆணை யிட்டிருக்கிறோம்.

கல்லாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 881—திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் அரும்பா வூரிலிருந்து கிருஷ்ணாபுரம் வழியே செல்லும் நெடுஞ்சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு உத்தேசித் துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். வி. இராமசாமி: பேரவைத் தலைவர் அவா களே, இதனுடைய மதிப்பு எவ்வளவு, எப்போது இது கட்ட துவங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, மேற்கண்ட இந்த பாலமானது 1979—80 ஆம் ஆண்டு பாகம் இரண்டு திட்டத்திலே சேர்க்கப்பட வேண்டு மென்று தலைமைப் பொறியாளர் அரசுக்குப் பரிந்துரை செய் திருக்கிறார். இந்த பாலம் 6 லட்ச ரூபாய் தோராய மதிப்பிலே செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் இரண் டாம் பாகத் திட்டத்திலே மேற்கொள்வதற்கான வேலைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை

*வினா எண் 882—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள லக்கி நாயக்கன் பட்டி அருகில் உள்ள முஸ்குந்தா நதியின் குறுக்கே அணைக்கட்ட அல்லது (Percolation Tank) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தென் ஆர்க்காடு மாவட்டம், முஸ்குந்தா நதியின் குறுக்கே ஓர் குளம் அமைக்கும் திட்டத்தை ''நடுத்தரப் பாசன திட்டத்தின்'' கீழ் எடுத்துக் கொள்ள விரிவான ஆய்வு தேவைப் படுகிறது. இத்திட்டத்தை ஆய்வு செய்யும்படி மேற்பார்வைப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், திருச்சி, பணிக்கப் பட்டுள்ளார். ஆய்வு எப்பொழுது முடிவுறும் என்பதனை தற்போது கூற இயலாது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களே கல்நாட்டு விழா நடத்துவதாக இருந்தது. அதற்குள்ளே ஆட்சி மாறிவிட்டது. ஆனால் இன்னும் அதுபற்றி ஆய்விலே இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எத்தனை ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது? எப்பொழுதுதான் நிறைவேற்றுவார்கள்? உண்டா இல்லையா என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா அல்லது ஆய்விலேயே இருந்து கொண்டிருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் முதல்வர் அடிக்கல் நாட்டுவதாக இருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இதேபோன்று பல திட்டங்களுக்கு அவர்கள் நாட்டுவதாகச் சொல்லியும், அடிக்கல் நாட்டியும் இருக்கிறார்கள். ஆனால் அணைகள் கட்டப்பட வில்லை. இப்படி மக்களுக்குத் தவறான வாக்குறுதிகளைப் பல பேர் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் இந்த அரசுக்குத் தெரியும். ஆனாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் வாக் குறுதிகள் கொடுத்தால் அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நாங்களெல்லாம் திட்டங்களைத் தீட்டு கிறோம். அதன்படி செயலாற்றி வருகிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவொரு நடுத்தரப் பாசனத் திட்டம் என்ற அளவில் 35 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும் சமீபத்தில் மத்திய அரசின் மூலம் சிறுபாசனத் திட்டங்களுக்கு அடிப்படையில் புதிய 'டெஃபனிஷன்' கொடுத்திருக்கிறார்கள். முதலில் 25 இலட்சம், அதற்குக்கீழ் இருக்கும் திட்டங்களுக்கு சிறுபாசனத் திட்டம் என்று பெயர் இருந்தது. ஆனால் இன்று 5,000 ஏக்கர்களுக்கும் குறைவாகப் பாசன வசதி அடைகின்ற திட்டங் களுக்கெல்லாம் சிறு பாசனத் திட்டங்கள் என்ற புதிய வகுப்பை, புதிய முறையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அதன் விளைவாகக் கூடச் சிறுபாசனத் திட்டங்களின் கீழ்தான் வர முடியும். இதன்மூலம் ஏறக்குறைய 300 ஏக்கர்களுக்குப் பாசன வசதிகள் பெறும். முஸ்குந்தா நதியின் குறுக்கே ஏற்கனவே பத்து அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த

1979 ஏப்ரல் 30]

அணை மூலமாக இன்னும் மீண்டும் எவ்வளவு தூரம் பாசன வசதியை அதிகரிக்க முடியும் என்பதை ஆய்வு செய்யத் தான் திட்ட ஆய்வுக் கோட்டம் மேற்பார்வைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டு, இன்று அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 883 மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகிறது.

கன்னிமாரா பொது நூலகம், சென்னை

*வினா எண் 877—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தில் கிரேடு—I பிபிளியோகிராபர் பதவிகள் காலியிருந்தும் அதை நிரப்பாததற்கு காரணம் ஏதும் உண்டா?

(ஆ) அதை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) & (ஆ): 1976–1977 நிதி ஆண்டு முதல் வெளிநாட்டு ஆங்கில நூல்களை வாங்க கன்னிமாரா பொது நூலகத்திற்கு வருடா வருடம் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. அவ்வாறு வாங்கும் நூல்களை தரம் பிரித்து கைவசமுள்ள நூல்களுடன் சேர்க்க பிபிலியோகிராபர் உதவியாளர்—முதல் நிலை பதவி தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டு, (ஒவ்வொரு வருடமும், நூல்கள் வாங்க அரசின் நிதி ஒதுக்கீடு கிடைத்ததும்) இப்பதவியையும் தொடர அரசு ஆணைப் பெற்று, இப் பதவியும் வருடா வருடம் தொடரப்பட்டு வருகிறது. இதன்படி 1978–1979-ம் நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. ஒரு இலட்சம், அரசு ஆணை எண். 1253, கல்வி, நாள் 7.7.78-ல் அனுமதிக்கப் பட்டதும், இப் பதவியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு 29.10.78-ல் நிரப்பட்டன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த கிரேடு 1 பிபிலியோகிராபர் போஸ்டுக்கு ஏற்கனவே 'அட்ஹாக் ரூல்ஸ்' என்று, ஜி.ஓ. எம்.எஸ். 1133, 21.6.78—ஆம் தேதி வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு கிராஜுவேட்டாக இருக்க வேண்டும், டிப்ளாமா அல்லது டிகிரி லைபரரி சயன்ஸில் பெற்றிருக்க வேண்டும், தாய்மொழி தமிழாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு டைரக்டர் தன் சொந்தக்காரருக்குப் பதவி உயர்வு தர வேண்டுமென்பதற்காக, ஆவுடையப்பன் என்பவருக்குத் தர வேண்டும் என்பதற்காக, தவறாக இந்த அட்ஹாக் ரூலுக்கு விரோதமாக அப்பாயிண்ட் செய்து விட்டும், மேலும்....

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. ரா. கிருஷ்ணன் : இப்படிச் செய்து விட்டு, இப்பொழுது இந்த அட்ஹாக் ரூல்ஸ்க்கு விரோதமாகவே பிபிலியோகிராபர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இது முறையா? இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஏதேனும தவறு இருந்தால் அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும், செங்கோட்டை தாலுக்காவிலேயும் தற்பொழுது நூலக வசதி இல்லாதிருப்பதால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்பொழுது கன்னிமாரா நூலகத்திற்கு ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக அறிகிறேன். அப்படி வெளிநாட்டுப் புத்தகங்களை வரவழைக்கும் பொழுதும்கூட—மார்டன் டெக்னாலஜி சம்பந்தப்பட்ட புத்தகங்கள் அங்கு இல்லை என்ற குறை சொல்லப்படுகிறது—அங்கு செலக்ட் செய்யப்படுவதில் கூட கமிஷன் அதிகமாகக் கிடைக்குமா என்ற நோக்கத்தோடு செலக்ட் செய்வதாகத் தெரிகிறது. நவீன காலத்திற்கேற்ற வகையில் விஞ்ஞான ரீதியில் உள்ள புத்தகங்களை அதிகமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட தவறான முறையிலே புத்தகங்கள் வாங்குவதை இந்த அரசு விரும்பவில்லை. ஆகவே, மக்களுக்குத் தேவையான அல்லது நமது முன்னேற்றத்திற்குத் தேவையான புத்தகங்களை வாங்க வேண்டுமென்றுதான் நாம் வெளிநாட்டுப் புத்தகங்களை வாங்க இந்த நிதி ஒதுக்கீடு செய்கிறோம். குறிப்பாக, வாசகர்களுடைய அபிப்பிராயங்களை இப்படி புத்தகங்கள் வாங்கும் போது நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டால் நல்லது என்ற கருத்தை நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் புத்தகங்கள் செலக்ட் செய்வதைப் பொறுத்த வரையிலே, அதற்கென்று ஒரு நல்ல அறிஞர்களுடைய கமிட்டி நியமிக்கப்படுமா ? இப்பொழுது டைரக்டர் தான் அவருடைய இஷ்டத்திற்கு வாங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே, புத்தகங்களை வாங்க, எக்ஸ்பெர்ட் கமிட்டி மாதிரி நியமிக்க அரசு முன் வருமா ?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு தேவை இருப்பதாக அரசு உணரவில்லை. பிற்காலத்திலே பார்ப்போம்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

'அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி'

வினா 1001—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத அரிசன காலனி எத்தனை, மாவட்ட வாரியாக ?

(ஆ) இவைகளுக்கு உடனடியாகக் குடிநீர் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை :

(அ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டிய காலனிகள் விபரம் வருமாறு :—

வரிசை எண்.	மாவட்டம்.	சென்ற 5 ஆண்டுகளில் குடிநீர் வசதி செய்யப்பட்ட காலனிகள்.	இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டிய காலனிகள்.	நடப்பு ஆண்டில் குடிநீர் வசதி யளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காலனிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	செங்கல்பட்டு	85	261	76
2.	கோயம்புத்தூர்	198	43	42
3.	தர்மபுரி	28	153	15
4.	கன்னியாகுமரி	32	69	8
5.	மதுரை	86	156	9
6.	வட ஆற்காடு	115	119	17
7.	புதுக்கோட்டை	79	116	16
8.	இராமநாதபுரம்	189	206	61
9.	தென் ஆற்காடு	240	73	55
10.	தஞ்சாவூர்	249	195	77
11.	திருச்சிராப்பள்ளி	197	162	36
12.	திருநெல்வேலி	27	56	21
13.	நீலகிரி	23	..	5
14.	சேலம்	85	37	7
		1,633	1,646	445

[1979 ஏப்ரல் 30

(ஆ) அரிசனக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி தரும் திட்டம் படிப்படியாக ஆண்டுதோறும் நிறைவேற்றப்படும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக ரூ. 25 லட்சம் 1979—80-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது. இது தவிர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் ஊராட்சி ஒன்றியங்களும் ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்துதர அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் 1978 மே மாதம் உதகையில் நடைபெற்ற மாநில அரிசன நலக்குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் பேரில், ஏற்கனவே நீர்த்தேக்கத் தொட்டி உள்ள கிராமத்தின் அருகில் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வசதி செய்து தரும் பொருட்டு மாவட்ட அரிசன நல அலுவலர்களிடமிருந்து விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவ்விபரங்களைப் பெற்ற பின் அரசின் நிதி வசதிகளுக்கேற்ப அரிசன காலனிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

'மீன்பிடி கட்டு மரங்கள் தோணிகள்'.

வினா 1002— திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1957 முதல் 1976 வரை தமிழ்நாட்டில் கடலில் மீன்பிடிக்க எத்தனை கட்டு மரங்கள், தோணிகள், மீன்பிடி கப்பல்கள், ஸ்டீமர் படகுகள் உபயோகப்படுத்தப்பட்டன?

(ஆ) எத்தனை மீனவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்?

(இ) என்ன மதிப்புள்ள மீன்? என்ன ரகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது?

விடை:

(அ) 1957-ம் ஆண்டு முதல் 1976-ம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் கடலில் மீன் பிடிக்க உபயோகப்பட்ட —

கட்டுமரங்கள்	..	33,762
நாட்டுப்படகுகள்	..	7,790
விசைப்படகுகள்	..	2,133
நீராவிப் படகுகள்	..	இல்லை

(ஆ) 1977—வது ஆண்டில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் — 2,74,424.

(இ) 1977—78-ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன்களின் எடை — 6,876 டன்.

மதிப்பு — ரூ. 2,158.11 இலட்சம்.

வகைகள்: பல்வகை இரால், கணவாய் மீன், கருவாடு, சுறா முதலியன.

1979 ஏப்ரல் 30]

'நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உலக வங்கிக் கடன்.'

வினா 1003 —திரு. வி. கே. கோதண்டராமன் : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத்திட்டத்திற்காக உலக வங்கியிடம் 111 கோடி ரூபாய் கடனாக கேட்டிருப்பது உண்மையா ?

(ஆ) என்ன ஆனது ? விபரம் ?

விடை :

(அ) & (ஆ) ஏரிகளை நவீனப்படுத்தவும், அவற்றின் நீரை சிக்கன முறையில் பயன்படுத்தவும், இவற்றின் ஆயக்கட்டு களில் நவீன பாசனம் மற்றும் வேளாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதற்கான பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியுதவிக்காக இத்திட்டம் உலக வங்கிக்கு மத்திய அரசு மூலம் அனுப்பப்பட வேண்டியுள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் கட்டத்தில் சுமார் ரூ. 193 கோடி செலவிடப்படும். இதன்கீழ் ஒவ்வொன் றும் 500 ஏக்கரும் அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டுக்களைக் கொண்ட 500 ஏரிகளை குறித்து பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 6 இலட்சம் ஏக்கர் நிலம் பயன்பெறும். இத் திட்டத்திற்கான திருத்திய அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

'நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வேலை இழப்பிற்கு உள்ளானவர்கள்.

வினா : 1004—திரு. மு. ஆம்பிகாபதி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசின் தற்போதைய உணவுக் கொள்கை யின் காரணமாக தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷனி லிருந்து வேலையிழப்பிற்கு உள்ளாவோர் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களில் எத்தனை பேருக்கு மாற்று வேலை தர அரசிடம் திட்டம் உள்ளது ?

விடை :

(அ) 114 நபர்கள்.

(ஆ) இவர்களில் கீழ்க்கண்ட இனங்களில் மொத்தம் 47 நபர்கள் மீண்டும் வேலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்:—

பட்டியல் எழுத்தர்கள்	..	17	நபர்கள்
சிப்பம் கட்டுபவர்கள்	..	10	,,
காவலர்கள்	..	17	,,
கடைநிலை ஊழியர்கள்	..	3	,,
		47	,,

அக்டோபர் 1977 முதல் புதிய உணவுக் கொள்கையை செயல் படுத்துவதன் காரணமாக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் 1,685 பணியாளர்கள் உபரியாக இருந்தனர். அவர்கள் அனைவரையும் பணி நீக்கம் செய்தால் அவர்களுக்கு சங்கடம் ஏற்படும் என்ற காரணத்தால் 1,571 பேர்களை தொடர்ந்து பணியில் (தேவைக்கு மேல் இருந்த போதிலும் கூட) வைத்துக் கொண்டு 114 பேர்களை மட்டும் பணிக் குறைப்பு செய்யப்பட்டது. அந்த 114 பேர்களில் 47 பேர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவர் பதவிகள்

வினா 1005—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லாத காரணத்தால் உடனடியாக டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை : புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் மொத்தம் 7 டாக்டர்களின் பதவிகள் காலியாக உள்ளன. தமிழ்நாடு தேர்வு ஆணைக் குழுவால் தேர்ந்து எடுக்கப்பட்ட டாக்டர்களை, தமிழ்நாடு மருத்துவப் பணியில் நியமிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதில் ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், காலியாக உள்ள பதவிகளை உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரூர் மருத்துவமனை.

வினா 1006 - திரு. எம். அண்ணாமலை ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரூர் மருத்துவமனையை நவீன வசதியோடு புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

விடை : தற்போது இல்லை.

1979 ஏப்ரல் 30]

ஆண்டியப்பனூரில் புதிய அணைக்கட்டு.

வினா 1007 : திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்காவிலுள்ள ஆண்டியப்பனூர் கிராமம் என்னுமிடத்தில் ஒரு புதிய அணைக்கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை : (அ) & (ஆ) : இத்திட்டம் பொருளாதார ரீதியில் உகந்ததாக இல்லாத காரணத்தால் மறு ஆய்வு செய்யப்படுகிறது.

சுண்டைக்காமுத்தூர் புறம்போக்கு நிலம் ஆக்ரமிப்பு.

வினா 1008 : திரு. ஆ. நடராசன் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பேரூர் ஒன்றியம் சுண்டைக்காமுத்தூர் கிராம அரிசன மக்களின் 'மதுரை வீரன்' கோவில் தனியாரால் கைப்பற்றப்பட்டதா ?

(ஆ) அந்த நிலம் 'புறம்போக்கு' என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை : (அ) ஆம்.

(ஆ) ஆம். அந்த நிலம் புறம்போக்கு என்று தெரியவந்தது.

(இ) அந்த நிலத்தில் ஆறு ஆக்கிரமிப்புக்கள் இருந்தன. அவற்றில் ஒன்று திருமதி பாக்கியலட்சுமி அம்மாள் என்பவருடையது. திருமதி பாக்கியலட்சுமி அம்மாள் பெரிய பட்டாதார் என்ற முறையிலும், அவருடைய ஆக்கிரமிப்பு மதுரைவீரன் கோயிலுக்கு இடைஞ்சல் என்ற காரணத்தினால் 6-ம் நெம்பர் வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 19-3-1979 அன்று அவருடைய ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது.

மற்ற ஐந்து ஆக்கிரமிப்புகள், சாலை ஓரத்தில் உள்ளதால் சாலைக்கு இடைஞ்சலெனக் கருதப்பட்டு, ஆட்சேபனையாக பாவிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆக்கிரமிப்பிற்கும் தரம் தீர்வையும், தலா ரூ. 10 வீதம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வைந்து ஆக்கிரமிப்புகள் மதுரை வீரன் கோயிலுக்கு இடையூறாக இல்லை என்ற காரணத்தால் அவைகளை அகற்ற உத்தரவு போடவில்லை.

[1979 ஏப்ரல் 30

திருச்சி மாவட்டம் கிராமப் பகுதிகளின் சாலைகள்.

வினா 1009 : திரு. ரா, மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி ஜில்லாவில் தளவாய், சன்னாசிநல்லூர், தத்தனூர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் பெரு உளைமண் காரணமாக போக்குவரத்துக்கு வசதி அற்ற நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அக்குறையை போக்க அங்கு கம்பிச் சாலைகள் அமைக்கும் திட்டம் உண்டா ?

விடை : (அ) ஆம்.

(ஆ) கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் இச்சாலைகளை மேம்பாடு செய்ய பரிசீலனை செய்யப்படுகின்றன.

செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

வினா 1010 : திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போககுவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1975 முதல் 1978 சனவரி வரை செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய இரு மாவட்டங்களிலும் எத்தனை புதிய பேருந்து வழித்தடங்கள் ஆரம்பிக்கப்பட்டன ?

(ஆ) அவற்றுள் எத்தனை வழித் தடங்களுக்கு நீதி மன்றங்களினால் தடை விதிக்கப்பட்டுள்ளது ?

(இ) இதில் டவுன் பஸ்கள் எத்தனை ?

(ஈ) எத்தனை வழித்தடங்கள் ஆரம்பிக்காமல் நிலுவையில் உள்ளன ?

விடை : (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 41 புதிய பேருந்து வழித்தடங்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் 74 புதிய பேருந்து வழித்தடங்களும் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 5 வழித்தடத்திற்கும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு வழித்தடத்திற்கும் நீதி மன்றத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 3 டவுன் பஸ்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் 27 டவுன் பஸ்களும் ஒடுகின்றன.

(ஈ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 21 வழித் தடங்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் 12 வழித் தடங்களும் ஆரம்பிக்காமல் நிலுவையில் உள்ளது.

1979 ஏப்ரல் 30]

அரக்கோணம், வாலாஜா பகுதிகளில் சாலைப் பணிகள்.

வினா 1011— திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், வாலாஜா அகிய இரு டிவிஷனில் 1972 ஏப்ரல் முதல் இன்று வரை வருடவாரியாக சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதில் வருட வாரியாக தாங்கு கூலிகள் சம்பளங்கள் எவ்வளவு?

விடை— (அ) — (ஆ) ஒரு * விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

பழனி வட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 1012— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனித் தாலூகாவில் அரிசனங்கள் எத்தனை பேர் வசிக்கிறார்கள்?

(ஆ) அவர்களில் சொந்த குடியிருப்பு வீடு இல்லாதவர்கள் எத்தனை பேர்?

(இ) இதுவரை அரிசன நலத்துறை மூலம் எந்தெந்த ஊரில் எவ்வளவு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது?

விடை— (அ) பழனி வட்டத்தில் 61,319 அரிசனங்களைக் கொண்ட 13,580 குடும்பங்கள் வசிக்கிறார்கள்.

(ஆ) அவர்களில் சொந்தக் குடியிருப்பு வீடு இல்லாத குடும்பங்கள் 1,719.

(இ) வீடுகள் கட்டி கொடுக்கப்பட்ட விவரங்கள் பின் வருமாறு:—

கிராமத்தின் பெயர்.	கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
1. ஆயக்குடி	15
2. சி. கலயம்புத்தூர்	16
3. புலியூர் நத்தம்	16
4. முத்து நாயக்கன்வலசு	1

*[844-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

கிராமத்தின் பெயர்.	கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
5. அப்பானூத்து	10
6. பெரலூர்	10
7. கோடங்கபட்டி	1
8. புளியமரத்துக்கோட்டை	9
9. மேலக்கோட்டை	1
10. தங்கச்சியம்மாபட்டி	1
11. அமரப்பூண்டி	1
12. காரியம்பட்டி	57
13. பால சமுத்ரம்	21
14. ஏ. கலயம்புத்தூர்	10
15. மார்கம்பட்டி	16
16. சோரிக்கடவு	16
17. பாப்பம்பட்டி	20
18. காவல்பட்டி	10
19: மானூர்	1
20. முடப்பாடி	1
21. வாகரை	1
22. கோபாலபுரம்	39
23. பச்சலநாயக்கன்பட்டி	41
24. கீழ ஆயக்குடி	60
25. வெரியபூர் ..	24
மொத்தம்	398

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 எப்ரல் 30]

அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது கைதானவர்கள்.

வினா 1013—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அவசரகால சட்டம் பிரகடனப்படுத்திய உடன் 31-1-1976 வரை கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? கட்சி வாரியாக?

விடை—அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடன் அதாவது 25-6-1975 முதல் 31-1-1976 முடிய கைது செய்யப் பட்டவர்கள் விபரம் வருமாறு :—

(அ) இந்திய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்—

1.	ஆர். எஸ். எஸ். எஸ்.	12
2.	ஜமைத்-ஈ-இஸ்லாமி-ஈ-இந்து	9
3.	கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு-லெனிஸ்டு)	20
4.	ஆனந்த மார்க்	4
5.	அ. தி. மு. க.	9
6.	தி. மு. க.	37
7.	காங்கிரஸ் (ஸ்தாபனம்)	5
8.	காங்கிரஸ் (ஆர்)	4
9.	இந்திய கம்யூனிஸ்டு	1
10.	அரிசி மற்றும் உணவுப் பொருட்களை சட்ட விரோதமாகக் கடத்தியவர்கள்.	19
11.	சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டோர்	15
12.	மற்றவர்	124
	மொத்தம்	259

(ஆ) டி. ஐ. எஸ். ஐ. ஆர். (D. I. S. I. R.) விதிகளின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள்—

1.	ஆர். எஸ். எஸ். எஸ்.	24
2.	ஜமைத்-ஈ-இஸ்லாமி-ஈ-இந்து	5
3.	கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு-லெனிஸ்டு)	15
4.	பாரதிய ஜனசங்கம்	68
5.	காங்கிரஸ் (ஸ்தாபனம்)	35
6.	காங்கிரஸ் (ஆர்)	10
7.	இந்திய கம்யூனிஸ்டு கட்சி	4
8.	மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி	15
9.	தி. மு. க.	4
10.	தி. க.	4
11.	அ. தி. மு. க.	1
12.	சோஷலிஸ்ட் கட்சி	6
13.	மற்றவர்கள்	74
	மொத்தம்..	265

கொடைக்கானல் பகுதியில் மருத்துவ வசதிகள்.

வினா 1014—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தினாவரை, போளூர், பூண்டி, கவுஞ்சி, கூக்கால், புத்தூர், பழம்பித்தூர், வில்பட்டி, பூம்பாரை, அடுக்கம் ஆகிய இடங்களில் மருத்துவ வசதிகள் அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் அனைத்தும் கொடைக்கானல் பஞ்சாயத்து யூனியனில் அடங்கியுள்ளன. கொடைக்கானல் யூனியனில் பண்ணைக்காடு, கொடைக்கானல் தாண்டிக்குடி ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனைகளும், மன்னவனூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றன. மேலும் கூக்கால், பூம்பாரை, பூலத்தூர், பல்லதுகடவு ஆகிய இடங்களில் தாய் சேய் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. இது தவிர பண்ணைக்காடு, மங்களகொம்பு, குப்பம்மாள்பட்டி, பெருமாள்மலை, வில்பட்டி மற்றும் பூண்டி ஆகிய இடங்களில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தின் கீழ் தாய் சேய் நல விடுதிகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 30]

பேறுவுள்ளி கிராம அரிசனங்களுக்கு மனைப்பட்டாக்கள்.

வினா 1015—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காவேரிப்பட்டணம் தொகுதி பேறுவுள்ளி கிராமத்திலுள்ள அரிசன மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா ?

விடை— தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி பேறுவுள்ளி கிராமத்தைச் சேர்ந்த 27 அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொக்காபூர் கிராமத்திற்குப் பாசன வசதி.

வினா 1016—திரு. கே. உச்சி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம் சோலூர் ஊராட்சியைச் சேர்ந்த பொக்காபூர் கிராமத்தில் தரிசாக கிடக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் பூமியில் விவசாயம் செய்ய பாசன வசதி செய்யக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது ?

விடை— (அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது,

காரியந்தல் கிராமத்தில் நரிக்குறவர்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 1017—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் காரியந்தல் கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் எவ்வளவு பேர் வீடு இல்லாமல் வசித்து வருகிறார்கள் ?

(ஆ) அவர்கள் வீட்டு மனை கேட்டு அரசுக்கு விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—(அ) வட ஆற்காடு மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் காரியந்தல் கிராமத்தைச் சேர்ந்த 32 நரிக்குறவர் குடும்பங்களில் 15 குடும்பங்கள் நெடுங்காலமாக அண்மையிலுள்ள நகரங்களில் வசிக்கிறார்கள். எஞ்சியுள்ள 17 குடும்பங்களும் வீடு இல்லாமல் மேற்படி கிராமத்தில் தற்காலிகமாக வசித்து வருகிறார்கள்.

(ஆ) அவர்கள் வீட்டுமனை கேட்டு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

(இ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், தென் பள்ளிப்பட்டு கிராமத்தில் ஏற்கனவே இந்த நரிக்குறவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அந்நிலங்களை விற்றுவிட்டு தற்போது திருவண்ணாமலை வட்டத்திலுள்ள காரியந்தல் கிராமத்தில் தற்காலிகமாகக் குடியேறி வேறு மனை வேண்டியுள்ளார்கள். மேற்படி காரணங்களால் அவர்களுக்கு வீட்டு மனை வழங்கத் தேவை இல்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் கருத்து தெரிவித்துள்ளார்.

மணல்மேடு பேரூராட்சி நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள்

வினா 1018—திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் மணல்மேடு பேரூராட்சியில் பணிபுரியும் நகரசுத்தி தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்கிடும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—தற்போது இல்லை.

சங்கராபரணி ஆற்றுப்பாலம்.

வினா 1019—திரு. செஞ்சி என். இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செஞ்சி—திண்டிவனம் சாலையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புது பாலம் கட்டும் செயற்குறிப்பு உண்டா ?

விடை—தற்போது இல்லை

1979 ஏப்ரல் 30]

தொழிற் பயிற்சிப்பள்ளி விடுதிக் காப்பாளர், உடற்கல்வி ஆசிரியர்கள் சம்பளம்.

வினா 1020—திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ. டி. ஐ. யில் உள்ள விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், கல்லூரி பாலிடெக்னிக்களில் உள்ள விடுதிக் காப்பாளர் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் வழங்கப்படும் சம்பளத்திலுள்ள வேறுபாட்டினை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

மூன்றாவது மாநில ஊதியக்குழு, விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி பயிற்றுநர் உட்பட பல்வேறு வகையான பணியாளர்களின் ஊதிய விகிதங்களை விரிவாக பரிசீலித்தது. அக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் கீழ்க்கண்டவாறு அன்னாரின் ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன :—

பதவியின் பெயர்.	சாதாரண நிலை ஊதிய விகிதம்.	தேர்வு நிலை ஊதிய விகிதம்.	ஸ்பெஷல் கிரேடு ஊதிய விகிதம்.
(1)	(2)	(3)	(4)
ஐ. டி. ஐ. விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற் பயிற்சி பயிற்றுநர்	ரூ. 400–15–490–20-650-25-700	ரூ. 450–20–590–25-740-30-800	
பள்ளிப் பிரிவு & கல்லூரிப் பிரிவு			
உடற் பயிற்சி பயிற்றுநர்.	ரூ 350–10–420–15–600.	ரூ. 400–15–490–20–650 25–700	ரூ. 450–20 590–25- 740–30–800

பள்ளிப் பிரிவு, கல்லூரிப் பிரிவுகளில் விடுதி கண்காணிப்பாளர் பதவி இல்லை. துணை விடுதி காப்பாளர் பதவிதான் உள்ளது.

[1979 ஏப்ரல் 30

நத்தம்பகுதிக்கு நடமாடும் மருத்துவமனை

வினா 1021— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், நத்தம் பகுதியில் நடமாடும் மருத்துவ மனை ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

மதுரை மாவட்டத்தில் நான்கு மருத்துவக் குழுக்கள் இயங்கிவருகின்றன. நத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்சமயம் மூன்று மருத்துவ அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழு ஒன்று அரசால் ஒப்பளிக்கப்பட்டு இக்குழுவும் 3 10-1978 முதல் இயங்கி வருகிறது. இக்குழு மூலமாக நத்தம் பகுதிவாழ் மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் வாய்ப்பேற்பட்ட காரணத்தால் இப்பகுதியில் வேறு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை.

கோவையில் தொழில் கண்காட்சி.

வினா 1022— திரு. ஆ நடராசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் தொழில் கண்காட்சி உருவாக்கும் செயல்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

விடை—

(அ) கோவையில் பொருட்காட்சி நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கோவை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பொருட் காட்சி நடத்துவது பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

கோவையில் 'அண்ணா நகர் திட்டம்'.

வினா 1023—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் உள்ள பொன்னைய ராஜபுரத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் 1973–74–ம் ஆண்டு '' அண்ணா நகர் திட்டம்'' என்ற பெயரில் ஏற்படுத்திய வீடு கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இத்திட்டத்திற்காக பொது மக்களிடம் நபருக்கு ரூ. 100 வீதம் விண்ணப்பத்துடன் பெற்ற தொகை எவ்வளவு ?

1979 ஏப்ரல் 30]

விடை —

(அ) கோவை நகரத்தில் உள்ள பொன்னைய ராஜபுரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தி உள்ள அண்ணா நகர் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்காக அப்பகுதியிலுள்ள 175 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை இணைந்த முறை நகர வளாச்சி திட்டத்தின் கீழ் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூபாய் 1,11,400.

சிதம்பரம் வட்டத்தில் புயல் பாதுகாப்புக் கூடங்கள்

வினா 1024 — திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டத்தில் மகாரஷ்டிர மாநில உதவி யுடன் புயல் நிவாரணமாக வீடுகள் கட்டவும், புயல் பாதுகாப்பு ஷெட் கட்டவும் எத்தனை இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன ?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன ?

விடை —

(அ) & (ஆ) மஹாராஷ்டிர மாநிலப் பொதுமக்கள் புயல் நிவாரணக் குழு அளித்த நன்கொடைத் தொகை ரூ. 250 இலட்சங்களைக் கொண்டு தமிழ் நாட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் 5 சமுதாயப் புயல் பாதுகாப்புக் கூடங்களையும். 10 குடிசை குடியிருப்புகளையும் கட்டுவதற்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன. இவற்றுள் சிதம்பரம் வட்டத்தில் கட்டப்படும் பாதுகாப்புக் கூடங்கள், குடிசைக் குடியிருப்புகளின் விபரங்களாவன :—

பாதுகாப்புக் கூடங்கள்.	குடிசைக் குடியிருப்புகள்.
(1) வல்லம்படுகை	(1) வல்லம்படுகை
(2) பிச்சாவரம்	(2) பிச்சாவரம்
(3) ஜயங்கொண்டபட்டினம்	(3) ஜயங்கொண்டபட்டினம்
	(4) எல்லேரி
	(5) சி. சாத்தமங்கலம்
	(6) திருநரையூர்
	(7) சிறகிழந்தநல்லூர்

[1979 ஏப்ரல் 30

அவினாசியில் புதிய மருத்துவமனை

வினா 1025— திரு. சொ, நா. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசியில் ஒரு மருத்துவமனையும், சேவூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் நடப்பு ஆண்டில் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அவினாசி பகுதியில் சாலைகள் பராமரிப்பு

வினா 1026— திரு, சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அன்னூர் பேரூராட்சியைச் சார்ந்த சொக்கம்பாளையம் காக்காபாளையம் சாலையையும், போகளூர் ஊராட்சியைச் சார்ந்த முடுக்கன்துறை-தாளத்துறை சாலையையும் பழுது பார்த்து பராமரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

விடை—

சொக்கம்பாளையம்—காக்காபாளையம் சாலை 1976—77ம் ஆண்டில் பழுதுபார்த்து கப்பி போடப்பட்டது. மேலும் நடப்பாண்டில் ரூ. 3,000 செலவில் இச்சாலையை மேம்படுத்தும் பணியும் நடைபெறவிருக்கிறது,

முடுக்கன்துறை-தாளத்துறைச் சாலையை ஒன்றியப் பொது நிதியிலிருந்து பழுதுபார்க்கப்பட உரிய நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

உப்பளங்கள்

வினா 1027— திரு. சின்னசேலம். மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தற்சமயம் எங்கெங்கு உப்பளங்கள் இயங்கி வருகின்றன ?

(ஆ) அவற்றை நவீனப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

[1979 ஏப்ரல் 30]

விடை : ஒரு விரிவான (*) அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

காமக்கூர் ஏரிக்கு புதிய அடைப்புப் பலகைகள்

வினா 1028 —திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆரணி தொகுதி காமக்கூர், காமக்கூர் ஏரியின் குறுக்கே இரும்பு அடைப்புப் பலகைகள் பொருத்தக்கோரி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

விடை : ஆரணி தொகுதியில், காமகூர் ஏரியில் உபரிநீர் வழியும் பகுதிக்கு இரும்பு பலகை பொருத்தக்கோரி இதுவரை அரசுக்கு மனு ஏதும் வரவில்லை. கேள்வி கமண்டலாற்றின் குறுக்கே உள்ள காமக்கூர் கொண்டத்தில் உள்ள மணல் போக்கி பகுதிகளுக்கு திருகு பலகை பொருத்துவது பற்றியது எனக் கருதப்படுகின்றது. இது குறித்து கிராம குடிமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஓர் மனுவினை அளித்தனர். காமக்கூர் கொண்டத்தில் உள்ள மணல் போக்கிகளுக்கு திருகுபலகை பொருத்தும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

அணைப்பட்டி கிராமத்தில் உள்ள வைகைப் பாலம்

வினா 1029— திரு. அ. பாலுச்சாமி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நிலக்கோட்டை தொகுதியில் அணைப்பட்டி கிராமத்தில் உள்ள வைகைப் பேரணையில் அமைக்கப்பட்ட பாலத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

விடை : இல்லை. இது போக்குவரத்துக்காகக் கட்டப் பட்ட பாலமல்ல. இது பொதுப்பணித்துறை ஆய்வு அதிகாரிகளின் வாகனப் போக்குவரத்திற்கெனவும், நடைபாதையாகவும் பயன்பட்டு வருகிறது. இப்பாலத்தை மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(*) 845-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 30

கூடலூர் பகுதியில் ஆதிவாசிகளது வீடுகளுக்கு வரிவிலக்கு

வினா 1030 — திரு. கே. உச்சி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதி திருச்சி கிழலில் வசிக்கும் ஆதிவாசிகளாகிய 'கோவ்' மக்கள் வீட்டு வரியிலிருந்து விலக்கு கோரி மனு அனுப்பியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை : (அ) ஆம்.

(ஆ) இவர்களின் வீடுகளுக்கு வரிவிலக்கு அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலக்கம்பை-மூப்பர்காடு சாலை

வினா 1031 — திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உதகை தொகுதி, மேலூர் கிராமம் கொலக்கம்பையிலிருந்து மூப்பர்காடு (பழங்குடியினர் வாழும் பகுதி வரை செல்லும் சாலையை கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் ஏர்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

விடை : இல்லை.

மாஞ்சோலை அரசு உயர்நிலைப்பள்ளி

வினா 1032 —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள மாஞ்சோலை எஸ்டேட்டிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு குடியிருக்க வீடு வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆசிரியர்கள் குடியிருக்க வீட்டு வசதி செய்து கொடுக்க அரசு என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது ?

1979 ஏப்ரல் 30]

விடை : (அ) ஆம்

(ஆ) அரசு உயர்நிலைப்பள்ளிகளிலும், அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளியிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக, மாஞ்சோலை அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான குடியிருப்பு உள்பட, எட்டு குடியிருப்புகள் (Quarters) கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தானிப்பாடி ஊராட்சியில் புதிய ஏரி

வினா 1033 — திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தானிப்பாடி ஊராட்சிக்கு புதியதாக ஏரி ஒன்று கட்டி முடிக்கப்பட்டு இன்னும் நிலங்களுக்கு பாசன கால்வாய் வெட்டப்படாமல் உள்ளதா ?

விடை : வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் சிக்கனமற்ற திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட புதிய ஏரியினால் 78 ஏக்கர் நிலங்களே பயன் அடைகின்றது. 150 ஏக்கருக்கு மேல் பயன்பெறும் சிக்கனமற்ற திட்டங்களுக்குதான் கண்ணிவாய்க்கால்களை அரசு அமைத்துக் கொடுக்குமாதலால், இத்திட்டத்திற்கு பட்டாதாரர்களே கண்ணிவாய்க்கால்களை வெட்டிக்கொள்ள வேண்டும்.

வடாற்காடு மாவட்டத்தில் ஏரிகள் தூர் எடுப்பு

வினா 1034— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை - பாசன்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் ஏரி, செட்டிக்குப்பம் ஏரி, பேர்னாம்பட்டு ஏரி, வேப்பூர் ஏரி, பள்ளிகொண்டான் ஏரி, காட்பாடி ஏரி, காவேரிப்பாக்கம் ஏரி ஆகியவை தூர்ந்துவிட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவைகளில் தூர் எடுக்கும் குறிப்பு உண்டா ?

(இ) அதன் விபரம் என்ன ?

விடை : (அ) வினாவில் கூறப்பட்டுள்ள ஏரிகள் ஓரளவு தூர்ந்துள்ளது. வினாவில் குறிப்பிட்டுள்ளபடி குடியாத்தம் ஏரி என்று ஒரு ஏரி இல்லை. செருவங்கி ஏரி என அழைக்கப் படும் ஏரி மட்டுமே குடியாத்தம் நகர எல்லையில் உள்ளது.

(ஆ) ஆம்.

(இ) (i) பள்ளிகொண்டான் ஏரி, வேப்பூர் ஏரி, செருவங்கி ஏரி ஆகிய ஏரிகளை தூர் வாரும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(ii) செட்டிக்குப்பம் ஏரியில் தூர் வாரி மண்ணைப் போடுவதற்கு இடமில்லாததால் இந்த ஏரிக்கு தூர் வாரும் திட்டத்தை மேற்கொள்ள இயலாது.

(iii) காவேரிப்பாக்கம் ஏரியில் தூர்வாரி மண்ணைப் போடுவதற்கு இடமில்லாததாலும், ஏரியில் வருடாவருடம் தண்ணீர் இருப்பதாலும் தூர்வாரும் திட்டம் மேற்கொள்ள இயலாது. இந்த ஏரியில் இழந்துள்ள கொள்ளளவை சரி செய்ய ஏரியின் முழு நீர்மட்ட அளவை 6 அங்குலம் உயர்த்தி ஏரியைச் செப்பனிட உத்தேசிக்கப்பட்டு ஒரு மதிப்பீடு ரூ. 4.75 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(iv) பேரணாம்பட்டு ஏரியை தூர்வாரி புனரமைக்க ஊராட்சி ஒன்றியத்தினரால் ஒரு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.

(v) காட்பாடி ஏரியில் தூர் எடுக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. இந்த ஏரிக்கு மராமத்து செய்வதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெற்றபின் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

தானையார் ஓடைப்பாலம்

வினா 1035— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லிலிருந்து அக்கறைப்பட்டு வழியாக செங்குறிச்சி வரை செல்லும் சாலையில் தானையார் ஓடையில் சிமெண்ட் குழாய்களால் கட்டப்பட்ட பாலம் சமீபத்தில் பெய்த மழையினாலும் வெள்ளத்தாலும் சேதமடைந்து, அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உயரமாக கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை : (அ) ஆம்.

(ஆ) தாம்போகி வேண்டிய அளவிற்கு சீர்செய்யப் பட்டுள்ளது. உயரமாகக் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

1979 ஏப்ரல் 30]

சேலம் கண்ணாடி தொழிற்சாலை தொழிலாளர்கள்

வினா 1036 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் கிளாஸ் பேக்டரி தொழிலாளர் பொது பிரச்னைகள் தீர்க்கப்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை : அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

(அ) தமிழ்நாடு இடர் துடைப்பு நிறுவனங்கள் (தனி ஏற்பாடுகள்) சட்டம், 1969-ன் கீழ் இத்தொழிற்சாலையை ஓர் இடர் துடைப்பு நிறுவனமாக 13-10-1977 நாளிட்ட அரசு ஆணையால் பிரகடனம் செய்துள்ளது.

(ஆ) முதல்வர் துயர் துடைப்பு நிதியிலிருந்து 330 நிரந்தர தொழிலாளர்களுக்கும் தலைக்கு ரூ. 100 வீதம் 1-10-1977 அன்று வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் அலங்கார வளைவுகள்

வினா 1037 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகரில் அலங்கார வளைவுகள் அமைத்திட தடை ஏதும் விதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திண்டிவனம் நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள்

வினா 1038 — திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் நகராட்சி துப்புரவு பொது தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 29 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று தரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை : (அ) திண்டிவனம் நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனு தரப்பட்டது,

(ஆ) 29 கோரிக்கைகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழறிஞர்களுக்கு உதவிப்பணம்

வினா 1039— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் உதவி கோரி எத்தனை பேர்களிடமிருந்து அரசுக்கு விண்ணப்பங்கள் வந்தன ?

(ஆ) அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை ; (அ) 166 பேர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன.

(ஆ) இவர்களில் 33 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 100/—உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அருப்புக்கோட்டை பகுதியில் ராட்சத கிணறுகள்

வினா 1040 —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) அருப்புக்கோட்டை பகுதியில் ராட்சத கிணறுகள் தோண்ட அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை கிணறுகள் ?

(இ) அதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

விடை : (அ) & (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் 6 அடி விட்டமுள்ள ஆறு பெரிய குழாய் கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன.

(இ) ரூபாய் 1·32 இலட்சம்.

1979 ஏப்ரல் 30]

உள்ளாட்சிமன்றப் படிப்பகங்கள்.

வினா 1041— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நகராட்சி, ஊராட்சி மன்றங்களின் படிப்பகங்களில் எந்தெந்த மாத, வார, தின இதழ்களை அரசு அனுமதித்துள்ளது ?

விடை —படிப்பகங்களுக்குத் தேவையான இதழ்களை தாமாகவே வாங்கிக் கொள்ளலாம். அரசின் அனுமதி தேவையில்லை —

மாயூரம் மருத்துவமனையில் தொழுநோய்ப்பிரிவு.

வினா 1042 : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் அரசினர் மருத்துவமனையில் தொழுநோய் பிரிவு இயங்கி வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கென முழுநேர உதவி மருத்துவர் உள்ளாரா ?

(இ) தொழுநோய் பிரிவுக்கென தனியாக எத்தனை படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது ?

விடை : (அ) ஆம். (ஆ) ஆம். (இ) இந்திய அரசின் நிதி உதவியுடன் 20 படுக்கைகள் கொண்ட தற்காலிகமாக தங்கி சிகிச்சை பெறும் வார்டு ஒன்றை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

துரிஞ்சாபுரம் ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் தமிழாசிரியர்கள்.

வினா 1043 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் நியமனம் செய்யப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தமிழ் ஆசிரியர் நியமனம் செய் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை : (அ) மற்றும் (ஆ) தமிழாசிரியர் நியமனம் செய்ய தகுதியுள்ள நடுநிலைப்பள்ளிகள் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றுமில்லை.

[1979 ஏப்ரல் 30

செங்கம்-அமிர்தி சாலை

வினா 1044— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கத்திலிருந்து ஜம்னாமத்தூர் வழியாக அமிர்தி வரை சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(இ) திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

விடை : (அ) இல்லை. ஏனென்னில், ஏற்கெனவே வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கத்திலிருந்து ஜம்னாமத்தூர் வழியாக அமிர்தி வரை செல்லும் வனச்சாலை ஒன்று உள்ளது. அது வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஜீப்புகள் லாரிகள், வண்டிகள் முதலியன அச்சாலையின் வழியே செல்லலாம்.

(ஆ) & (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

சித்தவைத்தியச் சங்கத்தின் முறையீடுகள்

வினா 1045—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை 700 ரங்கே கவுடன் வீதியிலுள்ள தமிழ்நாடு பதிவுபெற்ற (பதிவு எண். 77/74) சித்த வைத்தியர்கள் சங்கம் 11-3-78 அன்று சில கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பினார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை ; (அ) ஆம்.

(ஆ) 1. பதிவு பெறாத சித்த மருத்துவர்களைப் பதிவு செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும், பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத சித்த மருத்துவர்கள் அனுபவ முறைகளைத் தொகுத்து உலகுக்கு வெளிப்படுத்த ஊக்கமும் உதவியும் அளித்தல் வேண்டியும் தமிழ்நாடு சித்த மருத்துவர்கள் சங்கம் கேட்டுள்ளது.

2. 1970-ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மையக் குழுச் சட்டம் (Indian Medicine Central Council Act, 1970) 17-வது பிரிவின்படி அச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி பெற்றவர்களை அப்பிரிவு அமுலுக்குக் கொண்டுவரப்

1979 ஏப்ரல் 30]

பட்ட நாளான 1-10-76-க்குப் பின்னரும், சட்ட பூர்வமாகப் பதிவு செய்ய முடியும். ஆனால், அத்தகைய கல்வித் தகுதி பெறாத பரம்பரை மற்றும் பாரம்பரிய சித்த மருத்துவர்களை தற்போது பதிவு செய்வதில் சில சட்ட நுணுக்க பிரச்னைகள் உள்ளதால் அது பற்றி மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப் பட்டுள்ளது.

3. அண்மையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுக்குழு சித்த மருத்துவ அனுபவ முறைகளைத் தொகுப்பது பற்றியும் உதவி செய்வது பற்றியும் ஆய்ந்து வருகின்றது.

கோவை மாவட்டத்தில் வலையர்களால் நடத்தப்படும் பள்ளிகள்.

வினா 1046—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் வலையர்களால் பள்ளிகள் எவையேனும் நடத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிகள் தரத்தை உயர்த்தும் வகையில் அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை: (அ) கோவை மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இராயர்பாளையம் என்ற ஊரில் பள்ளி ஒன்று வலையர்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) இப்பள்ளியை பிற்பட்டோர் நலத்துறை ஏற்று நடத்தும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

மத்தூர் அரசு மருத்துவமனை

வினா 1047—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை தாலூக்கா மாத்தூரிலுள்ள அரசு மருத்துவமனையை இந்த ஆண்டு விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எப்பொழுது தொடங்கப்படும்?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

விடை: (அ), (ஆ) & (இ): மாத்தூரிலுள்ள அரசு மருந்தகத்தில் ரூ. 1 லட்சம் மதிப்பீட்டில் 6 படுக்கைகளுக்கான பகுதியுடன், பிரசவ மற்றும் அறுவை அரங்கம், சிறிய சமையற்கூடம் கட்டுவதற்கான கட்டிடப்பணியை மேற்கொள்ள அரசாணை வழங்கப்படும்.

ஆத்திக்குட்டை கிராமத்தில் பள்ளிக்கட்டிட வேலை

வினா 1048 —திரு. எஸ். என். பழனிச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னூர் ஊராட்சி ஒன்றியம், குப்பனூர் ஊராட்சியில் உள்ள அத்திக்குட்டை கிராமத்தில் சீரணியினர் கட்டிய பள்ளி கட்டிட வேலை முடிந்து விட்டதா?

(ஆ) இல்லை எனில், எப்போது முடிக்கப்பெறும்?

விடை : (அ) இல்லை.

(ஆ) ஒன்றியச் செலவில் விரைவில் முடிக்கப்படும்.

மருத்துவப்பிரிவில் பட்ட மேற்படிப்புக்கு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்வு

வினா 1049: திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத்தில் பட்ட மேற்படிப்புக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் 1970-லிருந்து எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர் ?

(ஆ) மொத்த எண்ணிக்கையில் எத்தனை சதவீதம்?

விடை (அ) & (ஆ) :

வருடம்.	தேர்ந்தெடுக்கப் பட்ட மாணவர் களின் மொத்த எண்ணிக்கை.	தேர்ந்தெடுக்கப் பட்ட தாழ்த்தப் பட்ட மாணவர் களின் எண்ணிக்கை.	மொத்த எண்ணிக்கை யில் சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
1970	332	9	2.7
1971	337	13	3.9
1972	383	20	5.2
1973	444	29	6.5
1974	448	26	5.9
1975	539	32	5.9
1976	523	43	8.2
1977	614	70	11.2

குறிப்பு : மேற்பட்டப்படிப்பில் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட இடம் 5-க்கு மேற்பட்டு இருந்தால் 18 சதவீத கணக்குப்படி இடம் ஒதுக்கப்படுகிறது. 5—க்கு குறைந்த எண்ணிக்கையுள்ள பிரிவிற்கு 18 சதவீதம்படி இடம் ஒதுக்கப் படுவதில்லை.

[1979 ஏப்ரல் 30]

மறைமலை அடிகள் நகரில் ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகள்

வினா 1050—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மறைமலை அடிகள் நகரில் இதுவரை விற்கப்பட்ட மனைகள் எத்தனை ?

(ஆ) அவை எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன?

விடை : (அ) இதுவரை 306 வீட்டு மனைகள், 22 தொழிற் கூட மனைகள் ஆக மொத்தம் 328 மனைகள் மறைமலை நகரில் விற்கப்பட்டுள்ளன.

(ஆ) வீட்டு மனைகள் வருவாய் அடிப்படையில் கீழ்க்கண்ட பிரிவினர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.—

உயர்ந்த வருவாய்ப் பிரிவினர்

நடுத்தர வருவாய்ப் பிரிவினர்

குறைந்த வருவாய்ப் பிரிவினர்

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்.

தொழிற்கூட மனைகள் தொழில்களின் சாத்தியக்கூற்றின் அடிப்படையில் ஆராய்ந்து இதற்கென உள்ள குழுவினால் ஒதுக்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள்

வினா 1051 —திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புகள் உயர் ஜாதியினரின் குடியிருப்புகளின் மையத்தில் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை : (அ) 1976-77-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புகள் உயர் ஜாதியினரின் குடியிருப்புகளின் மையத்தில் அமைக்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1979 ஏப்ரல் 30

நலத்துறைப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம்

வினா—1052 : திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரிசன நலப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் என்ன ?

விடை : அரிசன நலத்துறை ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:35 ஆகும். அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:45 ஆகும்.

மின்வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றுவோர்

வினா 1053—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது மின்சார வாரியத்தில் தினக்கூலியாக வேலை பார்ப்போரின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் கூலி நபர் ஒன்றுக்கு எவ்வளவு ?

விடை : (அ) 38 பேர்கள்

(ஆ) ரூ. 6 (ரூபாய் ஆறு).

நடவடிக்கைகளுக்கு உள்ளான பத்திரிகைகள்

வினா 1054—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் 1977-78-ஆம் ஆண்டில் எந்தெந்த நாளிதழ்கள் பத்திரிகைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

(ஆ) அதற்கான காரணங்கள் யாவை ?

விடை : 1977-78ஆம் ஆண்டில் நாளிதழ்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய (*) விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[*846ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

1979 ஏப்ரல் 30]

மடத்துக்குளம் பகுதியில் அரிசனங்களுக்கு குடியிருப்புகள்

வினா 1055—திரு. கு. ரமணி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உடுமலை தாலுக்கா, மடத்துக்குளம் பேரூராட்சியினரால் அக்ரஹாரம் கண்ணாடிபுதூர பகுதிகளில் நில ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்கு வீடு கட்டவும், நிலம் வழங்கவும் கோரப்பட்டதுண்டா ?

(ஆ) அதற்காக நில மதிப்பின் 25 சதத்தை பேரூராட்சியினரே தர ஒப்புக்கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில் இத்திட்டங்கள் நிறைவேறாமலிருப்பது ஏன் ?

விடை : (அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) பொள்ளாச்சி அரிசன நல தனி தாசில்தார் 17-1-79 அன்று மடத்துக்குளம் டவுன் பஞ்சாயத்து தலைவர் மற்றும் அக்ரஹாரம் கண்ணாடி புதூர் கிராம கர்ணத்தின் முன்னிலையில் அரிசனங்களுக்கு பட்டா வழங்கி, மனைகளையும் பயன்பெறும் அரிசனங்களுக்கு காண்பித்துள்ளார்.

காயாமொழியில் ஓராசிரியர் பள்ளி

வினா 1056—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம், காயாமொழி ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட அரிசன காலனியில் இயங்கி வந்த ஓராசிரியர் பள்ளி தற்போது மூடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனை மீண்டும் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை (அ) ஆம்.

(ஆ) கல்வித்துறை அனுமதி அளிக்கவில்லை.

கொல்லிமலைப் பகுதியில் சாலைகள் பராமரிப்பு

வினா 1057—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலைப் பகுதியிலுள்ள ரோடுகளை பழுது பார்க்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு செலவில் நிறைவேறும் ?

விடை : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 56 இலட்சம்.

Incidence of cataract

Q. No. 1058 : THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether any resarch into the occurrence of cataract of the eye has been conducted in this State in recent times; and

(b) if so, the details thereof?

விடை ; (அ) சமீப காலத்தில் இப்பொருளில் ஆய்வு ஏதும் நடத்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Disposal of dead bodies

Q. No. 1059—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state the procedure adopted to dispose of the dead bodies at the Government Hospitals of persons claimed and unclaimed.

விடை : பேரவை முன் (*) விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

Office of Harijan Housing and Development Corporation

Q. No. 1060 ; THIRU C. MANICKAM ; Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:—

(a) whether the office of the Harijan Housing and Development Corporation is housed in rented buildings at present; and

(b) if so, the details thereof ?

[*848ம் பக்கத்தில் இணைப்பு IVஆக அச்சிடப்பெற்றுள்ளது]

1979 ஏப்ரல் 30]

விடை : (அ) தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகம் தற்போது வாடகைக் கட்டிடங்களில் உள்ளது.

(ஆ) அக்கழகத்தின் தலைமை அலுவலகம் கீழே கொடுக்கப்பட்ட விலாசங்களில் உள்ளது:—

(1) கதவிலக்கம் 5 பி/3 டி. எஸ். பாதர் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி, விழுப்புரம்.

(2) கதவிலக்கம் 5 பி/6 டி. எஸ். பாதர் தெரு, கிழக்கு சண்முகாபுரம் காலனி, விழுப்புரம்.

(3) கதவிலக்கம் 1, எட்வர்ட் வில்லியம்ஸ் லேஅவுட், கன்னியாகுளம் ரோடு, விழுப்புரம்.

Research in Forestry

Q.No. 1061—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Agricultural University in this State has proposed to conduct Research in Forestry; and

(b) if so, the details thereof?

விடை : (அ) மற்றும் (ஆ) ஒரு (*) விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

Incentives for extraction of Rosin and Turpentine

Q.No. 1062—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state ;

(a) whether any incentives are provided by the Government for the Rosin and Turpentine oil extracting plants in this State in the private sector; and

(b) if so, the details thereof?

விடை : (அ) இல்லை. ரெசின் கிடைக்கக்கூடிய பைன் மரங்களை தமிழகத்தில் பயிரிடுவதில்லையாதலால் இவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[*849ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

Q. No. 1063 ; Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether incentives are offered by the Government for the manufacture of d.rivatives from Rosin and Turpentine oils to the private sector; and

(b) if so, the details thereof.

விடை : (அ) ரெசின் டர்பைன்டைன் எண்ணெய் அல்லது இவை சார்புபெற்ற பொருள்கள் கிடைக்கக்கூடிய பைன் மரங்களை தமிழகத்தில் பயிரிடப்படாததால் தமிழ்நாட்டில் தனியார் துறையில் இம்மாதிரி நிறுவனங்கள் கிடையாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Sanitary conditions near Villivakkam st.tion.

Q. N. 1064—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Admini.tration be pleased to state:

(a) whether the Government are aware of stinking drainage water at the School Zone at and near the Villivakkam Railway Station; and

(b) the steps taken by the Madras Corporation to rectify the defects.

விடை : (அ) ஆம்.

(ஆ) இந்த இடத்தில் பாதாள சாக்கடை இல்லாததால் கழிவு நீரை லாரி மூலம் அகற்ற சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Lorry Permits.

Q. No. 1065—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of individuals and firms to which lorry permits have been issued during 1977-78; and

(b) the details of National Permits and State Permits, district-wise.

விடை : (அ) 1. 3,515 2. 297

1979 ஏப்ரல் 30]

(ஆ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன ;—

	மாவட்டம் (1)	தேசிய உரிமம் (2)	மாநில உரிமம் (3)
1.	இராமநாதபுரம்	9	134
2.	தென் ஆற்காடு	2	97
3.	திருச்சிராப்பள்ளி	25	256
4.	தஞ்சாவூர்	2	60
5.	மதுரை	12	392
6.	புதுக்கோட்டை	1	86
7.	வட ஆற்காடு	13	166
8.	கன்னியாகுமரி	..	73
9.	கோயம்புத்தூர்	12	455
10.	தர்மபுரி	7	44
11.	சேலம்	41	410
12.	திருநெல்வேலி	4	163
13.	நீலகிரி	1	155
14.	ஈரோடு	15	279
15.	சென்னை	20	1,006
16.	செங்கற்பட்டு	2	281

Taxis and autorickshaws with defective meters.

Q. No. 1066—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the details of the taxis and autcrichshaws with defective meters detected during the Calendar years 1975, 1976 and 1977 in Madras City,; and

(b) the details of the actions taken against them.

விடை : (அ)

1975	1976	1977
4	43	53

(ஆ) மேற்கூறப்பட்ட வழக்குகளில் 63 வழக்குகளில் உரிமங்கள் நிறுத்திவைக்கப்பட்டு, இதன் மூலம் ரூ. 4,625 இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வழக்குகள் இன்னமும் முடிவாகவில்லை.

Export of bamboos

Q. No. 1067—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) whether bamboos are exported to other States and other Countries and;

(b) if so, the datails of the total quantity so exported and the amount for which exported during the calendar years 1975, 1976-77.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Report of Committee on Nursery Education

Q. No. 10372—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Education be pleased to place on the Table of the House a copy of the Report of the Committee on Nursery Education in Tamil Nadu?

விடை—குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வறிக்கை உரிய நேரத்தில், அவசியமிருப்பின் அவையின் முன் வைக்கப்படும்.

Irrigation tanks around Palani

Q. No. 1073—Thiru S. M. VASAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state

(a) the total number of tanks around Palani available for irrigation purpose;

(b) the number of them in private, Government, Local Administration and HRCE control; and

(c) the acreage irrigated by them?

A:— (a) There are 49 tanks in Palani taluk.

(b) (1) Private tanks-Nil

(2) Government tanks (Public Works Department)-49

(3) Local Administration tanks-Nil

(4) HRCE Tanks—Nil.

(c) 143235 acres.

விவசாயப்பணிகளுக்கான டிராக்டர்கள்.

வினா: 1074—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மாநிலத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் தனியார் வசமுள்ள மொத்த டிராக்டர்கள் எத்தனை?

(ஆ) இந்த டிராக்டர்கள் ஒரு மணிக்கு ரூ 40 உழுவடை வாடகையாக வாங்கப்படுவது அரசு அறியுமா?

(இ) வாடகை விடப்படும் டிராக்டர்களுக்கு வரி உண்டா?

(ஈ) ஆம் எனில், வரியின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

1979 ஏப்ரல் 30]

விடை: (அ) 6,589.

(ஆ) & (இ) 20-4-1976 தேதியிட்ட அரசு ஆணை எண். 893 இல் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, மற்றவர்களின் விவசாய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு மோட்டார் வண்டிகளுக்கான வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதனால் வாடகைக்கு விடப்படும் டிராக்டர்களுக்கு மோட்டார் வண்டிகள் வாகன வரி இல்லை.

(ஈ) எழாது.

அரூர்-சிட்லிங்கி சாலை.

வினா 1075—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தர்மபுரி மாவட்டம் அரூரில் இருந்து கீரப்பட்டி வழியாக சிட்லிங்கி வரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை: தருமபுரி மாவட்டம் அரூரிலிருந்து கீரப்பட்டி வழியாக சிட்லிங்கி வரை சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் தற்போதுள்ள அரூர் கீரப்பட்டி—சித்தேரிச்சாலை 25.6 கிலோ மீட்டர் தூரம் வரை ரூ. 25.00 லட்சம் செலவில், மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் மேம்பாடு செய்யப்படவிருக்கிறது.

'போளூர் வட்டத்தில் அரிசனக் குடியிருப்புக்களில் தீ விபத்து'.

வினா 1076—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டத்தில் எத்தனை அரிசன காலனிகள் தீ பிடித்து எரிந்து மக்கள் அவதிக்குள்ளானார்கள்?

(ஆ) அதில் ஏற்பட்ட பொருள் சேதம் எவ்வளவு?

(இ) அரசு என்ன உதவி செய்துள்ளது?

(ஈ) அரசு உதவித் தொகையை உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்குமா?

விடை: (அ) போளூர் வட்டத்தில் 1-1-76 முதல் 30-6-78 வரை 23 அரிசன காலனிகளில் தீ விபத்துக்கள் ஏற்பட்டன.

(ஆ) பொருள் சேதத்தின் மதிப்பு ரூ. 1,32,535.

[1979 ஏப்ரல் 30

(இ) தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மொத்தம் ரூபாய் 10,500 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

(ஈ) தீ விபத்தில் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் நிவாரணத்தொகையை ரூபாய் 80/-லிருந்து ரூபாய் 100 ஆக 6-6-78 லிருந்து அரசு உயர்த்தியுள்ளது.

'விபத்துக்குள்ளான பல்லவன் போக்குவரத்தில் துரித வண்டிகள்.

வினா 1077—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் பல்லவன் போக்குவரத்துக்கழகத்தின் துரித வண்டிகள் 1977-78-ம் ஆண்டில் விபத்துக்குள்ளானவை எத்தனை?

(ஆ) அதனால் கழகத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?

(இ) அதில் உயிரிழந்தோர் எத்தனை பேர்?

விடை: (அ) 1977-78-ம் ஆண்டு விபத்துக்குள்ளான பல்லவன் போக்குவரத்து கழக துரித வண்டிகளின் விபரம் பின் வருமாறு:—

உயிர் இழப்பு விபத்துக்களில் உள்ளானவை	..	27
பெரும்சேத விபத்துக்களில் உள்ளானவை	..	70
சிறுசேத விபத்துக்களில் உள்ளானவை	..	77
மொத்தம்	..	174

(ஆ) அதனால் பல்லவன் போக்குவரத்துக் கழக (துரிதப் பிரிவு)த்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 80,385.

(இ) அதில் உயிரிழந்தவர்கள் 30 பேர்.

'முதுமலைப் பணியாளர்களது குழந்தைகளுக்கு பள்ளிகளுக்குச் செல்ல வாகன வசதி'

வினா : 1078 திரு. எம். அண்ணாமலை; மாண்புமிகு விசய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட பனாவுக்கு விடையளிப்பாரா:—

''முதுமலையில் உள்ள வனத்துறை மற்றும் பிற அலுவலகப் ணியாளர்களின குழந்தைகள் உள்பட அப்பகுதிப் பள்ளி சிறுவர்கள் சுமார் 10 மைல் தூரத்திலுள்ள கூடலூர் பள்ளிக்குச் சென்று வருவதற்கு இலவசவேன் வசதி உருவாக்கிக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை: முதுமலையில் உள்ள வனத்துறை மற்றும் பிற அலுவலகப் பணியாளர்களின் குழந்தைகள் உள்பட அப்பகுதிப் பள்ளி சிறுவர்கள் கூடலூர் பள்ளிக்குச் சென்று வருவதற்கு இலவச பேவன் வசதி உருவாக்கிக் கொடுக்கும் உத்தேசம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

'தீர்த்தமலையை சுற்றுலா மையமாக்கல்'.

வினா: 1079 திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரூர் வட்டம் தீர்த்தமலையினை சுற்றுலா மையமாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை: தீர்த்தமலை சுற்றுலா மையமாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை. எனினும் அதை மாவட்ட உலாத்தலமாக (District Excursion Centre) வளர்ச்சியடையச் செய்ய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

'சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குப் பரிசுகள்'.

வினா: 1080 திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக்கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அண்மையில் கைக்கடியாரங்களும் எவர் சில்வர் பாத்திரங்களும் அமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிசளிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு கைகடியாரங்களும், பாத்திரங்களும் வழங்கப்பட்டன?

(இ) அவற்றின் மொத்த மதிப்பு எவ்வளவு?

விடை: (அ) ஆம். சேரன் போக்குவரத்துக்கழகம் அதன் அனைத்து மட்டத்திலுள்ள பணியாளர்களின் கடும் உழைப் பாலும், கூட்டு முயற்சியினாலும், ஒருங்கிணைந்த வேலைத் திறனாலும் தொடர்ந்து ஆதாயத்தைப் பெற்றுவருகிறது. மேலும் தொடர்ந்து இப்பணியாளர்கள் வேலை நிறுத்தம் ஏதும் செய்ய வில்லை. எனவே சேரன் போக்குவரத்துக்கழகப் பணியாளர்களை மேலும் தொடர்ந்து திறமையாக செயல்பட ஊக்குவித்தல் பொருட்டு அவர்களுக்கு அளிக்கப்பட்ட 20 சதவித மிகை ஊதியத் துடன் ஒரு சிறப்புப் பரிசும் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது. சேரன் போக்குவரத்துக் கழக இயக்குநர் குழு ஒரு சிறப்புப்

பரிசு திட்டத்திற்கு ஒப்பளித்தது. இத்திட்டத்தின்படி 4 ஆண்டுகளுக்குக் குறைவான பணிபுரிந்தவர்களுக்கு ரூபாய் 175 மதிப்புள்ள பரிசுப்பொருளும், நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பணிபுரிந்தவர்களுக்கு ரூபாய் 250 மதிப்புள்ள பரிசுப் பொருளும் வழங்க தீர்மானிக்கப்பட்டது. இப்பரிசு பெறத் தகுதியுள்ள பணியாளர்களுக்கு ஒரு எச். எம். டி கைக்கடியாரம் அல்லது எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட்டன.

(ஆ) கைக்கடியாரங்கள் வழங்கப்பட்டவர்கள்	. 2697
எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட்டவர்கள் ..	790
மொத்தம் ..	3,487

(இ) கைக்கடியாரங்கள் ..	ரூ. 5,82,735·48
எவர்சில்வர் பாத்திரங்கள் ..	ரூ. 1,28,357·17
மொத்தமதிப்பு ..	ரூ. 7,11,092·65

'சூரிய வெப்பத்தால் இயங்கும் பிஸ்டன் என்ஜின்கள்.'

வினா: 1081 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சூரிய வெப்பத்தினால் இயங்கக்கூடிய பிஸ்டன் என்ஜின்களைக் கண்டுபிடிக்க தமிழக அரசு ஊக்கம் செலுத்தி வருகின்றதா?

விடை: இல்லை.

'சுந்தக்கவுண்டர் சாவடியில் கைப்பற்றப்பட்ட அரிசி மூட்டைகள்'.

வினா: 1082 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் கோவைக்கு அருகிலுள்ள சுந்தக்கவுண்டர் சாவடியிலுள்ள ஒரு அரிசி மில்லில் கணக்கில் இல்லாமல் இருப்பில் இருந்ததாக ரூ. 1·13 லட்சம் பெறுமான அரிசியினை உணவுத்துறை போலீசார் கைப்பற்றினார்களா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

1979 ஏப்ரல் 30]

விடை: (அ) ஆம்,

(ஆ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதியன்று சுந்தக்கவுண்டர் சாவடியில் உள்ள ஜெயலட்சுமி ஜின்னிங் மற்றும் அரிசி ஆலையில் கணக்குகளை கோவை-2 குற்றப் புலனாய்வு ஆய்வாளர் திடீரென்று தணிக்கை செய்தார். தணிக்கையின் போது இந்த ஆலையின் கணக்குகள் சரிவர வைத்துக்கொள்ளப்படாமலும், எழுதப் படாமலும் இருந்த காரணத்தினால், கணக்குகள் சரியாக இல்லாமல் இருந்த 568 மூட்டை (அல்லது) 426 குவிண்டால் அரிசியைக் கைப்பற்றி மதுக்கரை போலீஸ் நிலையத்தில் கு. எண். 315/78-ல் தமிழ்நாடு நெல் அரிசி, உரிமம் வழங்கு உத்தரவு 16-வது பிரிவின்படியும் அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின் பகுதி 7-ன் படியும் வழக்கு பதிவு செய்யப் பட்டது.

அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் 6-பி பிரிவின்படி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. விசாரணையில் கைப்பற்றப்பட்ட சரக்கை கணக்கில் கொண்டு வருவதற்கு போதிய அவகாசம் கொடுக் காமல் கைப்பற்றப்பட்டுள்ளதாலும் 22-6-78 தேதி வந்த அரிசி மூட்டைகளுக்கு சரியான பட்டியல்கள் காட்டப் பட்ட தாலும் அப்பட்டியல்களில் ஐந்து சோதனைச் சாவடிகளின் முத்திரைகள் இருந்தாலும் அரிசியை ஆலை உரிமையாளருக்கு திருப்பிக் கொடுக்க கோவை மாவட்ட கூடுதல் ஆட்சித்தலைவர் ஆணையிட்டார், ஆனால் கணக்குகள் சரிவர பராமரிக்கப் படாத காரணத்துக்காக துறை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

'முந்திரி உற்பத்தி'.

வினா 1083: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

தமிழகத்தில் முந்திரி உற்பத்தியினை மேம்படுத்த 1977-78-ம் ஆண்டில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு; மாவட்ட வாரியாக?

[1979 ஏப்ரல் 30

விடை: 1977-78 ஆம் ஆண்டில் முந்திரி அபிவிருத்தி திட்டங்களின் கீழ் அரசு செலவு செய்த தொகை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(மாவட்ட வாரியாக செலவு செய்த தொகை)

(ரூபாய் இலட்சத்தில்)

மாவட்டம்.	வேளாண்மைத் துறை.	வனத்துறை.	கூட்டுறவுத் துறை.
(1)	(2)	(3)	(4)
தென்னாற்காடு	12·54 *	0·35	0·97
செங்கல்பட்டு	0·37 *	7·10	..
		0·05	
இராமநாதபுரம்	0·45 *	0·43	0·62
திருநெல்வேலி	..	0·18	..
திருச்சிராப்பள்ளி	..	0·96	1·77 **
புதுக்கோட்டை	0·30 *		
மொத்தம் (துறை வாரியாக)	13·66	9·07	2·66

(* முழுச் செலவும் மைய அரசால் ஏற்கப்படுகிறது.)

(** திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இரு மாவட்டங்களில் செலவு செய்யப்பட்ட தொகை.)

மேற்கண்டவாறு வேளாண்மைத் துறை, வனத்துறை மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் அரசு நேரடியாக செய்த செலவைத் தவிர தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1977–78 ஆம் ஆண்டில் முந்திரி சாகுபடிக்கு திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ரூ. 6·58 இலட்சம் செலவு செய்துள்ளது.

'தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சோதனை'

வினா 1084— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 17-7-78-ம் நாளில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பார்வையிட்டாரா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள குறைகளைப் போக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை யாது?

1979 ஏப்ரல் 30]

விடை: (அ) ஆம்

(ஆ) இம் மருத்துவமனையில் உள்ள குளிக்கும் அறைகளும், கழிப்பிடங்களும் மிகவும் துப்புரவாக வைக்கப் பட வேண்டும் என்றும், இம் மருத்துவமனையில் சில மருந்துகள் இருப்பில் வைக்கப்படாமையால் ஏழை நோயாளிகள் அம்மருந்துகளை வெளியில் வாங்க வேண்டிய நிலை உள்ளது; இது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. மருத்துவமனை நிர்வாகத்தால் இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிலைமை சீர்படுத்தப்பட்டது.

கோட்டப்பட்டியில் மருத்துவமனை.

வினா 1085 — திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரூர் வட்டம் கோட்டப்பட்டியில் அரசு மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை: இல்லை.

நட்டத்தில் இயங்கிவரும் போக்குவரத்துக் கழகங்கள்.

வினா 1086 — டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழகங்கள் யாவை?

(ஆ) இந்நாள்வரை அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு?

(இ) இதனைத் தவிர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் என்ன?

விடை: (அ) பல்லவன் (பெருநகர்), தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகங்கள்.

(ஆ) ஆரம்பத்திலிருந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு கீழே வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

1971–72	..	35
1972–73	..	79
1973–74	..	50
1974–75	..	160
1975–76	..	837

(இ) மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்க எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

(1) உரிய காலத்தில் பேருந்துகளை மாற்றுதல்.

(2) போக்குவரத்துத் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வுசெய்த பிறகு புதிய பேருந்துகளை விடுதல்.

(3) பேருந்துகளை முறையாகப் பராமரித்தல், இயந்திரங்களைச் சீர்படுத்துதல், டயர்களைப் புதுப்பித்தல்.

(4) உயர் பணித்திறன் உடைய பணியாளர்களுக்கு ஊக்கத் திட்டங்களைக் கொண்டு வருதல்.

(5) வருவாய் மறைக்கப்படுவதைத் தடுக்க சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(6) பொதுமக்களிடமிருந்து வைப்பீட்டுத் தொகைகளைத் திரட்டுவதற்கும், போக்குவரத்துக் கழகங்களுக்குப் போதிய அளவிலும், உரிய நேரத்திலும் நிதி உதவிசெய்வதற்கும் போக்குவரத்து வளர்ச்சி நிதிஉதவிக் கழகத்தை அமைத்தல்.

(7) ஆராய்ச்சி–பயிற்சி வசதிகளுக்கு வகை செய்ய, சாலைப் போக்குவரத்து நிலையத்தை அமைத்தல்.

(8) போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுவதை உன்னிப்பாகக் கவனித்தல், உரிய நேரத்தில் திருத்துவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

இராஜபாளையம் கிராமப்பகுதிகளில் தெரு விளக்குகள்.

வினா 1087: திரு ந. தனசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி யூனியன், மாப்பிள்ளை ஊரணிப் பஞ்சாயத்தில் ராஜபாளையம் கிராமம் தாளமுத்து நகர் ஆகிய பகுதிகளில் தெரு மின் விளக்குகள் அமைப்பதில் உள்ள இடர் பாடுகளைக் களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை: இராஜபாளையம் கிராமத்தில் தற்போது தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தாளமுத்து நகருக்கு அரிசன நல நிதியிலிருந்து தெரு விளக்குகள் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

1979 ஏப்ரல் 30]

மின்வாரியத் தொழிலாளர் மீதான வழக்குகள்.

வினா 1088— திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–ல் தீபாவளி முன்பணம் கோரி தமிழகத்தில் மின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததை ஒட்டி ஈரோடு திட்டத்தில் பல தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதில் 24 பேர்களை தண்டனை பெறச் செய்துள்ளது உண்மையா?

(ஆ) அவர்களுக்கு என்ன தண்டனை அளிக்கப்பட்டது?

(இ) மற்ற தொழிலாளர்கள் மீது வழக்குகள் வாபஸ் பெறப்பட்ட பிறகும் இத்தொழிலாளர்கள் மீது வழக்கு வாபஸ் பெறாத காரணமென்ன?

விடை: (அ) & (ஆ): வழக்குத் தொடரப்பட்ட இருபது தொழிலாளர்களுக்கும், ஈரோடு நீதி முறைக் குற்றவியல் இரண்டாவது பிரிவு நீதிபதியால், (Judicial Second Class Magistrate, Erode) மூன்று மாத சிறைத் தண்டனை வழங்கப் பட்டது. ஆனால், ஈரோடு முதன்மை இதவி குற்றவியல் அமர்வு மன்ற நீதிபதிக்கு (Principal Assistant Sessions Judge, Erode) மேல் முறையீடு செய்ததில் இந்த இருபது தொழிலாளர்களும் குற்றமற்றவர்கள் என்று கருதி விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

(இ) வன்முறைத் தாக்குதல் மற்றும் முற்றுகையிடுதல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதால் இவர்கள் மீது தொடர்ந்த வழக்கு திரும்பப் பெறப்படவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

கோவை மருத்துவக்கல்லூரி நூலகம்

வினா 1089— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரியில் நூலகத்தை (Library) மேலும் விரிவுபடுத்த அரசிற்கு திட்டம் உண்டா?

(ஆ) சென்ற ஐந்து ஆண்டுகளில் நூலகத்தை விரிவு படுத்த எவ்வளவு தொகையை அரசு ஒதுக்குகிறது? அத்தொகை முழுவதும் நூலகத்தை விரிவுபடுத்த பயன்படுத்தப்பட்டதா? இது குறித்த விவரம் என்ன?

[1979 ஏப்ரல் 30

விடை: கோவை மருத்துவக் கல்லூரியின் நூலகத்தை மேலும் விரிவுபடுத்த அரசிற்கு திட்டம் ஏதுமில்லை. கோவை மருத்துவக் கல்லூரியில் நூல்களும் காலமுறை வெளியீடுகளும் வாங்குவதற்கு ஐந்து வருடங்களிலே செலவழித்த தொகை கீழ் வருமாறு—

			ரூ. பை.
1973–74	..	..	54,554·18
1974–75	..	..	77,613·25
1975–76	..	..	9,245·20
1976–77	..	..	15,222·40
1977–78	..	..	20,866·55

2. நூலகத்திற்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

நூலகத்திற்கு வேண்டிய தொகை கல்லூரியின் ''சில்லரை செலவினங்களிலிருந்து'' எடுத்துக்கொள்ளப்படுகிறது.

'வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக்கட்டைகள் ஏலம்'

வினா 1090— திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1975 ஏப்ரல் முதல் இந்த ஆண்டு ஆகஸ்டு வரை சந்தனக் கட்டை ஏலம் விட்டதில் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு?

(ஆ) ஏலம் விடும் முறையில் மாறுதல் செய்ய அரசுக்கு உத்தேசமுண்டா?

விடை—(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் (திருப்பத்தூர்) சந்தன மர ஏலம் மூலம் 1975-ம் ஆண்டு ஏப்ரல் முதல் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு வரை, சந்தன மரங்கள் விற்ற எடையளவு, அதன் மூலம் கிடைத்த வருவாய் கீழ்வருமாறு:—

மாதம்/வருடம்.	திருப்பத்தூர் விற்ற அளவு (டன்களில்)	வருவாய் (இலட்சத்தில்) ரூபாய்.
(1) ஜூலை 1975	385	72·25
(2) டிசம்பர் 1975	500	108·20
(3) ஜூலை 1976	500	151·22
(4) டிசம்பர் 1976	550	259·79
(5) ஜூலை 1977	550	295·38
(6) ஜூலை 1978	388	182·70
கூட்டுத்தொகை	2,873	1,069·54

(ஆ) இல்லை.

1979 ஏப்ரல் 30]

'மீனவர்களுக்கு வழங்கப்பட்ட விசைப்படகுகள்'

வினா 1091—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு முதல் 1976 மார்ச் மாதம் வரை எத்தனை மீனவர்களுக்கு விசைப்படகு தவணைமுறையில் கடனாக முறையே எத்தனை படகு எவ்வளவு தொகைக்கு வழங்கப்பட்டது?

(ஆ) இதில் எவ்வளவு ரூபாய் எத்தனை மீனவர்களிடம் வசூலிக்கப்பட்டது?

(இ) இதுவரையில் கடன் நிலுவை தொகை எவ்வளவு?

(ஈ) இதில் எவ்வளவு தள்ளுபடி செய்யப்பட்டது?

(உ) இந்த முறையை மாற்றியமைக்க உத்தேசமுண்டா?

விடை: (அ) 1969-70 முதல் 1975-76 வரை, 1,119 மீனவர்களுக்கு தவணைமுறையில் 1119 மின் விசைப்படகுகள் ரூ. 702.97 இலட்சம் தவணைக் கடனாக வழங்கப்பட்டது.

(ஆ) 1,119 படகு தவணைதாரர்களிடமிருந்து மொத்தம் 389.75 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

(இ) 313.22 இலட்சம் ரூபாய் நிலுவையாக உள்ளது.

(ஈ) 31-3-1978 வரை ரூ. 22,344.50 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(உ) 1974 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மின்விசைப்படகுகளை மீனவர்களுக்கு வழங்கி வருகிறது. 1-7-1977 முதல் மாற்றியமைக்கப்பட்ட முறைப்படி மொத்த படகு விலையில் 10% மான்யமாக வழங்கப்படும். மீதம், 90%-ல் 5% படகு விலையை மீனவர் கட்டவேண்டும். 15% படகு விலையை தமிழ்நாடு அரசு கடனாக வழங்கும். 80% விலையை நாட்டுடமையாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கி மூலம் கடனாகப் பெற்றுத் தரப்படும். அரசும் வங்கியும் வழங்கும் கடனுக்கு தவணைதாரர் 11% வட்டி செலுத்த வேண்டும். இக்கடனை 5 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். இந்த முறையை மாற்றியமைக்கும் செயல் குறிப்பு இல்லை.

'Cases of Old Age Pension in Thanjavur District'

Q. 1092—Thiru N. KITTAPPA: Will the Hon. Minister for Finance be pleased to state—

(a) the total number of persons to whom Old Age Pension was sanctioned during the year 1977-78 in Thanjavur district;

(b) Whether there is any proposal to increase the existing sanctioned strength of that District?

விடை :

(அ)

	ஒதுக்கப்பட்ட இடங்கள்.	நிகர எண்ணிக்கை.
முதியோர் உதவித் தொகை சாதாரணத் திட்டம். .	7925	7850
விதவைகளுக்கான திட்டம் . .	1550	1539
ஊனமுற்றோர் உதவி திட்டம்.	900	783

(ஆ) தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

'அம்மாப்பேட்டை ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள்'

வினா 1093—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தில் எத்தனை நடுநிலைப்பள்ளிகளில் 400க்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள்?

(ஆ) இந்த நடுநிலைப்பள்ளிகளில் எத்தனை பி. டி. ஆசிரியர்கள் எந்தெந்த பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள்?

விடை: (அ) அம்மாப்பேட்டை, அருந்தவபுரம், திருக்கருக்காவூர் ஆகிய மூன்று நடுநிலைப்பள்ளிகளில் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர்.

(ஆ) அருந்தவபுரம், திருக்கருக்காவூர் நடுநிலைப்பள்ளிகளில் மட்டும் பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக உள்ளனர்.

1979 ஏப்ரல் 30]

'புதுப்பதி மலைப்பகுதிக்கு சுடுகாடு வசதி,'

வினா 1094—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—:

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதியிலுள்ள மதுக்கரை ஒன்றியத்தில் மாவுத்தம்பதி கிராமத்தில் மலைவாழ் மக்கள் வாழும் புதுப்பதியில் 'சுடுகாடு' வசதி இல்லாமல் தொல்லைபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதை சீர்செய்ய நடவடிக்கை பரிசீலிக்கப்படுகின்றதா?

விடை: (அ) ஆம்.

(ஆ) மாவுத்தம்பதி கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு சுடுகாடு வசதி அளிக்க க. ச. எண். 87 அல்லது 89-ல் பஞ்சாயத்தை கலந்தாலோசித்து நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொண்டுள்ளார். இதற்கான கருத்துருவை அரசுக்கு விரைவில் அனுப்பி வைப்பதற்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

'புதுப்பதி மலைப்பகுதிக்கு சாலை வசதி.'

வினா 1095—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் மதுக்கரை ஒன்றியம் மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள புதுப்பதி வாழ் மக்கள் கிராமத்திற்கு இருந்த பாதையை தனியார் ஆக்கிரமித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை : (அ) உறுப்பினர் குறிப்பிடும் அரசு நிலத்தில் ஏதும் ஆக்கிரமிப்பு இல்லை. தனியார் நிலத்தில்தான் வண்டிப்பாதை சம்பந்தமாக தகராறு ஏற்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

'வராகநதி கால்வாய்த் திட்டம்.'

வினா 1096—திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செஞ்சி வட்டத்தில் வராகநதி கால்வாய்த் திட்டம் முடிவடைந்துவிட்டதா?

(ஆ) எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு இதன் மூலம் பாசன வசதி கிடைக்கிறதா?

(இ) மேலும் பாசன வசதி பெற விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளனவா?

விடை: (அ) ஆம். 1975-ல் முடிவடைந்தது.

(ஆ) சுமார் 1,468·98 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

(இ) மேலும் பாசன வசதி அளிப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. இத்திட்டம் செயல்படும் முறையும் இதன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் முழுவதும் பயன்பெறுவதையும் சில ஆண்டுகள் கண்காணிப்பது அவசியம் என்று கருதப்படுகிறது.

'நடமாடும் மருத்துவ மனைகள்'

வினா 1097—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு நடமாடும் மருத்துவமனையை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை : (அ) 1978-79 ஆம் ஆண்டிற்கு 100 நடமாடும் மருத்துவமனைகள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதில் விளாத்தி குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பேரிலோவன்பட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நடமாடும் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு தற்போது இடம் பெறாத நிலையில் இருக்கிறது.

(ஆ) இந்த திட்டம் மற்ற சுகாதார நிலையங்களுக்கு 1979-81-ல் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 30]

வினா 1098—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் நடமாடும் மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் கூடுதலாக்க ஏதேனும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) இவை எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன?

விடை : (அ) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, ஓசூர், ஹரூர் என்னும் மூன்று இடங்களில் நடமாடும் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நடமாடும் மருந்தகங்களை மேலும் கூடுதலாக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) மிகவும் பின்தங்கிய பகுதிகளிலும், மக்கள் தொகை குறைவான மலைப்பாங்கான இடங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு மேற்படி நடமாடும் மருந்தகங்களின் மூலம் தேவையான மருத்துவ சிகிச்சையளிப்பது தான் அரசின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் தான் நடமாடும் மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

'தருமபுரி மாவட்டத் தொழில் மையம்.

வினா 1099—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டத் தொழில் மையத்திற்கு அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

(ஆ) இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது?

(இ) எவ்வளவு தொகை தொழில் முனைவோருக்கு கடனளிக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை: (அ) & (ஆ) சிறுதொழில் மற்றும் கிராமத் தொழில்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், பணிகளையும் ஒரே அமைப்பின் மூலம் அளிப்பதற்காக மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் தாமாகவே எந்தத் தொழில்களையும் ஆரம்பித்து நடத்தாது. தருமபுரி மாவட்டத் தொழில் மையத்திற்கு அலுவலகக்கட்டிட வாடகைக்காகவும், ஊர்திகள், மேசை, நாற்காலிகள் போன்ற அலுவலகத்

[1979 ஏப்ரல் 30

திற்குத் தேவையான பொருட்கள் வாங்கவும், பணியாளர்களுக்கான ஊதியம் ஆகியவற்றிற்காகவும் ரூ. 6.75 இலட்சம் இத்தொழில் மையத்திற்கு நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் செப்டம்பர் திங்கள் வரை ரூ. 34,230 செலவிடப்பட்டுள்ளது. (இத்தொழில் மையம் 1978 ஜூன் திங்களில் செயல் படத் துவங்கியது).

(இ) (1) கிராமத் தொழில் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் ரூ. 1.80 இலட்சம் கடன் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(2) முன்னணி வங்கிகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசீய சிறுதொழில் நிறுவனம் ஆகியவைகள் நடப்பு ஆண்டில் ரூ. 387.50 இலட்சம் பல்வகைத் தொழில் முனைவோருக்கும் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளன.

Caste references in Government Forms.

Q. No. 1100—Thiru N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Central Government have directed the State Government to delete Caste references in Government Forms used by State Governments; and

(b) If so, the details thereof?

விடை : (அ) ஆம்.

(ஆ) நிர்வாக காரணங்கள் அல்லது சட்ட சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதற்கான அத்தியாவசியத் தேவைகளைத் தவிர, சிறை, காவல், கல்வி, பணியாளர் மற்றும் பிற துறைகளிலும், நீதி சம்பந்தமான நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படும் படிவங்களில், மற்றும் குறிப்பேடுகளில் சாதி, மற்றும் கிளை சாதி பற்றிய விபரங்களை நீக்க வேண்டும். ஆனால், மதத்தைப் பற்றிய விபரங்கள் இருக்கலாம் என்றும் மக்கட் தொகைக் கணக்கெடுப்பு வினாக்களைப் போன்று, படிவங்கள் முதலியன மாற்றப்பட வேண்டும் என்றும் எடுத்த முடிவை, 1960-ம் ஆண்டு ஆரம்பத்தில் மத்திய அரசு இம்மாநில அரசுக்குத் தெரிவித்து, அத்தீர்மானத்தை இம்மாநில அரசும் கடைப்பிடிக்க அறிவுரை வழங்கியது. இவ்வறிவுரைகளின்படி 1961-ம் ஆண்டு அக்டோபர் 16-ம் நாள் வெளியிடப்பட்ட அரசு (பலவகை) ஆணை எண். 1726-ல், இம்மாநிலப் பணிகளில் சம்பந்தப்பட்ட படிவங்கள் மற்றும் குறிப்பேடுகளில் சாதி, கிளை சாதி பற்றிய விபரங்களை நீக்கும்படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரசிடம் உதவி மானியம் பெறும், அரசின் உதவியுடன் செயல்படும் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் படிவங்களிலும் சாதிபற்றிய விபரங்கள் நீக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு 1976-ல் எடுத்துக் கூறியது. அதற்கான உத்தரவுகள் ஜூன் 1977-ல் வெளியிடப்பட்டன.

Mobile Casuality Unit at Madurai

Q. No. 1101—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Health be pleased to state

(a) whether the Erskine Hospital at Madurai is operating a Mobile Casuality Unit now; and

(b) if so, the details thereof?

விடை: (அ) & (ஆ) விபத்துக்குள்ளானவர்களுக்கு அவ்விடத்திலேயே உதவிபுரிய 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து மதுரை அரசு மருத்துவமனையில், 3 மருத்துவர்கள், 3 அறுவை அரங்க உதவியாளர்கள், 2 ஊர்தி ஓட்டுநர்கள் கொண்ட ஒரு நடமாடும் துரித சிகிச்சைக் குழு 24 மணி நேரமும் பணி புரிந்து வருகிறது.

Assistant Commissioner of Civil Supplies.

Q. No. 1102—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Food be pleased to state :—

(a) Whether the Assistant Commissioner of Civil Supplies belt area) was attached by a mob at Saidapet around 3rd August 1978; and

(b) if so, the details thereof?

விடை: (அ) & (இ) 4-8-1978 அன்று குடிபோதையில் இருந்த ஒருவர் உணவுப் பொருள் வழங்குதுறை உதவி ஆணையாளர் (புறநகர் பகுதி) அலுவலகத்தைச் சார்ந்த இரண்டு இளநிலை உதவியாளர்கள் தங்களின் மதிய உணவை முடித்துத் திரும்பும் போது வழி மறித்து வேண்டுமென்றே இழி சொற்கள் கூறி இடையூறு விளைவித்தனர். பின்னர் அலுவலகத்திற்குள்ளும் நுழைந்து கீழ்த்தரமான சொற்களைக் கூறி அலுவலர்களுடன் முரட்டுத்தனமாக நடந்து கொண்டனர். திரு. செல்வராஜ் என்ற கடைநிலை ஊழியரின் ஆட்காட்டி விரல் போதையிலிருந்த ஒருவரால் கடிக்கப்பட்டது. அருகில் உள்ள குடிசைப் பகுதியில் வாழும் பெண்களும் கூட்டமாக வந்து அலுவலகத்திற்கு முன் நின்று கொண்டு இழி சொற்கள் கூறி கூச்சல் போட்டனர்.

இது குறித்து காவல் துறையினருக்கு தெரியப்படுத்தப்பட்டது. திரு. டி. சகாயம் என்ற இராஜேந்திரன், திரு. ஜெயகோபால் என்ற இருவர் மீதும் மதுவிலக்குக் குற்றங்களுக்காக வழக்கு தொடரப்பட்டு சைதை 9-வது மாநகர் குற்றவியல் நடுவரால் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட சம்பவத்திற்கும் உணவுப்பொருள் வழங்குத் துறை அலுவல்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

சியமங்கலம் கிராம குடிநீர்த் திட்டம்.

வினா எண் 1103— திரு. பி. சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வட ஆற்காடு தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், சீயமங்கலம் கிராமத்தில் குடிநீர் வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை :—தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஊராட்சியிடமிருந்து நீர் ஆதார ஆய்வுக்கான பூரா மதிப்பீட்டுத் தொகையையும் பெறப்பெற்ற பின்னர் வேலை துவங்கப்படும்.

CENTRAL GRANTS FOR LIBRARIES

Q. No. 1104—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) Whether financial aid is provided by the Centre to private bodies to run libraries in this State ; and

(b) If so, the details thereof ?

விடை :—(அ) & (ஆ) : மைய அரசு தனியார் நூலகங்கள் நடத்த, இத்துறையின் மூலம் நிதிஉதவி அளிப்பதில்லை. எனினும் பொது நூலகங்கள் வளர்ச்சிக்கு, தான் விருப்பப்படி நிறுவனங்களுக்கு (Voluntary Organisations) நிதி உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் மைய அரசு ஒவ்வொரு வருடமும் தனியார் நடத்தும் பொது நூலகங்களுக்கு நூல்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், கட்டிடம் கட்டுதல் போன்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. அதன் விவரங்கள் இணைப்பில் உள்ள, *விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆயக்குடி மருத்துவமனை

வினா 1105— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பழநி வட்டம், ஆயக்குடி மருத்துவமனை விஸ்தரிப்பதற்கும்,படுக்கைகள் அதிகப்படுத்துவதற்கும் நீண்ட நாட்களுக்கு முன்பே ரூ. 90 ஆயிரம் திட்டத்தில் அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

[* 850 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1979 ஏப்ரல் 30]

விடை—(அ) & (ஆ) ஆயக்குடி மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறையினால் 1979-80-ம் ஆண்டிற்கான திட்டப்பணியாக நிறைவேற்ற முடியாமற் போயிற்று.

கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் துணிகள் தேக்கம்.

வினா 1106—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறியாளர் கூட்டுறவு சங்கங்களில் 1—9—1978 வரை தேங்கியுள்ள கைத்தறித் துணியின் மதிப்பு எவ்வளவு?

விடை—1—9—1978 வரை பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ரூ. 8.32 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளும், மாநில சங்கம், கோ-ஆப்டெக்ஸில் சுமார் ரூ. 17 கோடி அளவுக்கு துணிகளும் தேங்கிக் கிடந்தது.

2. கடந்த தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகை காலங்களில் அரசு வழங்கிய 20% தள்ளுபடியை பயன்படுத்தி, பெருவாரியான அளவிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 31—1—1979 அன்றைய நிலவரப்படி, பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ரூபாய் 4.09 கோடி மதிப்புள்ள துணிகளும், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் (கோ—ஆப்டெக்ஸ்) ரூபாய் 11.29 கோடி மதிப்புள்ள துணிகளும்தான் இருப்பில் இருந்தன.

நியாய விலைக் கடைகள்

வினா 1107—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் 1—7—1977 முதல் இதுவரை திறக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகள் எத்தனை?

(ஆ) அவை எந்தெந்த மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன?

விடை—(அ) & (ஆ) ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் பல்வேறு மாவட்டங்களிலும் மிகக் கணிசமான அளவிற்குச் செயல்படுத்தப்பட்டு விட்டது. பங்கீட்டுப் பொருள்களை மட்டுமே விற்றுவந்த சுமார் 5,800 கடைகளில் 5,600-க்கு மேற்பட்டவை பல பொருள்களையும்

விற்கும் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன. புதிதாக திறக்கப்படவேண்டிய சுமார் 10,200 கடைகளில் 8,000 கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. இன்னும் சுமார் 2,100 கடைகள் தான் திறக்கப்படவேண்டும். ஏற்கெனவே இயங்கி வந்த கடைகளில் சுமார் 200 கடைகள் தான் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட வேண்டும். விரைவில் முடிவடைந்து விடும்.

தாராசுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம்

வினா 1108—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலூகா தாராசுரம் பட்டு சொசைட்டியில் நிர்வாகக் குழுவினரின் ஓவர் டியூஸ் சம்பந்தமான புகார் ஏதேனும் அரசுக்கு அண்மையில் வந்துள்ளதா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம். (ஆ) தாராசுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் இயக்குநர்களில் சிலர் சங்கத்திற்கு வரவு வைக்க வேண்டிய தீர்ந்த சரக்குகளை வரவு வைப்பதில் காலம் கடந்துள்ளனர் என்று சங்க அங்கத்தினர் சிலரால் கொடுக்கப் பட்ட முறையீட்டின் மீது திருச்சி உதவி இயக்குநரால் விசாரணை செய்யப்பட்டது. இச்சங்கத்தைச் சார்ந்த தலைவர், உபதலைவர் உட்பட நான்கு இயக்குநர்கள் தீர்ந்த சரக்கு வரவு வைப்பதில் சங்கத்திற்கு காலங் கடந்துள்ளனர் என தெரியவந்துள்ளதால் அந்த நான்கு சங்க இயக்குநர்களுக்கும் ஏன் சங்க இயக்குநர் பதவியிலிருந்து நீக்கக் கூடாது என்பது குறித்து விளக்கம் கேட்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 39-ன் கீழ் 6–7–78 அன்று காரண முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேற்படி காரண முன்னறிவிப்புக்கு இயக்குநர்களால் கொடுத்த விளக்கங்களில், தாங்கள் சங்க வேலைகளின் காரணமான பணிகளில் ஈடுபட்டிருந்த தாலும், நவம்பர் 77-ல் ஏற்பட்ட புயல், மழை காரணமாக சுமார் ஒரு மாதம் நெசவு நெய்ய கெடு பொதுவாக நீடிக்கப் பட்டிருந்ததாலும், பெரிய ரகம் நெய்ய அனுமதிக்கப்பட்டிருந்த 3 மாத காலக் கெடுவை தவறாக $2\frac{1}{2}$ மாதம் என்று கணக்கெடுக்கப் பட்டதாலும், கடமை தவறியவர்களாக கருதாமல் தொடர்ந்து நால்வரும் இயக்குநர்களாக இருந்துவர கோரிய கோரிக்கையினை நியாயமானதாகக் கருதி, திருச்சி கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநரால் அனுமதிக்கப்பட்டு காரண முன்னறிவிப்பு மீது எடுத்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

1979 ஏப்ரல் 30]

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மானாமதுரை பகுதியில் நிலங்கள்.

வினா 1109—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மஞ்சக்குடி முறியப் பாஞ்சான் ஆகிய கிராமங்களில் சென்ற ஆண்டு வெள்ளத்தினால் மணல் மேடாக ஆக்கப்பட்ட நஞ்சை நிலங்கள் சீரமைக்கப் பெறாமல் உள்ளதாய் அப்பகுதி ஏழை விவசாயிகள் பயிர் செய்ய இயலாமல் உள்ள நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—(அ) & (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைத் தொகுதியில் உள்ள மஞ்சக்குடி, முனப்பாஞ்சான் கிராமங்களில் நிலங்கள் பாதிக்கப்பட்டது, மணல் படிந்து மேடிட்டதால் அல்ல. இவை மண் அரிப்பு நிலங்களாகும். இப்படி அரிப்பால் ஏற்படும் பாதிப்புக்குள்ளாகிய நிலங்களைச் சீரமைக்க வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் பண ஒதுக்கீடு இல்லை. மேலும், இவ்வெள்ள நிவாரணத் திட்டம் 30—6—1978 அன்றோடு முடிவடைந்து விட்டது. விவசாயிகளின் முறையீட்டின் பேரிலும், அவர்களோடு தொடர்பு கொண்டதின் மூலமும் மஞ்சக்குடி கிராமத்தில் 7 விவசாயிகளுக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலங்கள் அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வந்தது. அவ்வாறு மஞ்சக்குடி கிராமத்தில் பாதிக்கப்பட்ட 7 விவசாயிகளில் ஒரு விவசாயி மட்டும், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் தனது நிலத்தைச் சீரமைக்க ஒப்புதல் அளித்தார். அதன் பேரில், அவரது நிலச் சீரமைப்பு வேலை நடைபெற்று வருகிறது. மற்றவர்கள் அப்படிச் செய்ய உடன்படவில்லை.

முனப்பாஞ்சான் கிராமத்தில், மண் அரிப்புக்கு உள்ளான சிறிது நிலங்களைச் சீரமைக்க, அந்நிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏறத்தாழ ரூ. 50 முதல் ரூ. 100 வரை செலவாகும். இம்மாதிரி, பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது பாதிககப்பட்ட நிலங்களை வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் கடன் அடிப்படையில் சீரமைக்க மேற் கொள்ளுவதற்கு விரும்பவில்லை. ஆனால், அவர்கள் அதைத் தாங்களே சீரமைக்க மானியமாகப் பணம் பெற விரும்புகின்றனர். இம்மாதிரி அரிப்பினால் பாதிக்கப்பட்ட நிலங்களை இனாமாக சீரமைத்துக் கொடுக்க வேளாண்மைத் துறையின்கீழ் வகை ஏதுமில்லை.

[1979 ஏப்ரல் 30

மதுரையில் குடிசைமாற்றுப் பணிகள்.

வினா : 1110—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நடப்பு ஆண்டில் மதுரையில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடிசைகளை அகற்றி மாடி வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை இடங்களில் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது?

விடை—(அ) ஆம், உள்ளது. (ஆ) மேலவாசல், சுப்ரமணியபுரம், மண்மலைபுரிகுளம், ஆகிய மூன்று இடங்களில்.

சிதம்பரம் வட்டத்தின் பம்புகளுக்கு மின் இணைப்பு.

வினா 1111—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிதம்பரம் வட்டத்தில் மோட்டார் பம்புகளுக்கு மின் இணைப்பு கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எவ்வளவு காலமாக நிலுவையில் உள்ளன?

விடை—(அ) 15–3–1979 வரை 1418 மனுக்கள்.

(ஆ) 1970 ஆம் வருடத்தில் 28 மனுக்கள்.
1971 ஆம் வருடத்தில் 41 மனுக்கள்.
1972 ஆம் வருடத்தில் 29 மனுக்கள்.
1973 ஆம் வருடத்தில் 279 மனுக்கள்.
1974 ஆம் வருடத்தில் 164 மனுக்கள்.
1975 ஆம் வருடத்தில் 214 மனுக்கள்.
1976 ஆம் வருடத்தில் 235 மனுக்கள்.
1977 ஆம் வருடத்தில் 200 மனுக்கள்.
1978 ஆம் வருடத்தில் 190 மனுக்கள்.
1–1–79 முதல் 15–3–79 வரை 38 மனுக்கள்.

1,418

1979 ஏப்ரல் 30]

ஆதிவராகநல்லூரில் பாசன வசதி

வினா: 1112.—திரு. துரை. கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிதம்பரம் வட்டம், பு.ஆதிராகவநல்லூர் அரியகோஷ்டி வாய்க்காலில் உள்ள கொண்டத்தில் தென்புறம் உள்ள நிலப்பரப்பில் நீர்பாய்வது கஷ்டமாக உள்ளது அரசு அறியுமா?

(ஆ) இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) எப்போது இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை:—(அ) அரியகோஷ்டி வாய்க்காலின் தென்புறம் 62·94 ஏக்கர் நஞ்சை ஆயக்கட்டு நிலங்கள் உள்ளன, அதே பக்கத்தில் 318·87 ஏக்கர் ஆயக்காட்டில் வராத புஞ்சை நிலங்களும் உள்ளன. மேற்கண்ட நஞ்சை ஆயக்கட்டு நிலங்களில் பாசனத்திற்காக வாய்க்கலில் குமுாய் மதகு ஒன்று உள்ளது. அக்குமுாய் மதகை அடுத்து ஆயக்கட்டில் வராத புஞ்சை நிலங்கள் முதலில் உள்ளதால் புஞ்சை நிலங்கள் முதலில் பாசனம் பெறுகின்றன. அதற்கு பிறகு ஆயக்கட்டின் கீழ்வரும் நஞ்சை நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இதனால் நஞ்சை நிலங்களுக்கு பாசனம் செய்வதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) இதுபற்றி தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அறிக்கை பெறப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட பாசன வாய்க்காலையும் ஆயக்கட்டு நிலங்களையும் சிதம்பரம் வட்டாட்சியரும் கோட்ட ஆட்சித் தலைவரும் பார்வையிட்டுள்ளார்கள்.

(இ) ஆயக்கட்டில் வரும் நஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியை அதிகரிக்கும் வாய்ப்புகளை ஆராய்ந்து அறிவிக்க சிதம்பரம் நிர்வாகப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவர் அறிக்கை பெறப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Shopping Complex at Madurai

Q. No. 1113 —Thiru N. KITTAPPA: Will the Hon'ble Minister for Labour be pleased to state:

(a) Whether a giant shopping complex is to be built at Old Hospital Building site near the Madurai Central Bus stop soon by the Tamil Nadu Housing Board; and

(b) if so, the details thereof ?

விடை—

(அ) மற்றும் (இ): மதுரை மத்திய பேருந்து நிலையத்தின் எதிரில் உள்ள மாநகராட்சியின் பழைய அலுவலக இடத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புற விரிவுத் திட்டத்தின் கீழ் மிகப் பெரிய அங்காடி மையம் ஒன்று சுமார் ரூ. 40 இலட்சம் செலவில் கட்டுமானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி பொதுப் பணித் துறையினரால் செயல்படுத்தப்படும்.

Thiruvanmiyur Unit of Housing Board.

Q. No. 1114: Thiru N. Kittappa: Will the Hon'ble the Minister for Labour be pleased to state:

(a) whether the Superintending Engineer of the Madras Housing Board has noticed a series of irregularities at the office of the Executive Engineer, Thiruvanmiyur, recently; and

(b) if so, the action taken thereon?

விடை—(அ) மற்றும்

(ஆ) இந்த ஒழுங்கீனங்கள் தென்வட்ட நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் சில உதவியாளர், இளநிலை உதவியாளர் வரைவாளர் முன் அனுமதியின்றி அலுவலகத்திற்கு வராமை, தாமதவருகை, மேல் அதிகாரிகளுக்கு கீழ்ப்படியாமை முதலியன சம்மந்தப்பட்டதாகும். சம்மந்தப்பட்ட நபர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரினர். இதனால் அவர்கள் பணியில் மீண்டும் அமர்த்தப்பட்டனர். ஆனால் அவர்கள் தென்வட்ட நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து நந்தனத்திலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்திற்கு மாற்றப் பட்டுள்ளனர்.

Incidence of Leprosy:

Q. No. 1115.—Thiru N. Kittappa: Will the Hon'ble the Minister for Health be pleased to state—

(a) whether any survey into the incidence of Leprosy has been undertaken in this State in recent times ; and

(b) if so, the details thereof ?

[1979 ஏப்ரல் 30]

விடை: ஆம். தமிழகத்தில், நீலகிரி மாவட்டம் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழுநோய் கணக்கெடுப்பு பகுதி நேர மருத்துவப் பணியாளர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கணக்கெடுப்பு இரண்டு விதமாகும். அவை பொதுக்கணக்கெடுப்பு (General Survey) மற்றது தொழுநோயின் உறவினர்களின் கணக்கெடுப்பு (Healthy Contact Survey) பொதுக்கணக்கெடுப்பு 2 முதல் 5 வருடத்திற்கு ஒருமுறை நடத்தப்பெறுகிறது. தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுடைய உறவினர்களின் கணக்கெடுப்பு மூன்று மாதத்திற்கு ஒருமுறை எடுக்கப்பெறுகிறது, இவற்றில் 1978 ஆம் வருடத்திற்கான கணக்கெடுப்பில் கீழ்க்கண்ட குறிப்புகள் காணப்பட்டன.

(1) பொதுக்கணக்கெடுப்பு:

மக்கட்தொகை கணக்கெடுத்தது	..	76,23,712
பொதுமக்கள் பரிசோதிக்கப்பட்டது	..	60,78,004
அதில் தொழுநோய் உள்ளவர் எண்ணிக்கை	..	33.171

(2) தொழுநோய் உள்ள உறவினர்களின் கணக்கெடுப்பு:

உறவினர்கள்—பரிசோதிக்கப்பட்டவர்கள்	..	9,77,373
உறவினர்கள்—புதியதாக பதிப்பிக்கப்பட்டவர்கள்	..	1,38,649
உறவினர்களில் தொழுநோய் உள்ளவர்கள்	..	1,752

பகுதி மருத்துவ உதவியாளர்கள் தொழுநோய் உள்ளவர்களை கணக்கெடுப்பதுடன் தொழுநோய் உறவினர்களை மூன்று மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்து அறிவுரை வழங்குகிறார்கள்.

Manufacturing starch from Tamarind seeds.

Q. No. 1116.—Thiru N. Kittappa: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) Whether any Tamarind seed—based starch factory at Krishnagiri Industrial Estate in the State or private sector has gone into production; and

(b) if so, the details thereof?

விடை: (அ) ஆம்.

(ஆ) புளியங்கொட்டையிலிருந்து ஸ்டார்ச்சு (புளியங்கொட்டைத்தூள்) உற்பத்தி செய்யும் தனியார் துறை நிறுவனம் ஒன்று கிருஷ்ணகிரியில் (நெ. ஏ.) தொழிற்பேட்டையில் 8—6—78 முதல் இயங்கி வருகிறது, நடைமுதல் மூலதனத்தைச் சேர்த்து இதன் மொத்த சொத்து மதிப்பு ரூ. 3.34 இலட்சம். இந்நிறுவனத்தில் 10 பேர் பணிபுரிகிறார்கள். இந்நிறுவனத்தின் வருடாந்திர உற்பத்தித்திறன்.

(1) ரூ. 4.5 இலட்சம் மதிப்புள்ள 450 எம். டி. நல்ல இரக புளியங்கொட்டைத்தூள்.

(2) ரூ. 25,000 மதிப்புள்ள 50 எம். டி. முரட்டு இரக புளியங்கொட்டைதூள்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

வினா 1117--- திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் எத்தனை அறுவை அரங்கங்கள் உள்ளன?

(ஆ) அவை அனைத்தும் செயல்பட்டு வருகின்றனவா?

விடை: (அ) 4 அறுவை அரங்கங்கள் உள்ளன. இவையன்றி 3 புதிய அறுவை அரங்கங்கள் புதிய அறுவை சிகிச்சைப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) மேற்கூறப்பட்ட 4 அறுவை அரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக கட்டப்பட்டுள்ள 3 அறுவை அரங்கங்களில் சில சிறு குறைபாடுகள் நீக்கப்பட வேண்டியுள்ளதால் கூடிய விரைவில் செயல்படும்.

Prevention of straying by elephants.

Q. No. 1118: Thiru N. Kittappa: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

The steps taken by the Wild Life authorities to check the Elephants from getting out of the Wild Life Sanctuaries and prevent them causing damage to private life and property?

விடை:—வேளாண்மை நிலப்பகுதிக்கு காட்டுயானைகள் வருவதென்பது எப்போதாவது நிகழக்கூடியதொன்றாகும். காடுகளில் மரம் வெட்டுதல். செடி நடுதல் போன்றவற்றால் ஏற்படும் தொந்தரவுகளால் தான் காட்டு யானைகள் வேளாண்மை நிலப் பகுதிக்கு வருகின்றன. தற்போது வன விலங்குகள் அதிகமாக காணப்படுகின்ற வனப்பகுதிகளை வன விலங்கு சரணாலயமாக அமைக்கப்பட்டுள்ளதால்-வன விலங்குகளுக்கு தொல்லை தரக்கூடிய வனத்துறை நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன. காடுகளில் தீ பரவுவதைத் தடுக்கவும், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சரணாலயங்களுக்குள் வன விலங்குகளுக்கு குடிநீர் வசதிக்காக ஆங்காங்கே சிறிய அணைகள் கட்டும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கூறிய நடவடிக்கைகளால் யானைகள் காட்டைவிட்டு வேளாண்மை நிலங்களுக்குள் அலைவது குறைந்துவிடும்.

1979 ஏப்ரல் 30]

வேளாண்மை நிலங்களுக்குள் யானைகள் வருமானால் அவற்றை மீண்டும் காட்டுப் பகுதிக்குள் துரத்திவிட வனத்துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு உதவி செய்கின்றனர். காட்டு யானைகளின் தொல்லை அதிகமாக உள்ள சில பகுதிகளில் காட்டின் எல்லைப் பகுதியையொட்டி குழிகள் வெட்டப்பட்டு தனியார் நிலங்களில் அவை வராமல் தடுக்கப்படுகின்றன.

மேலத்தொட்டியபட்டியில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்குக் குடிநீர்வசதி.

வினா 1119: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி மேலத்தொட்டியபட்டியில் உள்ள சக்கிலியர்கள் குடியிருப்புக்கு தண்ணீர் இல்லாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

விடை: (அ) போதுமானதாக இல்லை.

(ஆ) குடிநீர் சம்பந்தமாக சர்வேயில் இக்கிராமம் பிரிவு 6—ல் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது பிரிவு 1, 2 கிராமங்களுக்கு மட்டுமே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து குடிநீர் வசதி செய்யப்படுகிறது. ஆகையால் குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து இக்கிராமத்திற்கு புதிய அடிகுழாய் போட வாய்ப்பில்லை. திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதி திருப்திகரமாக இல்லாததால், ஒன்றிய பொது நிதியிலிருந்து இக்குடியிருப்பிற்கு குடிதண்ணீர் வசதி செய்ய இயலாது. ஆகையால் அரிஜன நிதியிலிருந்து மேலத்தொட்டியபட்டி சக்கிலியர் குடியிருப்பிற்கு ஒரு புதிய கிணறு வெட்டிக் கொடுக்க மாவட்ட அரிசன நல அலுவலருக்கு அறிவுரை கூறப் பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

வினா 1120:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம் தொகுதி மணல்மேட்டிற்கும் தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீட்டுதொகை எவ்வளவு?

விடை:—(அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

'அமுதம்' சிறப்பங்காடிகள்

வினா 1121:—திரு. என். கிட்டப்பா? மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் எல்லாமாவட்டங்களிலும் 'அமுதம்' சிறப்பங்காடிகள் திறந்திடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

விடை. (அ) ஆம். (ஆ) சென்னை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 29 அமுதம் சிறப்பங்காடிகள் இயங்கி வருகின்றன. கோவை, வடஆற்காடு, சேலம் செங்கை மாவட்டங்களில் இவ்வங்காடிகள் திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் திருச்சிராப்பள்ளி (புதுக்கோட்டை உட்பட), மதுரை, தென்னாற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மண்டல மேலாளர்களிடமிருந்தும் தஞ்சை முதுநிலை மண்டல மேலாளரிடமிருந்தும் கிடைக்கவிருக்கும் அறிக்கைகளுக்கேற்ப இம்மாவட்டங்களில் அமுதம் சிறப்பங்காடிகள் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

சிமெண்ட் உற்பத்தி

வினா 1122:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையப்பாரா:

1976–77, 1977–78–ம் ஆண்டுகளில் முறையே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்டின் அளவு எவ்வளவு, ஆலை வாரியாக?

விடை: தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்டின் அளவு, ஆலை வாரியாக பின்வருமாறு:

ஆலையின் பெயர்.	தயாரிக்கப்பட்ட சிமெண்டின் அளவு. 1976	1977	1978
	(டன்கள்)		
(1)		(2)	
(1) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் லிமிடெட், ஆலங்குளம், இராமநாதபுரம்	3,46,275	2,98,645	3,54,425
(2) டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்)—லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி.	5,82,853	5,74,309	5,28,009

1979 ஏப்ரல் 30]

ஆலையின் பெயர்	தயாரிக்கப்பட்ட சிமெண்டின் அளவு		
	1976	1977 (டன்கள்)	1978
(3) செட்டிநாடு—சிமெண்ட்ஸ் (பாரத்லிமிடெட், புலியூர் கரூர்) திருச்சிராப்பள்ளி.	3,49,380	3,71,389	3,88,012
(4) அசோசியேடட் சிமெண்ட்ஸ் கம்பெனி, மதுக்கரை, கோயமுத்தூர்.	3,77,326	3,76,763	4,10,612
(5) இந்தியா சிமெட்ண்ஸ் லிமிடெட், சங்கரிதுர்க், சேலம்.	6,17,549	5,73,541	6,54,106
(6) இந்தியா சிமெண்ட்ஸ் லிம்டெட், தாழையூத்து, திருநெல்வேலி.	8,23,836	7,33,965	8,49,544
(7) மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், துலுக்கப்பட்டி, இராமநாதபுரம்.	1,98,820	2,89,715	3,20,897
மொத்தம்:	32,96,039	32,18,327	35,05,605

மாயூரத்தில் பல்லவன் கழகப் பணிமனை.

வினா 1123: திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரத்தில்-பல்லவன் போக்குவரத்துக்கழக டெப்போ ஒன்று நிறுவிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

விடை: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடங்கள்.

வினா 1124: திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977–1978 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விட அனுமதி வழங்கப்பட்டது?

(ஆ) அவைகளில் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு எத்தனை? தனியாருக்கு எத்தனை?

விடை: (அ) 1977–ஆம் ஆண்டு 4 வழித் தடங்களிலும், 1978-ஆம் ஆண்டு 32 வழித் தடங்களிலும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(ஆ) வழங்கிய அனுமதிகள்	1977	1978
சோழன் போக்குவரத்துக் கழகம்	1	10
தனியாருக்கு ..	3	22

உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

வினா 1125: திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1977–78 ஆம் ஆண்டில் அரசு பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் எத்தனை பேர் வேலையில் அமர்த்தப்பட்டனர்?

விடை: 61.

குடவாசல் மருத்துவமனை.

வினா 1126: திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் மருத்துவ மனைக்குக் கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யவேண்டி குடவாசல் பேரூராட்சியிடமிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை: (அ) மற்றும் (ஆ): குடவாசல் பேரூராட்சியிடமிருந்து குடவாசல் அரசாங்க மருத்துவமனைக்கு கூடுதல் பணியாளர்களை நியமிப்பதற்கான கோரிக்கை ஏதும் வரவில்லை. இருப்பினும் இரண்டு ஆண் மருத்துவர்கள் பதவி ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1979 ஏப்ரல் 30]

பழனி தேவஸ்தான மருத்துவ மனை.

வினா 1127: — திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

(அ) பழனி நகரில் பழனி-தேவஸ்தானத்தின் மூலம் மருத்துவ மனைகட்டப்படும் பணி முடிவடைந்து விட்டதா?

ஆ) அம்மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் அனுமதிக்கப்படும்?

விடை:—(அ) பழனி நகரில் பழனி தேவஸ்தானத்தின் மூலம் கட்டப்படும் மருத்துமனை கட்டும் பணி அநேகமாக முடிவடைந்துவிட்டது.

(ஆ) தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் மருந்துவமனை, இப்புதிய கட்டிடத்துக்கு மாற்றப்படும். புதிய கட்டிடத்தில் 27 படுக்கை வசதிகள் உள்ளன.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பகுதி.

வினா 1128:— திரு. கே. ஆர். சின்னராசு: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் உள்ள பயணிகள் விடுதியை விரிவுபடுத்தி புதியதாக அறைகள் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை: (அ) மற்றும் (ஆ): கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலுள்ள பயணிகள் விடுதியை விரிவுபடுத்தி புதிதாக அறைகள் கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை.

வினா 1129: திரு. கே. ஆர். சின்னராசு: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள பூங்காவை மேலும் பயணிகளைக் கவரும் வகையிலும், திரைப்படங்கள் எடுக்கும் அளவிற்கும் அழகுபடுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை: அ) இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை,

(ஆ) எழவில்லை.

[1979 ஏப்ரல் 30

கிருஷ்ணகிரி–வேப்பணப்பள்ளி சாலைப் பாலம்.

வினா 1130:— திரு. கே. ஆர். சின்னராசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி–வேப்பணப்பள்ளி சாலையின் குறுக்கே வரும் 'தட.த்தடா' ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை: (அ) ஆம். (ஆ) 'தடத்தடா' ஆற்றின் குறுக்கே ரூ. 6.0 லட்சம் மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணி ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட நகலில் தலைமைப் பொறியாளர் (நெடுஞ் சாலை மற்றும் கிராமப்பணித்துறை) அவர்களால் சேர்க்கப் பட்டுள்ளது. இப்பால வேலையை இனிவரும் ஆண்டுகளில் ''மாநில சாலைகள்'' பாகம் 2-திட்டத்தின்கீழ் நிதிவளம், வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளைக் கருத்திற்கொண்டு சேர்த்து நடைமுறையில் மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திருவில்லிப்புத்தூர் தாலுக்காவில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு

வினா 1131.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுகாவில் எத்தனை கிணறுகளுக்கு மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக்கோரி மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்பு இந்த ஆண்டு கொடுக்கப்படும்?

விடை: (அ) 410 மனுக்கள்.

(ஆ) 50 பேர்கள்.

நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றும் செவிலியர்களுக்குக் கம்பளி ஆடையில் சீருடைகள்.

வினா 1132:—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தில் அரசு மருந்துவமனைகளில் பணி யாற்றும் செவிலியர் (Nurses) களுக்கு கம்பளி ஆடையில் (woolen) சீருடை வழங்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

1979 ஏப்ரல் 30]

விடை: நீலகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் செவிலியர்களுக்கு / வருடம் ஒன்றிற்கு ரூ. 105 வீதம் சீருடைப்படி வழங்கப்படுகிறது. இலாகா மூலம் அவர்களுக்கு சீருடை வாங்கி வழங்கப்படுவதில்லை. இவர்களுக்கு கம்பளி ஆடையில் சீருடை வழங்கிடும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

நீலகிரி மாவட்டத்தில் நூலகங்கள்

வினா 1133 — திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் பொது நூலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) புதிதாக பொது நூலகங்கள் அமைப்பது அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை —(அ) 36 (மாவட்ட நூலகம் ஒன்று கிளை நூலகங்கள் முப்பத்து ஐந்து) நூலகங்களின் பட்டியல் தகவலுக்காக இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஏதும் இல்லை.

இணைப்பு.

வரிசை எண்.	கிளை நூலகங்கள்
1.	கூடலூர்
2.	கோத்தகிரி
3.	கூனூர்
4,	கீழ் கோத்தகிரி
5.	மேலூர்
6.	மஞ்ஜூர்
7.	சிங்காரா
8.	இத்தலார்
9.	சேரம்பாடி
10.	புது கோபி (New hope)
11.	கெட்டி
12.	நஞ்ஜனாட் (Nanjanad)
13,	பண்டலூர்
14.	தேவர்சோலா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

15. நடுவட்டம்
16. பிக்காட்டி
17. அடிகரட்டி (Adigaratti)
18. மோயார்
19. அரவங்காடு
20. அரவெனியூ (Aravenue)
21. தாவனி
22. டி. ஒரநல்லி
23. கடாரி
24. தும்மனட்டி
25. இல்லித்தொரை (Ellithorai)
26. நெடுகுலு
27. பெங்கல்மட்டம்
28. எல்லநல்லி (Yellanalli)
29. அனிக்கோரை
30. சோலூர்
31. மாசினகுடி
32. சேலாஸ் (Selas)
33. கோனலகோரை
34. குள்ளகொம்பை
35. நெல்லகோட்டா
36. மாவட்ட மைய நூலகம், உதகமண்டலம்

தர்மபுரி மாவட்டத்தில் விதவைகளுக்கு உதவித்தொகை

வினா 1134: திரு. கா. அப்புனுகவுண்டர்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை விதவைப் பெண்களுக்கு 1977–78-ம் ஆண்டில் உதவிப்பணம் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அப்படி கொடுப்பதில் அளவு முறை உண்டா?

விடை: (அ) 100 (ஆ) ஆம்.

1979 ஏப்ரல் 30]

நன்னிலம் ஒன்றியத்தில் மின் விளக்குகள்

வினா 1135: திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலம் ஒன்றியத்தில் மின்சார விளக்குகள் அதிகப்படுத்த மின்சார வாரியத்திற்கு ஊராட்சி மன்றங்களால் பணம் கட்டப்பட்டு மின்சார வாரியம் வேலை தொடங்காமல் உள்ள ஊராட்சி மன்றங்கள் எத்தனை?

விடை: எதுவும் இல்லை.

சுந்தரபாண்டியம் கிராம அரிசனக் குடியிருப்பு பகுதிக்கு பாதை அமைப்பு.

வினா 1136: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் தொகுதி சுந்தரபாண்டியம் கிராமத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புப் பகுதியிலுள்ள சுடுகாட்டிற்குப் பாதை அமைப்பிற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை: சுந்தரபாண்டியம் கிராம அரிசன குடியிருப்பிலிருந்து அவ்வூர் சுடுகாட்டிற்கு செல்ல வண்டிப்பாதை உள்ளது. எனவே சுந்தரபாண்டியம் கிராமத்தில் வாழும் அரிசனங்கள் அவ்வூர் மயானத்திற்கு செல்ல பாதை வசதி கோரி முறையீடு செய்ய வில்லை. எனினும் சுந்தரபாண்டியம் கிராமத்திலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள செம்பட்டி கிராமத்தில் வாழும் அரிசனங்கள் மயானத்திற்கு செல்ல பாதை வசதி செய்து தர வேண்டும் என்று முறையிட்டுள்ளனர். அவ்வூர் மயானம் சுந்தர பாண்டியம் கிராமம் நில அளவை எண். 1431/2-ல் 0.20 ஏக்கர் நிலத்தில் உள்ளது. நில அளவை எண். 1435-ல் உள்ள செம்பட்டி கிராம அரிசன குடியிருப்பிற்கு சுந்தரபாண்டியம் கிராமம் நில அளவை எண். 1431/2-ல் மயானம் உள்ளது. அம்மயானத்திற்கு செல்ல நில அளவை எண். 1433/1, 2, 3-ன் வழியாக நடைபாதை உள்ளது. நில அளவை எண். 1433/1 மற்றும் 2-ல் உள்ள நிலங்களின் உரிமையாளர்கள் மேற்படி பாதையை தங்களது நிலங்களுடன் சேர்த்து சாகுபடி செய்து வருகின்றனர். எனவே செம்பட்டி கிராம அரிசனங்கள் நடைபாதையிலுள்ள ஆக்கிர மிப்புக்களை விலக்கித் தரும்படியும், மயானத்திற்கு தனியாக பாதை அமைக்க தேவையில்லை என்றும் கூறியுள்ளார்கள். இந்த நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்ற திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

திருக்கோகரணம் அருங்காட்சியகம்

வினா 1137 — திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகரணத்திலுள்ள அரசு மியூசியத்தை வேறு வசதியான இடத்திற்கு மாற்றும் அரசு செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை: (அ) ஆம்.

(ஆ) தற்போது அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம் நகரிலிருந்து தொலைவில் உள்ளதாலும் கட்டிடம் மிகவும் பழமையானதாகவும் விரிவுபடுத்த வாய்ப்பில்லாமல் இருப்பதாலும் நகரின் மையப் பகுதியில் புதிய கட்டிடம் கட்டி அருங்காட்சியகத்தை அங்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைச் சுற்றி போதுமான அரசுக்குச் சொந்தமான இடம் உள்ளது. அங்கு 5 ஏக்கர் அளவில் ஒரு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை அருங்காட்சிய துறைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தேவையான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான கருத்துரையை அரசு பரிசீலனை செய்யும்.

Planatarium at Salem.

Question — *1138:* Thiru N. Kittappa. Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether a Planatarium has been set up in the Engineering College at Salem; and

(b) if so, the details, thereof?

விடை :

(அ) ஆம்.

(ஆ) சேலம் பொறியியல் கல்லூரியில் ஏற்படுத்தியுள்ள கோள் இயல் கூடம் தென்னிந்தியாவிலேயே முதலாவதாக ஏற்படுத்தப் பட்டதாகும். இக்கோள் இயல் தளவாடம் ரூ. 1.05 இலட்சம் செலவில் கிழக்கு ஜெர்மனியிலிருக்கும் திருவாளர்கள் கார்ல் சைஸ் என்ற நிறுவனத்தினரிடமிருந்து இறக்குமதி செய்யப் பட்டது. எட்டு மீட்டர் விட்டமுடைய இக்கூடத்தில் 55 பேர் அமர வசதியுண்டு. தென்னிந்தியாவிலேயே இது இரண்டாவதாகும்.

1979 ஏப்ரல் 30]

கோள் இயல் கூடம் ஒரு அரை கோள வடிவமானது. அதன் மையத்திலிருக்கும் ஒரு நுட்பமான கருவியின் மூலம் கோளத்தின் உட்பரப்பின் மேல் செயற்கையான வானம் இயற்கையாக இருப்பது போலவே காட்சியளிக்கப்படுகிறது. இரவு, பகல், காலநிலை, தூசு இவைகளின் குறுக்கீடு ஏதுமின்றி செயற்கை வானத்தை எந்த நேரத்திலும் காட்சி கொள்ள இயலும். இயற்கையில் சூரியனின் பிரகாசத்தில் விண் மீன்களை பகலில் நாம் காண முடிவதில்லை. ஆனால், கோள் இயல் கூடத்திலோ சூரியனையும் விண்மீன்களையும் ஒரே சமயத்தில் காண முடியும். இதன்மூலம் ஒரு ஆண்டு காலத்தில் சூரியன் விண்மீன்களுக்கிடையில் எவ்வழியாக நகருவதாகத் தெரிகிறது என்பதைத் தெளிவாக ஆராய்ந்தறிய உதவுகிறது. இதே போன்று சந்திரனும் மற்ற கோள்களும் நகரும் பாதையையும் பார்த்தறியலாம். மற்றும், பூமி நடுக் கோட்டிலிருந்து வடதுருவம் வரை எந்த சம உயரக்கோட்டி லிருந்து (Latitude) பார்த்தாலும் தெரியும். வானத்தை கோள் இயல் கூடத்தில் கண்முன் கொண்டுவந்து நிறுத்தலாம். மழை காலங்களில் தொடர்ந்து மாதக்கணக்காக, இரவு, வானம் புலப் படாமல் இருக்கும்போது கோள் இயல் கூடம் விண் ஆராய்ச்சி யாளர்களுக்கும் சில வழிகளில் உதவக்கூடும்.

பொறியியல் பயிலும் மாணவர்களும் இதனால் பயனடைகின் றனர். பொதுவியல் மாணவர்கள் இதன் துணைகொண்டு வான் அளவியலை செவ்வனே கற்க வாய்ப்பு ஏற்படுகிறது. முக்கிய காடுகளான விண் நடுக்கோடு (eclestial equator), துருவ உச்சிக் கோடு (meridian), சூரிய வழி (ecliptic), மணி வட்டம் (hour circle) செங்குத்து வட்டம் (Vertical circle) முதலியவை மாணவர் மனதில் தெளிவாகப் பதிந்துவிடும்.

பொதுவியல் கோள் இயல் கூடம் பொது மக்களுக்கு பொது அறிவை வளர்ப்பதோடு இளம் பள்ளி மாணவர்களை அறிவியலில் நாட்டமுறச் செய்து, பின் காலத்தில் வானிலை ஆராய்ச்சியில் ஈடுபட ஊக்கம் ஊட்டுகிறது. இந்த கோள் இயல் கூடம் சேலம் வட்டார மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக விளங்கும்.

இக்கோள் இயல் கூடத்தின தொடக்க விழா 6-2-1979 அன்று நடந்தது.

Fishermen Co-operative Society at Averikadu

Question 1139 — Thiru N. Kittappa: Will Honourable the Minister for Food be pleased to state :

(a) whether the fishermen of Averikadu area in Thanjavur district have sought for a separate Co-operative Fishing Society;

(b) If so, whether the Deputy Director of Fisheries at Nagapattinam has recommended the formation of a society about the year 1977; and

(c) The stage at which the formation of a new Society stands at present.

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) அவரிக்காட்டில் ஒரு புதிய மீனவர் கூட்டுறவு சங்கம் "அவரிக்காடு உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில், தஞ்சாவூர் உதவி இயக்குநரால் 20-7-1978-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கம் 21-7-1978 முதல் வேலை செய்யத் தொடங்கியது.

Export of Polyester Sarees.

Question 1140:— Thiru N. Kittappa: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether polyester sarees produced at Tamil Nadu have been exported to foreign countries in recent times; and

(b) If so, the details thereof?

Answer: (a) No.

(b) Does not arise.

Milk Powder Units.

Question 1141— Thiru N. Kittappa: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether a number of milk powder manufacturing units are to be started in this State; and

(b) If so, the details thereof. ?

விடை:

(அ) மற்றும் (ஆ): பால் பெருக்கு திட்டம் 1-ன் கீழ் இந்திய பால்வள நிறுவனம் அளிக்கும் நிதி உதவியுடன் ஈரோட்டிலும், சேலத்திலும் பால் பவுடர் தயாரிக்கும் ஆலையுடன் கூடிய இரு தன்னிறைவு பால் பண்ணைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் மூலமாக அமைப்பதற்கு இந்த அரசு அங்கீகரித்துள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரியில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலையுடன் கூடிய பால் சேகரித்து வழங்கும் நிலையம் அமைப்பதற்கும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 30]

Surprise raids on Shops at Madras.

Question No. 1142—Thiru Salem M. Arumugham: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the officers of the Labour Department carried out surprise raids on shops at Madras about the 17th November 1978;

(b) if so, whether irregularities were detected in enforcing the labour legislations; and

(c) the details thereof?

விடை:

(அ) 17–11–1978 அன்று திடீர் ஆய்வுகள் எதுவும் நடத்தப் படவில்லை. 15–11–1978 அன்று தொழிலாளர் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் சென்னை நகரிலுள்ள கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

(ஆ) ஆம்.

(இ) 15-11-1978 அன்று 387 கடைகளில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 91 நிறுவனங்களில் சட்ட மீறல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கீழக்கோட்டையூர் கிராம அரிசனக் குடியிருப்புக்கு சாலை வசதி.

வினா எண் 1143—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிப்புத்தூர் தொகுதி கீழக்கோட்டையூர் கிராமத்தில் உள்ள அரிசனப் பகுதியிலிருந்து இடுகாட்டுக்குப் பாதை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை:

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், கீழக்கோட்டையூர் அரிசன குடியிருப்பிலிருந்து இடுகாட்டுக்குப் பாதை அமைக்க திருவில்லிபுத்தூர் அரிசன நல வட்டாட்சியரின் 14-2-1975 நாளிட்ட தீர்ப்பு எண். 4/75-ன் படி 0.23 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ரூபாய் 2,500 மதிப்பீட்டில் பாதை அமைக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரால் 14-9-1978 நாளன்று ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டு பாதை அமைக்கும் பணி தொடங்கி முன்னேறி வருகிறது.

அழகாபுரி கிராமத்திற்குப் பாலம் அமைப்பு.

வினா எண் 1144—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வடுகபட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த அழகாபுரி கிராமத்திற்கு செல்லும் பாதையில் உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை:

(அ) ஆம்.

(ஆ) வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து இவ்வேலையைச் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

நத்தம்பட்டி அரிசனக் குடியிருப்புக்குச் சாலை வசதி.

வினா எண் 1145—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி நத்தம்பட்டி (கீழுர்) அரிசனக் குடியிருப்பிலிருந்து சுடுகாட்டிற்கு பாதை வசதி செய்து தர செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை:

(அ) மற்றும் (ஆ) நத்தம்பட்டி கீழுரில்உள்ள 27 அரிசன குடும்பங்கள் $1\frac{1}{2}$ பர்லாங் தொலைவில் நில அளவை எண். 15-ல் உள்ள ஓடை புறம்போக்காக வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் 3 சென்டை மயானமாக பயன்படுத்தி வருகின்றனர். ஊராட்சி சாலையிலிருந்து இம்மயானத்திற்கு செல்ல, நில அளவை எண்கள் 18 மற்றும் 19-ல் உள்ள பட்டா நிலங்களின் வரப்புகளின் வழியாக சுமார் 150 அடி செல்ல வேண்டும். நாளடைவில் ஓடை விரிவடையுமாதலால், அதற்கு பாதை அமைப்பது சாத்தியமில்லை. மேற்படி மயானத்திற்கு 200 அடி தொலைவில் நில அளவை எண். 16-ல் 0·34 ஏக்கர் நிலம் மயானமாக வகைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த மயான நிலத்தில் தென்பக்கம் ஒரு பகுதியை, நத்தம்பட்டி மேலூர் அரிசன (கிருத்துவர்) சமூகத்தைச்

1979 ஏப்ரல் 20]

சார்ந்த சுமார் 160 குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர். இது ஊராட்சி சாலையை ஒட்டியுள்ளது. இதில் வடப்பக்கம் சுமார் 20 செண்டு காலியாக உள்ளது. இதனை நத்தம்பட்டி கிழூர் அரிசனங்கள் மயானமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இது ஊராட்சி சாலையை ஒட்டி உள்ளமையால் தனியாக பாதை அமைக்கத் தேவையில்லை

வடார்க்காடு மாவட்டத்தில் மதிய உணவு வழங்குவதற்கான வண்டிகள்.

வினா எண். 1146—திரு. எஸ்.ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மதிய உணவு எடுத்துக்கொண்டு செல்லும் மோட்டார் வண்டிகள் தற்போது எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றுள் பழுதடைந்த நிலையில் உள்ளைவ எத்தனை?

(இ) உரிய நேரத்தில் மதிய உணவு சேர்ப்பிக்கப்படுவதற்கு புதிய மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தேச முண்டா?

விடை

(அ) 73

(ஆ) 29

(இ) 1978–79 நிதியாண்டில் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள மத்திய சமையற்கூடங்களுக்கு 7 (ஏழு) புதிய டீசல் வேன்கள் வழங்கப்பட்டுள்ளன. பழுதுபடும் வண்டிகள் விக்கிரவாண்டியிலுள்ள மத்திய சமையற்கூட வண்டிகளுக்கான பராமரிப்புப் பணிமனைக்கு அவ்வப்போது அனுப்பப்பட்டு சீர் படுத்தப்பட்டு வருகின்றன.

வாசுதேவநல்லூர் பகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா எண். 1147—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில் கிராம மின் இணைப்புத் (REC) திட்டத்தின் கீழ் பம்பு செட்டு பொருத்த ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் எந்த அடிப்படையில் வேலை தொடங்கி முடிவடையும்?

விடை: —

(அ) ரூ. 49·232 லட்சம்.

(ஆ) இக்கடன் தொகை 1978–79 ஆம் ஆண்டிலிருந்து நான்கு தவணைகளாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். இதன் அடிப்படையில் இத்திட்டம்1978–79ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1981–82 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரசலாற்றின் குறுக்கே பாலம்.

வினா எண். 1148— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலம் ஒன்றியத்தில் கொச்சவாசல் ஊராட்சிக்குக் குறுக்கே உள்ள அரசலாற்றில் பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை: இல்லை.

அரசு ஊழியர் பொது சேமிப்பு நிதிக் கணக்குகள்.

வினா எண். 1149: திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழக அரசு ஊழியர் பொது சேமிப்பு நிதி (General Provident Fund) யில் கோரப்படாமல் தற்போது தனியாக வைக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு?

விடை:—

தமிழக அரசு ஊழியர் பொது சேமிப்பு நிதி (General Provident Fund)யில் கோரப்படாமல் தற்போது தனியாக 1978ம் வருடம் நவம்பர் மாதம் இறுதிவரை வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,81,035.76 ஆகும். (தலைமைக் கணக்காயர் கொடுத்த தகவல்).

பதப்படுத்தப்பட்ட இறைச்சி ஏற்றுமதி.

வினா எண். 1150—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட இறைச்சி தோல் கொழுப்பு எலும்புகள் மற்றும் விலங்குகளினால் கிடைக்கும் துணைப் பொருட்களின் மதிப்புத் தொகை எவ்வளவு?

விடை:—

இப்பொருள் இந்திய அரசு சம்பந்தப்பட்டதாகும். மாநில அரசிடம் விபரம் இல்லை.

மாயூரம் நகராட்சிக்கு குடிநீர் திட்டம்

வினா எண். 1151— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாயூரம் நகராட்சியில் குடிநீர் திட்டத்தினை விரிவு படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளுக்கு?

விடை:—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாயூரம் நகராட்சிக்குக் குடிநீர் திட்டம்.

வினா எண். 1152—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:—

(அ) மாயூரம் நகராட்சிப் பகுதியிலுள்ள குடிநீர் திட்டத்திற்காக 1977-78 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் அதன் பராமரிப்புச் செலவு எவ்வளவு?

விடை:—

(அ) ரூ. 1.31 லட்சம்

(ஆ) ரூ. 1.15 லட்சம்

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள்

வினா எண். 1153—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1976-77; 1977-78-ம் ஆண்டுகளில் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் பணிபுரிய ஓட்டுநர்கள் நடத்துநர்கள் முறையே எவ்வளவு பேர் பணிக்கு புதிதாக அமர்த்தப் பட்டார்கள்.

விடை:—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 1976-77-ல் 347 ஓட்டுநர்களும், 126 நடத்துநர்களும் 1977-78-ல் 315 ஓட்டுனர்களும் 291 நடத்துநர்களும் புதிதாக பணிக்கு அமர்த்தப் பட்டனர்.

தென்னை நார் ஆலைகள்.

வினா எண். 1154—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;—

தமிழ்நாட்டில் உள்ள தென்னை நார் ஆலைகள் எத்தனை? மாவட்ட வாரியாக?

விடை:—

தமிழ்நாட்டில் 111 (நூற்று பதினொன்று) தென்னை நார் ஆலைகள் தற்போது இயங்கி வருகின்றன. மாவட்ட வாரியாக அவைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

வரிசை எண்.	மாவட்டம்.	மொத்த தென்னை நார் ஆலைகள்.
1.	தஞ்சாவூர்	22
2.	திருச்சி	8
3.	தென் ஆற்காடு	1
4.	வட ஆற்காடு	1
5.	சேலம்	6
6.	புதுக்கோட்டை	2
7.	மதுரை	15
8.	கன்னியாகுமரி	21
9.	கோயம்புத்தூர்	13
10.	திருநெல்வேலி	9
11.	தர்மபுரி	5
12.	ராமநாதபுரம்	8
	மொத்தம்	111

1979 ஏப்ரல் 30]

கும்பகோணம் உணவு விடுதிகளில் விலைகள்.

வினா எண். 1155—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் கும்பகோணத்தில் உணவு விடுதிகளில் தின்பண்டங்களின் விலைகள் குறைக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) அறியும்.

(ஆ) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் கும்கோணம் கோட்டாட்சித் தலைவரால் கும்பகோணத்தில் உள்ள உணவு விடுதி உரிமையாளர்களின் கூட்டம் உணவுப் பண்டங்களின் விலை குறைப்பது குறித்து நடத்தி, விவாதிக்கப்பட்டு இனிப்புப் பலகாரங்களின் விலைகளை கீழ்க்கண்ட விவரப்படி குறைக்கப்பட்டுள்ளது.

	14–10–78–ம் நாள் அமலில் இருந்த விலை.	15–10–78–ம் நாளிலிருந்து குறைக்கப்பட்ட விலை விவரம்.
	ரூ.	ரூ.
மிகப்பெரிய உணவு விடுதிகளில்	0.80	0.70
மற்ற உணவு விடுதிகள்	0.70—0.75	0.60— 0.65

குறைக்கப்பட்ட விலைகள். 25.10.78 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டன.

திருச்செந்தூர் தொழிற் பயிற்சிக் கூடம்

வினா எண். 1156—திரு. ஆர். அமிர்தராஜ்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1978-79 ஆம் நடப்பு ஆண்டில் திருச்செந்தூர் தொழிற் பயிற்சி கூடத்தில் (1979) பயிற்சியில் சேர வந்து சேர்ந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் தேர்வு செய்யப்பட்டது எத்தனை ?

விடை—(அ) 1978-79 ஆம் ஆண்டில் திருச்செந்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2,485.

(ஆ) அவற்றில், தேர்விற்கு அழைக்கப்பட்ட மொத்தம் 625 விண்ணப்பதாரர்களில், 169 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

Purchase of milk for General Hospital, Madras.

Q. No. 1157—Thiru N. Kittappa: Will Hon. the Minister for Health be pleased to state:

(a) whether the Madras General Hospital has been purchasing milk from the Tamil Nudu Dairy Development Corporation;

(b) If so, the average quantity purchased per month.

விடை: (அ) சென்னை அரசு பொது மருத்துவ மனைக்குத் தேவைப்படும் பால் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திலிருந்து வாங்கப்படுகிறது.

(ஆ) 1977-78-ம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 18,426 லிட்டரும் 1978-79ம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 18,408 லிட்டரும் பால்வள நிறுவனத்திடமிருந்து பால் வாங்கப்பட்டிருக்கிறது.

மதுரையில் கிருதுமால் வாய்க்கால் கரைகள்

வினா எண். 1158—திரு. நா. லட்சுமிநாராயணன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை நகரில் திடீர் நகர் பகுதி வழியாகச் செல்லும் கிருதுமால் வாய்க்கால் கரைகளை பலப்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை: (அ) பொதுப்பணித் துறையினரிடம் யாதொரு திட்டமும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வெங்கடேசபுரம் கிராமத்தில் புதிய கண்மாய்.

வினா எண். 1159—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிபுத்தூர் தொகுதி, வெங்கடேசபுரம் கிராமம், மேச்சல் தரையில், அப்பகுதி பட்டாதாரர்கள் கம்மா (Tank) கட்ட கோரிக்கை எழுப்பி உள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

1979 ஏப்ரல் 30]

விடை: (அ) மற்றும் (ஆ) திருவில்லிபுத்தூர் தாலுக்கா வெங்கடேசபுரம் கிராமம் அருகே ரூ. 4.60 லட்சம் செலவில் ஒரு கண்மாய் அமைக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. மேற்படி வேலையைத் துவங்க செயற்பொறியாளர் (பொதுப்பணித் துறை), இராமநாதபுரம் வட்டம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை.

வினா எண். 1160—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், அயன்கரிசல்குளம் கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் கால்நடைகள் அதிகம் உள்ளதால் அப்பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை நிறுவவேண்டும் என அப்பகுதி பொது மக்கள் மனுக்கள் மூலம் கோரிக்கை எழுப்பி உள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை: (அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் அயன்கரிசல் குளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் நிறுவ அப்பகுதி மக்களிடமிருந்து இதுநாள் வரை கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் நூல்நிலையங்கள்.

வினா எண். 1161—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் தொகுதி, வைத்தியலிங்காபுரம், பெருமாள் தேவன்பட்டி ஆகிய ஊர்களில் நூல்நிலையம் நிறுவும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை: இல்லை.

மம்சாபுரம் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

வினா எண். 1162—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் என்ற கிராமத்தில் வாழும் அரிசனங்கள் வீடு இல்லாதவர்கள் சர்வே எண். 160/4, 3, 2, 1 நிலத்தை வீட்டு மனைக்காக சுமார் பத்து வருட காலமாக தங்களுக்கு ஒதுக்கித்தர வேண்டும் என அரசிடம் முறையிடுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த இடத்தை வீட்டு மனைக்கு ஒதுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை: (அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், மம்சாபுரம் கிராமத்தில் வாழும் அரிசனங்கள் சர்வே எண். 160/4, 3, 2, 1-ல் உள்ள நிலங்களை வீட்டு மனைக்காக கையகப்படுத்தித்தர வேண்டுமென முறையிட்டது உண்மை.

(ஆ) மம்சாபுரம் கிராமத்தில் ஐந்து பேர்களே வீடில்லாமல் இருக்கின்றனர். அந்த ஐந்து பேர்களிலும் நால்வர், திருவில்லிபுத்தூரில் நூற்பு ஆலைகளிலும் மற்றும் ஒருவர் தீ அணைப்புத் துறையிலும் பணிபுரிகின்றனர். அவர்கள் பொருளாதார நிலையில் நன்கு உள்ளதால் அவர்களே அவர்களுடைய வருமானத்தில் வீட்டு மனைகள் வாங்கிக் கொள்ளலாம். எனவே அவர்களுக்கு அரசு நிலம் கையகப்படுத்தி, வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்பது அவசியமில்லை.

Screening of documentary on goldsmiths.

Qn. No. 1163: Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to State:

(a) whether the State Government have requested the Central Government to withdraw the screening of the documentary, 'Ungrateful man', and

(b) if so, the details thereof?

விடை: (அ) ஆம். (இ) மத்திய அரசின் திரைப்படப் பிரிவு தமிழில் 'நன்றிகெட்ட மனிதன்' (Ungrateful Man) என்ற செய்திப் படத்தை தயாரித்துள்ளது. இப்படத்தில் சில பகுதிகள் பொற்கொல்லர்கள் நாணயமற்றவர்கள் என சித்தரிக்கும் வகையில் தவறான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், மத்திய அரசு இப்படத்தை திரும்ப பெறவேண்டும் என்றும் பொற்கொல்லர் சமுதாயம் கோரியது.

1979 ஏப்ரல் 30]

உடனே தமிழக அரசு பம்பாயிலுள்ள மத்திய அரசின் திரைப் படப் பிரிவின் தலைமை தயாரிப்பாளருடன் தொடர்பு கொண்டு படத்தை திரும்பப்பெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத் தியது. இவ்வரசின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய அரசும் 'நன்றிகெட்ட மனிதன்' என்ற கார்டூன் படத்தை தொடர்ந்து திரையிடாமல் திரும்பப் பெற்றது.

கரியாப்பட்டணம் சாலையில் தரைப்பாலம்.

வினா எண் 1164—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தலைக்காட்டிலிருந்து வேதாரண்யம் ஒன்றியம் கரியாப்பட்டணம் செல்லும் கிராமச் சாலையில் போக்கு வாய்க்கால் பாலம் கட்ட அரசிடம் குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருசெல்லிக்காவல்-பூதமங்கலம் சாலை.

வினா எண். 1165—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் ஒன்றியம், திருச்செல்லிக்காவலில் இருந்து புத்தகரம் மாவட்டக்குடி வழியாக பூதமங்கலம் செல்லும் சாலை மேம்பாடு செய்ய அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அரிச்சந்திரா நதியின் குறுக்கே பாலம்

வினா எண். 1166—திரு. பொ, உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் ஒன்றியத்திலுள்ள பள்ளிவர்த்தியில் அரிசந்திரா நதியில் பாலம் அமைக்க அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 ஏப்ரல் 30

மட்டப்பாறையில் புதிய அணைக்கட்டு

வினா எண். 1167—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதியிலிருந்து வரும் தண்ணீரைப் பயன்படுத்தும் வகையில், மட்டப்பாறையில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை : (அ) இல்லை (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவண்ணாமலை மின்திட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

வினா எண் 1168—திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மின் திட்டத்தில் புதிய விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு தருவதாகவும் விவசாயிகள் 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்கிக் கொள்ள வேண்டுமென நோட்டீஸ் தரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு அவ்வாறு நோட்டீஸ் தரப்பட்டது?

(இ) மோட்டார் வாங்கி வைத்துள்ள விவசாயிகள் எத்தனை பேர்?

(ஈ) மின் இணைப்பு பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்?

விடை : (அ) ஆம் (ஆ) 23,744 (இ) தயார் நிலையில் இருப்பதாக அறிவித்தவர்கள் 8,874 பேர், (ஈ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதி வரை 2,064 பேர்,

கலசப்பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் வரத்து

வினா எண். 1169—திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் ஏரிக்கு செய்யாற்றில் இருந்து தனிக் கால்வாய் வெட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை : (அ) ஆம் (ஆ) இத்திட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1979 ஏப்ரல் 30]

வேடந்தவாடியில் கால்நடைகளுக்கிடையே நோய்.

வினா எண். 1170— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் கலசபாக்கம் தொகுதியில் உள்ள வேடந்தவாடி கிராமத்தில் திடீரென கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டு கால்நடைகள் இறந்து போனதா?

(ஆ) ஆம் எனில், இறந்த கால்நடைகள் எத்தனை?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை : (அ) 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கலசபாக்கம் தொகுதியில் உள்ள வேடந்தவாடி கிராமத்தில் இரண்டு மற்றும் மூன்று வயதுடைய இரண்டு காளைக் கன்றுகள் எபிமிரல் காய்ச்சல் (Ephemeral fever) என்னும் நோய் கண்டு இறந்தன.

(ஆ) இரண்டு காளைக் கன்றுகள்.

(இ) கலசபாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் அளித்த தகவலின் பேரில் மங்கலம் கால்நடை உதவி மருத்துவர் 11-12-78 அன்று வேடந்தவாடி கிராமத்திற்கு சென்று பார்த்தபொழுது, அங்கு இறந்து போன கால்நடைகள் எதுவும் இல்லை. நோய்வாய்ப்பட்ட மூன்று கால்நடைகள் நொண்டிக் கொண்டும், காய்ச்சலுடனும் காணப்பட்டன. அதை எபிமிரல் (Ephemeral Fever) காய்ச்சல் என்று நிர்ணயித்து அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டதின் விளைவாக கால்நடைகள் மூன்றும் நல்ல நிலைமைக்கு திரும்பின. இந் நோய் தொத்து நோய் அல்ல. முன்னேற்பாடாக, வேடந்தவாடி கிராமத்தில் உள்ள 480 கால்நடைகளில் 466 கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி 17-12-1978 அன்று போடப்பட்டது.

தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் புதிய ஏரி

வினா எண். 1171— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை பொதுப்பணி கோட்டத்தைச் சேர்ந்த தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் புதிய ஏரி கட்டித் தரக் கோரி விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை : (அ) ஆம். (ஆ) பூர்வாங்க ஆய்வுகளின் பலனாக இத்திட்டம் செயல்படுத்த முடியும் என கருதப்படின், விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை மாவட்டத்தில் ஆசிரியர் பதவிகள்

வினா எண். 1172—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாவட்டத்தில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இவ்வாண்டு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் எண்ணிக்கை யாது?

(ஆ) அவர்களில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை : இவ்வாண்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தமிழாசிரியர்கள் ஒருவரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையாக நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் ஒரு பட்டதாரி ஆசிரியர் மட்டும் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சாத்தனூர் அணைப்பகுதியில் உள்ள பூங்கா

வினா எண். 1173—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையில் உள்ள பூங்காக்கள் சரியான பராமரிப்பு இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

விடை : (அ) ஒவ்வொரு ஆண்டும் சாத்தனூர் அணையில் உள்ள பூங்காக்களின் பராமரிப்புக்காக ஒதுக்கப்படும் நிதிக்கு ஏற்றவாறு இவ்வணையில் உள்ள பூங்காக்கள் சரிவர பராமரிக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

தண்டராம்பட்டு தொகுதிக்கு பாம்பன் ஆற்று நீர்.

வினா எண். 1174—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் 10,000 ஜனத்தொகை கொண்ட கிராமத்தின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க பாம்பன் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை : இல்லை.

1979 ஏப்ரல் 30]

கைமுறை காகித ஆலைகள்.

வினா எண். 1175—திரு. த. வேணுகோபால் ; மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் அரசினர் கைமுறை காகித தொழிற்சாலை எத்தனை இடங்களில் உள்ளன?

விடை : வட ஆற்காடு மாவட்டத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் நிர்வாகத்தில் ஆரப்பாக்கம் என்ற இடத்தில் ஒரு கை முறை காகித அலகு இயங்கி வருகிறது. வந்தவாசியில் மேலும் ஒரு கைமுறை காகித அலகு ஆரம்பிக்கப் படும்.

வினா எண். 1176—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் அரசினர் கைமுறை காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

விடை : திருவண்ணாமலை வளர்ச்சி மாவட்டத்தில் வந்த வாசியில் கைமுறை காகித அலகு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் வரத்துக் கால்வாய்கள்.

வினா எண். 1177—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ள நிவாரண நிதியிலிருந்து 1978-79-ம் ஆண்டில் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் கண்மாய்களுக்கு வரத்துக் கால்வாய் செப்பனிட செல விட்ட தொகை எவ்வளவு?

விடை : 1978-79 ஆம் ஆண்டில் வெள்ள நிவாரண நிதி யிலிருந்து தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் பொதுப்பணித் துறையின் மூலம் கண்மாய்களுக்கு வரத்துக் கால்வாய் செப்பனிட செலவு ஏதும் செய்யப்படவில்லை.

மேக்கிரிமங்கலம் கிராம அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா எண். 1178 — திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, மேக்கிரி மங்கலம் கிராமத்தில் அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டதா?

(இ) இதற்கென செலவான தொகை எவ்வளவு?

விடை : (அ) தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மேக்கிரிமங்கலம் கிராமத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக்கழகத்தின் மூலம் 101 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன.

(இ) இதற்கான செலவுத்தொகை ரூ. 4,01,475 ஆகும்.

பெணுகொண்டாபுரம் ஏரிக்கு நீர்வரத்து.

வினா எண். 1179—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பெணு கொண்டாபுரம் பி. டபிள்யூ. டி. ஏரிக்கு பாரூர் ஏரியிலிருந்து கால்வாய் வெட்டியும் பல ஏரிகள் மூலம் நீர் நிரப்பி தண்ணீர் கொண்டுவரும் திட்டம் உள்ளதா?

(ஆ) அப்படியானால் திட்டம் எந்த நிலையில் உள்ளது? எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

விடை: (அ) ஆம். (ஆ) இத்திட்டம் பொதுப்பணித்துறையின் ஆய்வில் உள்ளது. ஆய்வின் முடிவைப்பொறுத்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

1979 ஏப்ரல் 30]

தருமபுரி மாவட்டத்தில் நூலகங்கள்.

வினா எண். 1180—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் லோகல் லைப்ரரி அத்தாரிட்டி செயல்படுகிறதா?

(ஆ) மத்தூர், சந்தூர் மற்றும் கிராமங்களில் லைப்ரரி ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(இ) எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை : (அ) ஆம். (ஆ) இல்லை. (இ) தருமபுரி மாவட்ட நூலக ஆணைக் குழு புதிதாக கிளை நூலகங்கள் திறக்க வசதி வந்த பின் இதுபற்றி கருதப்படும்.

வேலூர் வட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்.

வினா எண். 1181—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், விரிஞ்சிபுரத்திலுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியை பெரிதாகக் கட்டி பொது மக்களுக்குப் போதுமான தண்ணீர் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது?

விடை : (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

வினா எண். 1182—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், ஜாஹூதீன் பேட்டையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதுபற்றிய விவரங்கள் யாவை?

விடை : (அ) இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை.

[1979 ஏப்ரல் 30

தேங்காப்பட்டணம் உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

வினா எண். 1183—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேங்காப்பட்டணம் அரசு உயர்நிலைப் பாடசாலைக்கு சொந்தமாக 50 சென்டுக்கு மேல் நிலமிருந்தும், தனியார் வீட்டு வராந்தாக்களில் வகுப்புகள் நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இப்பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டா?

விடை: (அ) ஆம். (ஆ) இவ்வுயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 99,500 செலவில் கட்டிடம் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுமதியளிக்கப்பட்டு இதற்கான வேலைகள் துவங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விளவங்கோடு தாலூகாவில் வெள்ள நிவாரணப் பணிகள்.

வினா எண். 1184—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1978 நவம்பர் மாதத்தில் பெய்த கன மழையினால் அழிந்து போன வெற்றிலைக்கொடிக்கால், வாழை, நெற்பயிர்களுக்கு நட்டஈடு மற்றும் மானியம் வழங்க விளவங்கோடு தாலூகாவிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலூகாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியத் தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

பயிர்.	பரப்பு (ஏக்கரில்).	விவசாயிகள் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்).
வெற்றிலை	8·38	180	4,193
வாழை	26·31	113	2,631
நெல்	132·00	268	4,022

விளவங்கோடு தாலூகாவிற்கென்று தனியாகத் தொகை ஒதுக்கம் ஏதுமில்லை.

REPORTING SECTION

1979 ஏப்ரல் 30]

வினா எண். 1185—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978 நவம்பர் மாதத்தில் பெய்த கன மழையினால் விளவங்கோடு தாலுகாவில் உடைந்துபோன குளங்கள், கால்வாய்கள், அரித்துச் செல்லப்பட்ட சாலைகள் ஆகியவை சீரமைக்க விளவங்கோடு தாலுகாவிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

விடை: 1978 நவம்பர் மாதத்தில் பெய்த கன மழையினால் விளவங்கோடு தாலுகாவில் உடைந்துபோன குளங்கள், கால்வாய்கள் ஆகியவை சீரமைக்க விளவங்கோடு தாலுகாவிற்கு 2,05,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. மேலும் சாலைகளை சீரமைப்பதற்காக கீழ்க்காணும் தொகையும் ஒதுக்கப்பட்டது:—

1.	அரசு சாலைகள்	ரூ. 5,79,000
2.	ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்.	ரூ. 7,08,300
3.	நீர்ப்பாசன சிறு குளங்கள் (ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளவை)	ரூ. 5,87,000
4.	அரசு கட்டிடங்கள்	ரூ. 25,000

வினா எண். 1186—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1978 நவம்பரில் விளவங்கோடு தாலுகாவில் பெய்த கன மழையால் குழித்துறை, தாமிரபரணி ஆற்றின் இருபுறமும் இருந்து 1,500-க்கு மேல் வீடுகள் இடிந்தனவா?

(ஆ) ஆம் எனில், இவற்றிற்கு எவ்வளவு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது?

விடை: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை-தாமிரபரணி ஆற்றின் இருபுறமும் 907 குடிசைகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் கரையிலுள்ள 52 குடிசைகளும் பாதிக்கப்பட்டன.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூபாய் 60,900-ம், திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ. 3,400-ம் குடிசைப் புனரமைப்பு மானியமாக வழங்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்பெற்ற கூட்டுறவுக் கடன்கள்.

வினா எண். 1187 — டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில், கூட்டுறவு வங்கி மூலம் இந்த ஆண்டு (1978) எவ்வளவு கடன், என்னென்ன வகைகளுக்காக வழங்கப்பெற்றுள்ளது?

விடை: தருமபுரி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 1978-ல் வழங்கிய கடன்கள் விபரம் பின்வருமாறு:—

	கடன்கள் விபரம்.	(ரூபாய் இலட்சத்தில்.)
1	விவசாயக் கடன்கள்	202·25
2	நகைக் கடன்கள்	22·45
3	கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	82·22
4	நெசவாளர் சங்கங்கள்	17·72
5	நகர வங்கிகள்	26·59
6	சர்க்கரை ஆலைகள்	243·56
7	நுகர்வோர் நடவடிக்கைகளுக்காக	41·44
8	நிலவள வங்கிகள்	59·12
9	வைப்புத் தொகை கடன்கள்	2·01
	மொத்தம்..	697·36

தஞ்சை மாவட்டத்தில் நலப்பள்ளிக் கட்டிடங்கள்.

வினா எண். 1188—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தற்போது அரிசன நலத்துறையின் கீழ் இயங்கிவரும் அரசு நல தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவற்றுள் வாடகைக் கட்டிடத்தில் எத்தனை பள்ளிகள் இயங்குகின்றன?

1979 ஏப்ரல் 30]

விடை : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அரிசன நலத்துறையின் கீழ் இயங்கிவரும் பள்ளிகள் பின்வருமாறு :—

(1) உயர்நிலைப் பள்ளிகள்	இரண்டு
(2) நடுநிலைப் பள்ளிகள்	ஏழு
(3) தொடக்கப் பள்ளிகள்	நூற்று நாற்பத்தைந்து
(4) ஓராசிரியர் பள்ளிகள்	ஒன்பது

(ஆ) அவற்றுள் நாற்பத்திரண்டு பள்ளிகள் வாடகை (தனியார்) கட்டிடங்களிலும், கொட்டகைகளிலும் இயங்குகின்றன.

தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனை.

வினா எண். 1189—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனைக்கென தனி (Anaesthetist) மயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

விடை : தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனைக்கென தனி மயக்குநர் (Anaesthetist) நியமிக்கும் ஒரு கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டியில் வசூலிக்கப்பட்ட செஸ் தொகை.

வினா எண். 1190—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டிக்கு செஸ் மூலமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் விவசாயிகள், வியாபாரிகள் ஆகியோரிடம் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அத்தொகையின் மூலம் அரசு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் செய்து கொடுத்துள்ள வசதிகள் யாவை?

விடை : (அ) தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டியால் தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டம் பிரிவு (1)-ன் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட செஸ் தொகை ரூ. 59,48,862.45. தமிழ்நாட்டில் விவசாயிகளிடம், மார்க்கட் கட்டணம் (செஸ்) வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 22 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தி விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை நியாயமான விலைக்கு விற்க ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை

செய்வதால் சரியான எடை, உயர்வான விலை, உடனடிப் பணம், எந்தவித பிடித்தமும் இல்லாமை ஆகியவை விவசாயிகளுக்குக் கிட்டக்கூடிய பயன்களாகும். அதேபோல் வியாபாரிகள் ஒழுங்கு முறை விற்பனைகூடங்கள் மூலம் ஒரே இடத்தில் தங்களுக்குத் தேவையான விளைப்பொருட்களைத் தேவையான தரத்தில் வாங்கிக்கொள்ளலாம். தஞ்சாவூர், திருத்துறைப்பூண்டி, குத்தாலம், பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் சொந்த இடங்கள் வாங்கப் பட்டு காவேரி நீர்ப்பாசனப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 29,59,685·27 செலவழிக்கப்பட்டு விவசாயிகள் தங்கும் விடுதி, உலர்த்தும் களம், மாட்டுக் கொட்டகை, ஏல அரங்கு, கிட்டங்கி, அலுவலகக் கட்டிடம், பணம் பட்டுவாடா செய்யும் அலுவலகம், சிற்றுண்டிச்சாலை முதலிய கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. ஏனைய விற்பனைக் கூடங்களுக்கு நிலங்கள் வாங்கவும், கட்டிடங்கள் கட்டவும் குழுவின் உபரி நிதியிலிருந்து ரூ. 15 லட்சம் வீதம் வருடத்திற்கு செலவழிக்க திட்டமிடப்பட்டு, ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப் படுகிறது. வல்லத்தில் ரூ. 5,25,000 செலவிலும், கும்பகோணத் தில் ரூ. 7,80,000 செலவிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நன்னிலம் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகள்.

வினா எண். 1191—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பொதுப்பணித்துறை துணை நிர்வாகப் பொறியாளர் அவர்களின் பகுதியின் கீழ் கடந்த வெள்ள சீர் அமைப்பு வேலை எவ்வளவு ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்டது?

(ஆ) அப்பணிகள் எத்தனை பேருக்கு பகிர்ந்து வழங்கப் பட்டது?

விடை : (அ) & (ஆ) பாசன வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 3.45 இலட்சத்தை பயன்படுத்த ரூ. 4·82 இலட்சங்களுக்கான மதிப்பீடுகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:—

(1)	பாசன வாய்க்கால்களுக்கான உடனடி நிவாரண வேலைகளுக்கு.	ரூ. 3·25	இலட்சங்கள்
(2)	பாசன மதகுகளுக்கு நிரந்தர மாற்று அமைப்பு.	ரூ. 1.10	,,
(3)	லஸ்கர் மற்றும் மேஸ்திரிகளுக்கு குடியிருப்புக்களை பழுதுபார்க்க.	ரூ. 0.47	,,
	மொத்தம் ..	ரூ. 4.82	,,

1979 ஏப்ரல் 30]

உடைப்பு மற்றும் நீர் அரித்த கரைகளை பழுதுபார்க்கும் அவசர வேலைகள் 97 பேர்களிடம் நியமன முறையில் ஒப்படைக்கப்பட்டன. இவர்களுடன அப்பகுதியில் உள்ள வேலையை எடுத்துச் செய்ய முன்வரும் விவசாயிகள், வழக்கமான ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர் உள்ளனர்.

மதகுப் பலகை வேலைகள், தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு பொதுப்பணித்துறை தொழிலியல் கழகம், சென்னை, மற்றும் டான்சி யூனிட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன. கட்டிட வேலைகள் யாவும் டெண்டர்கள் கோரப்பட்டு வேலைகள் செய்யப்பட்டன.

வினா எண். 1192—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த (1978) நவம்பர்—டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக கொடுக்கப்பட்ட உதவித் தொகை கிடைக்கவில்லை என்று நன்னிலம் வட்டத்தில் முறையீடுகள் எத்தனை வந்தன?

(ஆ) அவற்றுள் பரிசிலனை செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டவை எத்தனை?

விடை : (அ) 1,657, (ஆ) 1,390.

திருமலைராயன் கால்வாயில் ரெகுலேட்டர் அமைத்தல்.

வினா எண். 1193—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருமலைராயன் ஆற்றில் பாகசாலையில் ரெகுலேட்டர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

விடை : (அ) ஆம். தேதியூர் விவசாயிகள் சங்கத் தலைவர் கொடுத்த மனுவின் பேரில் திருமலைராயன் மைல் 72/0-ல் ரெகுலேட்டர் அமைக்கும் வேலை ரூபாய் 4 இலட்சத்திற்கான மதிப்பீட்டில் ''காவிரி கால்வாய்கள் மேம்பாடு'' திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. இதுபற்றி தலைமைப் பொறியாளர் (பாசனம்) குறிப்புரை அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இவ்வேலை அரசின் ஒப்புதல் பெற்ற பின், 1979—80-ல் தொடங்கப்படும்.

[1979 ஏப்ரல் 30

பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா எண். 1194—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியம் பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றுவோரில் எத்தனை பேர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது?

(இ) எஞ்சியவர்களுக்கு வீடு வழங்க என்ன நடவடிக்கை?

விடை : (அ) நன்னிலம் ஒன்றியம், பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப்பிரிவில் பணியாற்றுவோரில் 5 பேர்களுக்கும், குடும்பநலப் பிரிவில் பணியாற்றுவோரில் 5 பேர் களுக்கும் குடியிருப்பு இல்லங்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வாரம்ப சுகாதார நிலைய பொதுப்பிரிவில் பணி யாற்றும் மற்ற 4 பேர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் வழங்கப் படாமல் உள்ளன.

(இ) தஞ்சாவூர் மாவட்ட சுகாதார அதிகாரி இவ்வாரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப்பிரிவில் பணியாற்றும் மேற்கூறிய பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு நட வடிக்கைகள் எடுக்குமாறு தஞ்சாவூர், பொதுப்பணித்துறை காவேரி கோட்ட நிர்வாகி பொறியாளருக்கு செயற்குறிப்பு அனுப்பி யுள்ளார்.

விரைவுப்பேருந்துகளில் வழங்கப்பெறும் பயணச்சீட்டுகள்.

வினா எண். 1195—திரு. கூ. ரமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் விரைவு வண்டி களில் பிரயாண டிக்கட்டுகள் ரத்து செய்யப்படும்போது எவ்வளவு விகிதாச்சாரம் கழிக்கப்படுகிறது?

(ஆ) எந்த அடிப்படையில் அந்தக் கழிவு கணக்கிடப் படுகிறது?

விடை : (அ) பல்லவன் போக்குவரத்துக் கழக (விரைவுப் பிரிவு) பேருந்துகளில் முன் பதிவு செய்யப்பட்ட பயணச் சீட்டு களை பயணம் செய்யும் நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஒப்படைத்து ரத்து செய்யக்கோரினால் கட்டணத்தில் இரண்டு

1979 ஏப்ரல் 30]

ரூபாயை கழித்து மீதிக் கட்டணம் திருப்பித் தரப்படுகின்றது. பயணம் செய்யும் நாளன்று பேருந்து புறப்படுவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்பாக ஒப்படைத்து ரத்து செய்தால் கட்டணத்தில் ஐந்து ரூபாயைக்கழித்து மீதிக் கட்டணம் திருப்பித் தரப்படுகின்றது.

(ஆ) இது பல்லவன் போக்குவரத்துக் கழக இயக்குநர்கள் குழுவால் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் அமைந்ததாகும்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஆசிரியர் பணிக்காகப் பதிவுசெய்து கொண்டுள்ளவர்கள்.

வினா எண். 1196—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சிபெற்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வேலை இல்லாத ஆசிரியர்கள் தற்போது எத்தனை பேர்?

விடை: 31—12—1978 அன்றைய நிலவரப்படி விவரம்:—

(1)	பட்டதாரி ஆசிரியர்கள் (பி. டி.) (B. T.) (பி. எட்) (B.ED.) ..	9,766
(2)	செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ..	18,633
(3)	ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ..	652
(4)	உடற்பயிற்சி ஆசிரியர்கள் ..	3,224
(5)	தமிழாசிரியர்கள் ..	3,693
(6)	கைத்தொழில் ஆசிரியர்கள் ..	2,914
	மொத்தம் ..	38,882

பொது நிதியிலிருந்து ஒன்றியப் பணிகள்

வினா எண். 1197—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பொது நிதி போதுமானதாக இருந்தால் அவற்றைப் பயன்படுத்தி ஒன்றிய கட்டாய வேலையான பள்ளிக் கட்டிடம், தாய் சேய் நல விடுதிக்கு பயன்படுத்தும் வாய்ப்பளிக்கப்படுமா?

விடை : ஏற்கனவே தக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

[1979 ஏப்ரல் 30

பாம்பாற்றின் குறுக்கே அணை

வினா எண். 1198—திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆண்டியப்பனூர் வழியாக ஓடும் பாம்பாற்றில் அணை கட்டுவதற்காக திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை: (அ) மற்றும் (ஆ): ஆண்டியப்பனூர் அருகே உள்ள கொட்டாறு ஆண்டியப்பனூர் ஓடை ஆகிய இரு ஓடைகளும் இணையுமிடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக வேண்டி ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆண்டியப்பனூர் ஓடை, பாம்பாற்றின் கிளை நதியாகும்.

Fatal accidents on account of foot-board travel.

Q. No. 1199—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) The number of fatal cases due to Foot-board travelling in buses in Madras City during the calendar year 1978–month–wise;

(b) the number among them, Women, Men and Children below 12 years; and

(c) the number among them, students and employed ?

விடை: (அ) பேருந்துகளின் படிக்கட்டுகளில் நின்றுகொண்டு பயணம் செய்ததால் ஏற்பட்ட உயிர் இழப்பு விபத்துக்கள் 1978ல் மொத்தம் எட்டு ஆகும். அவைகள் கீழ்க்கண்ட மாதங்களில் ஏற்பட்டன :—

ஏப்ரல்	1978	..	1
ஜூன்	1978	..	2
ஜூலை	1978	..	2
ஆகஸ்ட்	1978	..	1
செப்டம்பர்	1978	..	1
டிசம்பர்	1978	..	1
		..	8

(ஆ) இவர்கள் அனைவரும் ஆண்கள். இதில் குழந்தைகள் எதுவும் கிடையாது.

(இ) இதில் மாணவர்கள் எவரும் கிடையாது.

1979 ஏப்ரல் 30]

திருவேங்கடாபுரம் தாழ்த்தப்பட்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண் 1200—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, அச்சர்தவிழ்த்தாள் பஞ்சாயத்தைச் சேர்ந்த என். திருவேங்கடாபுரம் கிராமத்தில் உள்ள சக்கிலியர்கள் குடியிருப்பில் குடிதண்ணீர் இல்லாமல் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

விடை: (அ) மற்றும் (ஆ): திருவில்லிபுத்தூர் தொகுதி, அச்சர்தவிழ்த்தாள் பஞ்சாயத்தைச் சேர்ந்த என். திருவேங்கடாபுரம் கிராமத்தில் உள்ள சக்கிலியர்கள் குடியிருப்பில் குடிதண்ணீருக்கு அருகில் உள்ள கிணறுகளிலிருந்து வேண்டிய நீரை எடுத்துக்கொள்கிறார்கள். எனினும், திருவேங்கடாபுரம் பள்ளர் குடியிருப்பில் உள்ள மேல்நிலை நீர்த்தொட்டியிலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் குடியிருக்கும் திருவேங்கடாபுரம் சக்கிலியர்கள் குடியிருப்பிற்கு குழாய் இணைப்பு பொருத்திக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

தர்மபுரி மாவட்டத்தில் பத்திரப்பதிவு அலுவலகங்கள்.

வினா எண் 1201—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பு ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்த அரசு ஏதேனும் செயல்திட்டம் வகுத்துள்ளதா?

விடை: 1979-80 ஆண்டில் இம்மாநிலத்தில் 4 இடங்களில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த 4 இடங்களை தேர்வு செய்வது பற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் சமுதாயக்கூடம்

வினா எண் 1202—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 'சமுதாயக்கூடம்' ஒன்று கட்ட அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை செலவழிக்கப்படும்?

(இ) எந்த இடத்தில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது?

விடை: (அ) ஆம்.

(ஆ) ரூ. 15,000.

(இ) காவேரிப்பட்டணத்தில் கட்டப்படும்.

வடாற்காடு மாவட்டத்தில் நலப்பள்ளிக் கட்டிடங்கள்.

வினா எண் 1203—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் அரிசன நலத்துறையில் இயங்கிவரும் எத்தனை ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் உள்ளன?

(ஆ) எந்தெந்த இடங்களில் உள்ள ஓலைவேய்ந்த கட்டிடங்களை நிரந்தரக் கட்டிடங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை: (அ) வடாற்காடு மாவட்டத்தில் அரிசன நலத்துறையின் கீழ் இயங்கிவரும் 163 பள்ளிகளில் எட்டு ஓராசிரியர் பள்ளிகளைத்தவிர மற்ற ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் உள்ளன.

(ஆ) திருப்பணமூர், கடப்பேரி மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் உள்ள ஓலைவேய்ந்த கட்டிடங்களை நிரந்தரக் கட்டிடங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

1979 ஏப்ரல் 30]

குத்தியாலத்தூர் மலைச்சாலை

வினா எண் 1204—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் வனச்சரகம் குத்தியாலத்தூர் மலைக்குச் செல்கிற ரோடு மழையினால் அழிந்து போனதை செப்பனிட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(ஆ) மழையினால் அழியாத வகையில் புதிய ரோட்டை அந்த மலைக்கு அமைத்துக் கொடுக்க ஏதாவது திட்டம் போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன ?

விடை : (அ) 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயலினாலும் மழையினாலும் பழுதடைந்த கோவை மாவட்டம் சத்தியமங்கலம் வனச்சரகம் குத்தியாலத்தூர் மலைக்குச் செல்கிற சாலையினை ரூ. 1.52 இலட்சம் செலவில் உடனடியாகச் செப்பனிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) & (இ) இந்தச் சாலையை மீண்டும் முழுமையாகப் புதுப்பிக்க செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்புமாறு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்,

தூத்துக்குடியில் கால்நடைத் திட்டப்பணிகள்.

வினா எண் 1205—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி கால்நடைப் பராமரிப்புத்துறை உதவிஇயக்குநர் அலுவலகம் மூலம் 1978-79-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு ?

(ஆ) எத்தனை சங்கங்களுக்கு மானியத் தொகை வழங்கப்பட்டது ?

(இ) 1978–79 ஆம் ஆண்டு எஞ்சிய தொகை எவ்வளவு ?

விடை—(அ) 1978-79-ம் ஆண்டிற்கு சிறப்பு கால்நடைத் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் 310 யூனிட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ரூ. 2.96 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கீழ்க்கண்ட ஏழு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது :—

சங்கத்தின் பெயர்.	யூனிட்டுகள்.	மானியத் தொகை.
1. பத்மனாபமங்கலம்	81	77,365.82
2. திம்மராஜபுரம்	49	45,994.98
3. கந்தன்குடியிருப்பு	32	31,750.00
4. திருச்செந்தூர்	9	8,500.00
5. உடன்குடி	14	14,000.00
6. சாத்தான்குளம்	50	47,750.00
7. கட்டாரிமங்கலம்	75	70,540.90
	310	2,95,901·70

அல்லது 2.96 இலட்சங்கள்

(இ) ஒன்றுமில்லை.

Sanitary conditions in Mylapore area

Q. No. 1206—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government is aware of the unhealthy sanitary conditions around the playground of the Lady Sivasami Ayyar Girls High School, Mylapore, Madras; and

(b) if so, the action taken thereon ?

விடை : (அ) இப்படிப்பட்ட நிலைமை இல்லை. துப்புரவு வேலை தினமும் ஒழுங்காக நடைபெறுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

இடையன்குளம் அரிசனக் குடியிருப்புக்குப் பாதை வசதி

வினா எண் 1207—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி இடையன்குளம் கிராமத்திலுள்ள சக்கிலியர் குடியிருப்பிலிருந்து சுடுகாட்டுக்குச் செல்ல பாதை இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பாதை அமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 ஏப்ரல் 30]

விடை : (அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், இடையன்குளம் கிராம அரிசன (அருந்ததியர்) குடியிருப்பு நில அளவை எண். 20/6ல் உள்ளது. இதில் வசிக்கும் 20 சக்கிலியர் குடும்பங்களும் நில அளவை எண். 74-ல் ஓடைப் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ள 1.62 ஏக்கரில் 2 சென்டு நிலத்தை சுடுகாடாகப் பயன்படுத்தி வருகின்றனர். குடியிருப்பிலிருந்து $2\frac{1}{2}$ பர்லாங் தொலைவிலுள்ள சுடுகாட்டிற்கு 20 லிங்ஸ் அகலமுள்ள வண்டிப்பாதை உள்ளது. அதனை சக்கிலியர்கள் ஏற்கனவே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுடுகாட்டிற்கு பாதை இல்லை என்னும் கூற்று உண்மை அல்ல.

(ஆ) சுடுகாட்டிற்குச் செல்ல ஏற்கனவே பாதை உள்ளதால் வேறு புதிய பாதை அமைக்கும் அவசியம் எழவில்லை.

தானிப்பாரை காட்டாற்றின் குறுக்கே அணை

வினா எண் 1208—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பிர்க்கா, தானிப்பாரை காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்க அணைகட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை : (அ) (ஆ) : தாணிப்பாரை காட்டோடையின் குறுக்கே ஒரு அணை கட்ட ரூபாய் 161 லட்சம் செலவில் ஒரு முன்னறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தற்போது நல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

பெரம்பூரில் கட்டப்பட்ட சுரங்கப்பாதை

வினா எண் 1209—திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெரம்பூர் ஜமாலியா எதிரில் கட்டப் பட்டுள்ள சுரங்கப்பாதை வேலை சரிவர முடிக்கப்பட்டு பொது மக்கள் உபயோகத்திற்குத் திறந்து விடப்பட்டதா ?

(ஆ) அதற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

விடை : (அ) ஆம்

(ஆ) ரூ. 3,67,000/-

[1979 ஏப்ரல் 30

மேல்நிலைப் பள்ளிகளில் நூல்நிலையங்கள்.

வினா எண் 1210—திரு. வி.கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள உயர் செகண்டரிப் பள்ளிகளில் நூல்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளவை எத்தனை, மாவட்டவாரியாக?

(ஆ) இன்னும் எங்கெங்கு அமைக்கப்பட உள்ளன, மாவட்டவாரிகாக?

விடை: (அ) & (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ளபடி நூல்நிலையங்கள் தனியே ஏற்படுத்துவது என்பது எழாது, ஏனெனில், உயர்நிலைக் கல்வியும், மேல்நிலைக் கல்வியும் பள்ளிகளில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிக்கென தனி நூலகம் தோற்றுவிக்கப்பட அவசியமில்லை. ஏற்கனவே அந்தப் பள்ளிகளில் உள்ள நூல்நிலையங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடுதல் நூலகப் புத்தகங்கள் வாங்குவதற்கென 1979-80-ல் ரூ. 37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கீரிப்பாறை அரசு ரப்பர் தொழிற்சாலை.

வினா எண் 1211—திரு. எம். அண்ணாமலை; மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் கீரிப்பாறை சர்க்கார் ரப்பர் தொழிற்சாலையில் பணிபுரிவோர்களது பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றுவர வாகன வசதி செய்து தரப்படுகிறதா?

விடை: இல்லை.

வினா எண் 1212—திரு. எம். அண்ணாமலை; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறை சர்க்கார் ரப்பா தோட்டத் தொழிற்சாலையில் கட்டப்பட்டிருக்கும் மருத்துவ மனையில் டாக்டர் இல்லாதிருப்பது தெரியுமா?

(ஆ) துரிதமாக நிரந்தர டாக்டர் போட எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

1979 ஏப்ரல் 30]

விடை : (அ) ஆம், அங்கு நிரந்தரமாக நியமிக்கபட்ட டாக்டர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதால் அப்பதவி காலியாக உள்ளது.

(ஆ) 1978 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்ட மருத்துவப் பட்டதாரிகளை தமிழ்நாடு மருத்துவப் பணியில் நியமித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆகவே மேற்கூறிய பதவி, கூடிய விரைவில் நிரப்பப்பட்டுவிடும்.

<u>வினா எண் 1213—திரு. எம். அண்ணாமலை :</u> மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறை சர்க்கார் ரப்பர் தொழிற்சாலைக்கு உட்பட்ட ரப்பர் தோட்டத்தின் பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) நோய்ப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை யாது ?

(இ) ரப்பர் மரத்தின் சராசரி ஆயுள்காலம் எவ்வளவு ?

(ஈ) தோட்டக்காடுகளில் மண் அரிப்பு மண்வளப்பாதுகாப்பும் செய்யப்பட்டுள்ளதா ?

விடை : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 4,385.85 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. 1979-80 ஆண்டில் 400 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. இதுவரை பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பில் 1,474 ஹெக்டேர் பரப்பில், ரப்பர் பால் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த 1,474 ஹெக்டேர் பரப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற ரப்பர் பால், கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையில் பதனம் செய்யப் படுகிறது.

(ஆ) சுமார் 14,000 ரப்பர் மரங்கள் நோயினால் பாதிக்கப் பட்டு உள்ளன. இவ்வகை மரங்களை நோய்த்தடுப்பு முறைகள் மூலம் நோயினின்றும் காப்பாற்ற, சம்பந்தப்பட்ட வட்ட வன அலுவலர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஒரு ரப்பர் மரத்தின் சராசரி ஆயுட் காலம் சுமார் 50 ஆண்டுகள் ஆகும்.

(ஈ) தோட்டக் காடுகளை மண் அரிப்பினின்று தடுக்க, படித்தளம் தடுப்பு அணை முதலிய மண் வளப்பாதுகாப்பு முறைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

Procurement of cotton.

Q. No. 1214—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Cotton Corporation of India has procured large quantity of cotton from this State during 1978 and 1979 calendar years: and

(b) if so, the quantity and the amount for which the procurement was made ?

விடை : (அ) ஆம்.

(ஆ) விபரங்கள் பின்வருமாறு:-

வருடம்	கொள்முதல் செய்துள்ள பருத்தியின் அளவு (குவின்டால்)	மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)
1978 ..	2.06 லட்சம்	ரூ. 10.50
1979 ..	1.60 ,,	ரூ. 8.01

(மார்ச்சு 17-ம் தேதி நிலவரப்படி)

Review of Higher Secondary Education

Q. No. 1215—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any mid-term apprisal of the Higher Secondary course has been undertaken by the Education Department of the State Government; and

(b) if so, the details thereof ?

விடை : (அ) & (ஆ) ஆம். மாநிலத்தை 5 பெரிய பிரிவுகளாக (Zones) பிரிக்கப்பட்டு துணைப் பள்ளிக் கல்வி இயக்குநர்களும் இணைப்பள்ளிக் கல்வி இயக்குநர்களும் அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளையும் முதன்மைக் கல்வி அலுவலர்களையும் சந்தித்து முடிந்த அளவு மேல்நிலைப்பள்ளிகளையும் நேரில் பார்வையிட்டு எப்படிச் செயல்படுகின்றன என்பதையும், ஆய்வு அலுவலர்கள் எந்த அளவு முன்னேற்பாடு செய்துள்ளனர் என்பதையும் கண்டறிந்தனர். பிரச்சனைகளையும் சந்தேகங்களையும் கண்டறிந்து மாவட்டக் கல்வி அதிகாரி, முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியோர்களின் அதிகாரவரம்புக்குட்பட்ட பிரச்சனைகளுக்கு ஆங்காங்கே ஆணை பிறப்பிக்கப்பட்டன.

மெய்யூர் வானாபுரம் சாலை.

வினா எண் 1216—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கம் வட்டம், மெய்யூர் வானாபுரம் நெடுஞ்சாலையில் வானாபுரம் அருகில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையினரால் மாற்றுப்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் உண்டா?

விடை : மேற்படி மாற்றுப்பாதை அமைக்கும் திட்டம் இல்லை. மேற்படி சாலைப்பணி அரசு ஆணை எண் 1805, விவசாயம், நாள் 17.11.75–ன்படி ரூ. 3.20 இலட்சம் மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் அரசால் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி சாலை அமைப்பதற்கு 15 நபர்களுடைய விளை நிலங்கள் வழியே சாலை அமைக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி நிலங்களுக்கு சுமார் ரூ. 2 இலட்சம் கொடுக்க வேண்டியுள்ளதாலும், மேலும் எந்த நிலச் சொந்தக்காரர்களும் தங்கள் நிலத்தை சாலை அமைக்க விட்டுக் கொடுக்க விருப்பம் இல்லாததாலும், ஆர்ஜிதம் செய்தால் வழக்குப் போடுவோம் எனத் தெரிவித்ததாலும், கள்ளக்குறிச்சி ஆலையினர் சாலை அமைப்பதை விரும்பாததாலும் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கிவிட சர்க்கரை இயக்குநர் சிபாரிசு செய்யவே, அரசும் மேற்படி சாலைப் பணியை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கிவிட ஆணையிட்டுள்ளது.

தண்டராம்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்.

வினா எண் 1217—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை பாசன அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தண்டராம்பட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலகம் திறக்கப்பட்டும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை : (அ) & (ஆ) தண்டராம்பட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 4-11-76 முதல் இன்றுவரை இயங்கி வருகின்றது. அதன் வருவாய் விபரம் பின்வருமாறு :—

1976-77	..	ரூ. 943.45
1977-78	..	ரூ. 876.30
1-4-78 முதல் 23-2-79 வரை.	..	ரூ. 5,337.40

இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு பலமுறை தீவிர பிரசாரம் செய்த பின்னரும் மிகக் குறைந்த அளவில் கூட விளை பொருள்களின் வரத்து இல்லாத காரணத்தால், இந்த அலுவலகப் பணியாளர்களைத் தற்காலிகமாக இதர அலுவலகங்களில் பணி புரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தண்டராம்பட்டு ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பயனுள்ள வகையில் செயல்பட ஏதுவாக, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்து கொண்டு வர தீவிர பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

திருச்சி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு குடியிருப்புகள்.

வினா எண் 1218—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரிசன வீட்டுவசதி வாரியத்தின் மூலம் திருச்சி மாவட்டத்தில் 1977–78 ல் கட்டிக் கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் எவ்வளவு?

விடை : (அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம், திருச்சி மாவட்டத்தில், 1977–78-ல் கட்டிக் கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் 74.

(ஆ) கட்டப்பட்டுள்ள கிராமங்களின் பெயர்களும் கட்டப் பட்ட வீடுகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

கிராமத்தின் பெயர்		கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை.
1. அணிக்குதிச்சான்	..	34
2. நாகமப்பள்ளி	..	4
3. சுக்காம்பட்டி	..	10
4. வெங்கடமநாயக்கன்பட்டி	..	1
5. பழையபாளையம்	..	2
6. இரணியமங்கலம்	..	2
7. விஸ்வநாதபுரி	..	3
8. மோகவலூர்	..	7
9. வீதிவிடங்கம்	..	2
10. உடும்பியம்	..	9
மொத்தம்	..	74

1979 ஏப்ரல் 30]

பத்மனாபபுரம் மருத்துவமனை.

வினா எண் 1219—திரு. அ. சுவாமிதாஸ் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பத்மனாபபுரம், அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவர்களின் பதவிகள் எத்தனை?

(ஆ) இப்போது எத்தனை இடங்கள் காலியாக உள்ளன?

(இ) காலி இடங்களை நிரப்புவதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை : (அ) இம்மருத்துவமனைக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட மருத்துவர்களின் பதவிகள் ஆறு.

(ஆ) தற்சமயம் இரண்டு இடங்கள் காலியாக இருக்கின்றன.

(இ) 1978-ம் ஆண்டு தேர்வு ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களை தமிழ்நாடு மருத்துவப் பணியில் நியமித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆகவே மேற்கூறிய காலி இடங்கள் விரைவில் நிரப்பப்பட்டுவிடும்.

வாழவச்சனார் அரசினர் விதைப் பண்ணை.

வினா எண் 1220—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கம் வட்டம், வாழவச்சனார் அரசினர் விதைப் பண்ணையில் 1977-ம், 1978-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட விதை நெல் எத்தனை டன்கள்?

விடை : செங்கம் வட்டம், வாழவாச்சனாரில் உள்ள அரசனர் விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் விதைகளின் அளவு கீழே குறிக்கப்பட்டுள்ளன:—

1976-77	..		27.295 டன்கள்.
1977-78	..		70.612 டன்கள்.

அத்தியந்தல் அரசினர் விதைப்பண்ணை.

வினா எண் 1221—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை வட்டம், அத்தியந்தல் அரசினர் விதைப் பண்ணையில் 1977-78-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் எத்தனை டன்கள், இரக வாரியாக ?

விடை : திருவண்ணாமலை வட்டம், அத்தியந்தல் அரசினர் விதைப்பண்ணையில் 1977-78-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட விதை நெல்லின் அளவு இரக வாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

விதை நெல்லின் இரகம்.	அளவு (டன்கள்).
1. ஏடிடீ. 31	7.758
2. ஐஈடி. 1444	13.969
3. ஐ.ஆர்.20	16·683
மொத்தம் ..	38.410

தனியார் பொருட்காட்சிகள்.

Q. No. 1222—Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) Whether the Tamil Nadu Government have banned the conducting of exhibitions by Private Parties; and

(b) If so, the details thereof?

விடை : (அ) பொது இடங்களில் தனியார் பொருட்காட்சி நடத்துவதை அரசு தடை செய்துள்ளது.

(ஆ) ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பொது இடங்களை தனியார் நடத்தும் பொருட்காட்சிகளுக்கு வாடகைக்கு விடுதல் கூடாதென அரசு ஆணையிட்டுள்ளது. பொதுமக்களுக்கு கல்வி புகட்டவும், அரசின் வளர்ச்சித் திட்டங்களை விளக்கவும், சுற்றுலாவை மேம்படுத்தவும், நுண்கலைகளை ஊக்குவிக்கவும், பொருட்காட்சிகள் ஒரு சாதனமாக அமைதல் வேண்டும். ஆனால் தனியார் பொருட்காட்சிகளை வியாபார நோக்கத்தோடு இலாபத்தைக் கருத்தில் கொண்டு நடத்தி வந்தார்கள். சூதாட்டங்கள், மற்றும் மக்களை ஏமாற்றும் அம்சங்கள் பல பொருட்காட்சிகளில் இடம் பெற்றதின் விளைவாக, இந்தப் புதிய கொள்கையினை உருவாக்கும் நிலை ஏற்பட்டது. தேவை என்றால் பொது இடங்களில் நகராட்சிகளோ அரசோ பொருட் காட்சிகள் நடத்தும்.

Frozen semen for Cross breeding.

Q. No. 1223– Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether any massive frozen semen production programme for the benefit of milk producers societies has been launched at Krishnagiri, in recent times; and

(b) if so, the details thereof?

விடை : (அ) ஆம்.

(ஆ) பால் கூட்டுறவு உற்பத்தியாளர் உறைவிந்து மூலம் கலப்பின கால்நடை பெருக்கு திட்டத்தின்கீழ் செயற்கை முறை இனவிருத்தி செய்யும் 11 கிராம நிலையங்கள் கிருஷ்ணகிரி தாலூக்காவில் மட்டும் உள்ளன. இதுவரை 252 கால்நடைகளுக்கு உறைவிந்து மூலம் செயற்கை முறை இனவிருத்தி பணி செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி நகரத்தில் இதுவரை உறைவிந்து மூலம் செயற்கை முறை இனவிருத்தி செய்யும் நிலையம் ஒன்றும் நிறுவப்படவில்லை.

மல்லுநத்தம் ஏரி.

வினா எண் 1224— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரூர் வட்டம், வேப்பம்பட்டி தரப்பு மல்லுநத்தம் ஏரியை கட்டிக் கொடுக்கும்படி அப்பகுதி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் வந்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது?

விடை : (அ) வேப்பம்பட்டி பஞ்சாயத்து தலைவர் அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சியாளர் தர்மபுரி வாயிலாக 20-11-78 அன்று ஒரு விண்ணப்பம் நிர்வாகப் பொறியாளர் (ஆய்வுக் கோட்டம்-சேலம்) அவர்களால் பெறப்பட்டுள்ளது.

(ஆ) ஆனால், ஏற்கனவே வேப்பம்பட்டி கிராமத்தின் அருகில் வரட்டாறு என்னும் ஓடையில் குறுக்கே 8.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஏரி அமைக்க திட்டமிடப்பட்டு அதற்கான மதிப்பீடுகளும் வரைப்படங்களும் உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

அரூர் பேருந்து நிலையம்.

வினா எண் 1225—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம் அரூர் பஸ் நிலயத்தை புதுப்பிக்கும் செயல் திட்டம் உள்ளதா?

விடை: தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசனையில் உள்ளது.

போளூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம்.

வினா எண் 1226—திரு. பெ சு. திருவேங்கடம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் நகரத்தில் புதிதாக முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரமென்ன?

(இ) எப்போது துவக்கப்படும்?

விடை : (அ) ஆம்

(ஆ) & (இ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் நகரத்தில் புதியதாக மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி, உயர்நீதி மன்றம் போளூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

வரதம்பாளையத்தில் புதிய அணை.

வினா எண் 1227—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சத்தியமங்கலம் தொகுதி வரதம்பாளையம் அணை அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எந்த நிலையில் உள்ளது?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பதுப்பீர்கடவில் புதிய ஏரி அமைப்பு.

வினா எண் 1228—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி பதுப்பீர்கடவு ஏரி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது வேலை துவங்கப்படும்?

விடை : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது. இதை நிறைவேற்றும் சாத்தியகூறு பற்றி பரிசீலித்து உரிய அங்கீகாரம் பெற்றபின் மேற்படி திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

திருனாரையில் புதிய ஏரி அமைப்பு.

வினா எண் 1229—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, திருனாரையில் ஒரு ஏரி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செங்கப்பநகர் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

வினா எண் 1230—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிச்சி பேரூராட்சி செங்கப்பநகர் அரிசன மக்கள் வீட்டு இடம் கேட்டு விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) அவர்களுக்கு வீட்டுமனை தர என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

விடை :

(அ) இல்லை. மேலும் கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி கிராமத்தில் செங்கப்பநகர் என்னும் பெயரில் அப்படி ஒரு இடம் ஏதும் இல்லை என்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) ஆயினும், குறிச்சி கிராமத்தில் திரு. செங்கப்ப கோனார் அவர்களுக்குச் சொந்தமான ச.நெ. 103/1-ல் வசிக்கும் அரிசனங்கள், வீட்டுமனை வேண்டும் என்று மனு அனுப்பியுள்ளார்கள் என்றும், பிரிவு 4(1) அறிவிக்கையின் கருத்துருவு கோயம்புத்தூர் அரிசன நல தனி தாசில்தாரிடமிருந்து எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், நிலம் கையகப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அரிசன நல தனி தாசில்தாரை கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம் வட்டங்களில் அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா எண் 1231—திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை வட்டம், உளுந்தூர்ப்பேட்டை யூனியன் பகுதி, கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகம் யூனியன் பகுதி விருத்தாசலம் வட்டம், நல்லூர் யூனியன் பகுதி ஆகிய இடங்களில் எத்தனை அரிசனப் பகுதிகள் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) 1977–78, 1978–79-ம் ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? 1979–80-ல் எத்தனை வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

விடை :

(அ) உளுந்தூர்ப்பேட்டை யூனியன், தியாகதுருகம் யூனியன். நல்லூர் யூனியன் ஆகிய பகுதிகளில் 31·12-75 வரை (1) புகைப்பெட்டி, (2) கண்டச்சிமங்கலம், (3) வரஞ்சரம், (4) வேங்கைவாடி, (5) கொசப்பள்ளம், (6) தொளார், (7) நந்திமங்கலம், (8) கோனூர், (9) பேபூவனூர் ஆகிய ஒன்பது கிராமங்களில் அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 495 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) 1977–78-ம் ஆண்டில் உளுந்தூர்ப்பேட்டை யூனியன் பகுதியில் உள்ள காட்டு நெமிலி கிராமத்தில் 51 வீடுகள் கட்ட உத்திரவிடப்பட்டு, 36 வீடுகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. மீதி 15 வீடுகள் முடியும்தருவாயில் உள்ளன.

1978–79-ம் ஆண்டில் உளுந்தூர்ப்பேட்டை, தியாகதுருகம் நல்லூர் யூனியன் பகுதிகளில் உள்ள எந்தக் கிராமத்திலும் வீடு கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

1979-80-ம் ஆண்டில் வீடு கட்டுவது குறித்து அந்த நிதியாண்டில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

நல்லூர் ஒன்றியப்பகுதியில் அரிசனங்களுக்கு மனைப்பட்டாக்கள்.

வினா 1232—திரு. வி. துலுக்காணம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை தொகுதி நல்லூர் யூனியன் பகுதியில் எத்தனை கிராமங்கள் உள்ளன? அதில் எத்தனை அரிசன குடியிருப்புகள் உள்ளன?

(ஆ) 1977-78, 1978-79 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எத்தனை பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு எவ்வளவு பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன?

விடை—(அ) உளுந்தூர்ப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலுள்ள நல்லூர் பஞ்சாயத்து யூனியனில் 39 கிராமங்கள் உள்ளன. அதில் 33 குடியிருப்புகள் உள்ளன.

(ஆ) 1977-78-ம் ஆண்டில் வரம்பனூர் கிராமத்தில் உள்ள வீட்டுமனை இல்லாத 40 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க 2.61 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 1978-79-ம் ஆண்டில் நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை. எனினும், பூலாம்பாடி, நகர், எ. சித்தூர், வேம்பூர் ஆகிய கிராமங்களில் உள்ள வீட்டுமனையில்லாத 703 அரிசன குடும்பங்களுக்கு, வீட்டு மனைக்காக 33.78 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளில் மனைப் பட்டாக்கள் ஏதும் வழங்கப் படவில்லை. எனினும், வரம்பனூர் கிராமத்தில் கையகப்படுத்தப் பட்ட நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளதால், கரும்பு அறுவடையானபின் 40 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படும்.

சென்னையில் குடிசைமாற்றுப் பணிகள்.

வினா 1233—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சென்னையில் 1978-79-ல் புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகள் எத்தனை?

(ஆ) கட்டப்பட்ட குடியிருப்புகளில் இதுவரை எத்தனை குடியிருப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை— (அ) குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சென்னையில் 1978–79-ல் புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகள் 3,368.

(ஆ) அதில் 8–3–79 வரை, 2,952 குடியிருப்புகள் குடியிருப்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீன் விற்பனைக் கடைகள்.

வினா 1234—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மீன் வளர்ப்புத் துறையின் மூலம் திறக்கப்பட்டுள்ள மீன் விற்பனைக் கடைகள் எத்தனை?

(ஆ) எங்கெங்கு திறக்கப்பட்டுள்ளன?

விடை— (அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் திறக்கப்பட்டுள்ள மீன் விற்பனைக் கடைகள் 11.

(ஆ) சென்னை நகரில் 6 இடங்கள் (தேனாம்பேட்டை கலைஞர் கருணாநிதி நகர், சேத்துப்பட்டு, கோடம்பாக்கம், பிராட்வே மற்றும் தண்டையார்பேட்டை)

கோயம்புத்தூரில் 5 இடங்கள் (காந்திபுரம், சூப்பர் அங்காடி, சாய்பாபா காலனி, சுங்கம், உடுமலைப்பேட்டை மற்றும் மேட்டுப்பாளையம்).

மதுரை மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிகள்.

வினா 1235—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டத்தில் தற்போது எத்தனை மேல் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன?

(ஆ) வருகிற 1979-80 கல்வி ஆண்டில் இதை அதிகப் படுத்தும் உத்தேசம் உண்டா?

விடை— (அ) மதுரை மாவட்டத்தில் 82 மேல்நிலைப் பள்ளிகள் (1 ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி உட்பட) இருக்கின்றன.

(ஆ) எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

1979 ஏப்ரல் 30]

பழனியில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் பிரிவு.

வினா 1236—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனியிலுள்ள டான்சி பிரிவு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) ஆரம்பித்தபோது எத்தனை பேர் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

(இ) இதில் என்னென்ன பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகிறது?

(ஈ) தற்போது எத்தனை பேர் வேலை செய்கின்றனர்?

விடை ; (அ) 1959 இல் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) மேற்பார்வையாளர், பணியார் மற்றும் தொழிலாளர்கள் மொத்தம் 28 பேர் ஆரம்பத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

(இ) அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் பயன்படும் இரும்பு மேசை, நாற்காலி போன்ற பொருள்களும் (Steel furniture), மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் பொருள்களும் (Hospital furniture) மற்றும் உலோகத் தகடுகளைக் கொண்டு செய்யப்படும் இதர சாமான்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

(ஈ) மேற்பார்வையாளர், பணியாளர், ஊழியர் மற்றும் தொழிலாளர்கள் மொத்தம் 105 பேர் தற்போது வேலை செய்கின்றனர்.

வேளாண்மை பட்டதாரிகள்.

வினா 1237— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மார்ச் 1978 முடிய பி.எஸ்.சி. வேளாண்மையில் படித்துவிட்டு வேலையின்றி இருப்பவர்கள் எவ்வளவு பேர்கள்?

விடை : வேளாண்மை பட்டதாரிகளுக்கு வேளாண்மை இயக்குநர் வேலை வாய்ப்பு அளித்து வருகிறார். 1.4.77 முதல் 31.3.78 முடிய 204 வேளாண்மை பட்டதாரிகள் வேலை வேண்டி வேளாண்மை இயக்குநரிடம் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில், 120 பேர்கள் 31.3.78 முடிய துணை வேளாண்மை அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். மீதமுள்ள 84 பேர்களுக்கும் 1978-79-ம் ஆண்டில் வேலை கொடுக்கப்பட்டு விட்டது. வேளாண்மை இயக்குநரிடம் விண்ணப்பித்திருந்த எல்லா வேளாண்மை பட்டதாரிகளுக்கும் தற்பொழுது வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

VAIMAYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 30

திருவில்லிபுத்தூர் தொகுதியில் மதிய உணவு மையம்.

வினா 1238— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள பள்ளிகளுக்கு மதிய உணவு அளிக்கும் பொருட்டு பொது உணவு மையம் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை : (அ) & (ஆ) இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் 1979-80-ம் ஆண்டில் கேர் நிறுவன உதவியுடன் மையசமையற்கூடங்களை நிறுவ இவ்வரசு முடிவு செய்து, அவ்வாறு கேர் நிறுவன உதவி பெற மைய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளது. இந்த ஒப்புதல் வந்து அத்திட்டத்துக்கு ஏற்பளிக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மைய சமையற் கூடங்கள் அமைக்கப்படும்பொழுது திருவில்லிபுத்தூர் தொகுதிக்கும் விஸ்தரிக்கப்படும்.

வினா 1239— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி நத்தம்பட்டி பிர்க்காவில் 26.12.78 தேதி பெய்த மழையால் எத்தனை ஏழை மண் குடிசைகள் பாதிக்கப்பட்டன?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னென்ன வகையில் நிவாரணம் அளிக்கப்பெற்றது?

விடை : (அ) 610.

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு, குடிசை புனரமைப்புத் தொகையாக மொத்தம் ரூபாய் 44,200 வழங்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு 30,410 கிலோ அரிசியும் ரூ. 1,670/- மதிப்புள்ள 1,220 லிட்டர் மண்ணெண்ணெயும், ரூ. 7,360/- மதிப்புள்ள 30 செட் துணிகளும் (ஒரு வேட்டி, ஒரு சேலை வழங்கப்பட்டன.

1979 ஏப்ரல் 30]

பழனி வட்டத்தில் விதைப்பண்ணை.

வினா 1240—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில் நிரந்தர நீர்வசதி கிடைக்கக் கூடிய மூன்று அணைக்கட்டுகள் இருப்பதால் அப்பகுதியில் விதைப்பண்ணை அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை: நெல் பயிரிடும் மொத்த பரப்பளவில் 7 விழுக்காடுக்கும், கேழ்வரகு பயிரிடும் பரப்பளவில் 15 விழுக்காடுக்கும், வீரிய ஒட்டுப் பயிர்கள் (சோளம், கம்பு, மக்காச்சோளம் பயிரிடும் மொத்தப் பரப்பளவில் 30 விழுக்காடுக்கும் தேவைப்படும் விதைகளை உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோகிப்பதுதான் வேளாண்மைத் துறையின் தற்போதைய திட்டமாகும். இத்திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் தேவைப்படும் விதைகளை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரக வாரியாக கணக்கிடப்பட்டு, தேவையான விதைகளை அம்மாவட்டதிலுள்ள அரசு விதைப் பண்ணைகளிலும், விதை மையங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை கிடங்குகள் மூலம் விற்பனை செய்யப் படுகின்றன. இம்மாநிலத்தில் 48 அரசு விதைப் பண்ணைகளும் 8 விதை மையங்களும் தேவைப்படும் விதைகளை உற்பத்தி செய்கின்றன. அரசு விதைப் பண்ணைகள் உற்பத்திக்கு கட்டுமல்லாமல் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு மாதிரிப் பண்ணைகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

பழனி வட்டம் அடங்கிய மதுரை மாவட்டம் முழுவதற்கும் தேவைப்படும் விதைகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலுள்ள அரசு விதைப் பண்ணைகளிலும் மதுரை விதை மையத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன;

1. வினாயகபுரம்
2. கீழ்கடலூர்
3. வைகை அணை-1
4. வைகை அணை-2
5. வில்பட்டி
6. ரைபிள் ரேஞ்சு

தற்போது உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு தமிழ் நாட்டில் விதைப் பண்ணைகள் உள்ளன. எனவே மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில் அரசு விதைப் பண்ணை அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

சென்னை மாநகராட்சி வாக்காளர் பட்டியல்.

வினா 1241—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி தேர்தலுக்கான வாக்காளர் பதிவு வேலை முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய கணக்குப்படி மொத்த வாக்காளர்கள் எவ்வளவு பேர்கள்?

விடை : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

ராஜ ராஜன் நெல் பயிரிடல்.

வினா 1242—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1388-ம் பசலியில் ராஜ ராஜன் பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பரப்பளவு பயிரிடப்பட்டது?

விடை : (அ) ஆம்,

(ஆ) 1388 பசலியில் தஞ்சை மாவட்டத்தில் 30,000 ஏக்கர் பரப்பளவில் கோ.40 (இராஜராஜன்) நெல் பயிரிடப் பட்டது.

பேரூர் ஒன்றியத்தில் அரிசனங்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு.

வினா 1243—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை மற்றும் பேரூர் ஒன்றியத்தில் அரிசனங்களுக்கு 1978—79-ம் ஆண்டு ஒதுக்கிய வீடுகள் எவ்வளவு?

(ஆ) 1979—80-ம் ஆண்டு கட்டப்பட உள்ள வீட்டு எண்ணிக்கை என்ன?

விடை : (அ) மதுக்கரை மற்றும் பேரூர் ஒன்றியத்தில் அரிசனங்களுக்கு 1978—79-ம் ஆண்டில் வீடுகள் ஒதுக்கப்பட வில்லை.

(ஆ) 1979—80-ம் ஆண்டில் வீடுகள் கட்டுவது குறித்து அந்த நிதி ஆண்டில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

1979 ஏப்ரல் 30]

காவலர் பதவிகளுக்குத் தேர்வு.

வினா 1244—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78, 1978-79-ல் போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், ஆண்கள் எத்தனை பேர்?

(இ) பெண்கள் எத்தனை பேர்?

விடை ; (அ) ஆம்.

(ஆ) ஆண்கள் ; 1977-78—2,577
1978-79—1,529

(இ) பெண்கள் : 1977-78— 39
1978-79—நியமனமில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு பணிகள்.

வினா 1245—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்திற்கு 1978-79-ல் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை : (அ) ரூ. 25,69,700.

(ஆ) 1979 பிப்ரவரி வரை ரூ. 18,73,672 செலவிடப் பட்டுள்ளது.

சென்னை நகரில் ஓடும் டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்கள்.

வினா 1246—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்கள் தற்போது எத்தனை உள்ளன?

(ஆ) சென்ற ஆண்டில் புதிதாக எத்தனை டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு லைசென்சு வழங்கப்பட்டன?

விடை :	டாக்சி	ஆட்டோ ரிக்ஷா
(அ)	2654	2100
(ஆ)	754	570

[1979 ஏப்ரல் 30

சாத்தனூர் ஆயக்கட்டு விவசாயிகளுக்குக் கூட்டுறவு கடன்கள்.

வினா 1247.—திரு. த. வேணுகோபால்; மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் இரண்டுவட்டங்களிலும் சாத்தனூர் அணையின் தண்ணீர் பாயும் கிராமங்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு உரக்கடன் வழங்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை: திருவண்ணாமலை வட்டத்தில் 32 விவசாய கூட்டுறவுச் சங்கங்களும், செங்கம் வட்டத்தில் 29 விவசாய கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. இந்திய ரிசர்வ் வங்கி விதித்துள்ள கட்டுப்பாட்டின்படி தவணை தவறியக் கடன் 50 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் கூட்டுறவு கடன் சங்கம் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து உழவுக் கடன் பெறும் தகுதியை இழக்கிறது. திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள 32 சங்கங்களில் 31 சங்கங்களுக்கும் செங்கம் வட்டத்திலுள்ள 29 சங்கங்களில் 28 சங்கங்களுக்கும் தவணை தவறிய கடன்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமாக நிலுவை உள்ளன.

வறட்சி நிவாரணப்பணி, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும் பகுதிகளில் தவணை தவறிய கட்டுப்பாட்டுக்கு (over-due discipline) விதிவிலக்கு உள்ளது. இவ்வகையில் திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள தவணை தவறிய 31 சங்கங்களில் 18 சங்கங்களும், செங்கம் வட்டத்திலுள்ள தவணை தவறிய 28 சங்கங்களில் 11 சங்கங்களும் மத்திய வங்கியிடமிருந்து கடன்பெறும் தகுதி பெற்றுள்ளன. இச்சங்கங்கள் 1-4-1978-லிருந்து 28-2-1979 வரை முறையே ரூ. 32.93 இலட்சம் (திருவண்ணாமலை வட்டம்), ரூ. 19.07 இலட்சம் (செங்கம் வட்டம்) கடன்கள் வழங்கியுள்ளன.

உறுப்பினர்களின் தவணை தவறிய நிலுவைகள் அனுமதிக்கப்பட்ட குறியளவைக் காட்டிலும் அதிகமாக உள்ளதால் மீதமுள்ள 30 சங்கங்களும் (திருவண்ணாமலை 13, செங்கம் 17) மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கடன்பெறும் தகுதியை இழந்துவிட்டன. இச்சங்கங்களின் தவணை தவறிய நிலுவைகளைக் குறைத்து நிலுவையில்லாத தகுதியுள்ள உறுப்பினர்களுக்குப் புதிய கடன் வழங்குவதற்கான தீவிர முயற்சியில் மத்திய கூட்டுறவு வங்கி ஈடுபட்டுள்ளது.

1979 ஏப்ரல் 30]

திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம்.

வினா 1248.—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கிராம தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையத்திற்கு 1-4-1978 முதல் 31-10-1978 வரை வந்த மொத்த பால் அளவு எவ்வளவு

விடை : திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையத்திற்கு 1-4-78 முதல் 31-10-78 வரை வந்த மொத்த பால் அளவு/ 4,29,791 லிட்டர் ஆகும்.

செட்டிபுதூருக்கு அருகே குட்டை அமைப்பு.

வினா 1249—திரு. பா. சொ. ந. பழனிசாமி ; மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் அவினாசி தாலூக்கா ஆலந்தூர் கிராமம் செட்டிபுதூருக்கு கிழ்ப்புறம் உள்ள இரண்டு பள்ளங்களைத் தடுத்து ஒரு குட்டை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை : (அ) & (ஆ): தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தல அதிகாரிகள் இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

கோவை நகரில் புதிய பாலங்கள்.

வினா 1250—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரத்தின் மையத்தில் ஓடும் சங்கனூர் பள்ளத்தினால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சலை தவிர்க்க, புளியகுளத்திற்கு அருகிலும், ராமகிருஷ்ணா கல்யாண மண்டபத்திற்கு அருகிலும், பள்ளத்திற்கு மேலாக பாலம் கட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

விடை : (அ) ஆம்.

(ஆ) கோவை நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்]

2. அறிவிப்புகள்.

(அ) பேரவையின் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் குறித்து

(1) அவைக்குழு (House Committee)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு அறிவிப்புகள். பேரவையின் குழுக்கள் குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்:—

1979–80-ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (House Committee) சட்டமன்றப் பேரவையின உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. பி. எம். கிருஷ்ணன்
2. திரு. ப. குருசாமி
3. திரு. ஆர். சந்திரசேகரன்
4. திரு எஸ். வி. வரதராசன்
5. திரு. கோ. தனுஷ்கோடி
6. திரு. தா. சாமிக்கண்ணு
7. திரு. இரா. சண்முகம்
8. திரு. கே. ஆர். சின்னராசு
9. திரு. த. புஸ்பராஜ்
10. திரு. தே. ஞானசிகாமணி
11. திரு. ர. ஜெபமணி
12. திரு. வ. துலுக்காணம்
13. திரு. டி. எம். தைலப்பன்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1979–80ஆம் ஆண்டிற்கான அவைக்குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221(1)ஆவது விதிக்கிணங்க—

(1) திரு. கி. அப்துல் லத்தீப்

(2) திரு. க. நாச்சிமுத்து

(3) திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

(4) டாக்டர் கே. சமரசம்

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(2) நடைமுறை விதிக்குழு (Committee on Rules)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 229(1)ஆவது விதியின் கீழ், 1979–80ஆம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் (Rules Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
3. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்
5. திரு. வே. இரா. ஜெயராமன்
6. திரு. வெ. கருணாமூர்த்தி
7. திரு. போ. கோபாலன்
8. திரு. இரா. தாமரைக்கனி
9. திரு. எம். கண்ணன்
10. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்
11. திரு. அ. செல்லப்பா
12. திரு. சு. பாலன்
13. திரு. என். பழனிவேல்
14. திரு. ஜே. ஜேம்ஸ்
15. திரு. கூத்தகுடி. ச. சண்முகம்
16. திரு. ஏ. ஆர். மாரிமுத்து

பேரவையின் 229(1) ஆவது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இக்குழுவின் கூட்டங்களுக்கு ஒரு நிரந்தர அழைப்பாளராக இருப்பார்.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவையின் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் குறித்து

(1) அவைக்குழு (House Committee)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு அறிவிப்புகள். பேரவையின் குழுக்கள் குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்:—

1979–80-ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (House Committee) சட்டமன்றப் பேரவையின உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. பி. எம். கிருஷ்ணன்
2. திரு. ப. குருசாமி
3. திரு. ஆர். சந்திரசேகரன்
4. திரு எஸ். வி. வரதராசன்
5. திரு. கோ. தனுஷ்கோடி
6. திரு. தா. சாமிக்கண்ணு
7. திரு. இரா. சண்முகம்
8. திரு. கே. ஆர். சின்னராசு
9. திரு. த. புஸ்பராஜ்
10. திரு. தே. ஞானசிகாமணி
11. திரு. ர. ஜெபமணி
12. திரு. வ. துலுக்காணம்
13. திரு. டி. எம். தைலப்பன்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1979–80ஆம் ஆண்டிற்கான அவைக்குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221(1)ஆவது விதிக்கிணங்க—

(1) திரு. கி. அப்துல் லத்தீப்

(2) திரு. க. நாச்சிமுத்து

(3) திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

(4) டாக்டர் கே. சமரசம்

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(2) நடைமுறை விதிக்குழு (Committee on Rules)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 229(1)ஆவது விதியின் கீழ், 1979–80ஆம் ஆண்டுக்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் (Rules Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
3. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்
5. திரு. வே. இரா. ஜெயராமன்
6. திரு. வெ. கருணாமூர்த்தி
7. திரு. போ. கோபாலன்
8. திரு. இரா. தாமரைக்கனி
9. திரு. எம். கண்ணன்
10. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்
11. திரு. அ. செல்லப்பா
12. திரு. சு. பாலன்
13. திரு. என். பழனிவேல்
14. திரு. ஜே. ஜேம்ஸ்
15. திரு. கூத்தகுடி. ச. சண்முகம்
16. திரு. ஏ. ஆர். மாரிமுத்து

பேரவையின் 229(1) ஆவது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இக்குழுவின் கூட்டங்களுக்கு ஒரு நிரந்தர அழைப்பாளராக இருப்பார்.

LEGISLATURE TAMIL NADU ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(4) சட்ட விதிகள் ஆய்வுக்குழு (Committee on Delegated Legislation)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 201(1)ஆவது விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1979-80ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:—

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. இல. ஆறுமுகம்
3. திரு. வீ. அர்ச்சுனன்
4. திரு. ரா. கு. பெருமாள்
5. திரு. டி. சுப்பிரமணியன்
6. திரு. மு. சுந்தரராஜன்
7. திரு. இரா. காளியப்பன்
8. திரு. க. அரங்கசாமி
9. திரு. கெ. சொக்கலிங்கம்
10. திரு. ரா. கிருஷ்ணன்
11. திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்
12. திரு. இரா. ஆதிசாமி

பேரவையின் 202ஆவது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்:—

(4) அரசினர் உறுதிமொழிக் குழு (Committee on Govt. Assurance)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 214(1)—வது விதியின் கீழ், பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1979-80 ஆம் ஆண்டிற்கான அரசினர் உறுதிமொழிக் குழுவின் (Committee on Government Assurances) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு, கே. ஜெ, சுப்பிரமணியம்
2. திரு. கோ. ரகோத்தமன்
3. திரு. கா. ந. சண்முகம்
4. திரு. நா. கிருஷ்ணன்
5. திரு. கா. வே. கந்தசாமி
6. திரு. எஸ். செல்வராஜ்
7. திரு. ஆர். எஸ், தங்கவேல்
8. திரு. வி. ரகுராமன்
9. திரு, கூ. ச. முருகேசன்
10. திரு. ஆர். வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு
11. திரு. ஏ. ஏகாம்பரரெட்டி
12. திரு. ஜே. ஜேம்ஸ்

பேரவையின் 215(1)ஆவது விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

(ஆ) மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத்தலைவர் : சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன :

1979-80 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக்கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :

1. டாக்டர் எச். வி. ஹாண்டே
2. திரு. க. இராமமூர்த்தி
3. திரு. ஏ. ஆர். தாமோதரன்
4. திரு. கோ. சி. மணி
5. திரு. ஆ. நல்லசிவன்

1979-80 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பிட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

1. திரு. பி. ஆர். தாமஸ்
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்
3. திரு. என். சுந்தரேசத் தேவர்
4. திரு. இரத்தின பாலகுருசாமி
5. திரு. டி. வி. டிமாண்டி

1979-80 ஆம் நிதி ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

1. திரு. சி. இராமலிங்கம்
2. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்
3. திரு. எஸ். இராமகிருஷ்ண தேவர்
4. திரு. பி. மாணிக்கம்
5. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்

1979-80 ஆம் நிதி ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை சட்டவிதிகள் ஆய்வுக்குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் :

1. திரு. டி. சந்தோஷம்
2. திரு. ஆ. பாலசுப்பிரமணியம்
3. திரு. பி. எல்லமந்தா
4. திரு. க. எஸ். அப்துல் வஹாப்
5. திரு. எச். எல். முருகேசன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

3. தகவல்கள் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானம்........

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னை ஒன்று கொடுத்திருக்கிறோம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடித்து விடுகிறேனே ; அப்புறமாக அதை கவனிக்கலாம்........

திரு. எம். ஏ. லத்தீப் : இது முக்கியமான உரிமைப் பிரச்னை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முடித்து விடுகிறேன், முடிந்த உடனே அதை எடுத்துக் கொள்ளலாம்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

மதுரையில் தனியார் ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் கூரை சரிந்து குழந்தைகள் காயமுற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் ''ஏப்ரல் 28-ம் தேதியன்று காலையில் மதுரை அனுப்பானடியில் தனியார் ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தின் ஓட்டுக் கூரை சரிந்து விழுந்ததன் காரணமாக 50 குழந்தைகளும் 6 ஆசிரியர்களும் காயமடைந்துள்ளதால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு

1. திரு. என். சங்கரய்யா
2. திரு. சோ. அழகர்சாமி
3. திரு. மு. அம்பிகாபதி
4. திரு. பொ. உத்திராபதி
5. திரு. எஸ். சிவசாமி
6. திரு. எம். ஏ. லத்தீப்
7. திரு. ஆர் கிருஷ்ணன்
8. திரு. எம். அண்ணாமலை
9. திரு. சேலம் மு. ஆறுமுகம்
10. திரு. ஜே. ஜேம்ஸ்
11. திரு. பொ. விஜயராகவன்

ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர்

1979 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி முதலில் திரு. சங்கரய்யா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொடுத்ததற்கான காரணம் மிக முக்கியமானது. 28-4-79 அன்று காலை மதுரை நகரில் அனுப்பானடி என்னும் இடத்தில் உள்ள கோமதி ஆரம்பப் பள்ளியில் வருடாந்திர பரிட்சை முறையில் அவர்கள் அன்று பரீட்சை எழுதிக் கொண்டிருந்த சமயத்தில், சிறுவர் சிறுமியர்கள் மீது அந்தப் பள்ளியினுடைய ஓட்டு கட்டிடத்தினுடைய ஓடுகள் சரிந்து விழுந்து, அந்த மாணவ மாணவிகள் பெருத்த அபாயத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். அதனுடைய விளைவாக 50 சிறுவர், சிறுமியர்களும், 6 ஆசிரிய, ஆசிரியைகளும் காயமுற்றனர். அவர்களில் ஒரு ஆசிரியையுடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மதுரை சர்க்கார் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அந்த ஆசிரியைக்கு பலமாக தலையில் காயம் பட்டுள்ளது என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இது அரசாங்கத்திற்கு சொந்தமான பள்ளியாக இருந்தால் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் கல்வியையே ஒரு வியாபாரமாக நடத்திக் கொண்டு வரக்கூடிய சில தனியார்களுக்கு பள்ளி நடத்துவதற்கான அனுமதியே கொடுத்திருக்கக்கூடாது, அப்படி கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் அவர்கள் பள்ளிகளை வைத்து நடத்தும் கட்டிடங்கள் பாதுகாப்பாக இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்த பிறகே கொடுத்திருக்க வேண்டும். அப்படிக் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருந்து, கடமையிலிருந்து கல்வி இலாகா அதிகாரிகள் தவறி விட்டார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். அதிகாரிகள் இப்படிப்பட்ட பள்ளிகளை முறையாகப் பரிசோதனை செய்து, பள்ளிக்கூட கட்டிடங்கள் பாதுகாப்பாக இருக்கிறதா இல்லையா என்பதை கவனித்து, அப்படி பாதுகாப்பாக இல்லையென்றால், ரிப்பேர் கண்டிஷனில் இருந்தால், அவற்றை பழுது பார்த்தபிறகே, அந்தக் கட்டிடங்களில் பள்ளிக்கூடங்களை நடத்தலாம் என்றும், இல்லையென்றால் நடத்த அனுமதிக்க முடியாது என்றும் சொல்லியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கடமையிலிருந்து அதிகாரிகள் தவறி விட்டார்கள்.

இது ஒன்றும் முதன் முறையல்ல. இதேபோல 1964-ம் ஆண்டு விபத்து ஒரு தனியார் ஆரம்பப்பள்ளியில் ஏற்பட்டு 36 பேர்கள் உயிர் இழந்தார்கள். ஏராளமான மாணவ மாணவியர்கள் காயம் அடைந்தார்கள். அந்த சம்பவம் இன்னும் நினைவில் இருக்கக்கூடிய நேரத்திலே இன்னொரு தனியார் பள்ளியில் இப்படிப்பட்ட விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால், மாணவ மாணவிகளின் உயிர்களுக்கு ஆசிரிய, ஆசிரியைகளின்

உயிர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஓட்டு கட்டிடமாக இருந்த காரணத்தினால் மாணவ மாணவியர்கள் உயிர் பிழைத்தார்கள். இதுவே கல் கட்டிடமாக இருந்திருந்தால் ஏராளமான மாணவ மாணவியர்களும், ஆசிரிய ஆசிரியைகளும் உயிர் இழந்திருப்பார்களே. அவர்களை பாதுகாக்கின்ற பொறுப்பு அரசாங்கத்தினுடைய கையில் இருக்கிறது. அரசாங்கமே இப்படிப்பட்ட ஆரம்பப்பள்ளிகளை எடுத்துக் கொண்டுவிட்டால், அவர்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கும். மக்களும் நிம்மதியாக இருக்கலாம் அல்லவா. அப்படி அவர்களை அனுமதித்துதான் ஆகவேண்டும் என்றால், அவர்களின் கட்டிடங்கள் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை அதிகாரிகள் ஆராய்ந்த பிறகே அனுமதித்திருந்தால் இப்படிப்பட்ட விபத்துக்களை தவிர்த்து இருக்கலாம் அல்லவா? ஆகவே இது பற்றி விவாதிக்கவும் விபத்தில் காயமுற்ற ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கூறி, இதுபோன்ற நிலைமை இனிமேல் ஏற்படாது இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க இந்த சபையில் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. செ, சிவசாமி; பேரவைத் தலைவர் அவர்களே, 28—4-79 தேதி அன்று மதுரையில் இருக்கும் பள்ளியில் ஒரு ஆபத்தான சம்பவம் நடந்து இருக்கிறது, அதைப்போல் 1964-ல் மதுரை நகரில் 34 பேர் அது போன்ற சம்பவம் நடந்து இறந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சம்பவம் மதுரையில் மீண்டும் நடந்து இருக்கிறது. அந்தப் பள்ளி ரயில்வே லைன் பக்கம் 50-51 அடி தூரத்தில் இருக்கிறது என்றும், அந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டிடம் ரயில் போகிறபோதெல்லாம் ஆடிக் கொண்டு இருந்தது என்றும் சொல்லப்படுகிறது. அப்படி அந்தப் பள்ளிக்கூடம் இருந்தபோதிலும், தொடர்ந்து கல்வி அதிகாரிகள் கவனிக்காத காரணத்தால் இப்படிப்பட்ட ஆபத்தான சம்பவம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த கோமதி உயர்நிலைப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பள்ளி நடந்து கொண்டு இருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டதால், அங்கேயிருந்த 250 மாணவர்களுக்கும் இந்த ஆபத்தான நிலை ஏற்பட்டு இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இந்த விபத்து என்ன காரணத்தால் ஏற்பட்டது என்பதை விசாரித்ததில். அந்தப் பள்ளியின் கட்டிடத்தில் கரையான் இருந்ததாகவும், அது கூரையை அரித்து விட்டதாகவும் அதனால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. கரையான் ஒரே நாளில் அப்படி செய்ய முடியாது, ஒரு 6 மாதகாலமாவது வேண்டும். இப்படி 6 மாதகாலமாக ஒரு நிலைமை இருந்தும், அதை அந்தப் பள்ளியின் நிர்வாகிகளோ அல்லது கல்வி அதிகாரிகளோ கவனிக்

காமல் இருந்ததன் காரணமாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. பள்ளிகளை ஒரு பிசினஸ் என்ற முறையில் நடத்துவதால் தான் இப்படிப்பட்ட கவனக்குறைவான நடவடிக்கைகளால் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. அவர்கள் பள்ளியை வைத்து சம்பாத்தியம் பண்ணுகிறார்கள். அதன் காரணமாக சரியான முறையில் பராமரிப்பது இல்லை. கல்வி அதிகாரிகளும் அவர்களுக்கு ஆதரவாக இருந்ததால் இப்படிப்பட்ட ஆபத்து வந்து இருககிறது. இந்த விபத்துக்குப் பிறகாவது, ரயில்வே லைனுக்குப் பக்கத்தில பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்று சொல்லவேண்டும். சூப்பர்வைஸ் செய்பவர்களும் ஒழுங்காகச் செய்யவேண்டும் என்று ஆணையிட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராய, இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசியவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல், இத்தகைய துர்பாக்கியமான சம்பவங்கள், அதிலும் சிறுபிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் நடந்து வருவதும், அதைப் பற்றி நாம் முனைப்பாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் இருந்து தவறி இருக்கிறது என்று சொலவதும் வாடிக்கையாகப் போய்விடுவது நாட்டிற்கு நல்லதல்ல. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பல்வேறு மாவட்டங்களில் நடந்து வருகின்றன. ஏன் நடக்கிறது. இப்படிப்பட்ட கட்டிடங்களில் அவர்கள் எப்படி பள்ளிக்கூடங்களை திறந்து இருக்கிறார்கள் என்பதை அரசு கவனித்துப் பார்க்க வேண்டும். மதுரையில் நடந்த நிகழ்ச்சி மற்ற பள்ளிகளுக்குப் பரவக்கூடாது. அது சர்க்கார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, மற்ற தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் சரியாக படிப்பதற்கு ஏற்ற தொரு சூழ்நிலை இருக்கிறதா என்று அரசு ஒட்டு மொத்தமாக ஒரு ஆய்வு செய்து, அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு தூண்டுகோலாக அமைய வேண்டும், பள்ளிக்கூடங்கள் ஒரு இடத்தில் திறக்க வேண்டும் என்று சொன்னால் அதற்காக ஸ்பெஷலாக சர்ட்டிபிகேட் அரசாங்கத்துறையில் இருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் இருந்து வாங்கவேண்டும் என்று ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மதுரையில் பேசும்போது, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு உதவியாக இருக்கும் வகையில் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். சிமென்ட்டில் கலப்படம் செய்யக்கூடாது. இப்படிப்பட்ட கட்டிடம் கட்டுவதில் ஏதாவது ஊழல் நடந்து இருக்கின்றனவா என்பதை எல்லாம் நாம் பார்க்கக்கூடியவர்களாக இருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்

கிறார்கள் என்றால் இந்தக் கட்டிடம் கட்டுவதிலே ஏதோ நடந்து இருக்கிறது என்று நமக்கு நன்றாகத் தெரியவருகிறது. அந்தக் கட்டிடம் எப்படி, எப்போது கட்டப்பட்டது, எந்த வகையில் கட்டப்பட்டது என்பதை ஆராய்ந்து, எப்போது அந்தப் பள்ளி திறக்கப்பட்டது, என்பதையும் அரசு ஆய்வு செய்யவேண்டும். மேலும் அதிலே தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டிய பிறகும், அந்த நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததன் விளைவாக அப்படி நடந்து இருந்தால், அரசாங்கம் அந்த நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான சம்பவங்கள் நடந்து வருகிறதை நாம் பார்க்கிறோம். அதைத் தீர்ப்பதற்கு என்னென்ன வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு முறையான திட்டங்களை வகுப்பதற்கு, அது குறித்து விரிவாகப் பேசுவதற்கு இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, மதுரை மாநகரில் பள்ளிக்கூடம் இடிந்து, அதன் மூலம் மாணவர்கள் பலர் காயமடைந்தார்கள் என்பது இரண்டு நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற சம்பவம் மட்டுமல்ல; இதே மதுரை மாநகரில் மணிநகரில் இரயில்வே மேம்பாலத்தை ஒட்டினாற்போல் உள்ள ஒருபள்ளிக்கூடம் 1964-ல் இடிந்துவிழுந்து, 36 மாணவர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். அதன் பிறகுதான் தமிழக அரசானது தமிழ்நாட்டிலே பொதுக் கட்டடங்கள் எல்லாம் பொதுப்பணித் துறையின் மூலம் அவை உறுதியான, வலுவான கட்டங்களாக இருக்கின்றன என்பதற்கு மேற்பார்வை பொறியாளரிடமிருந்து சான்றிதழ் பெறவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்தது, ஆனால் இன்று கூட கல்வித் துறையில், அரசாங்கத் துறையில் இருக்கும் கட்டடங்கள் உறுதியானவையாக இருக்கின்றன; தனியார் துறையில் சில இடங்களில் அப்படியல்ல. தனியார் சிலர் கல்வி ஸ்தாபனத்தை அறிவு வளர்க்கும் இடம் என்று கருதாமல், அதை ஒரு வியாபார நோக்கத்தோடு மலிவான மூதலீட்டில் நிறைந்த லாபத்தை அடைய வேண்டுமென்ற நோக்கத்தில் பாதுகாப்பற்ற, உறுதியற்ற பள்ளிக் கட்டடங்களைச் கட்டுவதன் மூலமாக இத்தகைய விபத்துக்கள் நடைபெறுகின்றன. அதனால் தங்களுடைய எதிர்கால நன்மையைக் கருதி பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கையையே இழக்க ஆளாக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு கல்வி ஆண்டின் இறுதியிலும், ஏப்ரல் முதல் ஜூன் மாதத்திற்குள்ளாக ஒவ்வொரு பள்ளிக் கட்டடமும் உறுதியானதாக, வலுவானதாக இருக்கிறது என்ற சான்றிதழை

1979 ஏப்ரல் 30] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெற்றுத்தந்து, அந்தப் பள்ளியைத் தொடங்க வேண்டுமென்ற விதியை அரசாங்கம் அறிவித்தால் நிச்சயமாக இம்மாதிரியான பழுதடைந்த கட்டடங்களைக் கொண்ட பள்ளிகளுக்கு மாணவர்கள் போய், விபத்துக்குள்ளாகும் நிலமை ஏற்படாது. இதைப் போன்ற பல பிரச்சனைகளைப்பற்றி தெளிவாகவும் விரிவாகவும் விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, எனக்கு முன்னதாக மாண்புமிகு அங்கத்தினர்கள் விரிவாக இந்த அவையின் இதர நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திவைத்து, இந்த தீர்மானத்தின் அடிப்படையில் இருக்கிற காரியத்தை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம்; ஆனால் இதுவும் ஒரு காரணம் என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன். பள்ளிக்கூட கட்டடங்கள் மாணவர்களைக் கவருகின்ற வகையில், அட்ராக்ட் பண்ணக் கூடிய வகையில் அமைந்திருந்தால் நிச்சயமாக மாணவர்கள் பள்ளிகளுக்கு வருவதற்கு மனம் தளரமாட்டார்கள்.

இதைப்போன்ற நிகழ்ச்சிகள் ஆங்காங்கே இதற்கு முன்னதாகவும் நடைபெற்றிருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடம் இரயில்வே லைனுக்குப் பக்கத்தில் இருந்ததால் ஒருவேளை இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம். இருந்தாலும் நிச்சயமாக இதில் தவறு இருக்க வேண்டும். இன்றைக்கு தனியார் பள்ளிகள் மட்டுமல்ல; அரசு நடத்தும் பள்ளிகளும் பல்வேறு இடங்களில் இப்படி பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன; தனியார் பள்ளிகளிலும் அப்படி இருக்கின்றன. அதற்கு அரசாங்கம் நிதி நிலைமை சரியாக இல்லை என்று விளக்கம் சொன்னாலும், இதற்கென்று தனியாக நிதியை ஒதுக்கி, இந்த மாநிலத்தில் இருக்கிற அனைத்துப் பள்ளிகளுக்கும், தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அல்லது அரசாங்கப் பள்ளியாக இருந்தாலும் சரி, மாணவர்கள் தைரியமாகச் சென்று கல்வி பயிலும் வகையில் பலமான, வலுவான கட்டடங்களைக் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 28—4—1979-ந் தேதி காலை சுமார் பத்தேமுக்கால் மணியளவில் பாண்டிநகரில் உள்ள கோமதி தொடக்கப் பள்ளியிலே கூரை சரிந்து விழுந்திருக்கிறது. அதற்கு, அந்தப் பள்ளியானது மதுரை—மானாமதுரை இரயில்வே பாதையின் அருகே இருந்திருக்கிறது.

[முற்பகல் 9.50]

இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் இராமேஸ்வரத்திற்கு இரயில் சென்று கொண்டிருந்ததாக இங்கே சொல்லி இருக்கிறார்கள். ஏறக்குறைய 80 மாணவர்கள், 1-வது 2-வது படிக்கின்ற மாணவர்கள் சாதாரண காயங்கள் அடைந்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். காந்திமதி என்கின்ற ஒரு ஆசிரியை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பி. 2 ஸ்டேஷனில் கிரைம் நம்பர் 313/79—ல் செக்ஷன் 337—338 ஐ. பி. சி. என்பதன் கீழ் அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. செல்லதுரை என்ற அந்தப் பள்ளியின் தாளாளர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளி வந்திருக்கிறார். அந்த வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. இந்த ஆய்வு நடைபெறுகிறபோது இதுபற்றி எல்லாம் அதிகாரிகள் சரியான முறையில் பார்த்திருப்பார்களா என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். இதிலே யார் யாருக்கு என்ன பொறுப்பு என்பதை எல்லாம் தெரிந்துகொள்வதற்கும் மேலும் இது போன்ற நிகழ்ச்சி நடைபெறாமல் இருப்பதற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுபற்றி கல்வி இயக்குநர் அவர்களை சம்பவம் நடந்த பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விசாரணை நடத்துமாறு இந்த அரசு கேட்டுக்கொள்ள இருக்கிறது. அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால்அனுமதி மறுக்கப்படுகிறது. அடுத்து அரசினர் தீர்மானம்,

5. அரசினர் தீர்மானம்

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. பேரவையின் 41 (3)–வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) மேற்கு தாம்பரம் ரயில் நிலையமருகில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''மேற்கு தாம்பரம் ரயில் நிலையத்திற்கு அருகில் 6—4—1979 அன்று தீ விபத்தினால் ஏற்பட்ட சொத்திழப்பு பற்றி''.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்):

தலைவரவர்களே செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ள விவரங்களாவன :—

தாம்பரம் ரெயில் நிலையத்துக்கருகில் இந்திரா காலணி எனும் குடியிருப்புப் பகுதியில் 6—4—79 அன்று, நடுப்பகல் 12 மணி அளவில் ஒரு தீ விபத்து ஏற்பட்டு, 17 குடிசைகளும், 17 கடைகளும் சேதமடைந்தன. தீ விபத்து பற்றி விசாரணை நடத்திய செங்கல்பட்டு சார் ஆட்சியர் (Sub-Collector) தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லையென்றும், ஆனால் தீ விபத்து எந்த தீச் செயலாலும் ஏற்பட்டதல்லவென்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த தீ விபத்தினால் குடிசைகளுக்கும், கடைகளுக்கும் ஏற்பட்ட சேதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட 17 குடிசைகளின் சொந்தக்காரர்களுக்கும் அவர்களது ஏழ்மை நிலையைக் கருதி குடிசை புனரமைப்புத் தொகையாக 7—4—79 அன்று தலா ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 1,700 வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 17 கடைச் சொந்தக்காரர்களும், தங்கள் வியாபாரத்தில் போதிய வருமானம் பெற்று வருவதால்

நிவாரணத் தொகை பெறத் தகுதியற்றவர்கள். இதுபோன்ற கடைப்பகுதிகளில் கடைச் சொந்தக்காரர்கள் ஓலைக் கூரைக்குப் பதிலாக ஆஸ்பெட்டாஸ் சிமெண்டினால் கூரைகள் போடலாம் என்றும், அவர்கள் தீயணைப்புக் கருவிகளைத் தங்கள் கடைகளில் வைத்துக்கொள்ளலாமென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தாம்பரம்இந்திரா நகர் காலனியில் 6—4—79 அன்று ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புகளைப்பற்றி அமைச்சரவர்களுடைய பேரவைச் செயலாளர் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்பதற்கான காரணத்தை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் அறிவிக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதனால் பரவாயில்லை. ஆனால் இம்மாதிரி எதிர்காலத்தில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். தீ பற்றாத மேற்கூறைகள் போடவேண்டும், புதிதாகக் கட்டப்படக்கூடிய கட்டடங்களுக்கு என்று மாநகராட்சியின் மூலம் அறிவுறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, கடைகள் நெருக்கமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் ஒரு இடத்தில் தீ பற்றிக் கொண்டவுடன் தொடர்ந்து எல்லா இடங்களிலும் தீ பரவ வாய்ப்பாக இருக்கின்றது. ஆகவே இம்மாதிரி கூரைகள் போடுவதை முடிந்த மட்டும் தடுக்கவேண்டும். நெருப்புப் பற்றாத கூரையை வேய்வதற்கு அறிவுரைகள் வழங்கப் படவேண்டும். இது பற்றிய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விளக்கம் கூறக் கூடாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 100 ரூபாய் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்த 17 கடைக்காரர்களுக்கு அதிக உதவி கிடைக்க, தேசீய வங்கியில் இருந்து உதவி கிடைக்க அரசுக்கு அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். அதை ஏற்க அரசு முன் வருமா ?

திரு. பி. முசிறிப்புத்தன் : (அமைச்சரின் பேரவை செயலர்) அதிகத் தொகை தருவது பற்றி தனிக் கேள்விப் போட்டால் பதில் தருகிறேன். 17 வியாபாரிகளுக்கு தேசீயமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். வியாபரம் செய்வது மூலம் அவர்களுக்கு ஆதாயம் வருகிறது. அவர்களுக்குக் கடன் வழங்குவது சம்பந்தமாக அவர்கள் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் தொகுதியைப் பற்றி ஆறுமுகம் அவர்கள் கேட்டதற்கு நன்றி.

(ஆ) இராதாபுரம் தொகுதியில் புயலால் ஏற்பட்ட சேதம் குறித்து.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ''17—4—1979 அன்று நெல்லை, இராதாபுரம் தொகுதியில் உள்ள ஆலக்கிணறு திருமலாபுரம் கிராமத்தில் திடீரென புயல் வீசியதால் ஏராளமான வாழை சேதமடைந்ததால் அங்கே நிலவும் பதட்ட நிலை குறித்து.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவரவர்களே, 14-4-79 அன்று தெற்கு கள்ளிக்குளம் அச்சம்பாடு ஆகிய கிராமங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. 17-4-79 அன்று மாலை 4 மணி முதல் 4-30 மணி வரை ஆலங்கிணறு திருமலாபுரத்தில் பலத்த சூறைக் காற்றுடன் மழையும் பெய்தது. பலத்த காற்றின் காரணமாக வாழைப்பயிர் மட்டும் சேதம் அடைந்தது. மற்ற பயிர் களுக்கோ அல்லது குடியிருப்புகளுக்கோ எவ்வித சேதமுமில்லை.

சேதமுற்ற வாழைப் பயிர்கள் அனைத்தும், எட்டு மாதக் கன்றுகள் எனவும், பூப்பூத்துள்ள நிலையில் இருந்தன எனவும் தெரிகிறது. பலன் தருவதற்கு மேலும் இரண்டு மாத காலம் பிடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதமுள்ள வாழைகள் அனைத்தும் புஞ்சை நிலத்தில் கிணற்றிறவையின் மூலமே சாகுபடி செய்யப்பட்டவை. வாழை ஒவ்வொன்றும், இரண்டு மாத காலத்திற்கு பிறகு மகசூலுக்கு வந்தால் குறைந்தது ரூ. 12/-க்கு மேல் வருமானமுடையது. அவற்றினை சாகுபடி செய்தலுக்கு ஆலங்கிணறு திருமலாபுரம் கிராம விவசாயிகள் வாழை ஒன்றுக்கு ரூ. 8 முதல் ரூ. 10 வரை செலவிட்டதாகவும் அருகிலுள்ள கள்ளிக்குளம் கிராம விவசாயிகள் வாழை ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 7 வரை செலவிட்ட தாகவும் கூறுகின்றனர்.

62 விவசாயிகளுக்குச் சொந்தமான 57.09 ஏக்கர் நிலப் பரப்பில் சாகுபடி செய்த 30,465 வாழைகள் சேதமுற்றன. சேதத்தின் மதிப்பிடு சுமார் ரூ. 2,71,050 என்று கணக்கிடப் பட்டுள்ளது.

தெற்கு கள்ளிக்குளம், அச்சம்பாடு கிராமத்தில் விவசாயிகள் வசதி படைத்தவர்கள். ஆனால், ஆலங்கிணறு திருமலாபுரம் கிராம விவசாயிகளில் பெரும்பாலோர் சிறு விவசாயிகள். முற்றிலும் விவசாய வருமானத்தையே நம்பி யுள்ளார்கள், அவர்கள் அனைவரும் கிராம விவசாய வங்கியிலும் நில அடமான வங்கிகளிலும் முன் பணம் கடன் வாங்கியே விவசாயம் செய்துள்ளனர்.

[திரு. பி. முசிறிப்புத்தன்] [1979 எப்ரல் 30

ஆலங்கிணறு திருமலாபுரம் மற்றும் அருகிலுள்ள கிராமத்து வாழை சாகுபடி செய்த விவசாயிகள் அவர்களால் வங்கியில் பெறப்பட்டுள்ள குறைந்த காலக் கடன்களை, நீடித்த காலத் தவணை முறைக்கடன்களாக மாற்றித் தர வேண்டு மென்றும், சேதமுற்ற பயிர்களை மீண்டும் சாகுபடி செய்தலுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் புதிய கடன் தரவேண்டுமென்றும் கோரியுள்ளார்கள். மேலும் ஏற்பட்டுள்ள சேதத்திற்கு தக்க நிவாரண தொகையும் கோரியுள்ளார்கள்.

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர், ஏற்பட்டுள்ள சேதத்திற்கு தக்க நிவாரணத் தொகை வழங்குவதற்கும், விவசாயிகள் வாழை சாகுபடிக்கு என பெறப் பெற்றுள்ள கூட்டுறவு வங்கி குறைந்த கால கடன்களை நீண்ட கால தவணைக் கடன்களாக மாற்றி ஆணைகள் பிறப்பிக்கவும், வாழைப் பயிர் புதிதாக மீண்டும் சாகுபடி செய்வதற்கு கூட்டுறவு வங்கிகள் மீண்டும் கடன்கள் வழங்குவதற்கும் ஆணைகள் பிறப் பிக்குமாறு அரசினைக் கேட்டுள்ளார். இச்செயற்குறிப்பு 25—4—79 அன்றுதான் அரசுக்கு கிடைத்தது. இதனை அரசு விரைவில் ஆய்வு செய்து தக்க ஆணைகளை வெளியிடும்.

[முற்பகல் 10-00]

திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, 12 ரூபாய்க்கு மதிப்பிட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். இப்படிப் பட்ட தவறான தகவல்களை அதிகாரிகள் அமைச்சர் அவர் களுக்கும் அரசுக்கும் தந்திருக்கின்றார்கள் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்கு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது 12 ஆயிரமா அல்லது ரூபாய் பன்னிரண்டா?

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்): தாருக்கு 12 ரூபாய். .

திரு. யா. சை. மு. யூசுப்: இப்படி தவறான தகவலை தந்திருக்கிறார்கள். அங்கு பெரிய நிகழ்ச்சிகள் நடந்த போதிலும் ஆலங்கிணறு திருமலாபுரம் அங்கிருக்கின்ற கிராம முனிசீப் அரசுக்கு விரோதமாக—மோசமாகப் பேசிக்கொண்டும் இருக்கி றார். இதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் நிவாரணம் தரப்பட்டிருக்கின்ற நேரத்தில் மானியத் தொகை தந்ததாகத் தெரியவில்லை. நாகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்ட நேரத்தில் மானியம் தரப்பட்டிருக்கிறது. அதே

1979 ஏப்ரல் 30] [திரு. யா, சை. மு. யூசுப்]

போன்று எங்கள் தொகுதி மக்களுக்கும் மானியத் தொகை கொடுத்தால் நான் கடமைப்பட்டவனாக இருப்பேன். மேலும் இந்த நிவாரண உதவி தந்ததற்கு இந்த அரசுக்கு ஆலங்கிணறு திருமலாபுரம் மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதற்கான ஆதாரங்களை வைத்திருக்கிறேன். அந்த ஆதாரத்தையும் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் கதையையும் இந்த மனுவின் வாயிலாகவும், புகைப்படங்களின் வாயிலாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் செயலரிடம் தருகிறேன்,

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, அரசுக்கு வந்த தகவலில் இரண்டு மாதங்களுக்குப் பிறகு இது 12 ரூபாய்க்கு விற்கும் என்றும், சாகுபடி செய்வதற்கு ஆலங்கிணறு திருமலாபுரம் கிராமத்திற்கு ஒரு வாழைக்கு 8 முதல் 10 ரூபாய் செலவிட்டிருப்பதாகவும், கள்ளிக்குளம் கிராமத்தில் 5 முதல் 7 ரூபாய் வரை செலவிட்டிருப்பதாகவும் அவர்களே ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். மேலும் இங்கு தரப்பட்ட தகவல் தவறு என்றிருக்குமானால் அதைப்பற்றி குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் நிரூபிப்பாரானால் அதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சென்னை ஓட்டலதிபர்கள் பலகாரங்கள் விலையை உயர்த்த அறிவிப்பு கொடுத்திருப்பது குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள ஓட்டல் அதிபர்கள் பலகாரங்கள் விலையை உயர்த்துவோம் என அறிவித்துள்ளதால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து அவையில் ஒரு அறிக்கைவைக்க அனுமதி கோருகிறேன்.

உணவு விடுதிகளில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை ஏறி வருவதைக் குறித்து பொது மக்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வந்ததினாலும், விலைகளைக் குறைக்க வேண்டுமென்று உணவு விடுதிகளின் சொந்தக்காரர்களை அரசு கேட்டுக்கொண்ட முயற்சிகள் பலனளிக்காததாலும் ஏழை எளிய நடுத்தர வகுப்பு மக்களால் பொதுவாக நுகரப்படும் ஒன்பது உணவுப் பண்டங்களுக்கும் ஜனதா சாப்

பாட்டுக்கும் அதிகபட்ச விலையையும் குறைந்த பட்ச எடையையும் நிர்ணயித்து இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட விதிகள் 971—ன் கீழ், தமிழ்நாடு அரசு உணவு விடுதிகள் (விலை நிர்ணயம் உணவுப்பண்டங்களின் விலைப் பட்டியல் அறிவிப்பு) ஆணை 1976ஐ வெளியிட்டது. இவ்வாணை 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ம் நாளிலிருந்து அமலுக்கு வந்தது.

உணவு விடுதிகள் சொந்தக்காரர்களிடமிருந்து பெற்ற முறையீட்டின் பேரில் ஒரு சில உணவுப் பண்டங்களின் விலையை 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் நாளில் திருத்தி வெளியிடப்பட்டது, 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அவசரக்கால நிலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளில் இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட விதிகள் செயல்படாமல் போனதின் விளைவாக இவ்வாணை காலாவதி ஆகிவிட்டது.

அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன் கீழ் மீண்டும் இக்கட்டுப்பாட்டு ஆணை வெளியிடலாமா என்பது பற்றி இவ்வரசு ஆலோசித்து வந்தது. உணவுப் பண்டங்களின் விலைகளை குறைந்தபட்ச நிலையில் வைக்க தாமாகவே சுயக் கட்டுப்பாட்டை கையாளுவோம் என்று உணவு விடுதிகள் பிரதிநிதிகள் முறையிட்டார்கள். அரிசி, சமையல் எண்ணெய், சர்க்கரை போன்றவற்றின் விலைகள் இறங்கிய போதும் உணவு விடுதிகள் உணவுப்பண்டங்களின் விலைகளை ஏற்றிவிட்டன என்று பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வந்து கொண்டிருந்தன. விலைகளைக் குறைப்பதற்கு வழிவகைகள் உண்டா என்பதை அறியும் பொருட்டு உணவு விடுதிகள் பிரதிநிதிகளுடன் விவாதிக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் உணவு விடுதிகள், சிற்றுண்டிகளின் விலைகளை பாராட்டத்தக்க அல்லது நியாயமான அளவிற்கு குறைக்கவில்லை. ஆதலால் 1955 வருடத்திய அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் மீண்டும் அமலுக்கு கொண்டு வரும் யோசனை மீது மத்திய அரசிடம் ஒப்புதல் கோரப்பட்டது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து தமிழ்நாடு உணவு விடுதிகள் (விலை நிர்ணயம் உணவுப் பண்டங்கள் விலைப்பட்டியல் அறிவிப்பு) ஆணையினை புதியதாக வெளியிடும் யோசனை பரிசீலனையில் உள்ளது,

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தற்போது ஓட்டல்களில் அளிக்கப்படும் உணவுப் பண்டங்களின் தரம் மோசமாக இருக்கிறது, விலை அதிகமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. ஆகவே இதை நிவர்த்திப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. க. உரொ, எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், விலைவாசி உயர்வை உணவு விடுதிகளில் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து சில குறிப்பிட்ட உணவுப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரத்தை மாநில அரசு பெற்று வைத்திருக் கிறது. என்றாலும் இந்த அதிகாரத்தை உடனடியாக பயன் படுத்தலாமா என்பதைப்பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டி ருக்கிறது. அதே நேரத்தில் ஓட்டல்களில் ஓட்டல் உரிமையாளர் களே விலை நிர்ணய கட்டுப்பாட்டை செய்து அறிவிக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நீங்கள் குறிப்பிட்ட அதிகாரத்தை மட்டும் வைத்துக் கொண்டிருந்தால் விலைக் கட்டுப்படுத்துவது என்பது நடக்காது. மத்திய சர்க்காரிலேயே ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களே ஆலைகளில் துணிகளின் விலையை 10 சதவிகிதம் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் நேர்மாறாக 10 சதவிகிதம் முதலாளிகள் உயர்த்தி னார்கள். ஆகவே உங்களிடம் இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக சட்டத்தைக் கொண்டு வந்து விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

* மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, சட்டத்தின் அடிப்படையில் உணவுகளின் விலை குறைப்பதும், எடையை நிர்ணயம் செய்வதும் எந்த அளவுக்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள் என்று நம்பு கிறேன். இப்பேர்ப்பட்ட கட்டுப்பாடுகளைக் கொண்டு வருகின்ற நேரத்தில் ஓட்டல் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குப் போகின்ற நிலைமையும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக் கின்றன, இன்னொன்று, நான் விலையை வேண்டுமென்றால், நிர்ணயிக்கலாம். எடையையும் நிர்ணயிக்கலாம். ஆனால் தரத்தை நிர்ணயிக்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. எந்த முறையில் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கக்கூடிய வாய்ப்புகள் நிச்சயமாக இல்லை என்பதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவசர கால நேரத்தில் இப்படிப்பட்ட உணவுப் பண்டங்களுக்கு விலைக் கட்டுப்பாடு நிர்ணயிக்க முடிந்தது என்றால், அன்றைக்கு இதற்காக போடப்படும் சட்டத்தை எதிர்த்து உணவு விடுதி களின் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குப் போகக் கூடிய அதிகாரம் அவர்களிடத்தில் இல்லை.

இன்றைக்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே தான், கூடுமான மட்டும் அவர்களோடு பேசி, இதைத் தீர்க்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. என்றாலும், மத்திய அரசின் அனுமதி பெற்று சட்டத்தை அமுல்படுத்துவது என்பதை இந்த அரசு ஆலோசனை செய்து கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்பு எண் 4. (குறுக்கீடு.) அண்ணாமலை அவர்கள் மட்டும் கேட்டால் போதும் என்று திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் அஷ்ஷூரன்ஸ் கொடுத்ததினால், இந்தத் தீர்மானம் சேர்க்கப்பட்டது. திரு. அண்ணாமலை.

(ஈ) தர்மபுரி, காவேரி ரப்பர் தொழிற்சாலை, கதவடைப்பு, குறித்து.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

''தர்மபுரி, காவேரி ரப்பர் தொழிற்சாலை நிர்வாகம், அடிக்கடி கதவடைப்பு செய்வதாலும், தற்போது அறுபது தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளதாலும், அவர்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவைமுன் வைக்க அனுமதி கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டம், நல்லாம்பட்டியிலுள்ள காவேரி ரப்பர் பாக்டரி 9—3—1977 முதல் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் சி. ஐ. டி. யு. உடன் இணைக்கப்பட்ட தர்மபுரி மாவட்டம், காவேரி ரப்பர் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த 135 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். சைக்கிள் டயரும் ட்யூப்களும் இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப் படுகின்றன. சி. ஐ. டி. யூ.—உடன் இணைக்கப்பட்ட மேற்கண்ட தொழிற்சங்கம் ஒன்றுதான் இந்த நிறுவனத்தில் இயங்கி வருகிறது.

தொழிற்சங்கம் தனது 12—1—1979 ஆம் தேதி கடிதம் மூலம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை எழுப்பி, அதை நிவர்த்தி செய்து தருமாறு நிர்வாகததை கேட்டுக் கொண்டுள்ளது :—

கோரிக்கைகள் விவரம் —

1. 90 நாட்களுக்கு மேற்பட்டு பணிபுரிந்த அனைவரும் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

2. தற்பொழுதுள்ள சம்பள விகிதாச்சாரத்தில் 75 சதவிகிதம் சம்பள உயர்வாக தரப்பட வேண்டும்.

3. 1976--77 ஆம் வருடத்திற்கான போனஸாக 15 சதவீதம் தரப்பட வேண்டும்.

4. வெப்பப்படியாக 0.50 பைசா வீதம் நாள் ஒன்றுக்கும், இரவு நேரம் வேலைப் படியாக ரூ. 1-ம் தரப்பட வேண்டும்.

5. மிகை நேர வேலைக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மேலே சொன்ன கோரிக்கைகள் அல்லாது, நிர்வாகம் தற்பொழுதுள்ள பருவ வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள்.

தொழிலாளர்கள் சார்பில் எழுப்பப்பட்ட இந்த பல்வேறு கோரிக்கைகள் தொழிலாளர் அலுவலர் 'வேலூர்' அவர்களினால் 30—1—1979 அன்று பெறப்பட்டு பேச்சு வார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளது.

தொழிலாளர் பிரதிநிதிகள், நிர்வாகம் 50 தொழிலாளர் களை வாய்மொழியாக வேலை நீக்கம் செய்து விட்டது என்றும், தொழிலாளர் அலுவலிடம் புகார் செய்துள்ளார்கள். திடீர் என்றும் தகுந்த முகாந்திரம் எதுவும் இன்றியும், மேற்கண்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டது. தொழிற்சங்க பிரதிநிதிகளின் இந்த கூற்றுக்கு எதிராக, நிர்வாகம் தனது 24—3—1979 ஆம் தேதி கடிதத்தில், தாங்கள் 4 வேலையாட்களை மட்டுமே அவர்களின் மீதான குற்றச்சாட்டுகள் காரணமாக வேலையில் இருந்து நீக்கி உள்ளதாக தெரிவித்தனர். வேலை நீக்கம் செய்யப்பட்டதாக கூறப்பட்ட 50 தொழிலாளர்களின் பெயர் விவரங்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் தரவில்லை.

நிறுவனம் சுமுகமான முறையில் இயங்கிக்கொண்டு வருவதாகவும் தொழிலாளர்கள் எவ்வித நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் தெரியவருகிறது. தொழிலாளர் நலத் துறைக்கு, அடிக்கடி கதவடைப்பு மற்றும் லே-ஆப் செய்யப் படுவதாக கூறுகின்ற புகார் எதுவும் தொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்படவில்லை.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்கள் பிரச்னை தற்போது லேபர் ஆபீசர் மூலம் தீர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அரசு எடுத்த

நடவடிக்கைக்கு நன்றி. ஆனால், இரண்டு தொழிலாளர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, சுப்பிரமணியம், கருப்பண்ணன் என்னும் இரண்டு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்பது; மற்றொன்று, பொங்கல் அட்வான்ஸ் கொடுப்பது பற்றி. இந்தப் பிரச்னைகளை சுமுகமாகப் பேசி தீர்த்திருக்கலாம். ஆகவே, இதை ஒரு அணுகு முறையிலே கேட்காமல், குற்றப் பார்வையோடு பார்த்ததால் தான், இந்தக் கதவடைப்பு அங்கே ஏற்பட்டது. இத்தகைய போக்கு ஒரு ஆரம்பத் தொழிற்சாலையிலே இருக்கிறது. இந்தப் போக்கை கடைப்பிடிப்பதைக் குறித்து, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதோடு, இரண்டு தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கான ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக உறுப்பினர் குறிப்பிட்டார்கள். எனக்கு கிடைத்திருக்கின்ற குறிப்பில் 4 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி சமரசப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. மேலும், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 2 (ஏ) பெடிஷனை லேபர் ஆபீசருக்கு அனுப்புவார்கள் என்றால், தொடர்ந்து சமரச முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றையதினம் திரு. வி. கே. கோதண்டராமன் பெயர் இல்லை. எல்லோர் பெயரையும் அறிவித்து விடுகிறேன். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு திரு. ஏம். அண்ணாமலை, திரு. ரா. கிருஷ்ணன், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. பி. சோரணம், திரு. வெங்கிடு, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். திரு. வி. கே. கோதண்டராமன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த அறிக்கையிலே அந்த காவேரி ரப்பர் தொழிற்சாலையிலே 135 தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும், அங்கே அந்தத் தொழிலாளர்கள் நம்பியிருக்கக் கூடிய தொழிற்சங்கம் சி. ஐ. டி. யு. என்றும் சொல்கிறார்கள், ஆகவே, அவர்கள் சில பல கோரிக்கைகளை வைத்திருப்பதாகவும், அந்தக் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, அந்த நிர்வாகம் 50, 60 தொழிலாளர்களை வேலையிலிருந்து திடீரென்று எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் நீக்கியிருக்கிறது. ஆனால், இப்போது காரணம் சொல்கிறார்கள். அவர்கள் சில தவறுகள் செய்

1979 ஏப்ரல் 30] [திரு. வி. கே. கோதண்டராமன்]

திருப்பதாகக் கூறுகிற நிலையிருக்கிறது. எனவே, கனம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் என்கிற காரணத்திற்காக பழி வாங்காமல், அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு ஏற்றுக்கொள்ள அமைச்சர் அவர்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில், உடனடியாக இதைத் தீர்க்கக் கூடிய வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொன்னதுபோல் 4 பேர்கள் தான் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு, வேலைநீக்கம் செய்தி ருப்பதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. 50 தொழிலாளர்கள் வேலைநீக்கம் பற்றிய விவரங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதியால் இன்னும் தரப்படவில்லை. அங்கே ஒரே ஒரு சங்கம் தான் இருக்கிறது என்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். போட்டிச் சங்கம் ஏற்பட வேண்டியதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 50 தொழிலாளர்களின் முழு விவரங்களை, லேபர் ஆபீசருக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

(உ) புளியங்குடி நகர விசைத்தறி நெசவாளர்கள் உண்ணா விரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, புளியங்குடி நகரத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களைப் பழி வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள ஒருசில விசைத்தறி நிலைய முதலாளிகளது போக்கை எதிர்த்து தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதால் நிலவும் பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவையின் முன் வைக்க அனுமதி கோருகிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 ஏப்ரல் 30

விசைத்தறி தொழிற்சாலைகளுக்கு 1948-ம் வருடத்திய தொழிற்சாலைகளின் சட்டம் அமுல் படுத்தப் படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடியில் 13 விசைத்தறி தொழிற்சாலைகள் இயங்குகின்றன. இவைகளில் 191 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இத்தொழிற்சாலைகளில் 10 தொழிற்சாலைகள், தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத மூன்று தொழிற்சாலைகளில் தான் குழப்பம் ஏற்பட்டது.

2. புளியங்குடியில் இயங்கும் பதிவு செய்யப்படாத விசைத்தறி தொழிற்சாலைகளைப் பற்றி சி. ஐ. டி. யூ. தொழிற்சங்கம் கொடுத்த புகாரின் அடிப்படையில், திருநெல்வேலியில் உள்ள உதவி தொழிற்சாலை ஆய்வாளர் பின்வரும் இரு தொழிற்சாலைகளை ஆய்வு செய்தார்.

(1) கஸ்தூரி விசைத்தறி தொழிற்சாலை. (ஆய்வின் போது பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை. 16)

(2) சுப்பைய நாடார் விசைத்தறி தொழிற்சாலை. (ஆய்வின்போது பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 20.)

3. திருநெல்வேலியிலுள்ள உதவித் தொழிற்சாலை ஆய்வாளர் 24—2—1979-ல் ஆய்வுசெய்து, தொழிற்சாலைகளைப் பதிவு செய்யாததற்கு காரணம் காட்டச் சொல்லி நிர்வாகத்தினர்களுக்கு அறிவிப்புகள் கொடுத்துள்ளார். இதன் தொடர்ச்சியாக நிர்வாகத்தினர்கள் தங்களது விசைத்தறி தொழிற்சாலைகளைத் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்ய மனுச் செய்துள்ளார்கள்.

4. மேற்கூறிய தொழிற்சாலைகள் மற்றும் முருகன் டெக்ஸ்டைல்ஸ் விசைத்தறித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், இத்தொழிற்சாலைகளில் உள்ள கணக்கர்களை அச்சுறுத்தியதாகக் கூறி, கணக்கர்கள் பணிக்கு வருவதை நிறுத்திவிட்டார்கள். கணக்கர்களுக்கு ஆதரவு காட்டி நிர்வாகத்தினர்கள் மேற்கூறிய தொழிற்சாலைகளை 1—3—1979 முதல் கதவடைப்பு செய்தனர். இக்கதவடைப்பு முறையற்றது என்றும் கதவடைப்பு நீக்கப்பட வேண்டும் என்றும் கோரி நகர விசைத்தறி தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் (சி. ஐ. டி. யூ.) 2—3—1979 முதல் உண்ணா நோன்பு மேற்கொண்டனர், தொழிலாளர்களின் போக்கு சரியில்லை என்றும், தங்களுடைய உயிருக்கும் பாதுகாப்பு வேண்டும் என்றும் கோரி நகர கணக்கர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளும் உண்ணா நோன்பு மேற்கொண்டனர்.

1979 எப்ரல் 30] [திரு. எஸ். இராகவானந்தம்]

5. 6—3—79-ல் தொழிலாளர் துறை அலுவலர் இருதரப்பினரையும் அழைத்து விசாரித்தார். கணக்கர்கள் எப்போது வேலைக்கு வருகிறார்களோ அன்றிலிருந்து கதவடைப்பை நீக்குவதென நிர்வாகத்தினர்கள் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டது. 9—3—79 அன்றும் தொழிலாளர் துறை அலுவலர் முன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. தொழிலாளர் துறை அலுவலரின் அறிவுரையின் பேரில் நிர்வாகத்தினர்கள் கதவடைப்பு 10—3—79-ல் நீக்கம் செய்தனர். தொழிலாளர்களும் கணக்கர்களும் 10—3—79-ல் இருந்து வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

6. புளியங்குடியிலுள்ள விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் யாரும் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

7. இப்பொழுது நிலைமை அங்கு சுமூகமாக இருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணன் : இந்த விவர அறிக்கையில் 191 தொழிலாளர்கள் பணியாற்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அங்குள்ள ஒரே ஒரு தொழிற்சாலையில் மட்டும் 400 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆக, இப்படி சட்டத்தை மோசடி செய்யக்கூடிய போக்கு அங்குள்ள விசைத்தறி நிறுவனங்களில் இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதலாளிகள் ஏமாற்றாமல் இருக்க டைம் கார்டு கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை மேலவையில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன் : குறிப்பிடப்பட்டிருக்கும் அறிக்கையில் பாக்டரி இன்ஸ்பெக்டர் போகும் நேரத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்தான் அந்தத் தொழிற்சாலையின் எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் ஷிப்ட் முறை இருக்கிறது, ஒரு ஷிப்டில் 12 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் மூன்று ஷிப்டில் எத்தனை தொழிலாளர்கள் என்று பார்க்கவேண்டும். ஒரு தொழிற்சாலையில் நான்கு தறிகளுக்கு அடுத்தாற்போல் ஊடே ஒரு சுவரை எழுப்பிவிட்டு வேறு பெயரில் பினாமியாக நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்திருக்கக்கூடிய, மிகப் புரட்சிகரமான, தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஏற்பாடே இதுதான். அதாவது ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கேஷுவல் லேபராக இருந்தாலும், பதிலியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் டைம் கார்டு கொடுக்கப்படவேண்டும். அது அந்தத் தொழிலாளர்கள் கையிலேயே இருக்கவேண்டும். அதன் காரணமாக தொழிலாளர்கள் யாரும் தங்களிடத்தில் வேலை செய்யவில்லை என்று சொல்ல முடியாது—There is no relationship of master and servant—ஏமாற்றிவிடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை முடிந்த பிறகு என்னிடம் வந்து இன்னின்ன தொழிற்சாலைகளில் இவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்று ரகசியமாக—கான்ஃபிடென்ஷியலாக சொல்லுவார்களானால் அதற்குப் பிறகு அதிகாரிகளை அனுப்பி பரிசோதனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்று வாக்குறுதி தருகிறேன்.

(ஊ) திருச்சி துறையூர் கிராமத்தில் ரெட்டியார் என்ற உயர் சாதியினர் கொண்டாரெட்டி என பொய் சான்றிதழ் பெற்று பிற்பட்ட வகுப்பினர்களுக்கான சலுகைகள் பெறுவது குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். வி. இராமசாமி, வ. சின்னசாமி, ஆர். காளியப்பன் ஆகியோர் மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருவார்கள்.

திரு. எஸ். வி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட துறையூரிலுள்ள ரெட்டியார் என்ற உயர்சாதியினர், தங்களை பழங்குடி வகுப்பைச் சேர்ந்த கொண்டா ரெட்டி என்ற சான்றிதழ்களை வைத்துக் கொண்டு, மலைசாதி, பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளை சட்ட விரோதமாக அனுபவித்து வருவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்றை வைக்க அனுமதி கோருகிறேன்.

''கொண்டாரெட்டி'' என்ற இனம் 1950-ம் ஆண்டில் பழங்குடியினர் பட்டியல் தயாரிக்கப்பட்ட போது, பகுதி கட்டுப்பாட்டுடன் பழங்குடியினர் பட்டியலில் காணப்பட்டது. அதாவது.

1979 ஏப்ரல் 30] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம், மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக பிற இடங்களில் உள்ள கொண்டாரெட்டியினர் மட்டுமே பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர். மேற்குறிப்பிட்டுள்ள பகுதிக் கட்டுப் பாடுகளை (area restriction) நீக்கும் பொருட்டு 1976 ஆம் ஆண்டில் பார்லிமெண்டில் இயற்றப்பட்ட "தாழ்த்தப்பட்டோர்" பழங்குடியினர் ஆணை (திருத்தம்) சட்டம் 1976ன்" படி தமிழ்நாடு முழுவதிலுமாக "கொண்டாரெட்டி" இனம் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

2. 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்களில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர், துறையூர் வட்டத்தில் வசிக்கும் "ரெட்டியார்கள்" சிலர் தாம் "கொண்டாரெட்டி" இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சான்றிதழ் பெற்று, *கிராம முன்சீப்களும் "ரெட்டியார்" இனத்தவராதலால் அவர்களும் இத்தகைய சான்றிதழ் தந்து விடுகின்றனர் என்றும், இவ்வட்டத்தில் வாழும் "ரெட்டியார்கள் எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்றும், எனவே இங்குள்ள "ரெட்டியார்" இனத்தவருக்கு "கொண்டாரெட்டி" என்று சான்றிதழ் வழங்கலாமா என்று துறையூர் வட்டாட்சியர் விளக்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் மாவட்ட அரிசன நல அதிகாரி இது குறித்து நன்கு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தாம் கேட்டுக்கொண்டதாகவும், அவர் கீழ்வருமாறு அறிக்கை தந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்:—

துறையூர் மற்றும் "ரெட்டியார்" இனத்தவர் அதிகமாக வாழ்கிற அதன் சுற்றுப்புற கிராமங்களைப் பார்வையிட்டு, "ரெட்டியார்" இனத்தைச் சேர்ந்தவர்களையும் சில கிராம அதிகாரிகளையும், இம்மாவட்டத்தில் வாழ்கின்ற இவ்வினத்தவரின் சமுதாய, பொருளாதார நிலைமைகளைக் குறித்து விசாரித்தபோது, இரண்டு மாதங்களுக்கு முன்பு துறையூர் வட்டத்தில் உள்ள "ரெட்டியார்" இனத்தவர் "ரெட்டிகுல சங்கம்" என்ற ஒன்றை ஏற்படுத்தியது தெரியவந்தது. இச்சங்கம் இன்னும் அரசால் அங்கீகரிக்கப்பட்டு, பதிவு பெறவில்லை. இச் சங்கத்தின் தலைவரை விசாரித்தபோது அவர் துறையூர் வட்டத்தில் வாழ்கிற 'ரெட்டியார்" அனைவரும் "கொண்டா ரெட்டி" இனத்தின் உட்பிரிவுகளைச் (sub-castes) சார்ந்தவர் என்றும், இவர்களை "சதுவக் ரெட்டி" என்றழைத்தாலும் மதிப்புக்காக சிலர் தங்களை "ரெட்டியார்" என்று கூறிக்கொள்வதுண்டு என்றும், இதுவரைக்கும் அவர்கள் நல்ல நிலையில் இருந்ததால் அரசு தரும் சலுகைகளைக் குறித்து அவர்கள் கவலைப்

* அரசு பழங்குடியினருக்காக வழங்கும் சலுகைகளைப் பெற முயலுகின்றனர் என்றும்

படவில்லையென்றும், தற்போது அவர்களின் பொருளாதார நிலைமை சீர்கெட்டு வருவதால், தங்கள் இனத்திற்கு அரசு அளிக்கும் சலுகையைப் பெற முயல்கின்றனர் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் துறையூர் வட்டத்தில் உள்ள ரெட்டியார்களுக்கு முதல் முதலில் பச்சை மலையிலும், கொல்லி மலையிலும் நிலங்கள் இருந்தன. ஆனால் நாளடைவில் அவர்கள் அவைகளை விற்றுவிட்டு தற்போது மலையருகில் வாழ்ந்து வருகின்றனர். சிலர் தங்கள் இனமான ''கொண்டாரெட்டி'' என்று பத்திரங்களில் பதிவு செய்துள்ளனர்; பச்சைமலையில் 4,000 பழங்குடியினர் இருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன; உப்பிலியபுரம் சட்டமன்றத் தொகுதியில் 67,000 பழங்குடியினர் உள்ளனர்; இதைக் கருதியே இத்தொகுதி பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமது விசாரணையில், இந்த ''ரெட்டி'' இனத்தவர் ''கஞ்சம ரெட்டி, பந்திரிரெட்டி, படகப்பு ரெட்டி'' என்று பல உட்பிரிவினராக தென்னாற்காடு வடாற்காடு மாவட்டங்களில் வாழ்கின்றனர் என்றும் ''பந்திரி ரெட்டியார்கள்'' குளித்தலை, மணப்பாறை வட்டங்களில் வாழ்வதாகவும், தற்போது நடைமுறையில் இருந்தாலும், ஏறத்தாழ 15 ஆண்டுகட்கு முன்புவரை இவர்கள் தங்கள் உட்பிரிவுகளுக்குள் கூட மண உறவு கொள்வது கிடையாது என்று அறியவந்தது. இவர்கள் இதுவரை அரசின் சலுகைகள் எதுவும் பெற்றதில்லை. ஆனால் கடந்த ஒரு ஆண்டு காலமாக இவர்களில் சிலர் ''கொண்டாரெட்டி'' என்று அரசுச் சலுகைகளைப் பெறுவதற்காக கூறிக் கொள்கிறார்கள் என்று தாம் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

5. பதிவேடுகளிலும், விசாரணையிலும், ''ரெட்டியார்'' என்னும் சிறுபான்மையோர் குளித்தலை, லால்குடி, பெரம்பலூர், முசிறி, மணப்பாறை, துறையூர் ஆகியவட்டங்களில் பரவியுள்ளனர் என்றும், இவர்கள் தொழில் செய்து முன்னேற்றம் அடைந்துள்ளவர்கள் என்றும் இவர்களில் நிலமில்லதோர் ஒரு சிலரே; அப்படிப்பட்டவர்கள் கூட வேறு வருமானமுள்ள தொழில் செய்து வருகின்றனர் என்றும், இவர்கள் சிறுபான்மையோராயினும், தங்களைச் சுற்றியுள்ள இனத்தவர்களை அதிகாரம் செய்யக்கூடிய அளவுக்கு சமுதாயத்தில் மேம்பாடு அடைந்தவர்கள் என்றும், திருச்சி மாவட்டத்தில் வாழும் ''ரெட்டியார்கள்'' ''கம்மபுரி'' என்ற உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் அசைவ உணவு உண்பவர்கள் என்றும், வைஷ்ணவ வழிபாடு செய்பவர்கள் என்றும், இவர்களின் தாய்மொழி தெலுங்கு, விஜயநகர அரசர்களின் காலத்தில் இவர்கள் தமிழ் நாட்டில் குடியேறியிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது என்பது தெரியவந்தது என்றும் தெரிவித்துள்ளனர்,

1979 ஏப்ரல் 30] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ரெட்டிகுல சங்கத்தில் தலைவர் தங்கள் இனத்தவர் ''கொண்டாரெட்டி'' இனத்தவர்தான் என்று கூறினாலும், அதை நிருபிப்பதற்கு ஆதாரமாக ரெட்டியார்கள் உப்பிலியபுரம் தொகுதி பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தவிர வேறு எதுவும் தெரிவிக்கவில்லை; இது ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. இந்த ''ரெட்டியார்'' இனத்தவர்கள் பழங்குடியினரின் குணாதிசயங்களைப் பெற்றிருக்கவில்லை. பதிவேடுகள் விசாரணை மற்றும் கிடைத்த தடயங்களைக் கொண்டு தீர ஆராய்ந்த போது இவர்கள் ''கொண்டாரெட்டி'' இனத்தவரல்ல என்பது விளங்கியது. கடந்த ஒரு ஆண்டு காலமாகத்தான் இவர்கள் தங்களை ''கொண்டா ரெட்டி'' என்று கூறி அரசு சலுகைகளைப் பெற முயன்று வருகின்றனர் என்பதும் இவர்கள் இம்மாவட்டத்தில் உள்ள ஏனைய முற்பட்ட இனத்தவர்களை விட சமுதாய பொருளாதர வளர்ச்சியில் மேம்பட்டுள்ளனர் என்பதும் அறிய வந்தது என்று மாவட்ட அரிசன நல அலுவலர் கூறுகிறார்.

தெலுங்கில் ''கொண்டா'' என்றால் குன்று என்பது பொருள். எனவே ''கொண்டா ரெட்டி'' என்றால் மலையில் வாழ்வோராகவோ அல்லது மலையிலிருந்து வந்தவர்களாகவோ இருத்தல் வேண்டும். இவர்களுக்கு இத்தகைய குணாதிசயங்கள் ஏதும் இல்லை. ''மலையினருகில் வாழ்கிறோம், மலையில் எங்கள் கோயில் உள்ளது'' என்று அவர்கள் கூறுவது உறுதியானதன்று; கற்பனையான காரணம்; இதனை நம்புதலியலாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது தமிழ்நாடு முழுவதிலும் ''கொண்டா ரெட்டி'' இனத்தவர் இருப்பதாக அங்கீகரிப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பதிவேடுகள் இன்றி எவர் வேண்டுமாயினும் தங்களை ''கொண்டா ரெட்டி'' என்று கூறிக்கொள்ளலாம். எனவே சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேறியுள்ள ''ரெட்டியார்''களை ''கொண்டாரெட்டி'' என்னும் பழங்குடியினர் என்று ஏற்றுக் கொள்வது உண்மையாகவே பழங்குடியினராக உள்ளவர்களின் முன்னேற்றத்துக்கு பெரும் தடையாக அமையும். எனவே துறையூர் வட்டத்தில் வாழும் ''ரெட்டியார்கள்'' ''கொண்டா ரெட்டி'' இனத்தவரல்ல, ''கொண்டாரெட்டி'' என்ற இனம் இம்மாவட்டத்தில் இல்லையாகையால் இம்மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டாட்சியர்களுக்கும் ''கொண்டா ரெட்டி'' என்று சான்றிதழ் வழங்க வேண்டாம் என்று ஆணையிடலாம் என்று அவர் கூறியுள்ளார்,

மேற்கண்ட மாவட்ட அரிசன நல அதிகாரியின் அறிக்கையை பரிசீலித்த மாவட்ட ஆட்சியர் ''கொண்டா ரெட்டி''என்ற இனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இல்லை என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொருத்தமட்டில் ''கொண்டா ரெட்டி''

சாதியை பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்றும் அரசுக்கு செயற்குறிப்பு ஒன்று அனுப்பியுள்ளார். அதனை நன்கு ஆராய்ந்து அறிக்கை அனுப்புமாறு மாநில அரிசன மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கோரப்பட்டுள்ளார். அவரது அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அது கிடைத்தவுடன் பரிசீலிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட இனத்தை தாழ்த்தப் பட்டோர் அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது அல்லது நீக்குவது மத்திய அரசின் வரம்பிற்குட்பட்டதாதலால், மத்திய அரசிற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படும்.

''கொண்டா ரெட்டி'' இனமல்லாதோர் இவ்வாறு போலிச் சான்றிதழ் பெற்று வேலை வாய்ப்பு, மற்றும் இதர சலுகைகள் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டால், அப்படிப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் போன்றவை திரும்பப் பெறப்படும். இத்தகையோர் பெற்ற வேலையினின்றும் கூட நீக்கப்படும் நிலை எற்படும். பொய் சான்றிதழ் தந்த அதிகாரியின் மீது, அவர் எந்தத் துறையைச் சார்ந்தவரோ, அந்த துறையின் மூலம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான, தீர்க்கமான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் இறுதி பாராவில் திருச்சி மாவட்டத்தில் குறிப்பாக துறையூரில் கொண்டா ரெட்டி என்ற இனத்தவர் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்று கூறப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில் கொண்டாரெட்டி என்ற சான்றிதழைப் பெற்றவர்கள் சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையையே படித்துக் கொண்டிருக்கிறீர்களா? தாங்கள் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். வி. இராமசாமி : அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்று கடந்த ஆண்டுகளிலே போலி சான்றிதழ்களைக் கண்டுபிடிப்பதற்கும் அவைகளின்மீது நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வழிவகைகளை அறிவிக்க இயலுமா? அந்த சான்றிதழ்களை சற்றும் போனபடி இல்லாத முறையிலே லாப நோக்குடனே அளித்த அதிகாரி துறையூரில் வட்ட ஆட்சியராக இருக்கின்றார், அவரின் பெயரை நான் இந்த மன்றத்திலே சொல்வது நல்லதல்ல, அவர்மீது இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, துறையூர் வட்டத்தில் யார் யார் கொண்டா ரெட்டி என்கின்ற சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால் அதைக் கேட்டறிந்து அதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும். அந்தச் சான்றிதழ்களை எந்த எந்த அதிகாரிகள் வழங்கினார் களோ அவர்கள்மீதும் கண்டிப்பாய் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மலை சாதி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆர். டி. ஓ. சீட்டிலே கொண்டாரெட்டி வகுப்பைச் சேர்ந்தவர் என்று ஒருவர் பொய்யான சான்றிதழைப் பெற்று அந்தப் பதவியில் உள்ளார் என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பொதுவாக அரசின் கவனத்திற்கு வந்தபிறகு தான் அதுபற்றி அரசாங்கம் அறிக்கை கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்யும். மாண்புமிகு உறுப்பினர் யார் யார் எப்படி வாங்கியிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்வார் களானால் அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. இரா. காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அரசு ஆணைப் பதவிகளில் கொண்டாரெட்டி என்று சொல்லி தவறான பொய் சர்டிபிகேட்டைத் தாசில்தார் கொடுத்து அது செல்லாது என்று அரசால் கண்டுபிடிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு தேர்வாணைக் கழகத்தின் மூலமாகத் தேர்வுபெற்ற அந்தப் பதவியிலிருந்து குறிப்பிட்ட நபர் அகற்றப்பட்ட பிறகு அந்த நபர் இப்போது திருச்சியிலே உள்ள இண்டியன் ஓவர்சீஸ் வங்கியில் அதே சர்டிபிகேட்டை வைத்து வேலை பார்ப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் அறிந்திருந்தால் இந்நேரம் நடவடிக்கை எடுத் திருப்பேன். யார் எந்த ஊர் என்ற விவரத்தை உறுப்பினர்கள் சொல்வார்களானால் இந்த அரசாங்கம் கண்டிப்பாய் நடவடிக்கை எடுத்து அவர் வேலை இழக்கச் செய்கின்ற அளவிற்கு துரிதமாகக் காரியம் ஆற்றும்.

திரு. எஸ். வி. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே உறுப்பினர்கள் இப்படிப்பட்ட வரலாறைத்தான் அறிவார்கள், ஆனால் ஒவ்வொன்றையும் அறியமுடியாது. வட்ட ஆட்சியர்கள் கொடுத்த அந்த லிஸ்டை எடுத்துப் பார்த்து அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவா அவர்களே, இன்றே அதைப்பற்றிய விவரம் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

3. தகவல்கோரல் (தொடர்ச்சி).

(ஆ) அமைச்சர் அவர்கள் சொன்னபடி விவர அறிக்கை வைக்கப்படாதது குறித்து.

திரு. ஏ. ஆர், மாரிமுத்து : தலைவர் அவர்களே, ரூல் 41இல் நான் 3-வது அயிட்டமாக கவன ஈர்ப்புப் படித்த போது அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று பதில் சொன்னார்கள், ஆனால் நானும் தேடித் தேடிப் பார்த்தேன், காணோம்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே நான் இங்கே கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புக்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே அவையிலே விவர அறிக்கை வைக்கப் பட்டிருக்கின்றது என்று தவறுதலாகச் சொல்லி விட்டேன், அதற்காக வருத்தப்படுகிறேன். இப்போது அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து (தொடர்ச்சி).

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரினுடைய கடைசி நாள் இன்று. நான் கடந்த மார்ச் மாதம் 1i ஆம் தேதி சென்னை நகரத்திலே கிண்டியை அடுத்த மடுவங்கரை போன்ற பகுதி களிலே குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு மாநகராட்சியின் லாரிகள் குடி தண்ணீர் ஒழுங்காக வினியோகம் செய்யவில்லை என்ற நிலைமையைக்குறித்து நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே கொடுத்து இருந்தேன். ஏறக்குறைய ஒன்றரை மாதம் ஆகிவிட்டது. அந்தக்கவனஈர்ப்புத் தீர்மானம் அவையிலே வந்து பதில் சொல்லப்படவில்லை. இது மாதிரி நிகழ்ச்சி நடந்தால் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கே அர்த்தம் இல்லாமற்போய் விடும். ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, ஒரு கவனஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு அனுப்பப்பட்டால் இத்தனை நாட்களுக்குள் விவர அறிக்கை வர வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லி அமைச்சர்களை நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அமைச்சர்கள் தரப்பிலேயிருந்து பதில் வந்திருக்குமேயானால், வந்திருக்கின்ற பதிலை வைக்க வாய்ப்பு இருக்குமேயானால் அது வைத்திருக் கப்படும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனையோ கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத் தருகிறார்கள். அவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் எடுத்துக் கொண்டு விவாதிப்பது என்றால் மற்ற விவாதங்கள் நடைபெற இயலாது. விதிகளின்படி ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம். தாங்கள் இந்தக் கூட்டத் தொடரில் எவ்வளவு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டிருக் கிறீர்கள் என்ற புள்ளி விவரத்தைத் தந்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று இறுதி நாள். எல்லா விவரங்களையும் அறிவிக்கப் போகிறேன். நீங்கள் எனக்கு இவ்வளவு தூரம் ஒத்துழைப்பு கொடுத்து சுமுகமான இந்த மன்றத்தை நடத்திக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைச் சொல்ல இருக்கிறேன். அப்பொழுது, ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எத்தனை, அவை உரிமைமீறல் பிரச்சினை எத்தனை, கவனஈர்ப்புத் தீர்மானங்கள் எத்தனை என்பதையெல்லாம் பற்றி விளக்கமாக சொல்ல இருக்கிறேன். எனவே, திரு. விஜயராகவன் அவர்களின் கருத்து பதிவேட்டில் இருக்கவேண்டும், அரசின் கவனத்திற்குப் போகவேண்டும் என்பதற்காக அனுமதிக்கிறேனே தவிர, அமைச்சர் சொல்லவில்லை என்ற விவாதப் பொருளாக ஆக்குவதற்காக அல்ல. எனவே, உங்களுடைய பிரச்னையைச் சொல்லுங்கள், அது குறிப்பிலே ஏறட்டும்.

திரு. மு. அம்பிகாபதி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டிலே பிரச்னைகள் அதிகமாக ஆகும் பொழுது கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், ஒத்தி வைப்புத் தீர்மானங்களும் அதிகமாக வருகின்றன. இது இயல்பானதுதான். நீங்கள் அனுமதிக்க வேண்டியதும் உங்கள் பொறுப்பும், கடமையும் உணர்ந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் விதிகளைப் படித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன், நம்முடைய விதிகளில் ஒரு நாளைக்கு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்தான் வர முடியும். ஆனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற கவனஈர்ப்புத் தீர்மானங்களோ 100-க்கும் மேல். அவ்வளவையும் எடுத்துக் கொள்வதற்கான

சாத்தியக்கூறுகள் விதிகளில் இல்லை. வேண்டுமானால், விதிகள் குழுவில் நாளைக்கே இதைத் திருத்திக்கொண்டு வந்து, 10 கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் போட வேண்டுமென்று விதிகளைத் தளர்த்திப் போட்டால் அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கப் போவதில்லை. எனவே, அந்த விளக்கத்திற்குள் தாங்கள் போக வேண்டாம். உங்களுடைய ஒழுங்குப் பிரச்னை என்ன என்பதைச் சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி ; ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு நான் இன்னொன்றையும் சொல்கிறேன். ஏற்கனவே அனுமதி மறுக்கப் பட்ட விஷயத்தைப்பற்றி இப்பொழுது எழுப்பக்கூடாது. இன்றைக்கு அது இன்னும் நடைமுறையில் உயிர் இருக்கிறது என்ற பிரச்னையைப் பற்றித்தான் எழுப்ப வேண்டும். இல்லையென்றால் பிறகு விதி, மரபு கெட்டு விடும், அது விவாதப் பொருளாகி விடும். எனவே, எது எது மறுக்கப்பட்டதோ அதைப்பற்றி இங்கே பேசக் கூடாது. எனவே, உறுப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்தப் பிரச்னையை எழுப்பக்கூடாது, உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பிரச்னை தள்ளப் பட்ட ஒன்று. எனவே, உறுப்பினரவர்கள் பேசிய பேச்சை நீக்கும் படி உத்தரவிடுகிறேன். உறுப்பினரவர்கள் உட்கார வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : ** *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் சுமுகமாகச் சொல்கிறேன், அனுமதி மறுக்கப்பட்டதை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் அது சரியாக இருக்காது.

திரு. மு. அம்பிகாபதி : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விஷயத்தைப்பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) இன்னும் வாய்ப்புகள் மாநிலம் பூராவும் இருக்கிறது. அங்கே பயன்படுத்திக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நானும் அனுதாபப் படுகிறேன். ஆனால் விதிகள் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 30]

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, கடந்த வாரம் பம்பு செட்டில் கரண்ட் லீக்கேஜாகி இரண்டு பெண்களும், நான்கு ஆண்களும் இறந்து விட்டார்கள். அது சம்பந்தமாகக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இது வரையில் வரவில்லை. அடுத்து, சென்னை ஹார்பரில் மூன்று கப்பல்களில் ஆயிரக்கணக்கான டன் சிமெண்டுவந்து கப்பலிலேயே தேங்கியிருக்கிறது. அந்தக் கப்பல்களிலே ஒரு கப்பலிலேயிருக்கும் சிமெண்ட்டை வெளியேற்றுவதற்கே ஒன்றரை மாதம் ஆகி விட்டது. இரண்டு மாதங்களாக அவ்வாறு கப்பல்களில் தேங்கி யிருக்கின்றன. அப்படிக் கடலிலே தங்கியிருக்கின்ற அந்த சிமெண்டைக் கரைக்குக் கொண்டு வந்து சென்னை மாநிலம் முழுவதும் விநியோகம் செய்ய வேண்டும். சிமெண்ட் பற்றாக் குறை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்றுவரையில் அது எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் அனுமதி மறுக்கப்பட்ட ஒன்று. மறுக்கப்படாமல் இன்னும் என் ஆய்வில் இருப்பதைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். திரு. பாலகிருஷ்ணன் பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டம் சின்னமனூர் போலீஸ் நிலையத்தில் ஒச்சா தேவர் பகிரங்கமாக அடித்து சாகடிக்கப்பட்டார் என்று இந்த மன்றத் திலே பேசப்பட்டது. அதுகுறித்து, வருவாய் வாரிய உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் விசாரித்து அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அந்த அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று நானும் மாண்புமிகு அழகர்சாமி அவர்களும் ஒரு குறுகிய கால வினாவை மாண்புமிகு முதலமைச்ச ரிடம் கொடுத்து, அவரும் அதில் கையெழுத்திட்டு, வராமல் ஒரு வாரமாகிறது. அது சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரத்தான் இதை நான் எழுப்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 30

திரு. சோ. அழகர்சாமி : 27-3-1979-ல் தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கறை வட்டம், கொடுக்காரம்பட்டி கிராமத்தில் ஊராட்சி மன்றக் கிணற்றில் தண்ணீர் எடுத்த அரிசனங்களை தடுத்து அடித்ததுடன் அவர்கள் மீது போலீஸ் அடக்கு முறையும் ஏவி விடப்பட்டுள்ளதால் அப்பகுதி அரிசன மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பற்றி மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு 41-வது விதியின் கீழ் 11-4-1979-லே கொடுத்திருக்கிறேன். இதுவரைக்கும் வரவில்லை. அரிசன் தண்ணீர் எடுத்ததற்கு அடித்து வழக்கு போடப்பட்டிருக்கிறது. அதற்கு எந்த பதிலும் வரவில்லை. அதற்குப் பதில் தேவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 'திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுகா, தோட்டாக்குடி பத்தினிப்பாறை கிராமங்களிலுள்ள ஏழை அரிசன விவசாயிகள் அந்தோணி கோஸ்தா என்ற நிலச்சுவானுக்கு பாத்தியப்பட்ட சுமார் 200 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களில் மூன்று தலைமுறைகளாக குத்தகை சாகுபடி செய்து வருகிற இவர்கள் சட்டப்படியுள்ள நியாய வாரம்தான் வாங்க வேண்டுமென நியாயம் கேட்டதற்காக இந்த ஆண்டு குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்திருந்த நெல் மகசூலை நிலச்சுவான்தார் தனது அடியாட்களை வைத்து அறுவடை செய்து கொண்டு செல்ல போலீஸ் உதவியாகயிருந்து குத்தகை விவசாயிகளின் உரிமைகளைப் பறித்து இன்னல்களை ஏற்படுத்தியுள்ளதால் அப்பகுதி மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் போக்கி தங்களுக்குரிய நெல்லை குத்தகை சாகுபடியாளர்களுக்குப் பெற்றுத்தர வேண்டிய அவசரப் பொது முக்கியத்துவமும் பற்றி, 2-4-1979-லேயே கொடுத்தேன். அதுவும் வரவில்லை. அதற்கும் பதில் தேவையென தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுகா, சத்திரம் கள்ளிக்குளம் கிராமத்தில் குத்தகைக்கு சாகுபடி செய்யும் அரிசன விவசாயிகளை நிலச்சுவான்தாரின் அடியாட்கள் சுமார் 100 பேர் பயங்கர ஆயுதங்களுடன் 13–4–1979 அன்று சென்று பயமுறுத்தி சாகுபடியாளர் சாகுபடி செய்த நெல் மூட்டைகளையும் மற்ற பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதால் அப்பகுதி சாகுபடியாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் போக்கி சாகுபடியாளர்களுக்கு அரசு அளிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைக் குறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின் கீழ் 20-4-1979-லே கொடுத்தேன். இதுவரை பதில் இல்லை. அதற்கும் பதில் தேவை என தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 30] [திரு. சோ. அழகர்சாமி]

31-3-1979-ல், பம்ப் செட்டுகளுக்கு சீரான மின்சார விநியோகத்திற்கு ஏற்பாடு இல்லாமல் குறைந்த அளவு சப்ளை வருவதால் பல இடங்களில் மோட்டார்கள் காயல் தீய்ந்து விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருவதை தடுக்க வேண்டும் என்பது குறித்து, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். பதில் இல்லை, அதற்கும் பதில் தேவை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் கையிலே இப்பொழுது 43 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில் தயாராக இருக்கிறது. அதை அச்சடித்து அனுப்பப் போகிறேன். ஆனால், அதெல்லாம் வராமல் இருக்கிறது. நம்முடைய விதிகளுடைய நிலைமைகளுக்கேற்றவாறு, நிகழ்ச்சி நிரலிலே, நான் 43 கவன ஈர்ப்புத் தீர்மானங்களைச் சேர்க்க முடியவில்லை. அதனால்தான், நான், 6, 5, 4 என்று கடந்த 3 நாட்களாக சேர்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள், இப்பொழுது சொல்லிக்கொண்டே போனால் நேரம் ஆகும்.

திரு. சோ. அழகர்சாமி: தள்ளுபடி செய்திருந்தால், எழுப்ப வேண்டாமென்று சொன்னீர்கள், எங்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டியது தலைவர். தொகுதி மக்களுடைய பிரச்னையை ஒரு மாதத்திற்கு முன்பு சொல்லியும், இங்கு கொண்டு வரவில்லையென்றால், எங்களுடைய உரிமை எந்த அளவு பாதிக்கப்படும் என்று தாங்கள்.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பதில் கிடைக்கப் பெற்ற 43 தீர்மானங்களில் இப்பொழுது எழுப்பப்படுவதும் ஒன்று. தாங்கள் அவருக்கு அச்சடித்துத் தர இருக்கின்ற காரணத்தால், அவர் அதை விட்டுவிட்டு, வேறு பிரச்னைக்குப் போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி பதில் எப்படி வரும். என்னிடம் வந்த பிறகு, நான் அஜண்டாவிலே சேர்க்கவேண்டும். நான் அனுமதி கொடுத்து, பதில் வந்த கவன கர்ப்புத் தீர்மானங்கள் 43 இருக்கின்றன. அதை விட்டுவிட்டு, வேறு ஏதாவது இருந்தால் சொல்லலாம்,

(முற்பகல் 10-30.)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னால், அவசரமான காரியத்திற்காக கொண்டு வரப்படுவது. அப்படிப்பட்டவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள்ளேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய பதிலைப் பெற்று சபையில் வைக்கப்பட வேண்டும். அப்படி வைக்கவில்லை என்றால் அது என்ன பிர்

வாகம் என்றுதான் கேட்கிறேன், நான் என்ன நேற்றைக்கு கொடுத்தேனா, முந்தாநாள் கொடுத்தேனா? கொடுத்து பதினைந்து இருபது நாள் ஆகிவிட்டது இன்னும் பதில் இல்லை என்று சொன்னால் என்ன நிர்வாகம். வேறு ஏதேதோ அவசரமில்லாத காரியங்களுக்கெல்லாம் பதில் சொல்லப்படுகிறது. இது எவ்வளவு முக்கியமானது? ஒரு ஹரிஜன் தண்ணீர் எடுத்தான் என்ற காரணத்திற்காக அடிக்கப்பட்டிருக்கிறான், இது அவசரமாகத் தெரியவில்லையா, அவசரமில்லாத காரியத்திற்கெல்லாம் பதில் அளிக்கிறீர்கள், ஆனால் அவசரமான இப்படிப்பட்ட காரியங்களுக்கு பதில் இல்லை....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அவசரமில்லாததற்கு பதில் வருகிறது என்று சொன்னார்கள், அந்தந்த உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிப்பிரச்னைகளை சொல்கிறபோது அவரவர்களுக்கு அது அவசரமானதுதான். அது அவசரமானதுதானா இல்லையா என்பதை எப்படி தீர்மானிக்கிறது? அதற்கு என்ன யார்ட்-ஸ்டிக் வைத்திருக்கிறது: அந்தந்த உறுப்பினர்கள் சொல்கிறபோது அது அவசரமானது என்றுதான் சொல்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டுமல்ல அழகர்சாமி, நீங்கள் அதை சொல்லிக் கொண்டே போனால் மேலும் 5 நிமிடங்கள் ஆகும், என்னிடம் 43 ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள் தயாராக இருக்கின்றன. அவைகளை நான் அச்சடித்து உங்களுக்கு அனுப்பிவிடுகிறேன். என்னென்ன தயாராக இருக்கிறது என்று படித்துவிடுகிறேன். அதில் இல்லாத விஷயங்களை வேண்டுமானால் எழுப்புங்கள்....

திரு. சோ. அழகர்சாமி : என்னிடம் இன்னும் இரண்டுதான் இருக்கிறது அதை சொல்லி முடித்துவிடுகிறேனே. அடுத்து தலைவர் அவர்களே, காக்குநாடம் பட்டியிலும் விவசாயிகளுக்குச் சொந்தமான.....

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(இ) உறுப்பினர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 2 இருக்கலாம். ஆனால் மற்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள் அல்லவா. உங்கள் முறையையே அவர்களும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டால் எப்படி? அதனால் தயவுசெய்து அமருங்கள், நான் அந்த 43

கவன ஈர்ப்பு தீர்மானங்களையும் படித்து விடுகிறேன், அதில் இல்லாதது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள், நேரத்தை வீணாக்க வேண்டாம்.

1. திரு. துரைமுத்துசாமி.. தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் அடா குறித்து—பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

2. திரு. கே. சௌந்தர ராஜன்.. திருச்சி நகர்ப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

3. திரு. க. நாச்சிமுத்து.. பெங்களூர் தொகுதியைச் சேர்ந்த எஸ்.பி. வடுகபாளையம், குடிநீர் தட்டுபாடு குறித்து—அச்சடித்து தரப்படும்.

4. திரு. இரெ. இராச மாணிக்கம்.. காவிரி ஆற்றில் பாலம் இடிந்துள்ளது குறித்து—பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

5. திரு. வ. துலுக்காணம்.. சூளாங்குறிச்சி அணைக்கட்டு மதகுகள் குறித்து—பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

6. திரு. து. புருடோத்தமன்.. திருமழிசை டாசல் செங்கல் தொழிற்சாலை குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

7. திருவாளர்கள் க. கந்தசாமி டி.பி. பெரியசாமி.. சோழவந்தான் பஸ் விபத்து குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

8. திரு. கே. பண்ணை சேதுராம்.. தென்னாற்காடு, வடாற்காடு பகுதிகளில் நிலக்கடலை எண்ணை விலை குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.

9. திரு. பெ. சு. திருவேங்கடம் .. கிராம கைத்தொழில் வாரிய கடன் வேலையில்லா பட்டதாரிகளுக்கு வழங்குவது குறித்து -பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து அனுப்பப்படும்.

10. திருவாளர்கள் க. அரங்கசாமி கே. உச்சி .. குன்னூர் வி. பி. தெருவில் வெள்ளத் தடுப்புப் பணி நடப்பது குறித்து— பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து அனுப்பப்படும்.

11. திரு. கே. உச்சி .. நீலகிரி மாவட்டத்தில் விளைந்துள்ள உருளைக்கிழங்கு குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து அனுப்பப்படும்.

12. திரு. எஸ். வி. இராமசாமி .. திருச்சி மாவட்டம் கிருஷ்ணபுரம் வெண்பாலூர் நெடுஞ்சாலை அருகில் உள்ள அரிஜன குடியிருப்பு குறித்து.

13. திருவாளர்கள்
தி.சு. நல்லதம்பி
இரா. தாமரைக்கனி
சின்னசேலம் மா. சுப்பிரமணியம்
எம். ஆறுமுகம்
கே. பண்ணை சேதுராம்
.. சென்னை நேரு விளையாட்டுத்திடல் குறித்து-பதில் தயாராக இருக்கிறது.

14. திருவாளர்கள் திருப்பூர் மணிமாறன் கே. பண்ணை சேதுராம் .. சென்னை வாழைப்பழ அபிவிருத்திக் கழக இடமாற்றம் குறித்து— பதில் தயாராக இருக்கிறது.

15. திரு. ப. பொன்னுரங்கம் .. சிவில் சப்ளை ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்து— பதில் தயாராக இருக்கிறது,

16. திரு. பி. சுந்தரம் .. வடஆற்காடு மாவட்டம், பாப்பனூர் தீ விபத்து குறித்து பதில் தயாராக இருக்கிறது.

1979 ஏப்ரல் 30] [பேரவைத்தலைவர்]

17. திரு. எச். ஜி. ஆறுமுகம். .தர்மபுரி மாவட்டம் சேர்வராயன் மலைப்பகுதியில் மலைப்பன்றிகள் விவசாய விளைவுகளை அழித்து வருவது குறித்து-பதில் தயாராக இருக்கிறது.

18. திரு. தி. சு. நல்லதம்பி ..சென்னை 111—வது வட்டபாலம் மழையால் பாதிக்கப் பட்டுள்ளது குறித்து-பதில் தயாராக இருக்கிறது.

19. திருவாளர்கள் கே. உச்சி. ஆ. நடராஜன் ..நீலகிரி மாவட்ட இந்துஸ்தான் போட்டோ நிறுவனம் கதவடைப்பு செய்வது குறித்து-பதில் தயாராக இருக்கிறது.

20. திருவாளர்கள் ஆர். உமாநாத், என். வரதராஜன், ஆர். கிருஷ்ணன், பி. சொரணம், நா. சுந்தரராஜ், இரா. தாமரைக்கனி ..சங்கர் சால்வன்ட் ஆயில் மில்ஸ் குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்துத் அனுப்பப்படும்.

21. திருவாளர்கள் ஆர். கிருஷ்ணன், என். பழனிவேல், சி. கோவிந்தராஜன் ..புளியங்குடி நகராட்சியில் தட்டச்சு பணியாளர் நியமனம் குறித்து—பதில் தயாராக இருக்கிறது அச்சடித்து அனுப்பப்படும்.

22. திரு வ. துலுக்காணம் ..உளுந்தூர்பேட்டை தொகுதி கூத்தனூர் கிராம தீ விபத்து குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து அனுப்பப்படும்.

23. திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், எம். அண்ணாமலை, ஆர். கிருஷ்ணன், ஆர். வெங்கிடு, என். பழனிவேல் ..வடஆற்காடு மாவட்டம் மேல் செங்கத்தில் உள்ள மத்திய மாநில விவசாய பண்ணை குறித்து—பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்,

24. திரு. பெ.சு. திருவேங்கடம் ..திருவண்ணாமலைப் பகுதியில் விவசாயிகளுக்கு மின் மோட்டார் வாங்கிய பின்பும் மின் இணைப்பு தராதது குறித்து—பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து அனுப்பப்படும்.

25.	திரு. மா. மணிமாறன்	.. தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யும் எப். சி. ஐ. நிறுவனம்—குறித்து பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்துத் தரப்படும்.
26.	திரு. இரா. இராஜமாணிக்கம்	.. மாயவரம் கோட்டம் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்காதது குறித்து-பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்து தரப்படும்.
27.	திருவாளர்கள் சோ. அழகர்சாமி மு. அம்பிகாபதி செ. சிவசாமி பொ. உத்திராபதி	.. மின் மோட்டார்களுக்கு சீரான மின் வனியோகம் இல்லாததால் மின்மோட்டார்களின் காயில்கள் தீய்ந்து போவது குறித்து.
28.	திரு. பொ. கோபாலன்	.. நீலகிரியில் புயல் நிவாரண வேலைகள் 31.3.79 அன்றோடு முடிவு பெறுவது குறித்து.
29.	திரு. எம். பரமசிவம்	.. திண்டிவனம் வட்டம் மரக்காணம் பகுதியில் மணிலா பயிர்களில் விஷப்பூச்சி பரவி வருவது குறித்து.
30.	திரு. க. சுப்பு	.. துணை புள்ளிஇயல் இயக்குநர் அலுவலகத்தில் நடந்த கட்டாய வசூல் குறித்து.
31.	திரு. எச். ஜி. ஆறுமுகம் திரு. கே. ஆர். சின்னராசு	.. தர்மபுரி மாவட்டம் ஆரூர் நகர பேரூராட்சி வீடுகளுக்கு உயர்த்தியுள்ள வரி குறித்து.
32.	திரு. ந. சுந்தரராஜ்	.. புதுக்கோட்டை மாவட்டம் பொன் அமராவதி ஒன்றிய பொது வைப்பு நிதி திரும்ப கிடைக்காமை குறித்து.
33.	திரு. மா. மணிமாறன்	.. திருச்சி மாவட்டம் தேவராயன் ஏரி கலவரம் குறித்து.
34.	திரு. கோ. தனுஷ்கோடி திரு இரா. தாமரைக்கனி	.. சிவகாசி திருத்தங்கல் கிராம காலனி தீ விபத்து குறித்து.
35	திருவாளர்கள் கே. சௌந்திரராஜன் மா. மணிமாறன்	.. திருச்சி மாவட்டம், வரகனேரி கலவரம் குறித்து.

1979 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

36.	திருவாளர்கள் ஆர். கிருஷ்ணன் ஆர். உமாநாத் பி. சொரணம்	.. தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். பயிற்சிகள் பல இடங்களில் நடந்து வருவது குறித்து.
37.	திரு பெ. சு. திருவேங்கடம்	.. கலசப்பாக்கம், வன்னியனூர் தீ விபத்து குறித்து.
38.	திரு பெ. சு. திருவேங்கடம்	.. வட ஆற்காடு மாவட்டம் புதுப்பாளையம் மின் வாரியம் மின் இணைப்பு 14-3-79 முதல் துண்டிப்பு செய்திருப்பது குறித்து.
39.	திரு. க. நாச்சிமுத்து	.. பெங்களூர் வட்டம் கள்ளிப் பாளையம் கிராம குடிநீர் தட்டுப்பாடு குறித்து.
40.	திருவாளர்கள் எம். அண்ணாமலை என். சங்கரய்யா எஸ். வரதராஜன் என். பழனிவேல் ஆர். வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்	சேலம் மாவட்டம் மேட்டூர் கெம்பிளாஸ்ட் கழிவு நீர் குறித்து.
41.	திரு. பி. இராமதாஸ்	.. மதுரை மாவட்டம் பெரியார் பாசன பகுதிகளுக்கு நீர் விஸ்தரிப்பு செய்வது குறித்து.
42.	திரு. டி. இராமசாமி	.. பாம்பன் பாலம் கட்டுமான வேலை நிறுத்தப்பட்டிருப்பது குறித்து.
43.	திருவாளர்கள் எம். அண்ணாமலை ஆர். கிருஷ்ணன் வி. கே. கோதண்டராமன் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் என். பழனிவேல் எஸ். சிவசாமி எஸ். அழகர்சாமி பொ. உத்திராபதி சேலம் மு. ஆறுமுகம் மா. மணிமாறன்	.. தர்மபுரி மாவட்டம் கொடுக் காரன்பட்டியில் அரிசன நபர் ஒருவர் அடித்துக் கொல்லப் பட்டது குறித்து.

இத்தனை கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் பதில் தயாராக இருக்கிறது. அச்சடித்துத் தரப்படும். இதனைத் தவிர வேறு ஏதாவது இருந்தால் கேட்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே நான் 42-வது விதியின் கீழ் சுற்றுலா வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன். அதை தாங்கள் 41-வது விதியின்கீழ் மாற்றி விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து அமைச்சர் பேரவையில் அறிக்கை கொடுத்து விட்டார். அதனால் இதில் வரவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : அதற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம் நான் கொடுத்து இருக்கிறேன். அங்கே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முறை இங்கே அனுமதிக்கப்பட்டபிறகு, அது வேண்டுமா வேண்டாமா என்பது குறித்து நான் உத்தரவிட்டபிறகு, நீங்கள் என்னை நிர்பந்திக்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, 9-4-79 அன்று திரு. காயமாணிக்கம் அம்பலம் அவர்களும், நானும் 41-வது விதியின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், தேவக் கோட்டை, சிறுகை கிராம கண்மாய் பாசன வசதி கெட்டுப் போய் இருப்பது குறித்து ஒரு தீர்மானம் கொடுத்து இருந்தோம். அது மிகவும் முக்கியமான பிரச்னை, அது சம்பந்தமாக பதில் வரவில்லை. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசின் தரப்பிலிருந்து பதில் வந்த பின்னால், அச்சடித்து உறுப்பினர்களுக்குத் தரப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் 184-வது விதியின்கீழ் ஒரு உரிமை மீறல் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என் அறையிலே தள்ளிவிட்டேன். தயவு செய்து, அது குறித்து இங்கே கேட்பது சரியல்ல. அதை அனுமதிக்க நான் தயாராக இல்லை. இப்போது, கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து கேட்கத்தான் நான் அனுமதி அளித்து இருக்கிறேன். ஏனென்றால், அது மக்களுக்கு பயன்பட வேண்டும் என்கிற எண்ணத்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

1979 ஏப்ரல் 30]

திரு. ஜே. ஜேம்ஸ் : அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற தகவல் எனக்கு வரவில்லை. தங்களுடைய முடிவு தெரிவிக்கப்பட்டு இருக்குமானால், அதில் என்ன காரணம் என்று சொல்லியிருப்பீர்கள். இதுவரையில் அது எனக்கு வராததால் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலேயே தள்ளி விட்டேன் என்று சொன்னேன். இப்போது தான் அதற்கு கையொப்பம் இட்டுவிட்டு வந்தேன். அதில் நான் என்ன காரணம் சொல்லி தள்ளியிருந்தாலும், அது குறித்து தாங்கள் இங்கே எழுப்புவது சரியல்ல. அப்படி கேட்பதற்கு விதிகளில் இடம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் மறுப்பதும், அனுமதிப்பதும் உங்களுடைய இஷ்டம் ப்ரெரராகடிவ். ஆனால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேல் நான் அனுமதிக்க முடியாது. ஏற்கனவே சொல்லிவிட்டேன். இப்போது தான் கையொப்பம் இட்டுவிட்டு வந்து இருக்கிறேன் என்று. இதைப் பற்றி பேசக்கூடாது.

[முற்பகல் 10-40]

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் இந்தத் தீர்மானத்தின்மீது ஆதாரம் கேட்டீர்கள். அரசாங்கத்திற்கு அது சம்பந்தப்பட்டவை களுக்கு 'ட்ரூ காப்பி' கொடுத்தோம். அதற்குப் பிறகு 'ப்ரைமா ஃபேசி கேஸ், இல்லை என்றுசொல்லி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பை களங்கப்படுத்தும் முறையில் நீங்கள் பேசுவதை அனுமதிக்க முடியாது. நான் முடிவு எடுத்தது எடுத்ததுதான்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மேலவையில் அமர்ந்து பார்ப்பதற்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று ஒரு பிரச்சனையைக் கொண்டு வந்தேன். மேலவைத் தலைவருடன் கலந்துபேசி, ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தீர்கள். ஆனால் இன்றுவரையில் அதற்கு ஏற்பாடு செய்ததாகத் தெரியவில்லை. அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவைத் தலைவருடன் பேசி முடிவு செய்கிறேன் என்று சொன்னேன். என்னை அவையிலே வைத்திருக்கிறீர்கள்; பேச நேரம் இல்லை. நாளையிலிருந்து பேசி, ஏற்பாடு செய்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராசன் : நான் குறிப்பிட விரும்புவது குறுகிய கால வினா பற்றியது. 4, 5 குறுகிய கால வினாக்கள் நான் கொடுத்திருக்கிறேன். அவை எல்லாம் மிகவும் முக்கிய மானவை. குறிப்பிட்ட காலத்திற்குள் அவை வரவேண்டும். ஆனால் எப்போது வரும் என்று தெரியவில்லை.

அவைகளில் மிகவும் முக்கியமானது மைலம் மடத்தைப் பற்றியது. தெ. ஆ. மாவட்டம் மைலம் மடத்திற்கு அரசால் இனாமாக கொடுக்கப்பட்ட நிலத்தை அம்மடத்தில் தற்போதுள்ள பாலையசாமி அவர்கள் பிரித்து, தன்னுடைய மனைவி, மகன்கள், மகள்களின் பெயரில் எழுதிவைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். அதுபற்றி கிளர்ச்சி நடந்திருக்கிறது. மேலும் பாலைய சாமிகள், மைலம் கோயிலுக்காக எழுதி வைத்த நிலங்களை தன்னுடைய மூதாதையர்களின் சமாதிக்குச் சொந்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அதுபற்றி பிரச்சனை எழும்போது, அவர்களை மிரட்டி, பயமுறுத்தும் சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர் அறநிலையத் துறை அதிகாரிகளை தன்னுடைய கைக்குள்ளே போட்டுக்கொண்டு, இந்தப் பிரச்சனை வெளியே வராமல் தடுத்துக்கொண்டிருக்கிறார். நான் கொடுத்துள்ள குறுகிய கால வினாவுக்கு நோட்டீஸ் "waive" செய்து அறநிலைய அமைச்சர் அவர்களும் கையெழுத் திட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய குறுகிய கால வினாவைப் பற்றி இரண்டு வரிகளிலே கேட்டுவிட்டு உட்காரலாம். விளக்கம் தேவையில்லை.

திரு. சி. கோவிந்தராசன் ; நோட்டீஸ் கொடுத்தவுடனேயே இப்படிப்பட்ட பிரச்சனைகளை எடுத்துக்கொள்ள வேண்டும், இல்லை என்றால், அந்தப் பிரச்சனையை எழுப்ப முடியாத அளவுக்கு போய், காலம் தாழ்த்தி எடுத்துக்கொண்டால் அது அர்த்தம் இல்லாமல் போய்விடும். அதை எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, சென்னை மாநகரில் பேருந்தின் 'ஃபுட்போர்டில்' நின்று பயணம் செய்த இரண்டுபேர் இறந்து விட்டார்கள். அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன்; இதுவரையில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்தவுடன் அனுப்பி வைக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, இன்னொன்று. சேலம் மாவட்டம் எருமை நாயக்கன்பட்டியில் * * * இருக்கிறது. அதுபற்றி...

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங் அகற்றப்பெற்றது.

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகளை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அது ''ரூல் அவுட்'' செய்யப் பட்டிருக்கிறது. அதுபற்றி ஏற்கெனவே தகவல் தெரிவிக்கப் பட்டிருக்கிறது,

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், பள்ளப்பட்டி... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அங்கே நிலைமைகள் சுமுகமாக இருக்க ஏற்பாடு செய்து வருகிறோம்; ஆகவே, அதை பெரிதாக்க வேண்டாம் என்று திரு. சிவகாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : நிலைமை சாதாரணமாக இல்லை. இன்றைக்குக் காலையில் அங்கிருந்து ஆள் வந்திருக்கிறது. நான் அதன் விவரத்திற்குள் போகவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருந்தாலும் அனுமதிக்க முடியாது. சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது; அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : அங்கே சிறுபான்மையோர் தாக்கப் பட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய கடைகள் சூறையாடப் பட்டிருக்கின்றன. அதையெல்லாம் நம்பாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்வதை நம்பிவிட்டால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொல்வதை நீங்கள் நம்பவில்லை என்று சொல்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் சொல்வதை நான் நம்ப வேண்டுமா ? அவர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்.

திரு. எம். ஏ. லத்தீப் : எனக்கு அதில் அக்கறை இல்லையா? அவர் சொன்னதை கேட்டீர்கள்; நான் சொல்வதையும் கேளுங்கள். அது சம்பந்தமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்களுக்கு நான் சொல்வது, இந்தப் பிரச்சனையைப் பெரிதாக்க வேண்டாம் என்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

திரு. எம். ஏ. லத்தீப் ; இன்று காலையில்கூட அவரிடம் நான் சொன்னேன். நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி அவரிடம் சொன்னேன். அப்போது அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. தங்களிடம் சொன்னதை என்னிடம் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தில் என்ன கொடுத்திருக்கிறீர்களோ அதை மட்டும் படிக்க அனுமதிக்கிறேன்; விரிவாக எதையும் சொல்லக்கூடாது.

THIRU M. A. LATHEEF : I have given notice of the following adjournment motion :

"Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move that the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance—

"As a sequel to the last week bundh by the agriculturists the anti-social and anti-minority elements have been indulging in acts of arson, looting and incendiarism in Pallapatti Town in Karur Taluk of the Tiruchy District for the past three or four days and thereby causing great threat to lives and properties of the minority Muslims and the implications arising therefrom."

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்வது ரொம்பவும் முக்கியமான ஒரு பிரச்சினை. நாட்டிலே இன்றைக்கு சிலைகளை எல்லாம் களவாண்டு கொண்டிருக்கிறார்கள். அரசின் முத்திரை சின்னத்தைக் கூட களவாண்டு கொண்டிருக்கிறார்கள். என்னுடைய ஊராகிய ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது கவன ஈர்ப்புத் தீர்மானமா அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமா?

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நான் சொல்லவருவது என்னவென்றால் ஏதோ சின்னப் பிள்ளைக்கு மிட்டாய்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற பிரச்சினைகள் குறித்து எல்லாம் பேசக்கூடாது. அவைக்குக் கொடுக்கப்பட்டு அதற்கு பதில் வராவிட்டால்தான் அந்தப் பிரச்சினை குறித்து கேட்கவேண்டும்.

[1979 ஏப்ரல் 30]

திரு. செ. மெ. ராஜு : தலைவரவர்களே, நான் 41ஆவது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதாவது சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், உலிபுரத்திலுள்ள அரிசனக் காலனியில் 80 வீடுகள் எரிந்துவிட்டதால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து கொடுத்திருந்தேன். அதுபற்றி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து பதில் வந்தவுடன் அறிக்கை தரப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நான் விதி 41–ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். சிவகாசி பக்கத்திலே காக்கிவேடம்பட்டி கிராமத்தில் ஒரு தீப்பெட்டி ஆபீஸுக்குச் சொந்தமான பஸ் ஒரு வீட்டின் மீது மோதியதில் இரண்டு பெண்கள் இறந்துபோனார்கள். அது குறித்து நான் கொடுத்த தீர்மானத்திற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

திரு. சோ. அழகர்சாமி : "டிஸ்அலவ்" பண்ணி எனக்கு பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "டிஸ்அலவ்" பண்ணியாகி விட்டது.

திரு. சோ. அழகர்சாமி : வேறு ஒன்று கேட்க விரும்பு கிறேன். அதற்காவது அனுமதி தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததற்கு அனுமதி வேண்டுமானால் தருகிறேன். ஆனால் இப்படி ஒருவரே ஒன்றன் பின் ஒன்றாக கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? சரி கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நான் 42ஆவது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன், சிவகாசிக்குப் பக்கத்திலே கல்லமநாயக்கன்பட்டி கிராமத்திலே எந்தவிதமான போராட்டத்திற்கும் போகாமல் வீட்டுக்கு பக்கத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15 மாட்டுவண்டிகளை அடித்து நொறுக்கி கிட்டத்தட்ட 20 ஆயிரம் வரைக்கும் சேதம்ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து தீர்மானம் கொடுத்திருந்தேன். அது குறித்து. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் பதில் அனுப்பப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, ஒரு மாத காலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மாத காலம் என்று ஆரம்பித்து நீண்ட நேரம் பேசுவதற்கு நேரம் இல்லை. சுருக்க மாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேச ஆரம்பிக்கும் போதே தடுக்கின்றீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தடுக்கவில்லை, சுருக்க மாகக் கேட்கவேண்டுமென்று சொல்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் ரூல் 42—லே ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42—லே கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் பெண்டிங்கிலே இல்லை, மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் கொடுத்ததைத் தவிர.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் விதி 41—லே கொடுத்திருந்தேன். ஆனால் தாங்கள் 42—லே சேர்த்துக்கொள்வதாகக் கூறினீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஆர்டர்ஸ் வந்ததா ? ஆர்டர்ஸ் வரவில்லை என்றால் உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை 42—ஆக மாற்றுகிறேன் என்று உங்களுக்கு ஆர்டர்ஸ் ஒன்றும் வரவில்லை, அப்படி ஒன்றும் உங்களுக்கு எழுத்து மூலமாக வரவில்லை, ஆகவே உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, அறைக்கு வரச்சொல்லி வாயின் மூலமாக சொல்லப்பட்டிருக் கிறது. திருவண்ணாமலையிலிருந்து போளூர் நோக்கி போய்க் கொண்டிருந்த ஒரு தனியார் பஸ்ஸிலே ஆக்சிடென்ட் ஏற்பட்டு 13 பேர் செத்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சி பற்றி கேட்கக் கூடாது என்று சொல்லி இருக்கின்றார். இது என்ன அன்றா டம் நடக்கின்ற நிகழ்ச்சியா ? அப்படி என்றால் தினமும் இந்த மாதிரி செத்துக்கொண்டிருக்க வேண்டுமா ? இந்த மாதிரி ஆக்சி டென்ட் நடந்திருக்கின்றது. அதற்குப் பிறகு வேறு சில ஆக்சிடென்டுகளும்....

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லிவிட்டீர்கள், அதற்குப் பிறகு என்று எல்லாம் போகவேண்டாம். இந்தப் பிரச்சினை குறித்து துறையிடம் இருந்து பதில் வந்தவுடன் அது குறித்து தகவல் அனுப்பப்படும். உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே ஏதாவது எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டு அதற்கு பதில் ஏதும் கிடைக்காமல் இருந்தால்தான் எழுப்பவேண்டும். புதிய பிரச்சினைகளை எழுப்பக்கூடாது. ஆகவே திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நான் விதி 42—ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதாவது பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில்லில் 24-4-1979—ம் தேதி பணியாற்றிக்கொண்டிருந்த சீனிவாசன், நடராஜன் ஆகிய ஊழியர்கள் தக்க பாதுகாப்பு இல்லாமல் இருந்த காரணத்தினால் இயந்திரத்தில் சிக்கி மாண்டுவிட்டதால் அப்பகுதியில் உள்ள தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து நான் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

[முற்பகல் 10-50]

அதேபோன்று சேலம் மாவட்டம் சேலம் டால்மியா மேக்னீசைட் சுரங்கத்தில் 18-4-1979-ல் சுரங்கம் இடிந்து மண்மூடி ஒருதொழிலாளி இறந்துள்ளதாலும் இரண்டுதொழிலாளர்கள் கால்முறிவு ஏற்பட்டதாலும் அப்பகுதியில்ஏற்பட்டுள்ளபதட்ட நிலைக் குறித்து. மற்றொன்று, சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் திண்ணப்பட்டியில் ஒருஅரிசன் அடித்துக்கொல்லப்பட்டுள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைக் குறித்து. நான் இந்தத் தீர்மானத்தை அரசின் பரிசீலனைக்காக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குப் பதில் அச்சிட்டுத் தங்களுக்கு அனுப்பப்படும்.

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கே. சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, திருச்சி நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது குறித்து 41-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்தக் கேள்வியைப் படித்தேன். ஆவன செய்யப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, காரைமடை பகுதியில் ஒரு பிரசித்தி பெற்ற சந்தை இருக்கிறது. அந்தச் சந்தையில் இருந்துதான் நீலகிரி மாவட்டத்திற்கு காய்கறிகள் செல்லவேண்டும். அப்பேர்ப்பட்ட சந்தை 2 அல்லது 3 வாரங்களாக மூடிக்கிடக்கின்றது. அதைப்பற்றி சர்வக் கட்சியைச் சார்ந்தவர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள். நான் 41-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு பதில் கிடைத்தவுடன் அது அச்சடித்து தங்களுக்கு அனுப்பப்படும்.

திரு. கே. சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஒரு குறுகிய கால வினா நான் கொடுத்திருந்தேன். ராணுவத்தில் இருந்து ஓய்வுப் பெற்றவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசும் மாநில அரசும்ஒரு ஆணை பிறப்பித்து இருப்பதாக நான் அறிகிறேன். அமைச்சர் அவர்களும் அதைப் பற்றிக் கவனிப்பதாகச் சொன்னார்கள். இன்றுவரை அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்தவுடன். அச்சிட்டு உங்களுக்கு அனுப்பப்படும்.

5. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) நகர்ப்புற நிலவரிச் சட்ட திருத்தம் குறித்து

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவில் (2) உட்பிரிவைச் சேந்த (b) பகுதியைச் சேர்ந்த வெளியிடப்பட விருக்கும் கீழ்க்காணும் வரைவு அறிவிப்பிற்கு மேற்படி பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம் .''

1979 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வரைவு அறிவிப்பு

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சார்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், இந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து மேற் சொன்ன சட்டம், ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையில் 29—11—1978 அன்று வெளியாகி 29—11—1978-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ், பாகம் II—பிரிவு 2-ல் 670-வது பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/RUL/6291/78-ஆம் எண் அறிவிப்பின்படி, கோயம்புத்தூர் நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிட்ட பகுதிகளில் செயலுக்கு வரத் தொடங்கும் என்று இதனால் கட்டளை யிடுகிறார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

(ஆ) மைய அரசின் வணிக அமைச்சகம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை திருத்த கோரியுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஏற்றுமதி செய்யப்படக்கூடிய பொருள்களின் மீது மாநில அரசுகள் வாங்கும் வரி/விற்பனை வரி விதிப்பதை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ளதாக இந்தப் பேரவைக்குத் தெரிய வருகிறது. மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்க அரசியலமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டால், மாநில அரசின் வருவாய் அளவும், கூட்டாட்சி நிதியமைப்பின் கீழுள்ள மாநில அரசுகளின் வரிவிதிக்கும் அதிகார வரம்பும் பெருமள விற்குப் பாதிக்கப்படுமாதலால், இது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவப்பதோடு, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ள அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்திய அரசினை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது''.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை சொல்லுகிறேன். விற்பனை வரி என்பது மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது, அரசியல் சாசனப்படி விற்பனை வரி விதிக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. இதில் மத்திய அரசு தலையிடக்கூடாது என்பது தான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இப்போது குறிப்பிட்ட மாநிலங்களிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பொருட்களுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டாலும், அது தேவையில்லை என்று சொன்னால், அதன் மீது முடிவு செய்கின்ற அதிகாரம் மாநிலத்தைச் சார்ந்தது. அப்படியில்லாமல் ஏற்றுமதி செய்யக்கூடிய எந்தப்பொருளாக இருந்தாலும் விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருமானால் அது மாநில அரசின் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்வதற்கு ஒப்பமாக இருக்கும். ஆகவே தான் நான் இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

சில சமயங்களில் விற்பனை வரி போடுவதின் மூலமாக வெளி நாடுகளில் ஏற்றுமதி செய்கின்ற பொருட்களுக்கு கிராக்கி குறையும் என்று மத்திய அரசு கருதுமானால், அதை வாய் மொழி மூலம், ஒருவருக்கொருவர் கலந்து பேசி, இந்த வரி விதிக்கவேண்டாமென்று கூறுவதற்கு மத்திய அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. அப்படி கூறுகின்ற நேரத்தில் இல்லை. போடத் தான் போகின்றோம் என்று எந்த மாநிலத்திலுள்ளவர்களும் சொல்ல மாட்டார்கள். இது தான் நடைமுறையிலும் இருந்து வருகிறது. இதற்கு மாறாக அரசியல் சட்டத்தையே திருத்தி மாநில அரசு விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று சொல்வது மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் மத்திய அரசு புகுந்து—என்க்ரோச்—செய்து—அதிகாரத்தை தங்கள் கையில் எடுத்துக் கொள்வதற்கு ஒப்பாக இருக்கும். ஆகவே இந்தத் தீர்மானம் அவசியமானது. மத்திய அரசு, மாநில அரசு விற்பனை வரி போடுவதை தடை செய்யக்கூடாது. உள்நாட்டிலே விற்பனையாகின்ற பொருளாக இருந்தாலும் சரி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பொருளாக இருந்தாலும் சரி, அதன் மீது விற்பனை வரி போடுகின்ற அதிகாரம் மாநில அரசுக்குத் தான் இருக்கவேண்டும். அப்போது தான் மாநில அரசுக்கு எந்தவிதமான கஷ்டங்களும் ஏற்படாமல் இருக்கும். அது மட்டுமல்ல. மத்திய அரசு எக்சைஸ் ட்யூட்டி போடுகிறது. எக்ஸ்போர்ட் ட்யூட்டி போடுகிறது. நிச்சயமாக கிராக்கி குறைந்து விடும் என்ற எண்ணம் ஏற்படுமானால் இந்த எக்ஸைஸ் ட்யூட்டியை குறைத்துக்கொள்ளலாம். அதற்குப் பதிலாக ஏகபோகமாக இந்தியா பூராவிலும் ஏற்றுமதியாகின்ற பொருட்களுக்கு மாநில அரசுகள் விற்பனை வரி போடக்கூடாது என்று சொல்வது

நியாயத்திற்கு புறம்பானது. இன்னொன்றையும் நாம் இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளவேண்டும். வெளிநாடுகளுக்கு மட்டுமில்லாமல், மாநிலத்திற்கு மாநிலம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கின்ற நிலைமையும் இப்போதுஇருக்கிறது. இப்போது பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு எல்லாம் ஏற்றுமதிசெய்யக்கூடிய பொருட்களுக்கும் இந்த இட்டங்கள் சேரும் என்கின்ற நிலையை கொண்டு வரலாம். ஆகவே அந்த வகையில் ஒரு அரசியல் சட்ட திருத்தம் வருமானால் இதற்கான சாத்தியக் கூறுகள் வரலாம். அந்த வகையில் வியாக்கியானம் செய்யக்கூடிய நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே இதற்காக அரசியல் சட்ட திருத்தம் கொண்டுவர முயற்சிப்பது தவறானது. ஆகவே அவர்கள் அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும் என்று முயற்சித்தால் அதை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதில் நியாயம் இருக்கிறது. ஆகவே மாநில அரசின் அதிகாரத்தில் மத்திய அரசு தலையிடக்கூடாது என்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தை நான் ஆமோதிக்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. என். சங்கரய்யா : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் சபை முன் வைக்கப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் ஆதரிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்கள் மீது மாநில அரசு வரிவிதிக்கின்ற அதிகாரத்தை தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு இந்திய அரசியல் சட்ட அமைப்பை திருத்த மத்திய சர்க்கார் முயற்சிப்பது அபாயகரமாக அமையும் என்ற கருத்தோடு, இந்திய வணிக அமைச்சகம் எடுத்துவருகின்ற முயற்சிகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்கின்ற வகையில் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இப்பேர்ப்பட்ட கவலையைத் தெரிவித்து, இப்பேற்பட்ட அரசியல் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவது, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது சரியல்ல. அதை நிறுத்தவேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துவதற்கு சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக இந்தத் தீர்மானத்தை அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஏற்கனவே மாநில அரசுகளுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைவு. அதிலும் நிதியை திரட்டுவதற்கு இருக்கின்ற அதிகார வரம்புகள் மிகமிக குறைவானது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், வாங்கும் வரி, விற்பனை வரி, ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் மீது விற்பனை வரி விதிக்கின்ற அதிகாரம் மாநில அரசிடம் இருப்பதால், மத்திய அரசுக்கு பெரிய அளவுக்கு ஒன்றும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

[முற்பகல் 11.00]

காரணம் இன்றைக்கு இந்தியாவின் பொருள்களுக்கு வெளி மார்க்கெட்டில் கிராக்கி என்று வருகிறபோது, இந்த மாநில சர்க்கார்கள் அந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய அந்தப் பொருள்களை வாங்கவோ அல்லது விற்பனை செய்யவோ முற்படுகிற போது, அந்த மாநில சர்க்கார் வரி போடுவதன் மூலம் ஏற்றுமதியில் கிடைக்கக்கூடிய வருமானத்திலே இந்த மாநிலம் ஒரு சிறிய பங்கீட்டை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, இது இன்றைக்கு ஏற்றுமதியைப் பாதிக்கும் என்று மத்திய சர்க்கார் கருதி, இந்த அதிகார வரம்பிற்குள் நுழைவதற்கு முயற்சிக்கக் கூடாது என்பதைத் தான் இன்றைக்கு நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். அவ்வாறு கொண்டு வரக்கூடிய காலத்திலேதான், எப்படிப்பட்ட சில அபாயங்கள் மாநில அரசாங்கங்களுக்கு தோன்றுகின்றன என்பதை தங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திறகு கொண்டுவர விரும்பு கிறேன்.

ஏற்கனவே அவசரகால நிலைமை காலத்தில், கல்வி என்பதை மாநில அரசினுடைய பட்டியலிலே இருந்து வந்ததை, அவசர கால நிலைமையைப் பயன்படுத்தி, அதைப் பொதுப் பட்டியலிலே சேர்க்கப்பட்டது. இதிலே என்ன அபாயம் என்றால், தமிழ்நாடு அரசு இரு மொழிக் கொள்கையைப் பின்பற்றுகிறது. மத்திய சர்க்கார் இந்தக் கல்வி என்பது பொதுப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மும் மொழிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கட்டளை பிறப்பிப்பதற்கான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி அவர்கள் ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது என்பதை தங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, அவ்வாறு ஏற்படக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுமானால், இந்த மாநில சர்க்கார்கள் பின்பற்றக்கூடிய கொள்கைகளை எந்த அளவிற்கு அச்சுறுத்தக் கூடிய வகையிலே இருக்கிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதேபோல் தான் இந்த பசு வதைத் தடுப்பு மசோதா. இதையும் மாநில அரசாங்கங்களினுடைய பட்டியலே இருந்ததை, பொதுப் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று, ஒரு அரசியல் சட்டத் திருத்தத்தை மத்திய சர்க்கார் இப்போது பாராளும் மன்றத்திலே கொண்டுவர இருப்பதாக அறிவித்துக் கொண்டிருக் கிறது. அவ்வாறு கொண்டுவரக் கூடாது என்று மேற்கு வங்காளம், கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. ஆளும் கட்சியான ஜனதா கட்சி, தேசிய கட்சிகளுக்கிடையே இப்படிப்பட்ட மாநில சர்க்கார்

களுடைய இந்த அதிகாரத்தை பிரிக்கக்கூடி முயற்சி செய்கிறது என்றும், இப்படிப்பட்ட கருத்துக்கள் இன்னும் பல்வேறு அரசியல் கட்சிகளிடையேயும் நிலவுகிறது. அதற்குப் பிறகு நம்முடைய மாநில சர்க்கார் இங்கே இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கிறோம். இந்த மாநில சர்க்கார் கொண்டு வரக்கூடியதை நாங்கள் எதிர்ப்பதற்கான காரணங்கள், மாநில சர்க்கார் சொந்தப் பொறுப்பிலே முடிவு செய்யக்கூடியதை, இந்த மாநிலத்திலே உள்ள எதிர்க் கட்சிகளோடு சேர்ந்து கொள்கையளவில் முடிவு செய்யக்கூடியதைத் தடுக்கின்ற வகையிலே மத்திய சர்க்கார் இதை பொதுப் பட்டியலிலே கொண்டுவருவதை, தமிழ்நாடு சர்க்கார் எதிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நமக்கு இருக்கின்ற அதிகாரத்தை, மத்திய சர்க்கார் பொதுப் பட்டியலிலே சேர்த்திருப்பதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்று சொன்னால், இந்த சர்க்காரின் மொழிக் கொள்கையைப் பொறுத்த மட்டில், கல்வியும் பொதுப்பட்டியலிலே சேர்க்கப்பட்டிருப்பதால், இந்தப் பிரச்னையிலும் மாநில சர்க்கார்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்ற காரணத்தால் பிரச்னைகள் எல்லாம் பின்னால் வரும். எனவே, மாநில சர்க்கார்களின் அதிகாரம் என்று வரும்போது, ஏற்கனவே மாநில சர்க்கார்களுக்கு, அவர்களின் பொறுப்பிலே இருக்கக்கூடிய பொறுப்புகளை கன்கரன்ட் லிஸ்டிலே, பொதுப்பட்டியலிலே சேர்க்கக்கூடாது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாராளும் மன்றத்திலே இந்த மசோதா வரும்போது, இதர அரசியல் கட்சிகளோடு சேர்ந்து எதிர்ப்பதன் மூலம் மாநில சர்க்கார்களின் அதிகாரத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே அமையும் என்பதைச் சொல்லி, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை மார்க்கிஸ் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது என்று கூறி அமருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அரசினர் தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். அடிப்படையில், இந்த அரசாங்கத்திற்கு இப்போது ஏதாவது இதற்கு தேவை ஏற்பட்டிருக்கிறதா என்பதுகூட எனக்கு வியப்பாக உள்ளது. காரணம், இந்தத் தீர்மானத்தில் கூறியிருப்பது, அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த இந்திய அரசு வணிக அமைச்சகம் கோரியுள்ளது என்று இப்பேரவைக்குத் தெரிய வருகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இப்படி இந்தப் பேரவைக்குத் தெரிய வருகிறது என்று சொல்வது, எனக்குச் சரியாகத் தோன்றவில்லை.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 ஏப்ரல் 30

என்னைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக இதுவரை இது போன்ற தகவல் வரவில்லை. அப்படியே தகவல் வந்தாலும் கூட அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னால் அதற்காகத் தேவைப்படுகிறபோது மாநிலங்களோடு மத்திய அரசு கலந்தாலோசித்துத்தான் சாதாரணமாகச் செய்து வருகிறார்கள். இதுவரை அதற்கான ப்ரொபோசல்ஸ் கூட, அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான எந்த நடவடிக்கையும் மத்திய அரசு எடுத்துவிட்டது என்று கூறி யிருந்தால் கூட ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்காக எண்ணிக் கொண்டிருக்கிறது என்ற தகவல் இந்தப் பேரவைக்கு வந்திருக்கிறது என்ற கூறும்போது, நிச்சயமாக இது இல்லாத காரியத்தைக் கற்பனை செய்துகொண்டு இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது தேவையற்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாநில அரசுக்கு நிச்சயமாக உரிய அதிகாரம் இருக்கவேண்டுமென்பதில் எள்ளளவும் எனக்குக் கருத்து வேறு பாடு இல்லை. இந்த தேசத்தில் இருக்கிற பல்வேறு மாநில அரசுகள் அதிலே ஒருமித்த கருத்து உள்ளவையாக இருக்கின்றன. மத்திய அரசும் அதற்கு இசைந்துள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பொருள்கள் மீது மாநில அரசுகளுக்கு இருக்கிற வரி விதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்வதற்கு அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் செய்யப் போவதாக இந்த அரசு கேள்விப்படுவதாகக் கூறப் படுகிறது. வெளி நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் பொறுப்பு, அதிகாரம் மத்திய அரசிடத்தில் இருக்கிறது என்பதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். ஏற்றுமதியின் மூலம் பல தொழில்கள் அபிவிருத்தி அடையும் வாய்ப்பு இருக்கிறது. வேலைவாய்ப்பு பெருக வாய்ப்பு இருக்கிறது. அந்நியச் செலாவணி இந்த தேசத்திற்கு எந்த அளவு தேவைப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அதற்காக இந்த தேசத்திலிருந்து பல பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டிய அத்தியாவசியம் இருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறியும். ஏற்றுமதியைப் பாதிக்கின்ற அளவுக்கு மாநில அரசுகளின் நடவடிக்கைகள் இருக்க முடியாது. அப்படி இருந்தால் அது இந்த தேசத்தின் பொருளாதாரத்தை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை நிச்சயமாக இந்த அரசு உணர்ந்தாக வேண்டும். பல்வேறு மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகச் செயல்படுகிறபோது அது ஏற்றுமதியைப் பாதிக்கும் என்று ஒருவேளை மத்திய அரசு கருதக்கூடும்.

ஏற்றுமதி செய்யப்படுகிற பொருள்களுக்கு நமது அரசு விற்பனை வரியைச் சுமத்துவதால் எந்த அளவுக்கு ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. தொழில் வாய்ப்பு கெடுகிறது என்பதை

இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்புதான் இந்த அரசு ஒரு மசோதாவைக் கொண்டு வந்து தீப்பெட்டிக்கு விற்பனை வரியை நிறைவேற்றியிருக்கிறார்கள். கையால் செய்யப்படுகிற தீப்பெட்டிக்கு விற்பனை வரி, இயந்திரத்தினால் செய்யப்படுகிற தீப்பெட்டிக்கு விற்பனை வரி இல்லை. கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள் மற்ற மாநிலங்களுக்குப் போகின்றன, வெளி நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. கையால் செய்யப் பட்டிருக்கிற தீப்பெட்டிக்கு கூட விற்பனை வரி போடப் பட்டிருப்பதால் அந்தத் தொழில் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்த்தீர்களா? இந்த மாநிலத்தில் அந்தத் தொழில் அதிகமாகப் பாதிக்கப்படும்.

(முற்பகல் 11-10)

நீங்கள் ஒருவேளை இரண்டு கோடி ரூபாய்க்காக இந்த வரியைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தை நிறைவேற்றி யிருக்கிறீர்கள், என்றாலும் அதனால் விளையக்கூடிய தீமைகள் என்னவென்றால் இந்தத் தொழில் பாதிக்கப்படுவது மட்டுமல்ல. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். மட்டுமல்லாமல் ஏழைகள் உபயோகப்படுத்துகின்ற இந்தத் தீப்பெட்டியின் விலை உயரக்கூடிய அபாயமும் இருக்கிறது. அந்நியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கின்ற எந்தப் பொருளாக இருந்தாலும் நீங்கள் வரிப் போட்டால் அதன் காரணமாக வரியை உயர்த்திய காரணத்தினால் தேசத்தின் அந்நியச் செலாவணி வருமானமும் குறைகிறது. மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லி நீங்கள் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த அதிகாரங்களை நீங்கள் முறைகேடாகப் பயன்படுத்தினால் அதனால் மாநிலத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டிற்கே விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும். மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்று நான் விரும்ப வில்லை. மத்திய அரசாங்கமும் விரும்பவில்லை. ஆனால் இந்த தேசத்தின் நலனைக் கருதிப் பல்வேறு மாநிலங்கள் எல்லாம் ஒருமித்த கருத்தோடு செயல்படுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் இதை மத்திய அரசாங்கமே சரியாகச் செயல்படுத்த வாய்ப்பு ஏற்படுத்துகிற வகையிலே அரசியல் சட்டத்தைத் திருத்துவார்களானால் நிச்சயமாக அது மாநிலத்திற்கு மட்டுமல்ல, தேசத்திற்கே நல்லதாக இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட தீர்மானம் இங்கே கொண்டுவரப்படுவது தேவையில்லை. நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நன்கு ஆலோசித்துக் கொண்டுவரவில்லை, இந்தத் தீர்மானத் தினால் நமக்கு நன்மையில்லை என்று கூறி இதைப் பின்வாங்கிக் கொண்டால் மாநிலத்திற்கு நல்லதாக இருக்கும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நான் பலமாக எதிர்க்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும், மத்தியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய மாநிலம் மட்டுமல்ல பல்வேறு மாநிலங்கள் அதற்காகப் போராட்டம் என்று கூடச் சொல்லலாம் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே இருக்கின்ற அதிகாரங்களை எடுக்கிற முறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு விற்பனைவரி விதிக்கின்ற அதிகாரத்தை மாநில அரசு விதிக்கக் கூடாது என்ற முறையிலே அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவது கண்டிக்கக்கூடிய செயலாகும். திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். இது ஏற்றுமதியைப் பாதிக்கும். விற்பனை வரியைப் போடுவதால் விலை ஏறும் என்று சொன்னார்கள். மாநிலத்திலே உற்பத்தியாகிற பொருள்கள் ஏற்றுமதியானால் நல்லதுதான் உற்பத்தி பெருகும். ஆகவே அந்த அதிகாரம் மாநில சர்க்காருக்கு இருக்கவேண்டும் என்பதிலே எந்தவிதமான தடங்கலும் இருக்கக்கூடாது. திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னது சரியானதல்ல. என்னமோ மறுபடியும் அவர் அதைப் பரிசீலிக்க வேண்டும். ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று இன்றைக்கு நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் கொடுக்க மறுத்து வருகிறோம். ஒவ்வொருவரும் அரசாட்சியில் இருக்கின்றபோது ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக்காமல் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிட்டிகள் இவைகளிடமிருந்து அதிகாரங்களை நாம் எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறோம். அதே மாதிரி இங்கே உள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதிகாரங்கள் ஆங்காங்கே பரவலாக இருந்தால்தான் சரியாக இருக்கும். மத்திய சர்க்காரே இந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்கின்ற வகையிலே அரசியல் அமைப்பு சட்டத்தைத் திருத்துவதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களுக்கு விதிக்கக்கூடிய விற்பனை வரியை இனி இந்த மாநில அரசு வசூலிக்கக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்திய அரசு அதைக் கட்டுப்படுத்துவதற்காக இன்றைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர முயற்சித்துக் கொண்டு வருகிறது. ஒரு சட்டமானது வெளியே வராத நேரத்திலே எப்படி முயற்சிக்கிறது என்று கூறலாம் என்று

திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்கள். இன்றைக்கு நம்முடைய தென்னகத்தில் தமிழ் மக்கள் மீது இந்தி திணிக்கப்படும் என்ற அச்சம் இருப்பதன் காரணமாக இந்த அவையில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை திரு. ஜேம்ஸ் அவர்கள் அறிவார்கள்.

ஆகவே, இன்றைக்கு நாட்டிலே ஒரு நிலைமை உருவாகிக் கொண்டு வருகிறது என்றால் அந்த நிலைமையின் அடிப்படையிலே மாநில அரசின் வருவாய் எவ்வளவு தூரம் பாதிக்கும் என்ற அச்சத்தின் காரணமாக இந்த விற்பனை வரி மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது இந்த மாநில வளர்ச்சியின் மீது அக்கறை கொண்ட மசோதாவாக இருப்பதால் இது வரவேற்கக்கூடிய ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் விளையக்கூடிய விளைபொருட்களின் விலையைக் கூட நிர்ணயிக்கின்ற உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. அதைக்கூட மத்திய அரசு குவித்துக்கொண்டிருக்கிறது. செல்வம் ஓரேயிடத்தில் குவிந்துவிடக் கூடாது. பரவலாக விநியோகிக்கப் பட வேண்டும். அதன் மூலம் சமுதாய அமைப்பை சமதர்ம சமுதாய அமைப்பாக உருவாக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசு தானே குவித்துக்கொண்டு, மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறது. இதன்மூலம், மாநில அரசு மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தக்கூடிய நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் இம்மாதிரிப் போக்குகளின் விளைவாக நமது இந்திய ஒருமைப்பாட்டின் ஆணி வேரே தகர்க்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

விலைவாசிகளை நிர்ணயம் செய்யும் உரிமை கிடையாது. தமிழகத்தில் விளைகின்ற பொருட்களுக்கு—நெல், கரும்பு போன்ற இவைகளுக்கான விலைகளை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசுதான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இந்தியாவில் ஒவ்வொரு பொருளின் விளையும் தன்மையும் மாறி விடுகிறது. வடக்கே கோதுமை விளைகிறது, இங்கே நெல் விளைகிறது. இங்கே கரும்பு விளைகிறது. அங்கே பருப்பு விளைகிறது. ஆகவே, எந்தவொரு மாநிலத்தில் எந்தவொரு பொருள் விளைகிறதோ அந்த விளைச்சலுக்கான மூலதனச் செலவு அந்த மாநில அரசுக்கும், அந்த மாநில மக்களுக்கும் தான் தெரியும். ஆகவே, இம்மாதிரி மாநில அரசினுடைய எல்லா அதிகாரங்களிலேயும் மத்திய அரசு தலையிடுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆகவே, மாநில அரசுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். எனவே, இந்த விற்பனை வரி திருத்தச்

சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரக்கூடிய முயற்சியைக் கைவிட வேண்டும். ஆகவே, இந்தத் திருத்த விற்பனை வரி மசோதாவை நாங்கள் முழு மனதுடன் ஆதரிக்கிறோம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, இன்று மத்திய அரசாங்கத்திலே போடப்பட்டிருக்கும்—அதிலும் குறிப்பாக மாநில அரசுகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது, எல்லாம் நாமே என்று சொல்லக்கூடிய அளவிற்கு எல்லா அதிகாரங்களையும் பறித்துக் கொள்ளக்கூடிய அந்தச் சர்வாதிகார—அதே நேரத்திலே, சுயநலப் போக்கு மத்திய அரசுக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாமெல்லாம் இப்பொழுது மத்திய பாராளுமன்றத்திலே கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் மூலம் அறிகிறோம். ஏற்கனவே, இன்கம்டாக்ஸ் போன்றவைகளும், சென்ட்ரல் எக்சைஸ் டாக்ஸ் போன்றவைகளெல்லாம் மாநில அரசுகள் அதிகமாகத் தந்தாலும், அவைகளையெல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் நிலைமையிலே, பெருவாரியான வருமானத்தை, வரிகளை மத்திய அரசாங்கமே எடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் அந்த வரி, மாநில அரசாங்கத்திலிருந்து செலுத்தப்படும் அந்த வருமானம், மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நாம் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். குறிப்பாக மதுவிலக்கை அமல்படுத்தும் மாநிலங்களுக்கு, 1977ஆம் ஆண்டிலிருந்து, எந்தெந்த மாநிலங்கள் மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துகின்றனவோ அந்தந்த மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் ஒரு தொகையைத் தரக்கூடும், தர வேண்டுமென்ற ஒரு முடிவை மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிறது.

ஆனால், தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1977ஆம் ஆண்டுக்கு முன்னாலே மதுவிலக்குத் திட்டத்தைத் தமிழ்நாட்டிலே அமல் படுத்தியதன் காரணமாக, தமிழ்நாட்டிற்கு அந்த உதவித்தொகையை மத்திய அரசாங்கம் கொடுக்க முடியாது என்று சொல்லும் அளவிற்கு மத்திய அரசாங்கத்தின் நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதே நேரத்திலே, மாநிலங்கள் தங்களுக்கு வரும் வருமானத்தை வைத்துக் கொண்டுதான் அந்த மாநிலத்திற்குத் தேவையானவைகளைப் பூர்த்தி செய்கின்ற நிலைமைகளில் இருப்பதால், கொஞ்ச நஞ்சம் வரும் வருமானத்தையும், மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற மனப்போக்கு நம்மோடு ஒத்துவராத மனப்போக்காக இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் தீர்மானம்— இதை மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ளாது—மாநில அரசாங்கமே அந்த வரி விதிப்புகளைப் போடுவது, அதற்கான அதிகாரத்தை நாம் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

(முற்பகல் 11–20)

அதே நேரத்திலே, இந்த அரசானது ஒன்று செய்ய வேண்டும். விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையோடு செல்லாது, போராடி வருகின்ற மனப்பான்மையோடு மத்திய அரசாங்கம் தமிழகத்திற்குத் தேவையானவைகளைக் கொடுக்க வேண்டுமென்று, கட்டாயப்படுத்துகின்ற நிலைமையிலே, தமிழக அரசாங்கம் போராடிப் பெற வேண்டும். நமக்குக் கிடைக்க வேண்டியவைகள் அத்தனையையும் மத்திய அரசாங்கம் பறித்துச் செல்கிறது. அதைத் தடுத்து நிறுத்தும் வகையிலே தமிழக அரசாங்கம் தன்னுடைய உரிமைக் குரலை எழுப்பவேண்டுமென்று கேட்டு, இதனை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப் பெற்றுள்ள இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். இந்தத் தீர்மானத்தின் அடிப்படை, ஏதோ. யாரோ, யாரையோ எதிர்க்க வேண்டுமென்பதற்காக அல்ல. இல்லாத ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காகவோ அல்ல. அதற்குப் பதிலாக வர இருக்கின்ற ஆபத்தை நாம் இங்கே தடுத்தாக வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானம் என்பதை இந்த நேரத்திலே நாம் நினைவுகூர்ந்து பார்க்கவேண்டும். இங்கே ஒன்று சொல்லப்பட்டது. மத்திய அரசாங்கத்தால் எந்த இறுதியான முடிவும் மாநில அரசாங்கங்களுக்கு தெரிவிக்கப்படாத நிலையில் வருகிறது என்ற எண்ணத்திலே நாம் இதைக் கொண்டு வரலாமா என்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டது. வருமுன் காப்பதுதான் அறிவுடைமை என்ற முறையில் இது உரிய நேரத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. வருமுன்தான் செய்யவேண்டும், பிறகு செய்யக்கூடாது என்று சொல்வது எவ்வளவு அறிவுடைமையோ, அந்த அளவு அறிவுடைமையாக இத் தீர்மானத்தை முன்னரே கொண்டு வந்துள்ளார்கள். வியாதி பரவுகிறது என்று சொன்னால், தடுப்பு ஊசி போட்டாக வேண்டும். இல்லாதவர்களுக்கு எல்லாம் ஏன் தடுப்பு ஊசி என்று கேட்டால் எப்படியிருக்குமோ, அதுபோல், வராத ஒன்றைப் பற்றி அல்லது வர இருக்கிறது என்று கருதப்படுகிற ஒன்றைப் பற்றி, வருவதற்கு முன் ஏன் நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்று சொல்வது அதற்கு ஒப்பாகும். எனவே, மத்திய அரசாங்கம் இன்றைக்குக் கொண்டு வர இருக்கிற ஒரு அராஜக சட்டத்தை எல்லா மாநில அரசாங்கங்களுமே சேர்ந்து தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களை இன்னொன்றையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு, இந்தத் தீர்மானத்தின்மீது சட்ட மன்றத்தின் முழு ஆதரவைப் பெற்று, அந்த உண்மையை எல்லா மாநில அரசாங்கங்களுக்கும் தெரிவித்து—வருவாய்த் துறை அல்லது வணிகவரித்துறை அமைச்சர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி, ஒரு பொதுவான கருத்தை உருவாக்க நீங்கள் முயற்சி செய்யவேண்டும்.

அது மட்டுமல்லாமல், தமிழகத்திலே இருந்து சென்றிருக்கிற பாராளுமன்ற உறுப்பினர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்' அதைப் பற்றி அக்கறை இல்லை. யார் தமிழகத்தின் அல்லது மாநிலங்களின் நன்மைகளிலே அக்கறை கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் சட்டப் பேரவையிலே நிறைவேற்றும் இந்தத் தீர்மானத்தை அனுப்பி, முறையாக பாராளுமன்றத்தில், இந்தத் தீர்மானத்திற்குப் பிறகும், மத்திய அரசாங்கத்தால், அரசியலமைப்புச் சட்டத்திலே உத்தேசிக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவார்களானால், அதை மிகப் பலத்தோடு எதிர்ப்பதற்கு எல்லா கட்சிகளுடைய ஆதரவையும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்ட கருத்து, இதனால் ஏற்றுமதி அதிகமாகும் என்பது. வணிக வரியை மாநில அரசாங்கங்கள் போடுவதால்தான் வணிக வரிகள் குறைகின்றன என்ற வாதம் ஏற்புடையது அல்ல. ஏனெனில், பல்வேறு வகைகளில் மத்திய அரசாங்கம் இன்றைக்கு வரியைப் போடுகிறார்கள். எக்ஸ்போர்ட் டியூட்டி, எக்சைஸ் டியூட்டி என்று போடுகிறார்கள். இன்னும் பலவிதமாக அவர்கள் இன்றைக்கு, இந்த ஏற்றுமதி மீதும், மற்ற துறைகளிலும் அவர்கள் வரி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் வசூல் செய்து கொள்ளலாம். ஆனால் மாநில அரசு சிறு பகுதியை வசூல் செய்யக்கூடாது என்று சொல்வது முரட்டுத்தனமான வாதமாகும். அதை நிச்சயமாக நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை யார் பொறுப்பிலே இருக்கிறார்களோ அவர்களுக்கு உணர்த்தியாகவேண்டும். மேலும், இதனால் ஏற்றுமதி அதிகமாகும், மத்திய அரசு போடுகிற வரிகளால் ஏற்றுமதி அதிகரிக்கிறது என்று வைத்துக்கொண்டால், ஏற்றுமதி அதிகரிப்பதால், உற்பத்தி அதிகரிக்கிறது, அதனால் வேலை வாய்ப்புகள் அதிகமாகும் என்று வைத்துக்கொண்டாலும், நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான வருமானம் அதிகரிக்கும்போது, அந்த வருமானத்திலே மக்களுடைய நன்மையைக் காக்கும் அரசாங்கம் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படி பெற்றுக்

கொள்வதுதான் நாட்டிலே இருக்கும் நிர்வாகத்திற்கு அடிப்படையானது. அப்படி இல்லாமல், எந்தப் பகுதியும் பெறக்கூடாது என்று சொன்னால்' மாநில அரசாங்கம் எப்படி நடைபெறும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அவர்களுடைய நோக்கமெல்லாம் எல்லா வரிகளையும் அவர்களே எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அந்த வரிகளையெல்லாம் வசூல் செய்து கொண்டு, இந்த மாநில அரசாங்கங்கள் எல்லாம் எங்களுக்கு பிச்சை போடுங்கள், பிச்சை போடுங்கள் என்று பிட்சா பாத்திரம் ஏந்திக் கொண்டு அவர்களிடத்திலே நிற்க வேண்டும், அந்த முறையிலேதான், அந்த நோக்கத்தோடுதான் அவர்கள் மாநில அரசின் வரி அதிகாரங்களை பிடுங்கிக் கொண்டு வருகிறார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. எந்தக் கட்சி மத்திய அரசாங்கத்திலே ஆட்சிக்கு வந்தாலும் இப்படிப்பட்ட நிலைமைதான் நீடித்துக் கொண்டேயிருக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால், நிச்சயமாக அது நம்முடைய செமஸ்டர் முறைக்கு, உரிமைக்குப் புறம்பானது என்று சொல்வேன். அரசியலமைப்பு சட்டத்தின்படி மாநில அரசுகளுக்கு இருக்கும் உரிமையை பறிப்பது என்று சொன்னால் அதற்காக அரசியலமைப்பு சட்டத்தையே திருத்தியமைப்பதாக சொன்னால், மாநில அரசுகளின் அதிகாரங்களை பலாத்காரமாக பிடுங்கிக் கொள்ள மத்திய அரசு நினைக்கிறதோ என்று சிந்திக்க தோன்றுகிறது. சட்டத்திற்குட்பட்டு, மாநில அரசுகள் வரி விதித்துதான் தங்களுடைய நிர்வாகத்திற்காக செலவழிக்கக்கூடிய நிலைமையிலே, அதிலிருந்து தான் மக்களுக்கு நன்மைகளை செய்ய வேண்டிய நேரத்திலே அந்த வருமானத்தை தடுக்கக்கூடிய தன்மையிலே மத்திய அரசு சட்டம் கொண்டு வருவார்களேயானால் அவர்களுடைய நோக்கம் நமக்கு நன்றாக புரிகிறது. இருந்தாலும் இந்த விற்பனை வரி இருக்கிறதே, அதுதான் மாநில அரசுகளுக்கு மிக முக்கியமான வருமானம். ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஏற்றுமதி ஆகிறது. அப்படி ஏற்றுமதி ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களுக்கு வரி விதிக்கக்கூடாது என்று சொன்னால், மாநில அரசுகள் எப்படி செயல்பட முடியும்? அது தெரிந்தும் மத்திய அரசாங்கத்தின் வணிகத் துறை அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு காரணம், மாநில அரசாங்கங்களை மத்திய அரசாங்கத்தினுடைய வாயிற்படியிலே நின்றுக் கொண்டு பிச்சை கேட்கக்கூடிய நிலைமையிலே கொண்டு வருவதற்கு

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி மாநில அரசு பிச்சை கேட்கிறது பிச்சை கேட்கிறது என்று சொல்கிறார்கள். அது அப்படியே வருமேயானால் அந்த வார்த்தை நல்லதல்ல. உரிமையை

பெறுவதும் வேண்டியதை கேட்பதும் பிச்சை இல்லை. அந்த எண்ணம் வந்துவிடக்கூடாது. பிச்சைக்காரர்கள் மாதிரி பிச்சை கேட்க வேண்டும் என்று சொன்ன வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.....

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, பிச்சை என்ற வார்த்தை தவறானது அல்ல. அவ்வையாரே பிச்சை புகினும் கற்கை நன்றே—என்று எழுதி வைத்திருக்கிறார்—அதனால் அது ஒன்றும் குற்றமான வார்த்தையாக இருக்காது என்பது என்னுடைய கருத்து.

திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, அப்படியானால் இது வரையிலும் நாம் மத்திய அரசாங்கத்திடம் பிச்சைதான் கேட்டிருக்கிறோம் என்று ஆகிவிடும். அந்த வார்த்தை அவ்வளவு நல்லதல்ல. அது அசிங்கமாக, நம்மையெல்லாம் கேவலப்படுத்துவதாக இருக்கிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மாநில அரசாங்கங்கள் சேர்ந்ததுதான் பாராளுமன்றம், இந்த மாநில மெம்பர்கள் மட்டும் இல்லை, அனைத்து இந்தியாவிலும உள்ள மாநிலங்களில் இருந்து வந்த பிரதிநிதிகள்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத்தான் சொல்கிறார்கள். பிச்சை என்பது அப்படி ஒன்றும் அன்—பார்லியமென்டரி வார்த்தை அல்ல. அதனால் அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டார். மத்திய அரசாங்கம் என்றால் மத்திய அரசாங்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். நான் கேட்கிறேன், மாநில அரசாங்கம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ..

திரு. ஜே. ஜேம்ஸ் ; துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜெபமணி அவர்கள் மத்திய அரசாங்கம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டது, மத்திய அரசாங்கத்தில் மாநில அரசுகளின் பிரதிநிதிகள்தான் பாராளும் மன்றத்தில் இருக்கிறார்கள், மத்திய அரசு என்பது மாநிலங்கள் அடங்கியதுதான் மத்திய அரசு என்பது பொருள்படும் என்ற விதத்தில்தான் அதைச் சொல்லியிருக்கிறார்; தவறாக பொருள்படும்படி ஒன்றும் சொல்லவில்லை.

1979 ஏப்ரல் 30]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் என்றால் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னதற்கு நானும் மத்திய அரசாங்கம் என்றால் மத்திய அரசாங்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், மாநில அரசாங்கம் என்றால் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டேன். மாநில அரசாங்கம் என்பது யாருடைய தயவினாலும் உருவாக்கப்பட்டது அல்ல.''

''Both emanate from the Constitutional powers.
Both emanate from the Constitution of India.
Both have separate powers. Nobody can interfere in each other's affairs.

இதனால் மாநில அரசாங்கம் என்று சொன்னால் மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுகளுக்கு தனியாக அதிகாரங்கள் இருக்கின்றன.

(முற்பகல் 11-30.)

அதைப்போல மத்திய அரசினுடைய அதிகாரங்கள் எல்லாம் அரசமைப்புச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. எங்களுடைய அதிகாரம் எங்களுக்கு; அவர்களுடைய அதிகாரம் அவர்களுக்கு. எங்களுடைய அதிகாரங்களில் அவர்கள் தலையிட வேண்டாம் என்பது எங்கள் வேண்டுகோள். அதைத்தான் நான் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல. தயவுசெய்து இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாநிலத்தில் இருக்கிறவர்கள்தான் மத்தியிலும் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதே சமயத்தில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான் தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள்; இங்கே ஆட்சி செய்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு வர வேண்டும். அங்கே இந்த உணர்வு வந்தால்தான் இங்கேயும் அந்த உணர்வு வரும். இந்த உணர்வு எல்லோருக்கும் வர வேண்டும்.

கையில் ஊனம் வந்துவிட்டால் கைக்கு சிகிச்சை செய்கிறோம். அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர் காலிலே ஏன் சிகிச்சை செய்யவில்லை; காலும் உடலிலே ஒரு உறுப்புதானே என்று கேட்டால், அதற்கு என்ன அர்த்தம்? காலிலே ஊனம் ஏற்பட்டால் காலுக்கு சிகிச்சை செய்யலாம். கையிலே ஊனம் என்றால் கைக்குத்தான் சிகிச்சை அளிக்க வேண்டும். அப்போது காலுக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்டால் என்ன அர்த்தம்? காலும் உடலிலே இருக்கிற ஒரு உறுப்புதான்; கையும் உடலிலே இருக்கிற ஒரு உறுப்புத்தான். எங்கே வியாதியோ அங்கே தான் சிகிச்சை செய்ய வேண்டும். ஊனம் இருக்கின்ற இடத்தில்

1979 ஏப்ரல் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

சிகிச்சை செய்து குணப்படுத்தினால்தான் உடல் நலம் நன்றாக இருக்கும். ஆகவே, ஊனமுற்ற உறுப்புகளைப்பற்றிப் பேசும் போது உடலைப்பற்றி பேசு என்றால் என்ன அர்த்தம் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

தலைவர் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார் கள். கல்வியைப் பொதுப்பட்டியலில் சேர்த்தார்கள்; இப்போது பசுவதை தடையை பொதுப்பட்டியலில் சேர்க்கப்பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதுபற்றி ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறார்கள். அப்போது விரிவாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வேன். இப்படி திட்டமிட்டு ஒவ்வொன்றாகச் செய்யும்போது, இதைவிட திட்டமிட்ட 'ஹிபோகிரஸி' நாட்டிலே வேறு இருக்க முடியாது. அந்த வகையிலே ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது திட்டமிட்டு அவர்கள் நம்மை ஏமாற்ற வேண்டுமென்று கொண்டுவருகிறார் கள்; அதிகாரத்தை பொதுப்பட்டியலிலே சேர்க்கிறார்கள் என்று அர்த்தம். பசுவதை தடைச்சட்டத்தைப்பற்றி, அமைச்சரவர் கள் சட்ட முன்வடிவை முன்மொழியும்போது விரிவாக நான் பேச இருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்களை பாராட்டிப் பேச எல்லோரும் கடமைப்பட் டிருக்கிறோம் என்பதைச் சொல்லி, இது ஒரு அரசுக்குத் தருகிற ஆதரவு அல்ல; நம்முடைய மாநிலத்திற்குத் தருகிற ஆதரவு; நம்முடைய மாநில சுயாட்சிக்குத் தருகிற ஆதரவு என்று சொல்லி, இதை முழுக்க, முழுக்க மனதார ஆதரிக்கிறேன் என்று சொல்லி, அத்தனை பேர்களும் இதை ஆதரிக்க வேண்டு மென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலும் கொண்டுவந்த தீர்மானத்தை அருமை சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் எல்லோரும் பாராட்டி இருக்கிறார்கள்; வரவேற்றிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுகிறபோதும், வரவேற்கிறபோதும் அதை எப்படி பாராட்டுவது, எப்படி வரவேற்பது என்று தெரியாமல் வார்த்தை இல்லையே; இன்னும் அதிகமாக வார்த்தைகள் வேண்டுமே என்று அவர்கள் சொல்கிறபோது அவர்களுக்கு இருக்கிற சங்கடங்களை உணர்ந்தேன். அந்த அளவுக்கு மிக ஆழமாக வரவேற்றிருக் கிறார்கள். அப்படி ஆழமாக வரவேற்கிறபோது, எனக்குக்கூட முதலிலே இருந்த தெம்பைவிட அதிகமாக இருக்கிறது; இந்த அரசுக்கும் இருக்கிறது.

1979 ஏப்ரல் 30] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொல்கிறபோது, அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறபோது, நான் அரசின் சார்பிலே பதில் சொல்கிறபோது, கொஞ்சம் அவர்களைப் பார்த்துச் சொல்கிறபோது ரொம்ப கண்ணியத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. அவர்களுடைய கருத்தை அவர்கள் சொன்னார்கள். ஆனால், மற்றவர்கள் அதை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லுகிறபோது நாடு ஒன்றாக இருக்க வேண்டுமானால் இப்படிப்பட்ட சட்டம் வரக்கூடாது என்ற தொனிப்பட எல்லோருமே பேசியிருக்கிறார்கள். அப்படி பேசியதை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசியவற்றிற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஏன் கொண்டுவர வேண்டும்; நன்றாக யோசித்துக் கொண்டுவர வேண்டாமா என்று சொன்னதற்குக் கூட பதில் சொல்லியிருக்கிறார்கள். பதில் சொன்னவர்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் 'வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும்' என்பதுதான். அந்த முறையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, நம்முடைய மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொல்லும்போது கல்வியைப் பற்றிச் சொன்னார்கள். கல்வி, முதலிலே மாநிலத்தினுடைய அட்டவணையில் இருந்தது. பின்னால் அது பொதுப் பட்டியலுக்குச் சென்றது; உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதைப் பற்றிச் சொல்லுகிறபோது, மாநிலத்தினுடைய முதலமைச்சர் சார்பில் நாங்கள் நாடாளுமன்றத்திலே இருக்கிறபோது, இன்றைக்கு இருக்கிற இந்திய பேரரசின் பிரதமரிடம் நாங்கள் எல்லாம் வாதாடும்போது அவர் சொன்னார்: எங்களை எல்லாம் பார்க்கிறபோது இவர்கள் எல்லாம் பிரிவினைவாதிகள் ஆச்சே என்று சொன்னார். ஆகையால், உள்ளே எப்படிப்பட்ட கருத்துக்களை வைத்திருப்பார்களோ இன்றைக்கு, தெரியாது. முதலிலே கல்வி மாநிலத்தின் அட்டவணையில் இருந்தது.

கல்வி, மாநிலப் பட்டியலில் இருந்ததை எடுத்துக்கொண்டு விட்டார்களே மத்திய அரசினர் என்றும், அதை விட்டுக் கொடுக்கக்கூடாது, விட்டுக்கொடுக்கவேண்டாம் என்றும் சொன்னார்கள். ஆனாலும், இன்றைக்கு கல்வி மாநிலங்களினுடைய அட்டவணைக்கு வராமல் பொது அட்டவணையிலே இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும்.

(பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்குப் பேசுகின்றபோது இந்த சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் ஏற்றுமதி அதிகமாகும் என்றும் இங்கே புதியதாக பொருள் ஏற்றுமதியாகும் என்றும் அன்னியச் செலாவணி கிடைக்கும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், முதலிலேயே அவர்

களிடத்திலே ஒரு சட்டப்படியான ஆயுதம் இருக்கின்றது. எந்தப் பொருளையும் விலை ஏறுகின்றபோது அதை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்று பார்த்து கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரம் அதாவது லீகல் வெப்பன் அவர்களிடத்திலே இருக்கின்றது. ஆனால், இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பது நியூ வெப்பன். புதிய ஆயுதம். இந்த சட்டப்படியான புதிய ஆயுதத்தைக் கொண்டு வருகிறார்கள். முதலிலே இருக்கின்ற சட்டப்படியான ஆயுதத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். ஆனால். மேலும் மேலும் புதிய புதிய ஆயுதங்களைச், சட்டப் படியான ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்களே, இதை இப்படியே விட்டுவிட்டால் தொடர்ந்து இப்படி பல ஆயுதங்கள் சட்டப்படியான ஆயுதங்கள் வந்துவிடும் என்பது ஒன்று. அது மட்டுமல்ல, இன்றைக்கு மாநிலங்களைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியிலே பார்க்கின்றபோது, அதாவது நிதித் துறையைப் பார்க்கின்றபோது எதற்கெடுத்தாலும் மத்தியப் பேரரசை பார்க்கவேண்டிய நிலை இருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். உங்களுக்கெல்லாம் தெரிந் திருக்கும், 1937 ப்ரவின்ஷியல் ஆக்ட் என்று ஒன்றிருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் மாநில அரசுக்கு எவ்வளவு அதிகாரம் இருந்ததோ அதைவிட இன்றைக்கு குறைவாக இருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற சட்டப்படிகூட அவர்களால் தடுக்க முடியும். ஆனால், இன்றைக்கு இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது-மாண்பு மிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒன்று சொன்னார்கள். ஒருவரை அடிமைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் முதலிலே அவரைப் பட்டினி போடவேண்டும்; பட்டினி போட்டு சங்கடப்படுத்தவேண்டும். அப்படி சங்கடப்படுத்தி விட்டால் ஒன்று அவன் சாகவேண்டும்; அல்லது அடிமையாகவேண்டும். இதுதான் நடைமுறை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது இந்த மாநிலத்தை அடிமைப்படுத்துவதற்கு ஒன்றன் பின் ஒன்றாக சட்டங்களைக் கொண்டு வருகிறார்களோ என்று ஐயப்பட்டார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் பேசுகின்ற போது உங்களுக்கு போராட வேண்டிய தன்மை வேண்டும், போராடுகின்ற குணம் வரவேண்டும் என்று சொன்னார்கள்; விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு இருக்கின்ற நியாயமான விஷயங்கள் பற்றிய உரிமைகளை என்றைக்குமே விட்டுக்கொடுக்காது இந்த அரசு. ஆனால், போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டால், உரிமை பறிக்கப்பட்டால் அதற்கும் இந்த அரசு என்றைக்கும் போராடத் தயாராக இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் சார்பாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சட்டப்படிகூட மாநிலங்களிலிருந்து

மற்ற மாநிலங்களுக்கு விற்கப்படுகின்ற பொருள்களுக்குக்கூட வரி போட முடியும். ஆனால் இன்னும் அதிகமான கட்டுப் பாட்டை ஏற்படுத்துகிறது இன்றைக்கு இருக்கின்ற சட்டம். லீகல் வெப்பன். அந்த சட்டப்படி எதையும் செய்வதற்கு அதிகாரம் இருக்கின்றபோது ஏன் இன்றைக்கு நியூ லீகல் வெப்பன் கொண்டுவருகிறார்கள் புதியதாக என்றுதான் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு இருக்கின்ற எல்லா மாநிலங் களையும் பார்க்கின்றபோது States are only administrative units of the Centre என்றுதான் இன்றைக்கு இருக்கிறதோ என்று நினைக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு எல்லா மாநிலங்களும் எண்ணிக்கொண்டிருக்கின்றன. இன்னும் வேறு மாதிரி சொல்ல வேண்டும் என்றால் States are only glorified Municipalities. என்பது போல் இருக்குமோ என்று பலர் எல்லாம் எண்ணு கின்ற அளவுக்கு இந்த ஸ்டேட்டினுடைய அதிகாரம் இருக் கின்றது. அந்த அளவுக்கு இவைகளை எல்லாம் விடாமல் நமக்கு வேண்டிய அதிகாரங்களை மேலும் பெறுவோம், இருக் கின்ற அதிகாரத்தை விட மாட்டோம் என்று சொல்லி இதை எல்லா உறுப்பினர்களும் ஏகமனதாக வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வரவேற்பதை நான் வரவேற்கிறேன.

(திரு. ஜேம்ஸ் அவர்கள் இல்லை என்று கையசைத்தார்கள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னேன், அண்ணா அவர்களைப் பார்த்துவிட்டு பேசுவதால் கடுமையாகப் பேச மாட்டேன் என்று சொன்னேன். ஆனால் மற்றவர்கள் பேசி இருக்கிறார்கள் என்று சொன்னேன். நான் சொல்ல விரும்பு கிறேன், அரசியல் கட்சி என்பது மக்களுக்காகத்தான் இருக் கின்றது. நாட்டிலுள்ள மக்களுக்காக இருக்கின்றபோது மக்க ளுடைய நலனைப் பாதுகாக்கின்றபோது அது நியாயம், நேர்மை என்றால் அதைச் சொல்வதற்கு என்றைக்குமே பயங்கக்கூடாது. ஆனால் கட்சிக்காகவோ — அவர்களுக்கு உள்ளூரத் தெரியும், இன்றைக்கு வரியைப் போடக்கூடாது என்றும் இந்த அரசி னுடைய அதிகாரத்தை மத்தியப் பேரரசு எடுப்பது தவறு என்றும் தெரியும்.

[முற்பகல் 11–40]

ஆனால் இன்றைக்கு கட்சியின் சார்பாகதான் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நான் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சி என்பது எப்படி உருவாகியது என்றால் மக்களைப் பார்த்துதான். மக்களைப் பார்க்காமல் என்றால், கட்சித் தேவையில்லை. கட்சி எதற்கு? மக்களுக்காக இருக்கிறது. இன்றையத் தமிழக மக்களின் நலனை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழக மக்களின் நலனை கருதி இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. இப்படிப்பட்ட

சட்டம் வரவேண்டும் என்பது தமிழக மக்களின் எண்ணமாகும் ஆகையால் நாம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறோம். மக்கள் எதிர்க்க மாட்டார்கள், வேறு வழியில்லாமல அவர்கள் சொல்கிறார்கள். அது அவருக்கேத் தெரியும். இன்றைக்கு தமிழக அரசு இந்தத் தீர்மானத்தைப் போட்டு அனுப்பினால், மற்ற மாநிலங்களில், அதுவும் ஜனதா கட்சி இருக்கும் மாநிலங்களில், இது பின்பற்றப்படும். நாடாளு மன்றத்திலே நான் இருந்திருக்கிறேன். எனக்குத் தெரியும். பல மாநிலங்களின் முதல் அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அங்கே கடுமையாகப் பேசினார்கள், பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் அந்த நிலைமை ஏற்பட் டிருக்கிறது. இந்தத் தீர்மானம் மக்கள் நலனைக் கருதி, கட்சியின் நலனைக் கருதாது,— அரசினுடைய நலனைக் கருதி, அரசு நலன் என்றால் மக்கள் நலன் — இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதுபோல் பசுவதை தடை சம்பந்தமான பிரச்னை மாநில சர்க்கார்கீழ் இருக்கக் கூடிய ஒரு பொறுப்பு. அதை நிறைவேற்றிச் செய்ய முடியும். அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், மத்தியில் அவர்கள் இதை பொதுத் துறைக் குக்கொண்டு வருவதற்காக அரசியல் சட்டத்தை திருத்த இன்றைக்கு முயற்சி செய்துவருகிறார்கள், மாநில சர்க்கார் இது பற்றி என்ன கருத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி மசோதா பின்னால் வருகிறது. அப்போது பேசிக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு இணங்க சில கருத்துக்களையும், பொருள்களையும் சொன்னார்கள். என்னைப் பொறுத்த அளவில் இந்தத் தீர்மானத்தின் மீது கூறிய கருத்துக்கள் அனைத்தும் தமிழக மக்கள் நலனைக் கருதி சொன்னேனே ஒழிய, கட்சிக்காக அல்ல என்பதைக் கூறிக்கொள் கிறேன். அதற்கு உதாரணத்தையும் எடுத்துச் சொல்லியிருக் கிறேன். சிறுதொழில்களை வதைக்கின்ற அளவிற்கு இந்த அரசு சேல்ஸ்டாக்ஸ் கொண்டு வந்திருக்கிறது என்று எடுத்துக் கூறி யிருக்கிறேன். ஆக, இந்தத் தீர்மானம் தமிழக மக்களை பொறுத்த வரையில் எந்த நன்மையும் விளைவிக்காது என்று வலியுறுத்தி இப்போதும் அந்தக் கருத்துக்களை வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன்.

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : ஏற்றுமதி செய்யப்படக் கூடிய பொருள்களின்மீது மாநில அரசுகள் வாங்கும் வரி/விற்பனை வரி விதிப்பதை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ளதாக இந்தப் பேரவைக்குத் தெரியவருகிறது. மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்க அரசியலமைப்புச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டால் மாநில அரசின் வருவாய் அளவும், கூட்டாட்சி நிதியமைப்பின், கீழுள்ள மாநில அரசுகளின் வரி விதிக்கும் அதிகார வரம்பும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுமாதலால், இது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவிப்பதோடு அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்திய அரசினை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஈ. சென்னை—பல்கலைக் கழக மதுரை காமராசர் பல்கலைக் கழக திருத்தச் சட்ட முன் வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: ''சென்னை பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு 1979 – (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.''

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சென்னை பல்கலைக் கழக மதுரை—காமராசர் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என மொழிகிறேன்.

பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்று மருத்துவக் கல்வியும் இம்மாநிலத்தில் நீண்டு நிலைத்த பாரம்பரியம் பெற்றிருப்பதால், மருத்துவக் கல்வி இயக்குநரை, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றம், பேரவை மற்றும் கல்விக்குழுவில் துறைச் சார்ந்த

* 1979, ஏப்ரல் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நா சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

நிரந்தர அங்கத்தினராக நியமிக்கக் கருதி, சென்னை பல்கலைக் கழக சட்டத்தின் பிரிவுகள் 14, 18, 23-க்கும், மதுரை-காமராஜ் பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரிவுகள் 15, 19, 24-க்கும் திருத்தங்கள் இச்சட்ட முன் வடிவில் இடம் பெற்றுள்ளன.

தவிரவும் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராயச் செம்மல்களில் பதின்மரை அப்பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவின் ஆயுட்கால அங்கத்தினர்களாக நியமிக்க வழிவகை செய்யும் பொருட்டு இப்பல்கலைக் கழகச் சட்டத்தின் விதி 24க்கும் உரிய திருத்தம் இந்த சட்ட முன் வடிவில் சேர்க்கப் பட்டுள்ளன.

மேற்கூறிய சொற்களுடன் நான் இந்த சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும் பின் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சபைக்குப் பரிந்துரைக்கின்றேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகத்தில் இருக்கக்கூடிய சிண்டிகேட்டிலும், அக்கடமிக் கௌன்சிலிலும் சிலரைப் போடுவதற்கும், அதே போன்று பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைகழகத் திலும் (யூனிவர்சிட்டி ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன்) மேலும் சில உறுப்பினர்களை போடுவதற்கும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கும் போது அதற்கான மசோதா வருகின்ற போது, நான் இங்கே ஒரு கருத்தினை எடுத்துக் கூறினேன். மாணவர்களுடைய பிரதி நிதிகள், கல்விக்காக இருக்கக் கூடிய அக்கடமிக் கௌன்சிலில் இடம் பெற வேண்டும் என்று சொன்னேன். அதை ஏற்றுக் கொள்வதற்கு அரசுக்கு என்ன தயக்கம் என்பதை அறிய விரும்பு கிறேன். இப்போதும் நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால், சிண்டிக்கேட் உறுப்பினர்கள், அக்கடமிக் கௌன்சில் உறுப்பினர்கள் இவர்களைப் போடுவதில் மாணவர்களின் பிரதி நிதிகளையும் போடுவது சிறப்பாக இருக்கும். அப்போதுதான கல்வியின் தரமும், நன்றாக இருக்கும். நிர்வாகமும் திறமையாக நடைபெறும். அதுதான் என்னுடைய கருத்து.

இப்போது மதுரை பல்கலைக் கழகத்தின் அக்கடமிக் கௌன்சிலில் தமிழ்ப் பேராசிரியர்களை தமிழ் ரிசர்ச் செய் வதற்காக வயது வந்தவர்களை 10 பேர்களை போடப் போகிறார்கள். அவர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக இருப் பார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது சரியாக இராது. ஏற்கனவே இப்படிப்பட்ட டிரஸ்டுகளில்கூட ஆயுட்காலம் வரை என்று போடக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இப்படிப் போடப்படுகின்றவர்களில் சிலர் பத்தாம்பசலிகளாக இருக்கக்கூடும், நவீன உலகத்திற்கு ஏற்ற கருத்துக்கள் இல்லாத வர்களாக இருக்கக்கூடும். விஞ்ஞான ரீதியான கருத்துக்கள் இல்லாதவர்களாக இருக்கக்கூடும், இவர்களை எல்லாம் ஆயுட் காலம் வரை அக்கடமிக் கௌன்சிலில் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. முக்கியமாக கல்விக்கு

என்னென்ன ஸெலபஸ் என்பதையெல்லாம் தயாரிக்கக்கூடிய அக்கடமிக் கௌன்சிலில் மாணவர்களின் பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பது, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்காமல் இருப்பது பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலும் அக்கடமிக் கௌன்சிலில் அங்கம் வகிக்கக்கூடிய முறையில், அங்கே பணியாற்றுகின்ற ஊழியர் களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கும் சின்டிக்கேட்டிலும், செனட்டிலும், அக்கடமிக் கௌன்சிலிலும் அங்கம் வகிக்க வழி செய்து கொடுப் பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இது அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். இதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் ஏன் தயங்குகிறது? அதன் காரணம் என்ன? இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடையவும ஆசிரியர்களுடையவும் பிரதிநிதிகள் பல்கலைக் கழகக்குழுக் களில் இடம் பெற வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் இந்தப் பல்கலைக் கழகக் குழுக்களின் சட்டங்களை எல்லாம் முழுவதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அரசுக்கு எண்ணம் இருந்துவருவதால்தான் இப்போது, அதற்கான திருத்தங்கள் இடம் பெறவில்லை. வருகின்ற காலங்களில் எல்லா பல்கலைக்கழகங்களிலும் எந்த அளவுக்கு இடங்கள் அளிக்கப்பட வேண்டும் என்கின்ற நெறி முறைகள் ஆகியவை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும். மாணவர்களைப் பற்றி குறிப்பிடுகின்ற நேரத்தில், ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய எண்ணங்கள் அவர்களுடைய நடவடிக்கைகள் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக எப்படியெல்லாம் இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், இதைப்பற்றியெல்லாம் நாம் தீவிரமாக பரிசீலிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டு வருகிறோம். பல்கலைக் கழகத்தில் உள்ள அக்கடமிக் கௌன்சிலில் சிலரை சேர்த்துக்கொள்வதற்கான திருத்தங்களை நாம் இப்போது கொண்டு வந்திருக்கிறோம். நிர்வாகப் பிரச்னைகள் சம்பந்த மான திருத்தங்கள் எல்லாம் வரும்போது இதைப் பற்றி யெல்லாம் யோசிக்கலாம் என்பதைக் கூறிக்கொண்டு இந்த மசோதவை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி--மதுரை-காமராசர் பல்கலைக் கழக ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட-முன்வடிவின் உரிய பகுதிகளாக ஆக்கப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவின் உரிய பகுதிகளாக ஆக்கப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே ''1979-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைச் கழக, மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/79) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும்

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 11-50]

2, அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(உ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக திருத்த சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் வேண்டும்" என மொழிகிறேன்,

இம்மாநிலத்தில் 4-9-78லிருந்து செயல்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்தை செயற்படுத்துவதில் தங்களுக்கு அனுபவபூர்வமாக, எதிர்ப்பட்ட இடையூறுகளைக் களையும் பொருட்டும், அச் சட்டத்தை மேலும் திறம்பட செயலாற்றும் பொருட்டும் அச் சட்டத்தில் செய்யவேண்டிய திருத்தங்களை, சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்கள் சில பரிந்துரைகளுடன் அரசிற்கு அனுப்பிவைத்தனர். இதனை நேரில் விவாதித்தபின் துணைவேந்தர்கள் தெரிவித்தத் திருத்தங்களை ஏற்பதெனவும், மூலச் சட்டத்தின் தொடர்புடைய விதிகளைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்ட முன்வடிவில் ஆட்சிக் குழுவில் வேந்தரின் பரிந்துரையின்படி 2 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர் களுக்குப் பதிலாக 3 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது, தவிரவும், அரசின் ஆளுகையில் 4-9-78 வரை இருந்த கிண்டி பொறியியற் கல்லூரிப் பணியாளர்களுக்கு அவர்கள் புதிய பல்கலைக் கழகத்தின்கீழ் பணி புரிய விருப்பம் தெரிவித்தன் பொருட்டு அவர்களுக்கு உரிமை வழங்கவும் சென்னை குரோம்பேட்டை தொழில் நுட்ப வியல் நிறுவனத்தின்கீழ் பணிபுரிந்த பணியாளர்களும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையின்கீழ் இருந்த கிண்டி அழகப்பா தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பணிபுரிந்தோரும், அந்த அந்த கல்வி நிறுவனங்களுக்காகவே பணியிலமர்த்தப் பட்டிருப்பதால் அவர்களை புதிய பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் என தெரியப்படுத்தவும் இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இதற்கென மூலச் சட்டத்தின் பிரிவு 36 முழுமையாகத் திருத்தப்படுகின்றது.

* 1979 ஏப்ரல் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மேலும், பல்கலைக்கழகத்தின் அங்கங்களின் அமைப்பிலோ அன்றி பல்கலைக்கழகச் சட்டத்தினை அமுல்படுத்துவதிலோ ஏற்படும் இடர்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு மூன்றாண்டுகள் வரை அரசு உரிய அரசிதழ் வெளியீடு செய்யவும் புதிய விதி 45 சேர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவின் பெருகி வரும் தொழில் நுட்பத் தேவைகளையும், கிராமப்புற தொழில் வளம், தொழில் நுட்பவியல் திறமை ஆகியவைகளுக்கெனவும் மைய-மாநில அரசு பொறியியற் நிறுவனங்களிலிருந்தும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் முகத்தானும், இன்ன பிற காரணங்களுக்காகவும் மூலச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பேராணை 9க்கு போதிய திருத்தங்கள் இச்சட்ட முன்வடிவில் இடம் பெற்றுள்ளன. இறுதியாக பல்கலைக்கழகப் பணியாளர் தேர்வுக்குழுவில் துணைத்தலைவருக்குப் பதிலாக நிறுவனத்தின் தலைவர்களை அங்கத்தினராக நியமிக்கவும் அங்ஙனமே பல்கலைக்கழகப் பேராணை 13-க்குத் திருத்தமும் இச்சட்ட முன்வடிவு கொண்டுள்ளது.

மேற்கூறிய சொற்களுடன் நான் இந்த சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறும், நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :- "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 5 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தர வேண்டும் என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

1979 எப்ரல் 30]

இ. வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மன்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, 1882 ஆம் ஆண்டு வன பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கோரி கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின் மீது சில முக்கியமான கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், இந்த நாட்டினுடைய இயற்கை செல்வங்கள் அனைத்தும், உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் மக்களுக்கும், தேசத்திற்கும் பொதுவுடைமையாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கக்கூடிய எல்லாப் பயன்களும் சமுதாயத்திற்கு மட்டுமே பயன்பட வேண்டுமென்ற ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசாங்கமும், இந்த சட்டமன்றமும் நன்கு அறியும்.

அதே போல் இந்த வனத் துறையில் கிடைக்கக்கூடிய எல்லா சாத்தியப்பாடுகளையும் அறிந்து அரசாங்கமே அதிலிருந்து கிடைக்ககூடிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தி தேவையான தொழில்களைத் தொடங்குவதன்மூலம் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் சிறந்த வாழ்க்கை அளிக்கும் முறையில் காரியங்களைச் செய்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். தனியார் துறையில் இருக்கக்கூடியவர்களுக்கு காண்டிராக்ட் விடுவது போன்றவற்றை திருத்தி இன்று வேறுபல மாநிலங்களில் செய்வது போல் உதாரணமாக சந்தன மரத்திலிருந்து சோப்புகள் தயாரித்தல், சந்தன எண்ணெய் தயாரித்தல் போன்ற தொழில்களைச் செய்வது; வீடுகள் கட்டுவதற்குத் தேவையான மரங்கள் பலகைகள் கிடைப்பதில் உள்ள சிரமத்தை உணர்ந்து அரசாங்கமே தன்னுடைய நிறுவனங்கள் மூலம் வனங்களில் கிடைக்கக்கூடிய மரங்களிலிருந்து பலகைகளைச் சீராக அறுத்து மலிவான விலையில் மக்களுக்குக் கொடுப்பது, குறிப்பாக ஏழை எளிய மக்கள் கட்டுகிற வீடுகளுக்கு குறிப்பிட்ட அளவுகளில் ஜன்னல்கள், வாசல்கள் ஸ்டாண்டர்ட் சைசில் செய்து மக்களுக்குக் கொடுப்பது போன்ற காரியங்களில் அரசாங்கமே நேரடியாக ஈடுபட்டால் அது மிகவும் பலனுள்ளதாக இருக்கும்.

குறிப்பாக இன்று வனத் துறையில் ஷெட்யூல்டு டிம்பர்ஸ் என்று சொல்லக்கூடியவற்றை சில ஆர்கனைஸ்டு காங்ச்ஸ் பெரும் பணத்தைச் செலவழித்து, வாகனங்களை வைத்துக்கொண்டு

*1979 மார்ச் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வனச் செல்வங்களைக் கடத்திச் சென்று பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் அந்த மாதிரிக் காரியங்களைச் செய்கிறார்கள். அவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும், அந்த வகையில் கொண்டுவரக்கூடிய ஷரத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் சாதாரணமாக வனத்தில் ஷெட்யூல்டு டிம்பர் அல்லது மற்றவற்றை விவசாயிகள் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் சென்று தெரிந்தோ தெரியாமலோ எடுத்துச் செல்லுகிறார்கள். அவர்கள் இன்றையதினம் பெரிதும் வனத் துறை அதிகாரிகளால் இம்சிக்கப்படுகிறார்கள். ஆர்கனைஸ்ட் காங்க்ஸ் என்று வைத்துக் கொண்டு திருடுபவர்களைக் கண்டிப்பாகத் தண்டிக்க வேண்டும். சாதாரண விவசாயிகள் விவரம் தெரியாமல் இப்படிப்பட்ட பொருள்களை எடுத்துச் சென்றால் அவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கக்கூடிய நிலை இருக்கக்கூடாது. அப்படிப்பட்டவர்கள் உயர்ந்த தண்டனை பெற்றுவிடக்கூடாது.

இப்போது 56-டி என்ற பிரிவைப் புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள். அது என்ன கூறுகிறது என்றால் ஷெட்யூல்டு டிம்பரை வெட்டுகின்ற குற்றத்தைச் செய்தவர்கள் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்று அவர்களே நிரூபிக்கவில்லையென்றால் அந்தக் குற்றத்தை அவர்கள் செய்ததாகத் தான் அனுமானிக்கப்படுவார்கள் என்ற வகையிலே புதிய ஷரத்தைச் சேர்த்திருக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை இதை யார் செய்தாலும் குற்றவாளிகள்தான். ஆனால் ஒரு பொது விதியை நாம் வைத்துக் கொள்ளவேண்டும். ஒருவர் குற்றத்தைச் செய்தார் என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு பிராசிக்யூஷனைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். மருவிலக்குத் திருத்தச் சட்டம் வந்தபோது கூட அந்தக் கருத்தைத்தான் நான் வற்புறுத்தினேன். பிரஜைகளுடைய உரிமையைக் குலைக்கின்ற வகையில் ஷரத்து இருக்கக்கூடாது. நான் ஏற்கனவே சொன்னது போல் ஆர்கனைஸ்டு ஸ்மக்லிங் காங்கைப் பொறுத்தவரை கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். பாரஸ்டைச் சுற்றியிருக்கும் விவசாயிகள் ஷெட்யூல்டு டிம்பர் என்று தெரியாமல் சிறிய அளவில் எடுத்தால் அவர்களை இந்தச் சட்டம் பாதிக்கும். குற்றம் செய்தவர்களாக அனுமானிக்கப்படுவார்கள் என்றால் அது சரியல்ல. இது சரியான ஜனநாயக முறைதானா என்று யோசிக்க வேண்டும். சிறு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் காரணமாகத்தான் இதைக் கூறுகிறேன்.

1882வது சட்டத்தில் 52வது விதியைப் பார்த்தால் அதிலே ஒரு பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதை ஒத்துப் பார்த்தால் அது தெரியும். நமக்கு

1979 ஏப்ரல் 30] [திரு. என். சங்கரய்யா]

முன்னாலே இருந்தவர்கள் சட்டபூர்வமாக அப்படிப்பட்ட ஒரு விதியை அதிலே ஏற்பாடு செய்தார்கள்.
அந்த விதி என்ன கூறுகிறது என்றால்

(நண்பகல் 12-00)

'தவறாக கைப்பற்றுவதற்கு அல்லது கைதுசெய்வதற்குக் தண்டனை, வன அலுவலர் அல்லது காவல் துறை அலுவலர் எவரேனும், இந்தச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்படத் தக்க சொத்தினைக் கைப்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு தொல்லை கொடுக்கும் நோக்கத்தோடும், தேவையற்ற வகையிலும் சொத்து ஒன்றை கைப்பற்றுவாரானால், அல்லது எந்த நபரையேனும் தொல்லை கொடுக்கும் நோக்கத்துடன் அல்லது தேவையற்ற வகையில் கைது செய்வாரானால் அவர் ஆறுமாத காலம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அல்லது அய்நூறு ரூபாய் வரை அபராதம் விதிக்கப்பட்டு அல்லது அவ்விருவகைத தண்டனையும் விதிக்கப்பட்டு தண்டிக்கப் படவேண்டும் என்று இருக்கிறது. இந்த ஷரத்தை ஏன் நீங்கள் இப்போது நீக்குகிறீர்கள்? தொல்லை கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு கிராமப்புற விவசாயிகளோ அல்லது மக்களோ யாருக்காவது வனத் துறை அலுவலரோ அல்லது காவல் துறையினரோ எந்தத் தவறான காரியத்தையும் செய்தால், செய்யக் கூடாது, அப்படிச் செய்தால் அவர்கள் அத்துமீறி அவர்களுக்கு ஏதாவது செய்தால் அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படி இருப்பதை ஏன் நீக்கு கிறீர்கள்? அப்படி நீக்குவதன் மூலமாக அப்படிச் செய்தால் அதைப் பாதுகாப்பதற்குத்தான் நீங்கள் வகை செய்கிறீர்கள். வனத்துறை அலுவலரோ அல்லது காவல் துறையினரோ அப்படிச் செய்யக்கூடிய வகையிலே அதிகாரத்தைக் கொடுத்தால் சரியல்ல. ஏற்கனவே உள்ள பாதுகாப்பை நீங்கள் நீக்குவது நியாயமல்ல, ஏன் அதை நீக்கவேண்டுமென்று தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த பாதுகாப்பு தொடர்ந்து இருக்கவேண்டும். சுமக்கிள் பண்ணக்கூடிய, பண வசதி படைத்த மிகப், பெரிய அளவிலே வாகனங்களை ஏற்பாடு செய்யக்கூடிய, மூலவர்களை நீங்கள் பிடித்து தண்டியுங்கள், யார் அதற்கு பைனான்ஸ் செய்கிறார்களோ அவர்களைப் பார்த்து தண்டியுங்கள், அப்படியில்லாமல் தவறான தொல்லை கொடுக்க வேண்டுமென்ற முறையிலே வனத் துறை அலுவலரோ அல்லது காவற் துறை அலுவலரோ செயல் பட்டால் அதைத் தண்டிக்கக் கூடிய முறையிலே இருக்கின்ற எச்சரிக்கையை நீங்கள் நீக்குவது சரியல்ல என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : தமிழ்நாடு வன சட்டத் திருத்த மசோதாவிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். செக்ஷன் 21-ஐப் பொறுத்தவரையில் கொண்டு வந்திருக் கின்ற திருத்தத்தை நான் வரவேற்கிறேன். செக்ஷன் 26 ஐப் பொறுத்தவரையிலே நான் அந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

வனத் துறையிலே பல கான்ட்ராக்ட்கள் விடப்படுகின்றன. அரசால் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் எடுத்துச் செல்லப்படு கின்றன. அப்படி எடுத்துச் செல்லப்படுகின்ற முறையிலே சில முறைகேடுகள், தவறுகள் வந்து விடுமானால் இப்போது இருக்கும் சட்டப்படி தண்டனை கொடுத்தால் போதுமானது, அதை மாற்றி கடுமையான தண்டனை கிடைக்கக்கூடிய திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது நேர்மையற்றது, ஆகவே அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் முக்கியமாகக் கூறிக்கொள்வேன், 42வது செக்ஷனுக்கு அமெண்ட்மெண்ட்டை நான் கடுமையாக எதிர்க் கிறேன். காரணம் இப்போது இந்தக் குற்றம் செய்யப்படுகிற போது — இப்போது வன இலாகா அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றம் கண்டுபிடிக்கப் படுகிறபோது குற்றம் சம்பந்தப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப் பட்டால் அவைகளை அவர்களே நிறுத்தி வைத்துக் கொள்ளலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன். கிரிமினல் நடைமுறைச் சட்டத்திலே கூட எந்த ஒரு பொருள் கைப்பற்றப்பட்டாலும் உடனடியாக எந்த கோர்ட்டின் அதிகார வரம்பிற்குள் இருக்கிறதோ அங்கே அனுப்பிவைக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அதை மீறுகிற முறையிலே அதற்கு மாறுபாடான முறையிலே அளவில் லாத அதிகாரம் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. லாரிகள் கைப்பற்றப்பட்டால், அந்த வழக்கு கோர்ட்டிற்குப் போய் தீர்ப்பு வருவதற்கு 6 மாதம் அல்லது 1 ஆண்டு ஆகும். ஒருவேளை அந்தக் கோர்ட்டின் தீர்ப்பு அரசுத் துறைக்குப் பாதகமாக வந்தால், ஒரு வேளை அவர்கள் நஷ்ட ஈடு கோரக்கூடிய நிலைமை வந்தால் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் வீதம் கூட அவர்கள் தொகையைக் கேட்பார்கள், அப்போது அரசாங்கத்திற்குத் தான் நிறைய நட்டம் ஏற்படும். ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இன்னொன்று, வாகனங்களுக்கு சொந்தக்காரர்கள் இருந்தாலும் அந்த ஓட்டுகிறவர்கள் தவறுகள் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்திலே அந்த வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப் பது நியாயமில்லை. இதனால் செக்ஷன் 42க்கு கொண்டு வரப் பட்டிருக்கிற திருத்தத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன், அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செக்ஷன் 13-ஐ எதிர்க்கிறேன். காக்னைசபிள் அபன்ஸ் என்று அதிலே போடப்பட்டிருக்கிறது. பாரஸ்ட் ஆக்டிலே சில செக்ஷன்கள் இருக்கின்றன. அதன்படி வன இலாகாவினர் தான் கேஸ் போடுகிறார்கள். ஆனால் இதிலேமட்டும் காக்னைசபிள் அபன்ஸ் என்று போட்டு ஏன் போலீஸ் துறைக்கு அதை ஒப்படைக்கவேண்டும். நான் கேட்டுக்கொள்வது, ஃபாரஸ்டாருக்கு ஒரு நடைமுறையும் போலீஸ்காரருக்கு ஒரு நடைமுறையும், கிரிமினல் ப்ரொசிஜர் கோடின்

அடிப்படையில் போலீசார் நடவடிக்கை எடுக்கலாம், ஆனால் ஃபாரஸ்ட் ஆக்டின்படி வனத்துறை நடவடிக்கை எடுக்கலாம் என்று அடங்கிய ஒரு சில செக்ஷன்களை 'காக்னைசபிள் அஃபென்ஸ்' ஆக ஆக்கி ஏன் கொடுக்க வேண்டுமென்று தெரியவில்லை. இது தேவையற்றது.

56-டி அமெண்ட்மெண்டையும் நான் எதிர்க்கிறேன். காரணம் என்னவென்றால்,

Whenever any person is accused of any offence under this Act in respect of any scheduled timber the burden of proof is put on the accused.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்கும் முறையிலே அமைந்திருப்பது கிரிமினல் சட்ட ஜூரிஸ்டிக்ஷனுக்கு எதிரானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதையும் கடுமையாக எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் கொண்டு வந்த செக்ஷன் 21-க்குள் கொண்டு வந்ததிருத்தத்தை ஏற்றுக்கொண்டு. மற்றத் திருத்தங்களை அரசு வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, ''வற்றாத செல்வம் வனச் செல்வம்'' என்று செல்வார்கள். ஆனால் அந்த வற்றாத செல்வமும் இன்றைக்குப் பரவலாகக் குறைந்து கொண்டிருக்கிறது என்ற நிலைமைதான் தமிழகத்திலேயும் இருக்கிறது, மற்ற மாநிலங்களிலேயும் இருக்கிறது. ஆகையினாலே தான், மொத்த நிலப்பரப்பிலே ஏறக்குறைய 33 சதவீதம் வன நிலப் பரப்பாக இருக்க வேண்டும், அதுதான் நாட்டிற்கு நல்லது என்று அகில இந்திய அளவிலே ஒரு கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அந்தக் குறிக்கப்பட்ட அளவிலே பாதிகூட வனம் இன்றைக்கு இல்லை என்ற பயங்கரமான உண்மை வெளியாகியிருக்கிறது. அதை இந்தத் துறை கவனித்து வனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இப்பொழுது இங்கே கொண்டு வந்திருக்கும் சட்டத்தின் வாயிலாக 'ஷெட்யூல்ட் டிம்பர்ஸ்' என்று சிலவற்றைக் குறித்திருக்கிறார்கள். அவைகளைப் பதுக்கல் செய்தாலோ அல்லது திருடிக்கொண்டு வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் சென்றாலோ அவர்களுக்குத் தண்டனை எந்த அளவிற்கு இருக்க வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு சட்டமாக இது அமைந்திருக்கிறது. ஆனால் அதோடு நான் அரசைக் கேட்டுக்

கொள்வது, ஒன்று, வெளியிலே இருப்பவர்கள் திருடுகிறார்கள், அவர்களுக்குரிய முறைள், தண்டனை விதிப்பது என்பது. அதேநேரத்தில் நான் ஒரு வனப்பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே ஒரு உண்மையைச் சொல்கிறேன். இந்த வனத்திலே இருக்கும் வனப் பொருட்கள்—குறிப்பாகச் சந்தனம் போன்றவைகள் திருடு போவதற்கு முக்கியமான காரண கர்த்தாவாக இருப்பவர்கள் அல்லது அதற்கு உறுதுணையாக வழி வகுத்துக் கொடுக்கக்கூடியவர்கள் அரசாங்கத்திலே உத்தியோகம் செய்யக்கூடிய பொறுப்புள்ள அலுவலர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ரேஞ்ச் ஆபீசர்கள், ஃபாரஸ்டர், கார்ட் என்ற அளவிற்கு இருக்கக்கூடிய அரசாங்க உத்தியோகத்திலே இருக்கக்கூடிய பொறுப்புள்ள அதிகாரிகள்தான் இன்றைக்குச் சந்தன மரங்கள் மிக அதிகமாகத் திருடு போகக் காரண கர்த்தாவாக அல்லது திருடுபவர்களுக்குத் துணை செய்பவர்களாக இருக்கிறார்கள் அப்படித் துணை செய்து அவர்களுக்கும் ஆதாயம் தேடித்தந்து இவர்களும் ஆதாயம் தேடிக்கொள்பவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரிகள் தவறு செய்தால்—அமைச்சரவர்கள் தயவு செய்து இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—அவர்களுக்கு இந்தச் சட்டத்திலே என்ன நிர்ணயம் செய்திருக்கிறீர்கள்? தனிப்பட்டவர்கள் திருடினால், "நான்-பெயிலபிள் அஃபென்ஸ்" என்று சொல்கிறீர்கள். மேலும் தாங்கள் குற்றம் செய்யவில்லை என்று நிருபிக்கும் பளு, பொறுப்பு குற்றவாளியின் மீது இருக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறீர்கள், ஆனால் அதிகாரிகள் இன்றைக்குத் துணை நிற்கிறார்கள் என்றால், திருடுபவர்களுக்குத் துணையாக வழிவகுத்துத் தந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு என்ன தண்டனை என்று குறித்து இருப்பீர்களேயானால் அது வரவேற்கக் கூடிய ஒன்றாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சந்தன மரத் திருட்டைப் பற்றிச் சொல்கிற பொழுது, திருடுபவர்கள் ஏதோ காட்டிலே வேலை செய்யும் கூலிகள் ஏதோ பத்து ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது என்று வண்டி ஓட்டிக்கொண்டோ, தலையிலே சுமந்து கொண்டோ, இராஜபாட்டையிலே சென்றால் நம்மைப் பிடித்துக்கொள்வார்கள் என்ற பயத்தின் காரணமாகக் குறுக்கு வழியிலே நுழைந்து, கானகத்திலேயிருந்து எடுத்து வந்தாலும் இதை உண்மையாகத் திருடி விற்பனை செய்யக் கூடியவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றால் மெட்ராசிலே இருக்கிறார்கள். ஜவ்வாது மலைப்பகுதியில் திருட்டுப் போகிறது என்றால் அதன் மூலகர்த்தாக்கள் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா? சென்னையிலே இருக்கிறார்கள், ஒருசிலரை எனக்குத் தெரியும். அவர்கள் எப்படித் தப்பிச்கிறார்கள் என்று தெரியவில்லை. பல தடவை பிடிக்கப்படுகிறார்கள், கேஸ் போடப்படுவதில்லை, அவர்கள் எங்கெங்கு, என்னென்ன, எதை எதைச் செய்கிறார்

கள், என்ன மாய மந்திரம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வில்லை: இதில் தப்பித்துக் கொண்டுள்ள இப்படிப்பட்ட திமிங்கிலங்கள் எல்லாம் சென்னையிலே இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

வேலூரிலே இருக்கிறார்கள், சித்தூரிலே இருக்கிறார்கள் பெங்க ளூரிலே இருக்கிறார்கள். வேண்டுமென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட விளக்கம் எல்லாம் தேவை இல்லை. நீங்கள் நேரத்தைப் பார்க்க வேண்டும். நேரம் இல்லை, இன்னும் 5 'பில்' இருக்கின்றன. தயவுசெய்து திருத்தத்திலே இருக்கிற குறைபாடுகள் அல்லது வரவேற்கத் தக்கவை, இவைகளைச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: சட்டம் வந்திருக்கிறதே எதற்கு என்று சொன்னால், இதைக் குறைக்கவேண்டும். இந்தச் சந்தன மரம் திருடு போவதை..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே நேரத்தில் எனக் கும் மற்ற மசோதாக்களை நிறைவேற்ற தாங்கள் தங்கள் நேரத்தைக் குறைக்க வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: ரிஷி மூலம், ஏதோ மூலம் என்று சொல்வார்களே, அது போல் திருட்டு மூலம் இருக்கிறது. ரிஷி மூலம்தான் பார்க்கக் கூடாது, திருட்டு மூலத்தைப் பார்க்க வேண்டும். திருட்டு மூலத்தைப் பார்த்து அதனைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காடுகளை காப்பாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள், காடுகளைக் காப்பாற்ற என்ன நடவடிக்கைகள் எடுக்கிறார் கள்? ஒன்று ஃபாரஸ்ட் துறையிலே இருக்கிறது, இன்னொன்று ரெவினியூ டிபார்ட்மெண்டிலே இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே காவலூரிலேயிருந்து சிங்காரப்பேட்டை வரை, பல ஆயிரக்கணக்கான ஹெக்டேர்கள் ரெவினியூ துறையிலே இருக்கிறது. காட்டிலாகா அதிகாரிகள் அங்கே போவதில்லை. காட்டிலாகா அதிகாரிகள் போகாத காரணத்தாலே, அங்கே காடுகள் வெட்டப்படுகின்றன. மக்களுக்கு முக்கியமான செல் வங்கள் காடுகள். இன்றைக்குக் காடுகள் பூராவையும் திருடர்கள் வெட்டி, வெட்டி, திருடிக் கொண்டு போகிறார்கள்; சந்தன மரம் திருட்டுப் போகிறது. இந்த நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு நீடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அவற்றைப் பற்றி, இந்தச் சட்டத்தை நிலைநாட்டுபவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த பர்டன் ஆஃப் ப்ரூஃப் அக்யூஸ்ட் மேலே போட்டிருக்கிறார்கள் இது எஸ்டாபிளிஷ்ட் கிரிமினல் கன்வென் ஷனுக்கு ரொம்ப விரோதமாக இருக்கிறது. அப்பாவிகள்தான்

பிடிபடுவார்கள். கடத்துகிறவன் நிச்சயமாகப் பிடிபட மாட்டான். அவன் வண்டியை விட்டு ஓடுவான், மாட்டையே விட்டு விட்டு ஓடுவான். ஓட்டுபவன்தான் மாட்டுவான். அவனுக்கு வக்கீல் வைக்கக்கூட வக்கு இல்லை. வக்கீல் வைக்க வக்குள்ளவன் பெங்களூரிலே சல்லாபம் செய்து கொண்டிருக்கிறான். அவனைப் பிடித்து, தண்டனைக் கொடுங்கள், காட்டிலுள்ள அந்த மரங்களை, வனங்களை அழித்துக் கொண்டிருக்கிற நாட்டுக்கு நாசம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நாசகாரர்களை, ஒடுக்க வேண்டுமே தவிர, அதற்காக இந்த பர்டன் ஆஃப் ப்ரூவ் பிராசிக்யூஷன் தரப்பிலேதான் இருக்கவேண்டுமென்ற வகையில் இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால், தர்ம நியாயத்திற்கு விரோதமாக இருக்கும்.

காட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நாட்டிலே இருக்கிற அமைச்சர்களுக்கு உண்டு. நாட்டைக் காக்க காட்டை காக்கவேண்டும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது. அதை மறந்தால் நமக்கு மழை கிடைக்காது. நாட்டிலே வளம் இராது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லி, இந்த மசோதாவினுடைய உள்ளார்ந்த நோக்கத்தை வரவேற்று, அதிலே இருக்கிற சில விவரங்களை மட்டும் மாற்ற வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, 1882—வது ஆண்டு சட்டத்திற்கு, ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்குப் பின்னால், இப்பொழுது சிறிய திருத்தம் கொண்டு வருகிறோம். ஏற்கனவே இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் வன இலாகா அதிகாரிகளுக்கு போலீஸ் அதிகாரிகளின் அதிகாரம் இருக்கிறது. அதோடு மாஜிஸ்டிரேட் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை அதிகாரங்களும் போதாது, இன்னும் கூடுதல் அதிகாரங்கள் கொடுப்பதற்காக இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை எல்லாம் எனக்கு முன்பு நண்பர்கள் எல்லாம் விரிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள். என்றாலும், ஒன்றைக் கூற விரும்புகிறேன். வனங்களில் நடைபெறக்கூடிய ஊழல்கள், அங்கே இருக்கிற அதிகாரிகளின் உடந்தையோடுதான் நடைபெறுகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு திருட்டுக்கள் அங்கே நடைபெறுகின்றன. ஆனால், திடீரென்று, ஃப்ளையிங் ஸ்குவாட் அதிகாரிகள் அங்கே சென்றால், ஒரு திருட்டையும் பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஃப்ளையிங் ஸ்குவாட் புறப்படுகிறது என்று சொன்னால், புறப்பட்டு 50 மைல் காரிலேயோ, ஜீப்பிலேயோ வருவதற்கு முன்னால், அந்தச் செய்தி வன இலாகாவால் வனத்திற்கு உள்ளே செல்கிறது. திருட்டில் ஈடுபட்டுள்ளவர்கள் வனத்தில் மறைந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது.

1979 ஏப்ரல் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆகவே இந்த செயின் ஆப் அஃபென்ஸ், அந்தக் குற்றத்திற்கான சட்டத்திருத்தம் எந்த அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நன்றாக கூர்ந்து கவனிக்கவேண்டும். அதை செயலாற்றுகின்ற அதிகாரிகள்தான் அதிகமாக பொறுப்பு வகிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மீண்டும் அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தால் ஏழைகள்தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே அதிகாரிகள் தவறு செய்தால் அதை தண்டிப்பதற்கான ஒரு கிளாஸ் செக்‌ஷன் 52 என்று இருந்தது. அந்த கிளாஸ் கூட இந்த திருத்த சட்டத்தின்கீழ் செயலற்றதாக ஆக்கப்பட்டு விட்டது என்று சொன்னால் அதிகாரிகளுக்கு அதிகாரம் அதிகமாக அளிக்கப்படுகிறது. அவர்கள் தவறு செய்வதற்கு உதவியாக இருக்கிறது. அவர்களுக்கு இந்த திருத்தச் சட்டம் பாதுகாப்பு கொடுக்கிறது. ஆகவே சுருக்கமாக குறிப்பிட்டால் அதிகாரிகளுக்கு அதிகமாக அதிகாரம் கொடுத்து அவர்கள் தவறு செய்வதற்கு வழி வகை செய்யும் நிலைமையில் இந்த திருத்த அமைப்பு இருக்கிறது, என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே வன இலாகாவில் மரங்கள் எப்படி களவாடப்படுகின்றன, எப்படி கொள்ளையடிக்கப்படுகின்றன என்பது நமக்கெல்லோருக்கும் தெரியும். ஆக்‌ஷனில் விடப்படுகிற அளவு ஒன்றாக இருக்கிறது, ஆனால் அவர்கள் ஆக்‌ஷனில் எடுத்தவர்கள் அதை வெளியே எடுத்துச் செல்கிற அளவு பன்மடங்கு அதிகமாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடுதான் நடைபெறுகிறது, அது மட்டும் அல்ல, அதிகாரிகளுடைய ஒத்துழைப்பினால் குவிண்டால் 100 ரூபாய் என்று வாங்குவார்கள், அதிகாரிகளும் அப்படி குறைந்த விலைக்கு கொடுக்க உதவி செய்வார்கள், அதை இரண்டு மூன்று காண்டிராக்டர்கள் சேர்ந்துவாங்குவார்கள், ஆனால் அதை வெளியே எடுத்துச் சென்று விற்கும்போது 10 மடங்கு அதிகமாக விற்கிறார்கள். சந்தன மரங்கள் எல்லாம் இப்பொழுது என்னவிலை தெரியுமா? இவைகள் எல்லாம் அதிகமாக நடைபெறுவதைக் காணலாம். இந்தச் சட்டத்தை திருத்தினால் மட்டும் நமது வனம் பாதுகாக்கபபட்டு விடாது. அதனால் இந்த ஊழல்களை ஒழிக்கின்ற வகையில் இந்த திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டு இதனால் சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், வனத்தை அடுத்து நிறைய தனியார் நிலங்கள் இருக்கின்றன, இவைகளுக்கு இடையே 10 மைல் தூரம் இருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு இந்த நிலங்களிலிருந்து ஏதாவது எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், அங்கே இருக்கக்கூடிய வனத்துறை அதிகாரிகளுக்கு மாமூல் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. இது எந்த அளவுக்கு விவசாயிகளை பாதிக்கும் என்பதை அரசு நன்கு உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 5 மசோதாக்கள் இருக்கின்றன. தயவு செய்து சுருக்கமாக முடியுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : முடித்துவிடுகிறேன். ஆகவே பெரும் புள்ளிகள் ஆயிரக்கணக்கில் கொள்ளையடிப்பது, சந்தன மரங்களை திருடிக்கொள்வது, ஆக்ஷனில் கொள்ளையடிப்பது எல்லாம் நடைபெறும், ஆனால் சிறு விவசாயி தனக்கு தேவையான சுள்ளிகளைப் பொறுக்கினால் அல்லது ஏதாவது தழைகளை எடுத்துக் கொண்டால் அதற்காக அவனை 2, 3 வருடங்கள் தண்டிப்பது என்பது எப்படி நியாயமாகும்? ஆகையால் தேவையான விதத்திலே சட்டத்திருத்தம் இதற்கு கொண்டு வரப்படவேண்டும். இந்த சட்டத் திருத்தத்தில் இதற்கான வழி முறைகளை மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி எழுந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதுவரையில் பேசப்போவதாக சொல்லவே இல்லையே. . . .

திரு. சோ. அழகர்சாமி : கொஞ்சம்தான். சீக்கிரம் என்னுடைய கருத்தை சொல்லி முடித்துவிடுகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு ஒன்றும் இல்லை. நீங்கள் பேச வேண்டும் என்று சொன்னால் தடுக்கவில்லை. இன்னும் 5 மசோதாக்கள் இருக்கின்றன. நேரமாகிறது என்று சொன்னேன். சரி பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் இந்த மசோதாவைப்பற்றி பல கருத்துக்களை நமது மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல விவரங்களை எடுத்துச் சொல்லிவிட்டார்கள். நானும் இரண்டொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். விலை உயர்ந்த சந்தன மரங்கள் களவாடப்படுகின்றன—இன்னும் எத்தனையோ திருட்டுகள் நடைபெறுகின்றன நமது வனத்துறையிலே. அவைகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும், அதற்காக சட்டம் கொண்டு வருவது சரிதான், ஆனால், சாதாரண ஆட்கள் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை. பெரிய ஆட்கள் எவ்வளவோ ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் மரங்களை கொண்டுபோய் விற்கிறார்கள். ஆனால் அவர்களை யார் தடுக்கிறார்கள்? சாதாரண ஆட்கள் கலப்பைக்கு மரம் போடுவதற்காக எடுத்தால் அவனுக்கு 3 வருடங்கள் 2 வருடங்கள் என்று போட்டு தண்டித்துவிடக்கூடாது. அதுதான் என்னுடைய கவலை. ஆனால் மரங்களை காக்க வேண்டிய பொறுப்பு நிர்வாகத்திற்கு இருக்கிறது, களவுகள் தடுக்கப்பட வேண்டும் என்று சொல்வது அந்த அளவிலே நியாயம் இருக்கலாம். ஆனால் சாதாரண ஆட்கள் இதனால் பாதிக்கப்பட்டு விடக்கூடாது.

1979 ஏப்ரல் 30] [திரு. சோ. அழகர்சாமி]

பெரும்புள்ளிகள் எவ்வளவோ திருடுகிறார்கள். அதிகாரிகளும் அவர்களுக்கு ஒத்துழைக்கிறார்கள். அதிகாரிகள் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களை தண்டிக்கக்கூடிய வகையில் ஒரு ஷரத்து இருந்தது. நமது மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும் போதுகூட குறிப்பிட்டார்கள். விதி 52 என்று இருந்தது என்று. அந்த 52-வது ஷரத்தை ஏன் எடுத்துவிட்டார்கள் என்று தெரியவில்லை. விலை உயர்ந்த சந்தன மரத்தை திருடுபவர்களுக்கும், அவர்களுக்கும் உதவி செய்யும் அதிகாரிகளுக்கும் தண்டனை கொடுக்கட்டும். ஆனால் ஏழை எளிய மக்கள் ஏன் இதனால் தண்டிக்கப்படவேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 52-வது விதியை கொண்டு வருவதைப்பற்றியும், ஏழை எளியவர்கள் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கும், களவு செய்பவர்கள் குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். ஆகையால் அந்த வகையில் இவைகளை நன்கு பரிசீலித்து, தீர ஆலோசனை செய்து முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை சொன்னதற்காக அரசின் சார்பில் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் வனங்களில் இருந்து கிடைக்கும் பொருட்களை வைத்து அரசே பல்வேறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்று நல்லதொரு யோசனையைச் சொன்னதற்கு நான் அவர்களுக்கு நன்றியறிதலை இந்த நேரத்தில் தெரிவிக்கிற அதே நேரத்தில், ஓராண்டு காலத்திற்கு முன்னால் நம்முடைய தமிழகத்தில் உள்ள வனப் பகுதியில் உள்ள சந்தன மரத்தைப் பயன்படுத்தி சந்தன எண்ணெய் போன்ற வாசனை திரவியங்களைத் தயாரிக்கும் ஆலை ஒன்று அமைப்பது என்று முடிவு எடுத்து இருக்கிறோம் என்பதை அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதேபோல் வனங்களில் இருந்து கிடைக்கும் பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி இன்னும் என்னென்ன தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பதிலே தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். திருத்த மசோதாவைப்பற்றிச் சொல்கிற நேரத்தில், 52-வது விதியைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிற நேரத்தில் எல்லோருமே அந்த விதி

திருத்த மசோதாவிலே வைக்கவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்தினார்கள். அதைப்போல அழகர்சாமி அவர்களும் இங்கே ஜேம்ஸ் அவர்களும் அந்த கருத்தை வலியுறுத்தினார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அந்த விதி அதிலே இருப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை, அதிலே இருக்கட்டும் என்று தனது ஒப்புதலைத் தந்து இருக்கிறார்கள். திருத்தப்பட்ட மசோதாவிலே 52-வது விதி இடம் பெறுவதிலே இந்தத் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

56-டி பற்றி சொன்னார்கள். குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டுபவர்களுக்கே இருக்கவேண்டும், சாட்டப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடாது, இது அரசியல் சட்டத்திற்கு விரோதம், கிரிமினல் ப்ரொசிஜருக்கு விரோதம் என்று சொன்னார்கள். வழக்கறிஞராக இருக்கும் திரு. லத்தீப் அவர்களும் வாதிட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த விளக்கத்தை அவர்களுக்கு பதிலாகச் சொல்வதன் மூலம் அவர் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். 1882-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலேயே அந்த 56 எண் விதி வைத்து படிப்பார்களானால், இப்போது புதிதாக நுழைக்கப்பட்டு இருக்கிற 56-டி விதி இருப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

விதி 56—

When in any proceeding under this Act or in consequence of having been done under this Act, a question arises as to whether any forest produce is the property of Central or State Government, such produce shall be presumed to be the property of Central or State Government, until the contrary is proved. என்று ஏற்கனவே இருந்த பழைய சட்டத்திலே இருக்கிறது. 1882-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : அது பொருள்பற்றிய விதி. இது மனிதனைப் பற்றிய விதி.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : நான் இரண்டையும் உணர்ந்து தான் சொல்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : In French Law, the accused is deemed to be guilty until he proves that he is not guilty என்று இருந்தது. ஆனால் தமிழகத்திலே இப்போது சமீப காலத்தில்

1979 ஏப்ரல் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

நிறைவேற்றப்படுகின்ற சட்டம் குறிப்பாக ப்ரொகிபிஷன் ஆக்ட், அந்தச் சட்டத்திலே கூட the onus of proof is put on the accused to prove that he is not guilty.

This is a dangerous provision. You must reconsider it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குள்ள விதி, இன்னும் 5 மசோதாக்களை நிறைவேற்றவேண்டும். கொஞ்சம் சீக்கிரம் முடித்தால் நல்லது.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: There is no objection for the Government to reconsider the matter. இந்தச் சட்டம் ஏற்கனவே இருக்கிறது. 56-வது விதி 1882-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே இருக்கிறதை வைத்துப் பார்த்தாலும், யாராவது ஒரு மரம், அல்லது வனச்சொத்துக்களை வைத்து இருந்தால், பிரசம்ஷன் என்னவென்றால், அது மாநில அரசுக்குச் சொந்தம், மத்திய அரசுக்குச் சொந்தம் என்று தான் சொல்லமுடியும். அது தனிப்பட்டவரின் சொத்து என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு யார் அந்தச் சொத்தை—பொருளை வைத்து இருக்கிறார்களோ அவர்கள் தான் நிரூபிக்க வேண்டும் என்று அப்போதே வைத்து இருக்கிறார்கள். அது மனிதனைப் பற்றியதல்ல, பொருள் பற்றியது என்றார்கள். ஏற்றுக் கொள்கிறேன். அதை நாம் எடுத்துக் கொள்கிறோம் இப்போது. இப்படிப்பட்ட விதி வைக்கிற நேரத்தில், அந்தத் தவறு அவர்கள் செய்தால் என்று விதிமுறைகள் நிறைவேற்றும் நேரத்தில் இப்படி தவறு தாங்கள் செய்யவில்லை என்று நிரூபிக்கிற பொறுப்பை அவர்களிடம் விட்டு விடுவது என்பதை இதிலே திணிப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நினைக்கிறேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிற காரணத்தால், இப்போது இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னால் இந்தச் சட்டம் எந்த அளவுக்கு பயனுள்ளதாக இருக்கிறது அல்லது மக்களை பாதிக்கிறது என்பதை அறிந்து, தேவையான நேரத்தில் இந்தச் சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறது; ஆகவே, அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட்டால் இந்தத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்ற உறுதியைக் கொடுத்து, இந்த சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தாங்கள் சொன்னதைப்போல, இப்போது கொண்டுவந்திருக்கிற சட்டத்தில் omission of Section 52 of Tamil Nadu Act V of 1882 என்று சொல்லிவிட்டீர்கள். அதற்கான திருத்தத்தை முன்மொழியும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த பிரிவு வரும்போது முன்மொழிந்தால் போதும். பேரவை முன்னுள்ள கேள்வி–

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 11.

MR. SPEAKER: The question is :–

"That Clause 11 do stand part of the Bill".

THE HON. THIRU G. R. EDMUND: Sir, I move the following amendment:–

"Omit Clause 11 and renumber Clauses 12 to 14 as Clauses 11 to 13 respectively."

The amendment was put and carried.

Clauses 11 to 13 as renumbered were put and carried.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. க. உ. ரா. எட்மண்ட் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1979 திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்", என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I beg to move:

"That the Tamil Nadu Pawnbrokers (Second Amendment) Bill,* 1979 (L. A. Bill No. 34 of 1979) be taken into consideration".

* ஏப்ரல், 25 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

In moving the Bill, I wish to say that under the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943) no pawnbroker shall charge interest in respect of a loan on a pledge at a rate exceeding twelve per cent per annum simple interest. The Government have decided to amend the Act, so as to empower the Government to fix, from time to time, by notification, the rate of interest to be chargeable by the pawnbrokers, in correlation with the bank rates of lending, as may be fixed by the Reserve Bank of India, from time to time. This Bill seeks to give effect to the above decision.

Sir, I request the House to accept the motion.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த பில் நம்பர் 34/1979 என்பது 'பானபுரோக்கர்ஸ் ஆக்ட்' பற்றியது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ரிசர்வ் பாங்கில் கொடுக்கக் கூடிய வட்டியை அப்போதைக்கப்போது மாற்றுவதாக இருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்ல விரும்புவது, ரிசர்வ் பாங்கில் 4% வட்டி என்று கொடுக்கிறார்கள் என்றால் அதை ஒட்டியே 6% என்ற அளவுக்குத்தான் வைக்க வேண்டுமே தவிர அதைப்போல 2 மடங்கு, 3 மடங்கு, 4 மடங்கு வட்டி என்று போடுவது சரியல்ல. அப்படி போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று சொல்லி இந்த பில்லில் என்னுடைய கருத்தை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

அடுத்து மனிலெண்டர்ஸ் ஆக்ட், அதாவது பில் 35/79 அதைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம் தான் வட்டிக் கடைக்காரர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டது. அந்த ஆக்டைப் பொறுத்தவரையில் அது டெட் ரிலீஃப் ஆக்ட் என்று சொல்லப்பட்டது. அது ஒரு மோசமான சட்டம் என்று நேற்றே குறிப்பிடப்பட்டது. இன்றைக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மனிலெண்டர்ஸ் ஆக்டைப் பொறுத்தவரையில் இதில் வரவேற்கத்தக்க சில அம்சங்கள் இருக்கின்றன. பொதுவாக பர்டன் ஆப் ப்ரூஃப் வட்டிக்கடைக்காரர்கள் வசமே போகவேண்டும் என்று சொல்லப்படுவது வரவேற்கத் தக்கது. இருந்தாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய இந்திய முறையில் இருக்கின்ற சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு 100 ரூபாய் கடன் வாங்குகின்றவன் 200 ரூபாய், 300 ரூபாய் கடன் வாங்கியதாக எழுதிக்கொடுத்துவிட்டுத்தான் கடன் வாங்கவேண்டிய பரிதாபகரமான நிலை இருக்கின்றது.

அப்படி இல்லை என்றால் அவனால் கடனே வாங்க முடியாத நிலை தான் ஏற்படும். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் யாராவது ஒருவர் நிரப்பப்படாத ஒரு நோட்டைக் கையில் வைத்திருந்தால் அது சட்டப்படி குற்றம் என்று சொல்லப் படுகிறது. ஆனால் உண்மை நிலைமை என்ன? 100 ரூபாய் கடன் வாங்குகின்றபோதே 300 ரூபாய் கடன் வாங்கினேன் என்று எழுதி வாங்கப்பட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. அதே நேரத்தில் அதை நிரூபிக்க முடியாத பரிதாப கரமான நிலைமை இருக்கின்றது.

ஆகவே, இன்றிருக்கக்கூடிய வறுமையை, வாழ்க்கைச் சிக்கலை, பணக்கஷ்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு வட்டிக் கடைக்காரர்கள் வேண்டுமென்றே இவ்வாறு எழுதி வாங்கு கிறார்கள். அது மட்டுமல்ல. கிராமப்புறங்களில் வட்டிக்கடைக் காரர்கள் எந்தவிதமான தஸ்தாவேஜும் இல்லாமல் கந்து வட்டி என்ற முறையில் பத்து ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அந்தப் பத்து ரூபாய்க்கு வாரத்திற்கு ஒரு ரூபாய் வட்டியாக வசூலித்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான நிலைமை பல கிராமங்களில் இருக்கின்றன. கிராமப்புறங்களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களிலும் இருக்கின்றன. குறிப்பாகத் தொழிற் சாலைப் பகுதிகளில் இந்த நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையை இல்லாமல் ஆக்கவேண்டுமென்றால் உடனடியாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பக்கத்திலே இருக்கக் கூடிய போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுக்கின்றபோது அது காக்னிசபிள் அஃபன்ஸ் என்ற முறையிலே உடனடியாக அப்படிப்பட்ட சமூக விரோதிகளைத் தண்டிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுப்பதற்குரிய வழிவகைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தாலொழிய இதிலே இருக்கின்ற சிரமங்களைப் போக்க முடியாது. இன்றைக்கும் சாதாரண நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய உழைப்பாளி மக்கள் எல்லாம் 10 ரூபாய் கடன் வாங்கியவர்கள் எல்லாம் வாரத்திற்கு வட்டியாக ஒரு ரூபாய் கொடுக்கவேண்டிய பரிதாபமான நிலை இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட நிலையைப் போக்கவேண்டுமென்றால் அரசின் தரப்பிலேயே வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற முறையை ஏற்படுத்தி, கூட்டுறவு சங்கங்கள் போன்றவற்றின் மூலம் வட்டித் தொழிலை நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டும். குறிப்பாக நகைக்கடனை அதிகப்படுத்தவேண்டும். ஏதாவது ஒரு பொருளை வைத்து அவசரமான செலவுக்குப் பணம் வேண்டுமென்றால் அவர்கள் கடன்களை மிக எளிதாகப் பெறுகின்ற வகையில் எளிய முறைகளை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுதினால்தான் இந்த நிலைமை மாறும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்துவதற் குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 30]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தப் 12 சதவிதம் வட்டி சம்பந்தப்பட்ட விஷயத்தில் எனது கட்சியின் சார்பாக நான் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது தமிழகத்தில் பெரிய பாங்குகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். பெரிய வட்டிக் கடைகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அவைகள் எல்லாம் யாருக்குப் பயன்படுகிறது என்று சொன்னால் பெரிய மனிதர்களுக்குத்தான் பயன்படுகிறது. இன்றைக்கு 12 சதவீதம் வட்டி என்று சொல்கிறோம். கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு வருமானம் வருகின்ற போது சில பொருட்களை வாங்குகிறார்கள். வறுமை வருகின்ற போது அந்தப் பொருளை அடகு வைக்கவேண்டிய சூழ்நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு 500 ரூபாய் கடன் தேவைப்படுகின்றது என்று சொன்னால் வட்டிக்குக் கொடுப்பவர்கள் அவர்களிடம், 250 ரூபாய் அதிகமாகச் சேர்த்து 750 ரூபாய் கடன் வாங்கியதாக எழுதி வாங்கிக்கொண்டுதான் அந்த 500 ரூபாயைக் கொடுக்கின்ற நிலை இருக்கின்றது. அது மட்டுமல்ல. அந்த ரூபாயிலேயும் கிட்டத்தட்ட 120 சதவீதம் வட்டியை எடுத்துக்கொண்டுதான் மீதிப் பணத்தைக் கையிலே கொடுக்கின்றார்கள். இப்படி ஒரு பெரிய மோசடியான நிலைமை பல கிராமங்களிலே இருக்கின்றன. இன்றைக்கு கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஒரு சின்ன வட்டிக்கடையை ஒருவர் ஆரம்பிக்கின்றார் என்று வைத்துக்கொண்டால் அடுத்த 3 வருஷத்திற்குள் அவர் 5 கடைகளைத் திறந்துவிடுகிறார். இந்த அளவுக்கு உயர்ந்துவிடுகிறார் என்று சொன்னால் அவர்களுக்கு எங்கே இருந்து பணம் வருகின்றது ? சாதாரண விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் போன்றவர்கள் கொடுக்கின்ற வட்டியை வைத்துத்தானே அவர்கள் இந்த அளவுக்கு உயருகிறார்கள்? ஆனால் வட்டிக்குக் கடன் வாங்குகின்றவர்கள் மேலும் மேலும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள்.

மஹாராட்டிர மாநிலத்திலே 100 ரூபாய் கடன் வாங்கினால் பத்து ரூபாய் கொடுத்தால் போதும் என்று அறிவித்திருப்பதாக எனக்கு ஞாபகம் இருக்கின்றது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அரசாங்கம் 12 சதவீதம் என்று சட்டத்தில்தான் அறிவிக்கின்றதே தவிர வட்டிக் கடைக்காரர்கள் வட்டிக்கு மேலே வட்டி பிறகு அதற்குக் குட்டி என்று மேலும் மேலும் போட்டு கீழே இருக்கக்கூடிய மக்களை சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்த ஆட்சி மாறி வந்தாலும் அரசாங்கம் வட்டிக்கடைக்காரர்களுக்குத்தான் ஆதரவளிக்கிறார்களே தவிர, அவர்களுக்குச் சாதகமாகத்தான் சட்டம் போடுகிறதே தவிர, சாதாரண உழைப்பாளி மக்களின் வறுமையை மேலும் மேலும் அதிகமாகத்தான் ஆக்கிக்

கொண்டிருக்கிறார்கள். இதிலே என்னுடைய யோசனை என்ன என்று சொன்னால் வட்டிக்கடைககாரர்களிடம் சென்று ஏழை மக்கள் தங்கள் பொருட்களை அடகு வைக்காத சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலேயும் கூட்டுறவுச்சங்கங்கள் இருக்கின்றன. கிராம கூட்டுறவு நாணயச சங்கத்தின மூலமாக மக்களுக்குத் தேவையான கடனை, குறைந்த வட்டியில் கிடைக்க அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கப்பந்து : பேரவைத் தலைவர் அவர்களே, பான் ப்ரோக்கர்ஸ் ஆக்ட்டிலே ஒரு சிறிய திருத்தம். 12 சதவீதம் வட்டி வாங்கலாம் என்ற சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இதற்கு முன்னால் வட்டியே கொடுக்க வேண்டாம் என்று என்கிற ஒரு சட்டத்தை கொண்டு வந்தோம். இதனால் பலன் பெற நினைத்தவர்களெல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் ஏமாறுகிற நிலைமை ஏற்பட்டது. இருப்பினும் ஒரு சிறிய திருத்தம் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். பான் ப்ரோகிங் பிசினஸ் செய்ய வேண்டும் என்றால் லைசென்ஸ் வாங்க வேண்டும். அந்த லைசென்ஸ் கொடுக்கக் கூடிய அதிகாரம் ஆர். டி. ஓ.க்குத்தான் இருக்கிறது. அந்த ஆர்.டி.ஓ. லைசென்ஸ் கொடுத்தால்தான் பான் ப்ரோகிங் பிசினெஸ் செய்யலாம். ஆனால் சிட் பண்ட் ஆக்டின் படி ஒரு கரோலாரி ஆக்ட்—அந்தச் சிட் பண்ட் ஆக்ட் 12-வது செக்ஷனில் புதிதாக ஒரு சிட் ஆரம்பிக்க வேண்டும் என்றால் அந்தச் சிட்டின் மொத்தத் தொகை, ப்ரைஸ் அமௌன்ட் எவ்வளவு இருக்கிறதோ, அந்தத் தொகையிலே பாதிப்பணத்தை சிட் பண்ட் ரிஜிஸ்டிரார் இடத்தில் முதலில் ஒப்படைக்க வேண்டும். அதற்குப் பின்னால் அந்தச் சிட் நடத்துகிறவர்களுக்குப் பணம் கொடுக்கமுடியாத நிலைமை ஏற்படுகிறபோது, அந்தச் சிட்டிலே இருக்கிறவர்களுக்கு அவர்களது பணத்திற்குப் பாதுகாப்பு இருக்கிறது. அந்த சிட் ரிஜிஸ்டிராரிடமிருந்து அவர்கள் செலுத்திய பணத்திற்கான ரசிதைக் காட்டி, அவர்கள் தங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அது போன்ற ஒரு பாதுகாப்பு பான் ப்ரோகர்ஸ் ஆக்டில் இல்லை. ஆகையால் இதை சட்ட அமைச்சர் அவர்களின் தனிக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது போன்ற பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், 2 அல்லது 3 லட்சத்திற்கு மதிப்புள்ள நகைகளை அடகுவைத்தால் அவர்கள் பாதுகாப்போடு தங்கள் நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளத் தக்க வகையில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக திருவண்ணாமலையில் அன்புகுமார் என்பவர், ராஜஸ்தானில் இருந்து

1979 ஏப்ரல் 30] [திரு. ரா. மார்க்கபந்து]

வந்தவர், அவர் பான் ப்ரோகிங் பிசினெஸ் நடத்தி வந்தார்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் 3 அல்லது 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை, நகைகளை, அவர்களிடத்தில் ஒப்படைத்து பணத்தைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் திடீரென்று ஒரு நாள் காணாமல் மறைந்து விட்டார்கள். அதற்குப் பின்னால் அந்த நகைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காக பணத்தையும், ரசீதையும் வைத்துக் கொண்டு, திருவண்ணாமலையில் அவர்களிடத்தில் சென்றபோது, அவர்கள் அங்கே இல்லை. பின்னால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல், ஏறக்குறைய 6 அல்லது 7 மாதங்கள் ஆக, பல்வேறு கம்ப்ளெயின்ட் கொடுத்து, கிரிமினல் கோர்ட்டில் சர்ச் வாரான்ட் பெற்றும், அவரைத் தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு ஐ.ஜி. இடத்தில் ஒரு மனு கொடுத்தேன். 2 அல்லது 3 லட்சத்திற்கு மேற்பட்ட நகைகளும், பொருள்களும் அந்த மக்கள் திரும்பப்பெற முடியாமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது என்று ஐ.ஜி.இடத்தில் எடுத்துச் சொன்னேன். ஆனால் அவர் தகப்பனாரும், அவர் சகோதரரும் இங்கே இருக்கிற ஆதம்பாக்கத்தில் ஒரு பான் ப்ரோகிங் பிசினெஸ் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏழைக் குடும்பம் என்பதற்கு அத்தாட்சியாக அந்தச் சீட்டில் அவருடைய தகப்பனார் கையெழுத்திட்டிருக்கிறார். ஐ.ஜி. இடம் மனு கொடுத்து இதை விசாரியுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் டி.எஸ்.பி. தெரிவித்த கருத்து என்னவென்று கேட்டால், அவர்களை அங்கே இருந்து பிடித்து கொண்டு வந்து விசாரிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. அப்படி விசாரித்தால் என்னுடைய வேலைக்கே ஆபத்து வந்து விடும் என்று ஒரு பெரிய போலீஸ் அதிகாரி சொல்கிறார் என்று சொன்னால், அங்கே அந்த நகைகளையும், பொருள்களையும் கொடுத்து விட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகையால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும் போது இப்படிப்பட்ட லீகல் காம்ப்ளிகேஷன்கள் இருக்கின்றன,

[பிற்பகல் 12-40]

Legal implications, the Law Minister will know. What is the plight to which the people are put என்பதை அறிந்து அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று மணி லெண்டர் ஆக்ட் 7 (1)—ன் கீழ் இன்கம்டாக்ஸ் கட்டுகின்றவர்கள் தான் இதை நடத்தலாம் என்று இருக்கிறது, இவர்கள் கொடுக்கின்ற பணம், அல்லது வட்டி எதுவாக இருந்தாலும், இவர்கள் மீது ஏதாவது வழக்கு தொடுத்து வழக்கு மன்றத்திற்கு செல்லுகின்ற போது, The burden must be on them to prove that that amount has come in the account இவர்கள் இன்கம்டாக்ஸ் கட்டுகின்றவர்கள், ஆகவே அவர்கள் காட்டுகின்ற கணக்கை

ஏற்றுக்கொள்கின்ற முறையில் we can take it that it is a genunine account, that the amount could have b en paid என்கின்ற முறையில் சட்டப்பாதுகாப்பை தந்திருக்கிறது அரசாங்கம். அதே நேரத்தில் ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது. இன்கம் டாக்ஸ் கட்டுகின்றவர்கள் மணி லெண்டர்ஸ் தொழில் நடத்து வதற்கு லைசென்ஸ் வாங்குகிறார்கள். ஆனால் வட்டிக்கு கடன் கொடுக்கும் போது, இரண்டு விதமான ப்ரோ நோட்டுகளை வாங்குகிறார்கள். 12% என்று சட்டபூர்வமாக இருந்தாலும் அதிகமான வட்டிகளைத்தான் இவர்களும் வாங்குகிறார்கள். அதை எப்படி கண்டுபிடிப்பது என்பதை அரசாங்கம் பரிசீலித்து கடன் வாங்குகின்றவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து கொடுக்கவேண்டும். இன்கம் டாக்ஸ் கட்டாதவர்களும் மணி லெண்டர்ஸ் லைசன்ஸ் பெற்று கடன் கொடுத்து வருகிறார்கள். சிறிய அளவில் 1000 ரூபாய் 2000 ரூபாய் என்ற அளவில் கடன் கொடுத்து வருகிறார்கள். இவர்களிடமிருந்து கடன் வாங்குகின்றவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். Usurious Loans Act என்றிருக்கிறது. இதில் 15% வரை வசூல் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு சட்டத்தில்... Whether the Usurious Loans Act has been repealed என்பதற்கான புரவிஷனையும் செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, வட்டிக்கடைக் காரர்கள், அடகு கடைக்காரர்கள் சம்பந்தமான பான்-புரோக்கர் சம்பந்தமாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற பில்கள் சம்பந்தமாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே இருக்கின்ற சட்டப்படி அதிகமான வட்டி வாங்கக்கூடாது என்பது அமலில் இருந்து வருகிறது. இப்போது 12% வட்டிக்கு வகைசெய்யக் கூடிய விதத்தில் இந்த சட்டம் வழி செய்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு எந்த விதமான லாபமும் இல்லை. இந்தச் சட்டத்தின் மூலமாக எந்த விதமான நன்மையும் ஏற்படாது என்பதுதான் என்னுடைய கருத்து. ஒருவேளை 12%-க்கு மேல் வாங்குவதை தடுக்கலாம் என்று அரசு தரப்பில் கருதலாம். இப்போது வட்டிக்கு கடன் கொடுக்கின்ற முறையில் கையாள் கின்ற முறையைப் பார்க்கும் போது நிச்சயமாக ஏழைகளை காப்பாற்ற முடியாது என்பதுதான் என்னுடைய வலுவான நம்பிக்கை. கடன் கொடுக்கின்றவர்கள் வெள்ளைத்தாளில் கை யெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். வாங்குகின்ற பணத்தை விட இரு மடங்குக்கு ப்ரோ-நோட் எழுதி வாங்குகிறார்கள். இப்படி பல்வேறு முறைகளை கையாள்கிறார்கள். அதை யெல்லாம் தடுப்பதற்கு எந்த விதமான சட்டமும் இல்லை. இவற்றுக்கெல்லாம் தண்டனைகள் கொடுக்கப்படும் என்றிருந்

1979 ஏப்ரல் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தாலும் இவற்றை கண்டு பிடித்து நிரூபிப்பதற்கு பல சிரமங்கள் இருக்கின்றன, என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே உண்மையிலேயே ஏழைகளை காப்பாற்ற வேண்டும் என்று சொன்னால், இம்மாதிரியான சட்டங்களினால் முடியாது. ஏழை மக்கள் எளிதாக கடன் பெறுவதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அரசே இதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். சாதாரணமாக ஏழை மக்கள் 100 ரூபாய் 200 ரூபாய் என்று வட்டிக்கு கடன் வாங்குகிறார்கள். இந்த அளவுக்கு எளிதாக கடன் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் ஏழைகளை காப்பாற்றுவதற்கு முடியும். நாம் இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம். 500 ரூபாய் வரை கடன் கொடுத்தவர்களையும் காப்பாற்றுகின்ற வகையில் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். இப்படி காப்பாற்றப்படுவதை எல்லாம் பார்த்தால், இது அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராகத்தான் இருக்கிறது.

'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை இப்போது 'பான் ப்ரோக்கர்சின் சிரிப்பிலே இறைவனை காண்போம்,' என்று அரசாங்கத்தின் கொள்கையாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தின் கொள்கை மாற்றப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஏழைகளுக்கு நன்மை கிடைக்கும் வகையிலே இந்தச் சட்டத்தை மாற்றியமைத்துக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த பான் ப்ரோக்கர்ஸ் ஆக்டைப் பற்றி இங்கே பார்ப்போமானால், வட்டி விகிதம் சொல்லப்பட்டிருக்கிறது. வட்டியைப் பொறுத்த மட்டில் 12% என்று அதிகமாக்கி, வசூலிப்பதற்கு வகை செய்யப்பட்டிருந்தாலும் கூட, ரிசர்வ் பாங்கியினுடைய வட்டி விகிதத்தை அனுசரித்து, அரசு அறிவிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே நான் ஒரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். கிராமப் பகுதிகளிலே பெரும்பாலான மக்கள் தங்களுடைய பொருள்களைஅடகு வைப்பார்கள், ஆகவே விவசாயிகளுடைய கடன் நிவாரணத்திற்கு எந்த வட்டி விகிதம் குறைத்து செலுத்தப்படுகிறதோ, அந்த வட்டி விகிதத்தை பான் புரோக்கர்ஸ் ஆக்டுக்கும் அப்ளை செய்ய வேண்டும் என்று நான் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளிலே உரிமம் பெறாமலேயே, லைசன்ஸ் இல்லாமலேயே அடகுக் கடைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரும்பாலான ஏழை எளிய மக்கள் இந்த பான் புரோக்கர்ஸ் என்று சொல்லக்கூடிய அடகுக் கடைக்காரர்களிடம் கடன் வாங்கப் போகிறார்கள். அவர்களுக்கு அரசே கடன் கொடுத்து உதவக்கூடிய வகையில், சிறிய தொகைகளை கடன் கொடுக்கக் கூடிய அளவிலே ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மணி லெண்டர்ஸ் ஆக்ட் சட்டத்தைப் பொறுத்த வரையில் நான் வரவேற்கிறேன். ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்துவிட்டு, இரண்டாயிரம் ரூபாய்க்கு புரோ நோட் எழுதி வாங்கிக் கொள்வார்கள். அதைப்போலவே, வட்டி விகிதம் குறைவாக இருந்தாலும்கூட, மறைமுகமாக அதிகமாக வாங்கிக் கொள்வார்கள். ஆகவே, இதையெல்லாம் செய்தால் கிரிமினல் குற்றம் புரிந்தவர்களாகக் கருதக்கூடிய வகையிலே புரட்சிகரமான இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். வணக்கம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir I am really grateful to the hon. Members Thiruvalargal Krishnan, Uthirapathi, Marghabandu, James and Veluchamy for some of their constructive suggestions, and particularly to Thiru Veluchamy who has lavished some praises on the amendments that have been brought into force in the Amending Bills. The number of suggestions made by Thiruvalargal Krishnan, Uthirapathi and particularly Thiru Marghabandu are welcome. The plea entered into by the hon. Member Thiru James for expansion and availablity of credit facilities for the poorer debtors is a very welcome measure. But I would like to stress on one point, viz., that it is not within my jurisdiction, not within my portfolio. I would plead with the Hon. Minister Thiru K. A. Krishnaswamy to think of some mechanism for making credit facilities available to the poorer people who approach these pawn-brokers for Rs. 5, 10, 15, 20 for very emergent reasons, for reasons of adversity and for reasons which they do not foresee. I enter into the spirit of this plea with as much of a poor man's sympathy as I am capable of or my human nature is capable of.

I am really grateful to some of the hon. Members who have expressed their views on some of the very revolutionary amendments which have been brought into vogue, particularly in the second Bill-The Tamil Nadu Money-lenders (Amendment) Bill, 1979. And we have also made some of these provisions very irksome, hard, inconvenient and perhaps even unwelcome by the money-lenders. That is more for the purpose of, what may be called, out of sympathy or commiseration for the lot of the poorer

borrowers. Some of the suggestions that have been made here will be borne in mind by the Government, and in due course of time they will be examined. Certainly, the Government, should it feel the need for bringing any further amendment for tightening the provisions against the money-lenders and liberalising the provisions for the poorer debtors, that will be borne in mind, and necessary amendments will be taken into consideration.

(பிற்பகல் 12-50)

THIRU R. MARGABANDU: I have mentioned about the pawn-brokers' protection. What about that suggestion?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The hon. Member Thiru R. Margabandhu raised the question about the absconding of Thiru Anbu Kumar and pleaded for provision analogous to the spirit of one provided for in the Chit Funds Act. I think both appear to be *prima facie* same. But I am afraid in the Chit Fund operation there is no security, at least in this Act there is security of debts. Normally no debtor runs away from the place of business. Thiru Anbu Kumar has made himself scarce and absconded from Tiruvannamalai. The law of the land is such the arm of the law is long enough to catch Anbu Kumar even in the far distant Himalayas. So far as the Criminal Procedure is concerned, absolutely there is no ban or bar in getting this Anbu Kumar arrested in any part of India. Even if he has left this country and finds harbour in any other country, in which we have diplomatic relations, under the Fugitive Offenders Act he can be extradited and brought back to Tiruvannamalai and brought to trial and we can compel him to face the charges which are criminal in character.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்க்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி; Sir I move: "That the Tamil Nadu Pown-Brokers (Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 34 of 1979)' be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(உ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1979

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: Sir, I move— 'That the Tamil Nadu Money-lenders (Amendment) Bill, *1979 (L.A. Bill No. 35 of 1979) be taken into consideration.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 16 முடிய பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: Sir, I move— 'That the Tamil Nadu Money-lenders (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 35 of 1979) be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) மாநகரச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் சிவில் வழக்கு நடைமுறை சட்டக் கோவை, தமிழ்நாடு, நீதி மன்றக் கட்டணங்கள், தாவாக்கள், மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir I beg to move that the Presidency Small Cause Courts, the Code of Civil Procedure and the Tamil Nadu Court-fees and Suits Valuation (Amendment) Bill,** 1979 (L.A.Bill No. 24 of 1979), be taken in to consideration.

*1979 ஏப்ரல், 25ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

** 1979 ஏப்ரல் 20ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 30] [Thriu. N. Narayanaswamy]

The Tamil Nadu Court-fees and Suits Valuation Act, 195. (Tamil Nadu Act XIV of 1955) does not apply to proceedings in the Presidency Court of Small Causes, Madras, and the fees payable in respect of the proceedings in the Presidency Court. of Small Causes, Madras, are governed by Chapter X of the Presidency Small Cause Courts Act, 1882 (Central Act XV of 1882). The Government in consultation with the High Court have decided to apply the Tamil Nadu Court-fees and Suits Valnation Act, 1955 (Tamil Nadu Act XIV of 1955) to proceedings under the Presidency Small Cause Court Act, 1882 (Central Act XV of 1882) by amending the said Acts, so that there may be uniformity in the levy of court-fees in all the Courts in this State and to make consequential amendments to the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908).

Sir, I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி '1979ஆம் ஆண்டு மாநகரச் சிறு வழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக் கோவை, தமிழ்நாடு, நீதி மன்றக் கட்டணங்கள், தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.24/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

The Hon. THIRU K. NARAYANASAMY ; Sir, I move — 'That the Presidency Small Cause Courts, Code of Civil Procedure and Tamil Nadu Court-fees and Suits Valuation (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 24 of 1979) 'be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(எ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும்பல் வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு, 1979.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே உறுப்பினர்கள் 27 என்பதை 30 என்றும் பேரவை உறுப்பினர்கள் 18 என்பதை 20 என்றும் மேலவை உறுப்பினர்கள் 9 என்பதை 10 என்றும் திருத்திக் கொள்ள வேண்டுமென்ற திருத்தத்தோடு நான் இதை மொழிகிறேன்:

*தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன் வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.41/1979) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும்:

1. திரு. எம். எம். ஏ. ரசாக்
2. திரு. கே. சௌந்திரராஜன்
3. திரு. கு. வடிவேல்
4. திரு. சு. பழனிசாமி
5. திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்
6. திரு. ஆர். சண்முகம்
7. திரு. எம். பெரியசாமி
8. திரு. எஸ். ஆர். இராதா
9. திரு. செ. இராமலிங்கம்
10. திரு. ஆ. நடராசன்
11. திரு. துரை இராமசாமி
12. திரு. வி. கே. கோதண்டராமன்
13. திரு. மு. அம்பிகாபதி
14. திரு. ம. சுவாமிதாஸ்
15. திரு. ஆர். மார்க்கபந்து
16. திரு. கே. கந்தசாமி
17. திரு. மு. ஆறுமுகம்
18. திரு. எம். ஏ. லத்திப்
19. திரு. இரா. தாமரைக்கனி
20. திரு. ஏகாம்பரரெட்டி

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடை பாதுகாப்புச் சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1979) பேரவையில் எடுத்துக்கொள்ள ஆளுநர் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ஏ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே...

திரு எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவரப்படுகிற சட்டமுன் வடிவு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்ற அடிப்படையிலே சட்டசபையிலே மொழிவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை" சட்ட முன்வடிவு எண் 42/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு திருத்தங்களை திரு. என். சங்கரய்யா, திரு. சோ. அழகர்சாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. ஆர். கிருஷ்ணன் ஆகியவர்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா: I move the following Amendment:

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of Members (List of Members to be given later) to consider the Tamil Nadu Prevention of Cow Slaughter and Animal Preservation Bill, 1979 (L.A. Bill No. 42 of 1979)".

திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப், சேலம் மு. ஆறுமுகம், ஆர். கிருஷ்ணன் ஆகியோர் திருத்தத்தை வழி மொழிந்தனர்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இப்போது நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை அது இன்று அமைந்திருக்கக்கூடிய வடிவத்திலே அதனுடைய பல அம்சங்கள் நாட்டிலே உள்ள விவசாயி

(பிற்பகல் 1-00)

களுக்குப் பயன்படாத காரணத்திற்காகவும் நாட்டிலே இருக்கக் கூடிய மத வழி சிறுபான்மையோர்கள் மற்றும் நலிந்த நிலையிலுள்ளவர்கள் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தினாலும் இன்றைக்கு அது கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய வடிவிலே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதம் முடிவுற்று, நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கக் கூடிய திருத்தம், குறைந்த பட்சம் அவசரப்படாமல் இந்த மாநிலத்திலே உள்ள மக்களுடைய அபிப்பிராயங்களைக் கருத்தில் எடுத்துக்கொண்டு இதைப்பற்றிச் சரியாக மாநில சட்ட மன்றங்களின் கூட்டுப் பொறுக்குக் குழுவிலே விவாதித்து அதன்பிறகு சட்டமாக வர வேண்டும் என்ற எங்களுடைய திருத்தத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் என்ன நிலை எடுக்கிறது என்பதைப் பார்த்துத்தான், அவர்களுடைய பதிலைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகுதான் சட்ட முன்வடிவைப் பற்றி நாங்கள் என்ன முடிவு செய்கிறோம் என்பதைப்பற்றி அறிவிக்க இயலும் என்பதை முதலாவதாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே நான் காலையிலே பேசும்பொழுது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கட்சியும் பற்றி விளக்கத்தைக் கேட்டேன். அப்பொழுது தாங்கள் சொன்னீர்கள், இதை இந்தப் பசுவதைத் தடை மசோதாவின் மீதான விவாதத்தின்பொழுது கேட்கலாம், அப்பொழுது அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் பதில் சொல்ல முடியும் என்று சொன்னீர்கள்.

முதலாவது பிரச்னை என்னவென்றால், இன்றைக்குப் பசுவதைத் தடை என்பது மாநிலங்களுக்கு உட்பட்ட பட்டியலில் இருக்கிறது. அதைப்பற்றி நம்முடைய தமிழ்நாடு சட்டப் பேரவை விவாதிக்கலாம், இங்கேயே சுதந்திரமாக முடிவு செய்யலாம். நம்முடைய அபிப்பிராயத்திற்கேற்றவாறு முடிவு செய்ய நமக்கு உரிமை உண்டு. ஆனால், இந்த உரிமையை எடுத்து, இதையும் மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் பொதுவான பொதுப் பட்டியலில், கன்கரண்ட் பட்டியலில் வைப்பதற்கு, அரசியல் அமைப்புச் சட்டத்தைத்

திருத்த மத்திய சர்க்கார் எடுத்திருக்கும் ஒரு முயற்சியைப் பற்றி, மாநில சர்க்காரின் அதிகார வரம்பைப் பாதுகாப்பதிலே ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கக்கூடிய இந்த அரசாங்கமும்; இந்த அரசாங்கத்தை நடத்தக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும், பாராளுமன்றத்திலே இந்த மசோதா வரும்பொழுது அதை நீங்கள் எதிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே சொன்னேன், பசுவதைக்குத் தடை விதிப்பதைப் பற்றி நம்முடைய அபிப்பிராயம் எதுவாக இருந்தாலும்,—சட்டங்கள் கொண்டு வரலாம், அது வேறு விஷயம்—மாநில அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள பட்டியலில் இருக்கும் பிரச்னையைப் பொதுப் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாநில சர்க்காரின் மற்றொரு அதிகாரம் இழக்கப்படுகிறது என்ற உண்மையை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, அந்த விஷயத்திலே பாராளுமன்றத்திலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தத்தை நிறைவேற்றாமல் செய்ய, ஏனைய இதேபோன்ற கருத்துக்கள் கொண்டு கட்சியினரோடு சேர்ந்து போராடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

ஜனதா அரசாங்கம் சூழ்நிலையின் காரணமாக இப்படிப் பட்ட திருத்தத்தைக் கொண்டு வர விரும்புகிறது. ஆனால், அந்தக் கட்சியிலே உள்ள பிரபல தலைவர்களே கூட—மதுலிமாயி போன்றவர்கள்—இப்படிப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்திற்கான ஒரு முயற்சி தவறானது, இப்படிப்பட்ட முடிவு மத்திய அரசாங்கத்தின் முடிவை ஏற்க விரும்பாத மாநிலங்கள் மீது சுமத்தக் கூடாது என்று மதுலிமாயி போன்ற ஜனதாக் கட்சித் தலைவர்களின் அறிக்கை பத்திரிகைகளிலே வருவதை நான் உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் சொல்லும் பொழுது, காங்கிரஸ் கட்சி—சுவரண்சிங் காங்கிரஸ் ஆதரவு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள்; ஆனால் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறு அந்தத் திருத்தத்திற்கு ஆதரவு அளிக்கக்கூடாது என்று குரலெழுப்பியிருக்கிறார்கள். சுவரண்சிங்கைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சி, கேரளாவில் வாசுதேவன் நாயரை முதலமைச்சராகக் கொண்டிருக்கும் கூட்டு அரசாங்கத்திலே பதவியேற்று இருக்கிறது. அந்தக் கூட்டு அமைச்சரவை, இந்த அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வரக் கூடாது, பசுவதைத் தடையைக் கொண்டு வரக் கூடாது என்று அவர்கள்

தான் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, கேரள மாநிலத்திலே கூட்டு அமைச்சரவையின் அங்கமாக வீற்றிருக்கின்ற சுவரண்சிங் காங்கிரஸ் கட்சி தன்னுடைய மாநில சர்க்கார் செய்திருக்கக் கூடிய முடிவிற்கு மாறாக பாராளுமன்றத்தில் இந்த அரசியலமைப்புத் திருத்த மசோதாவிற்கு ஆதரவு அளிக்க முடியுமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி இந்திராகாந்தி அவர்களும்கூட, இதைப்பற்றிப் பத்திரிகை நிருபர்கள் கேட்ட நேரத்திலே, இப்படிப்பட்ட அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதைப் பற்றிக் கேட்ட நேரத்திலே, அதைப் பற்றி இப்பொழுது நான் சொல்வதற்கில்லை, அது என்ன என்பதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் முடிவு செய்ய முடியும். ஏனென்றால் மத்திய அரசாங்கம் நாங்கள் சொன்ன பல யோசனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, திருமதி இந்திரா காந்தி அவர்களே கூறியிருக்கிறார்கள். மேற்கு வங்காளம், கேரளம் போன்ற மாநிலங்களுக்கு உண்மையிலேயே சிக்கல் இருக்கிறது, கஷ்டங்கள் இருக்கின்றன, இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதாலே என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரங்களைப் பாதுகாக்க விரும்பக்கூடிய அகில இந்திய அண்ணா தி. மு. க. சர்க்காரும், கட்சியும் தன்னுடைய சொந்தப் பிரச்னையைப் பற்றி கொள்கை என்னவாக இருந்தாலும் மாநிலங்களுடைய அதிகாரங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே பாராளுமன்றத்திலே இந்தச் சட்டம் வரும்போதும், அதேபோல் அந்தச் சட்டம் அங்கே நிறைவேற்றப்பட்டால் ஒருவேளை, மாநிலங்களுடைய சம்மதத்திற்கு வரும்போதும் இந்த மாமன்றம், அவ்வாறு மாநிலங்களுடைய அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்வதை எதிர்த்து தீர்மானம் ஒன்று காலையிலே விற்பனை வரி சம்பந்தமாக போட்டதைப் போல் போட வேண்டுமென்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே கொண்டு வரக்கூடிய பிரச்னைக்கு வருகிறேன். இந்த மசோதா என்ன கூறுகிறது? 1958–வது வருஷத்திலே நிறைவேற்றப்பட்ட 10 ஆம் தெம்பர் சட்டத்தைத் திருத்துவதற்கு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1958 ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திலே மாடுகள் உட்பட இறைச்சிக்காக வெட்டுவதற்கு 1958-வது வருஷ சட்டம், அதுவும் கால்நடை பாதுகாப்புச் சட்டம்தான் அனுமதி வழங்கியது. அதிகாரம் வழங்கியது. 1958 ஆம் ஆண்டிலேயிருந்து, பசுவை உட்பட மாட்டிறைச்சிக்

1979 ஏப்ரல் 30] [திரு. என். சங்கரய்யா]

காக வதை செய்யலாம் என்று அனுமதி அளித்திருக்கக்கூடிய ஒரு சட்டம் தமிழகத்திலே அமுலில் இருக்கும்போது இந்த 21 ஆண்டுகளிலே எந்தப் பகுதியினரிடமிருந்து இந்த அரசாங்கத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்தது? எந்தப் பகுதியினரிடமிருந்து, அதை மாற்ற வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு கிளர்ச்சிகள் நடைபெற்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இதுவரை எந்த ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த சர்க்காரும், தமிழகத்திலே இதைச் சட்டமாகக் கொண்டு வரவில்லை. பசு வதையைப் பூரணமாகத் தடை செய்யக்கூடிய சட்டத்தை காங்கிரஸ் ஆட்சியும் கொண்டு வரவில்லை. 1958 ஆம் ஆண்டிலே அவர்கள் நிறைவேற்றிய சட்டமே என்ன கூறுகிறது என்றால், இறைச்சிக்காக மாடு உட்பட, அதை வதை செய்வது என்பதை சில குறிப்பிட்ட நிபந்தனைகள்கீழ் அனுமதித்த சட்டம்தான் அமுலில் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியும் அதற்கு ஒப்புக் கொண்டது—ஒன்றுபட்டுள்ள காங்கிரஸ் கட்சி. சொல்வார்கள், 48வது பிரிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினுடைய டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ், கட்டளையிடக்கூடிய கட்டுப்பாட்டிற்காகக் கொண்டு வருகிறோம், என்று. அது, 1951-லேயே குடியரசு சட்டமானதற்குப் பிறகும். 1958ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சிதான் இருந்தது. அந்தக் காலத்திலேயே அவர்கள் இந்த டைரக்டிவ் பிரின்சிபிளை அமுலுக்குக் கொண்டு வருவதைப்பற்றி அன்றைக்கு அவர்கள் இப்படி கருதவில்லை. தாங்கள் இயற்றிய சட்டம் அந்த டைரக்டிவ் பிரின்சிபிளுக்கு உட்பட்டது என்றுதான் அவர்கள் கருதினார்கள்.

ஏன், மாண்புமிகு கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த அன்றைக்கு ஒன்றுபட்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்குள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அன்றைக்கு அதிலே உள்ளடங்கியிருந்தது. அவர்கள் ஆட்சி நடத்திய பொழுது, 1976-வரு ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட வரை இந்தப் பசுவை, வதை செய்வதைப் பூரணமாகத் தடை செய்யக் கூடிய சட்டம் தமிழகத்திலே கொண்டு வரப் படவில்லை. எங்கே கொண்டு வரப்பட்டது என்றால், ஜனாதிபதி ஆட்சி நடக்கும்போதுதான் ஒரு நிர்வாக உத்தரவின் மூலமாகச் செய்யப்பட்டது. ஒரு நிர்வாக உத்தரவில் மூலமாக மக்களைக் கலந்தாலோசிக்காமல், ஜனாதிபதியினுடைய ஆட்சி நடைபெற்ற காலத்திலே செய்யப்பட்டதே தவிர, 1946 ஆம் வருஷத்திற்கு முன்பிருந்தே தொடர்ந்து மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி செய்த அரசாங்கங்கள், இப்படி பூரணமாகத் தடை செய்வதை ஒருபோதும் சட்டமாகக் கொண்டு வரவில்லையென்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அப்படியிருக்கும்போது, நீங்கள் ஜனங்களுடைய கணிப்பு எடுத்தீர்களா? அன்றைக்கு மாண்புமிகு

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 30

முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், ஒரு சின்ன விஷயத்திலே இராமநாதபுரம் ஜில்லாவை, எவ்வாறு பெயர் வைப்பது என்று அபிப்பிராயம் இருந்தால், மாறுபட்ட கருத்துக்கள் இருந்தால், தேவையானால், அந்த மக்களுடைய மத்தியிலே ஒரு வாக்கெடுப்பு நடத்துவோம் என்று சொன்னார்கள். இவ்வளவு ஜனநாயக ரீதியாக அந்த ஒரு பிரச்னையிலே கூட நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்ன முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட இந்த அரசாங்கம் கோடிக்கணக்கான மக்கள், மதவாழ் சிறுபான்மையோர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், அது மட்டுமல்ல, இந்துக்களிலே நலிந்த நிலையிலே இருக்கக்கூடியவர்கள் தங்களுடைய உணவுக்காக மாட்டிறைச்சியை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழ்நாடு கண்டறிந்த உண்மை. அப்படியிருக்கும்போது, அவர்களுடைய உணவுப் பழக்கத்தைத் திடீரென்று அடியோடு மாற்றி இந்த மாநிலத்திலே அல்லது, இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இந்து மதத்தைச் சேர்ந்த, இன்றைக்கு உயர் ஜாதிக்காரர்கள் பின்பற்றக்கூடிய அதே உணவுப் பழக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திணிப்பது இன்றைக்கு..

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் பசுவதை தடை மட்டும் தானேயொழிய மாடு வதை தடை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. என். சங்கரய்யா: அந்தப்பசுவதை தடையைத்தான் நான் எதிர்க்கிறேன் என்பதை கூற விரும்புகிறேன். இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமே அதற்காகத்தான். ஆகவே அதைத்தான் நான் எதிர்க்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே இருந்தாலும், அவர்களால் முன்னாலே ஆளப்பட்ட காங்கிரஸ் கட்சிதான். அவர்கள் ஆட்சி நடத்திய காலம் வரைக்கும், 1967 ஆம் ஆண்டு வரைக்கும் இந்த பூரணமான பசுவதை தடை செய்யக் கூடிய சட்டத்தை இந்த மாநிலத்திலே கொண்டு வரவில்லை, என்பதை இரண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் யாராக இருந்தாலும் சரி, அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் இன்றைக்கு வரைக்கும் தங்களுடைய ஆட்சிப் பொறுப்பு இருக்கிற வரைக்கும் கொண்டு வர அவசியமில்லை என்று கருதிய ஒரு சட்டத்தை இப்பொழுது இங்கே நாம் பார்க்கிறோம்.

இதனை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இன்றைக்கு இதிலே ஒரு வாக்கெடுப்பு நடத்த தயாரா? தமிழ்நாட்டிலே உள்ள மக்களை பசுவை மாட்டிறைச்சியை பயன் படுத்தக் கூடிய மக்களை தடை செய்யக் கூடிய, தடை செய்ய வேண்டுமென்றிருக்கிற இந்த சட்டத்தை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை தமிழ்நாட்டிலே உள்ள அரசாங்கம் ஒரு வாக்கெடுப்பு நடத்தி அதனுடைய முடிவிற்கு உட்படுவதற்கு தயாரா என்ற கேள்வியை கேட்க விரும்புகிறேன்? காரணம் பல கட்சிகள் இருக்கின்றன. நான் அறிந்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சட்டப் பேரவையில் இல்லாவிட்டாலும் இன்றைக்கு வெளியிலே திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையிலே இந்த பசுவதையை பூரணமாக தடை செய்யக்கூடிய சட்டத்தை எதிர்ப்பதாக கூறியிருக்கிறார்கள். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், யூனியன் முஸ்லீம் லீக்கும் இந்த சட்டத்தை எதிர்ப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களின் பின்னாலே இருக்கக்கூடிய மக்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் கிடைக்கக் கூடியது கணிசமான மக்களின் எண்ணிக்கை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். இந்த எதிர்ப்புகளையெல்லாம் நீங்கள் புறக்கணித்து இன்றைக்கு இங்கே இதே நேரத்திலே ஒரு சட்டத்தை அவசரமாக கொண்டு வருவதற்கான காரணம் என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன். பிரச்னையைப் பார்ப்போம்.

காரண நோக்கு விளக்கத்திலே கூறியிருக்கிறார்கள். கிராம பொருளாதார நலனை முன்னிட்டு என்று கூறியிருக்கிறார்கள். நான் கூறுகிறேன் கிராம பொருளாதார நலனுக்கு இது பாதகமாகும். காரணம் என்னவென்றால், பால் வரண்டுபோன, இழுவை பயனற்ற, கன்று ஈன முடியாத எலாத நிலையை அடைந்த பசுக்களை அந்த கிராமவாசி என்ன செய்ய முடியும்? அவன் சோறு போட்டு வளர்க்கணுமா? அவனுடைய சொந்த தாய் தகப்பன் கிழவனாக ஆகிவிட்டால், கிழவியாக ஆகிவிட்டால் அவர்களையே பாதுகாப்பதற்கு முடியாத நிலைமையில் சிரமத்திலே வாழக்கூடிய நம்முடைய கிராம மக்கள் பயனற்றுப்போன பசுக்களை, உபயோகம் அற்றுப் போன பசுக்களை அவைகள் இயற்கையாக சாகும் வரை அவைகளை வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று நிபந்தனையை விதிப்பது அவர்கள் மீது எவ்வளவு கடுமையான தண்டனையை அவர்கள் மேல் போடுகிறோம் என்று பாருங்கள்? ஆகவே நான் கூறுகிறேன். இது கிராம நலனை முன்னிட்டது அல்ல. அது மட்டும் அல்ல, இன்றைக்கு இதற்காக ஒன்று சொல்கிறார்கள். பசு பாதுகாப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்போகிறோம் என்று பிரிவு 18 லே கூறியிருக்கிறார்கள்.

நண்பர் ராஜேஸ்வரராவ் சொன்னார்கள் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய பொது செயலாளர். விஜயவாடாவில் கூறியிருந்தார். அப்படி என்றால் இன்றைக்கு இயலாமல் போய் விட்ட பசுக்களை, பயனில்லாமல் போய்விட்ட பசுக்களை விவசாயிகளால் காப்பாற்ற முடியாது. அவன் அவைகளுக்கு தீனி போட முடியாது. ஆகவே அவைகளை ஆச்சார்யா வினோபாபாவேவினுடைய ஆசிரமத்திற்கோ அல்லது இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய அரசாங்கத்தினுடைய வாசலிலோ கொண்டு போய் நிறுத்துவதை தவிர வேறு வழி இல்லை என்று கூறியிருக்கிறார். ஆகவே மாடுகள் எந்த வேலைக்கும் பயன்படாத நிலைமையில் அவைகளை அரசாங்கமே வைத்து பாதுகாக்க வேண்டும், இயற்கையாக அவைகள் சாகும் வரைக்கும். அதற்கு பதிலாக என்ன சொல்கிறார்கள். நிறுவனங்களை வைத்து பராமரிப்பதற்கு வழி வகைகள் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அடுத்தாற்போல் என்ன சொல்கிறார்கள்? அந்த நிறுவனத்தை பராமரிப்பதற்கு கட்டணத்தை விதிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியைப் பறித்தாற் போல் என்கிற மாதிரி. பயனற்ற மாடுகளை பாதுகாப்பது மட்டும் அல்ல, ஏதாவது ஒரு நிறுவனத்திலே கொண்டு வந்து சேர்த்தால் அதற்கு கட்டணமும் செலுத்த வேண்டும். அதிலே ஆக வைட்டிருக்கிறார்கள். சாமர்த்தியமோ என்னமோ தெரியவில்லை. யாரிடத்திலே வாங்கப் போகிறார்கள் அந்த கட்டணத்தை? நாட்டு மக்கள் மத்தியிலா நாட்டு மக்கள் முழுவதிலுமே அந்த தண்டனையைப் போட்டு அந்தப் பராமரிப்பு செலவுகளை வாங்கப் போகிறார்களா? அல்லது யாருடைய பசு கொண்டு வந்து சேர்க்கப்படுகிறதோ அவர்களிடத்திலேயிருந்து அதை வாங்கப் போகிறார்களா, அப்படி வாங்குவது நியாயமா என்று கேட்கிறேன்.

அது மட்டும் அல்ல இன்றைக்கு கட்டணத்தை வாங்கி அப்படி எத்தனை மாடுகளை நீங்கள் காப்பாற்ற முடியும். இப்பொழுதே மாடுகள் எல்லாம் தீனி இல்லாமல் போஸ்டரை கிழித்து சாப்பிடுகின்றன. துணியைக் கிழித்து சாப்பிடுகின்றன, ரோடுகளிலே இருக்கிற குப்பை கூளங்களை தின்றுக் கொண்டிருக்கின்றன. இது ரொம்ப கௌரவமான வாழ்க்கையா? பசு பாதுகாப்பா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே பொருளாதார ரீதியிலே பார்த்தால் இந்த வாதங்கள் எல்லாம் அடிபட்டு போகக் கூடிய வாதங்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அடுத்தபடியாக சில விவரங்கள் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. 12 வயதிற்கு மேலான...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் பேச வேண்டும் எல்லாக் கட்சிக்காரர்களும் பேசவிருக்கிறார்கள்.........

1979 ஏப்ரல் 30]

திரு. என். சங்கரய்யா : இன்னும் கொஞ்சம் தான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சங்கரய்யா, நீங்கள் அரை மணி நேரம் கூட பேசுவீர்கள், நேரம் இல்லை அதனால் சுருக்க மாக முடித்துக் கொள்ளுங்கள் என்று கேட்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : சுருக்கமாகவே பேசுகிறேன். அரசாங்கத்தினுடைய பதிலை பொறுத்துத்தான் இருக்கிறது. அடுத்து 12 வயதிற்கு மேலான எருமைகள், பெண் எருமைகள் இவைகளை வெட்டுவதற்கு இந்த சட்டம் வகை செய்கிறது. ஆகையால் என்ன அர்த்தம் என்றால், எருமைகளை பொறுத்த வரைக்கும் வெட்டலாம், அதிலே ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி 12 வயதிற்கு மேல் இருந்தால் வெட்டலாம். ஏன் அதேபோல் பசுவையும் வெட்டலாம் என்று கொண்டுவர வில்லை. அவைகளும் கால்நடைகள் தானே.

நான் கருதிக் கொண்டிருந்தேன். பெரியார் ஈ. வே. ரா. வினுடைய பகுத்தறிவு தலைமைச் சீடர்கள் அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று கருதிக் கொண்டி ருந்தேன். ஆனால் பசுவை மட்டும் வெட்டக் கூடாது என்று சொல்கிறார்கள். ஏன் கோவை நீங்கள் மாதாவாக கோமாதாவாக கருதுகிறீர்களா? மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைப் பொருத்தவரையில் பசுவை மாடு என்று தான் கருதுகிறோம். பசுவை மாதா என்று கருதுபவர்களுடைய, அந்த இந்து மதத்திலே உள்ள பற்றுணர்வு அல்லது வெறியின் காரணமாக அதற்காக பாதுகாக்க வேண்டும் என்று இன்றைக்கு யாராவது சொன்னால் பகுத்தறிவு அடிப்படையிலே செயலாற்றுகிற ஒரு ஆட்சி ஏற்றுக் கொள்ள வேண்டுமா? ஆகவே, பசு வதைத்தடை பொருளாதார நலன் கருதிப் பார்த்தாலும் கொண்டு வருவது பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அதுமட்டுமல்ல, இன்று நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்று மகாத்மா காந்தி அவர்கள் கூட பசுவை காப்பாற்ற விரும்பினார்கள். ஆனால் அவர் 1948 சனவரி மாதம் இறக்கிற வரையில் நேருவிடத்தில் சொல்லி பசு வதையைத் தடை செய்யவேண்டும் என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டதில்லை. ஆச்சார்யாவினோபா பாவே பசுவதையைத் தடுக்க வேண்டும், அதற்காகச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து நிர்ப்பந்தம் கொண்டு வந்து இருக்கிறார். சட்டம் எல்லோ ருக்கும் சமம் என்றுதான் சொல்வார்கள். நாங்கள் உண்ணா விரதம் இருந்தால் தற்கொலை செய்ய முயற்சித்ததாகச் சொல்லி தண்டனை கொடுப்பார்கள். ஆனால் அதுவே ஆச்சார்யா வினோபாபாவே-வாக இருந்தால், அதில் மத்திய சர்க்கார்

தலையிட்டுச் செயல்படும். இதுதான் பாரத ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டு. மத்திய சர்க்கார் செய்து போகட்டும். தமிழ் நாடு அரசாங்கம் ஏன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், தமிழ கத்தில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதரவு தந்து வாக்களித்து இருக்கி றார்கள். அப்படிப்பட்டவர்களின் உணர்வுகளை மதிக்கவேண் டாமா? இன்றைக்கு ஆட்டிறைச்சியின் விலை கிலோ ரூ.18. அது அவர்களால் வாங்க முடியாது. சென்னையில் ரூ. 18. சுற்றுப்புறத்தில் ரூ. 16. இந்த அளவிற்கு அவர்களால் வாங்க முடியாது. ஆகவேதான் மாட்டிறைச்சி வாங்கி சாப்பிடுகி றார்கள். அது கிலோ ரூ. 6-க்குக் கிடைக்கிறது. அதில்தான் புரதச் சத்து இருக்கிறது. அதைச் சாப்பிடக்கூடாது என்று சொன்னால் எப்படி மக்களுக்குப் புரதச்சத்து கிடைக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவேதான் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

பசுவை வதைக்கக்கூடாது. 12 வயதுக்கு மேற்பட்ட எருதுகளை வதைக்கக்கூடாது அனுமதி இல்லாமல். அதற்கு சான்றிதழ் வாங்க வேண்டும். குறிப்பிட்ட பாரத்தில் அப்ளை செய்யவேண்டும். அதற்கு கட்டணம் செலுத்தவேண்டும். 12 வயதுக்கு மேற்பட்ட எருமைகளை இறைச்சிக்காக வெட்ட வேண்டும் என்று சொன்னாலும், அதற்காக கட்டணம் செலுத்தி அனுமதி பெறவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அந்த அளவிற்கு அரசு மக்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். யாராவது அதை கொல்வதற்கு நோக்கமாகக் கொண்டு செய்தால் அவர் குற்றவாளியாக்கப் பட்டு, அதற்கு தண்டனை 3 ஆண்டுகள் வரை பெறுவார்கள். தற்போது ஊரில் இருக்கும் பேக்ஷன் உங்களுக்குத் தெரியும். யாராவது ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் ஒரு மாட்டுக்கு காயம் பட்டு விட்டது என்று சொன்னாலும் கூட அவர் பேரில் கேஸ் போடுவதற்கு வழி வகுக்கும். இதனால் ஆயிரக்கணக்கான வழக்குகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுதான் இன்றைக்கு நாட்டில் முக்கியமான பிரச்னை. இந்தக் குற்றத்தைச்செய்தால் அது காக்னிசிபிள் அஃப்ன்ஸ் என்று சொல்லி போலீஸ்காரர்கள் பிடிவாரண்ட் இல்லாமல் பிடிக்கலாம். எத்தனை கொள்ளைக்காரர்கள் நாட்டில் இருக்கிறபோது, அவர்களை பிடி வாரண்ட் இல்லாமல் பிடிக்க முடியாது என்று இருக்கிறபோது, இதற்காக இப்படி ஒருமுறை வைத்து இருப்பது, அதுவும் போலீஸ் கையில் இவ்வளவு பெரிய அதிகாரத்தைக் கொடுப்பது, அது அவர்களுக்கு மிஸ்யூஸ் செய்வதற்கு வாய்ப் பாக ஆகிவிடும். மாநில சர்க்கார் மக்கள் நல்வாழ்வுக்காக திட்டங்களைத் தீட்டினாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் ஓரளவிற்கு என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள், உங்கள் மாதிரி எல்லோரும் பேசினால் இன்று மாலை வரை உட்கார்ந்து இருக்க வேண்டியதுதான்.

திரு. என். சங்கரய்யா : முடித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சி இருந்தது என்று சொன்னார்கள். அங்கே மேற்கு வங்கத்தில் இருக்கும் சர்க்கார் மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட் சர்க்காராக இருந்தாலும், அங்கே இதற்கு முன்பு பல்வேறு முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். திருவாளர்கள் பி. சி. சென், ஏ. கே. முகர்ஜி, காங்கிரஸ் கட்சி சார்பாக எஸ். எஸ். ரே, அவர்கள் எல்லாம் பசு வதையைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள். 1950-ல் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி 14 வயதுக்கு மேற்பட்ட மாடுகள் எல்லாவற்றையும் எடுக்கலாம் என்று கூறினால் போதுமானது என்று கூறினார்கள். அதை அனுசரித்துப் பார்த்தால் போதும் என்று சொன்னார்கள். அவர்கள் எழுதிய கடிதம்—நான் சபாநாயகரின் அனுமதியைக் கேட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

[பிற்பகல் 1–20]

The D. O. letter written by Thiru S. S. Ray:

D. O. No. 768-CM
CALCUTTA,
November 24, 1973.

Dear Shri Singh,

Kindly refer to your D. O. letter No. 29-2/72 LDT, dated the 3rd November, 1973 on the question of legislation prohibiting slaughter of cows.

It was explained by the preceding Chief Ministers P. C. Sen 1966, A. K. Mukherjee 1967 of this State that the existing provision of the West Bengal Animal Slaughter Control Act, 1950 prohibits the slaughter of animals (including cows) other than those who are over 14 years of age and unfit for work or breeding or who have become permanently incapacitated for work or breeding due to age, injury, deformity or any incurable disease. This provision is in consonance with the Article 48 of the Constitution of India. This legislation, it appears, is also in line with the interpretation of the Supreme Court in the case of Md. Hanif Qureshi and other versus the State of Bihar and others (AIR 1958 SC 731) to the effect that 'the protection recommended by this part of the directive is

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 30

confined only to cows and calves and to those animals which are presently or potentially capable of yielding milk or of doing work as draught cattle but does not, from the very nature of the purpose for which it is obviously recommended, extend to cattle which at one time were milch or draught cattle but which have ceased to be such."

It had also been explained that a total ban of cow slaughter, is, in our view, sure to lead to an unnecessary increase in total bovine population with the result that unless animals would strain the already slender resources of cattle feed. This will not only undermine the capacity of the useful animals and productive cows but will also be detrimental to organising animal husbandry on modern and scientific lines, hitting in particular, the crossbreed programme for cattle development.

It will also be difficult to meet the demand of the beef-eating population in this State, who are considerable in number, and who will, in that event, be turning to non-beef meat, fish, etc., the supply of which is already inadequate to meet the demand. This would further minimise the level of nutrition and would entail adverse public reaction.

In view therefore of the conditions prevailing in the State and considering the matter in all its aspects, I am afraid it will be inopportune to go in at the present moment for a total ban on slaughter of cow in this State.

I hope you will kindly appreciate the position.

With regards,

Yours sincerely,

(Sd.) S. S. Ray.

Prof. Sher Singh,
Professor of State,
Ministry of Agriculture,
Government of India,
Krishi Bhavan, New Delhi.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காங்கிரஸ் கட்சி முதலமைச்சர் இதை எழுதியிருக்கிறார். மேற்கு வங்கத்தில் அவ்வப்போது வருகின்ற முதலமைச்சர், அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்தக் கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு ஜனதா அரசாங்கம் சொல்லியிருந்தாலும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சொல்லி விட்டார்கள் என்பதற்காக நீங்கள் இங்கே சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதில்

1979 ஏப்ரல் 30] [திரு. என். சங்கரய்யா]

12 வயதிற்கு மேற்பட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். 12 வயதிற்கு மேற்பட்ட அந்த பசுக்களை இன்றைக்கு வதை செய்வதற்கு தடை இல்லை என்று ஒரே ஒரு 'கிளாசை' நீங்கள் சேர்த்தால் போதும். அப்போதுதான் நாங்கள் இதில் ஒரு முடிவுக்கு வரமுடியும். இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிற மாதிரி இந்த பில்லை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. இறுதியில் அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னால், அரசாங்கம் என்ன முடிவை எடுக்கிறது என்று பார்த்து, எங்களுடைய நிலையைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பசுவதை பற்றிய சட்டத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

முதலிலே மத்திய அரசு இந்த பசுவதை சம்பந்தமான சட்டத்தை, அவர்கள் பொதுப் பட்டியலிலே இணைக்க இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, மத்திய அரசின் போக்கை மாநில அரசு எதிர்க்கிறது என்ற அடிப்படையிலே இந்த சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் வருவதற்கு காரணமே, மத்திய அரசும் மாநில அரசும் இதிலே முனைப்பாக இருப்பதற்கு காரணமே, ஒரு பெரியவர் உண்ணாவிரதம் இருந்தார் * *; வினோபாஜி என்று பெயர்* *. அதனுடைய விளைவாக இது வந்திருக்கிறது. தீவிர நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியினர் சொன்ன நேரத்தில் எல்லோரும் மனம் உவந்து நிலத்தை அளித்து விடுவார்கள் என்று ஒரு பாதப் பிரயாணத்தை நடத்தினார். எல்லோரும் கொடுத்தார்கள். எப்படிப்பட்ட நிலத்தைக் கொடுத்தார்கள்? சுடுகாட்டு நிலத்தையும், கடல் நீர் புகுந்த நிலத்தையும், விவசாயத்திற்கு பயனற்ற நிலத்தையும் கொடுத்தார்கள்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், திரு. அம்பிகாபதி அவர்கள் பேசும்போது ஒரு பெரியவர் உண்ணாவிரதம் * * * அவருடைய பெயர் * * என்று சொல்வது அவரை கேலி செய்வதுபோல் இருக்கிறது. ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு பெரியவர் உண்ணாவிரதம் * ' * அவர் பெயர் * * என்று சொன்னதை ஒரு பெரியவர் உண்ணாவிரதம் இருந்தார், அவர் பெயர் வினோபாஜி என்று திருத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : எனவே, இப்போது இந்த மாட்டையும் பசுவையும் காக்கமுயற்சிகள் நடக்கிறதே, பந்து நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்களே, அப்போது எங்கே போயிருந்தார்கள். வெண்மணியில் 44 பேர் உயிரோடு எரிக்கப்பட்டிருக்கிறார்களே, அப்போது இந்த பசுவைக் காக்க புறப்பட்ட பரமாத்மாக்கள், சத்திய சீலர்கள் என்ன செய்தார்கள். பசுவைக் காக்க வருகின்றது சட்டம், மனிதனைக் காக்க வரவில்லை. உங்களுக்கு மனிதர்கள் மீது அக்கறையே கிடையாது. பசுவைக் கொண்டுவந்தால் அதற்கு புகலிடங்கள் அளிக்கப்போகிறோம், கட்டணம் அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூடச் சொன்னார்கள். பசுக்களை எல்லாம் கொண்டு வந்துவிடவேண்டும் என்று கூறுகிறீர்களே, பஸ் ஸ்டாண்டிலே இரயில்வே ஸ்டேஷனிலே இலட்சக்கணக்கான பிள்ளைகள் பிச்சை எடுக்கிறார்களே, இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்? மனிதர்களைப் பற்றிக் கவலைப்படாமல் மாட்டைப் பற்றியே கவலைப்படுவது மட்டுமல்ல. அதிலேயும் எருமை மாடு என்றால் கொஞ்சம் இளக்காரம். பசு மாடு என்றால் கோமாதா எங்கள் குல மாதா என்று ஒரு பாட்டுக் கூட உண்டு. ஆனால் அது ஒரு மாடு, பால் கொடுக்கிறது, அதற்கு புல் வாங்கிப் போடவேண்டும் என்கிற புத்தி விவசாயிக்கு உண்டு. இதற்கு சட்டம் தேவை கிடையாது. 10 வயசு 12 வயசு கன்றுகளை மாடுகளை அடிக்க வேண்டும், கொல்லவேண்டும் என்ற புத்தி தமிழகத்திலே எந்த விவசாயிக்கும் கிடையாது. விவசாயிகளையும், பொது மக்களையும் முட்டாள் என்று கருதுகிறீர்களா? அவர்கள் உழுகின்ற மாட்டையும் பால் கொடுக்கின்ற மாட்டையும் அடித்து, வதைத்து துன்புறுத்துகிற புத்தி அதாவது அந்த மனிதாபிமானமற்ற புத்தி மக்களுக்கு கிடையாது. ஆகவே இந்தச் சட்டம் தேவையற்றது. இந்தச் சட்டத்தின் பல இடங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது? பசுவை அல்லது எருமைக் கன்றை வெட்டுவதற்குத் தடை. இதற்கு மாறாக எந்த ஒரு சட்டமும், வழக்காறும் கிடையாது. ஆகவே, எந்த ஒரு நபரும், பசுவை அல்லது எருமையை வெட்டக்கூடாது, வெட்டுமாறு செய்யக் கூடாது, வெட்டுவதற்கு வழங்கக்கூடாது, அல்லது வெட்டுவதற்கு வழங்குமாறு செய்யக்கூடாது. தொழிலாளி வேலை நிறுத்தம் செய்தால், அதைத் தூண்டினால், அதை ஆதரித்தால்,

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

என்று சொல்லப்படுமே அதே பாணி. இவன்தான் இந்த மாட்டை வெட்டக்கொடுத்தான் என்று எவனாவது சொன்னால் அதாவது ராமசாமிதான் இந்த மாட்டை வெட்டுவதற்காக கொடுத்தான் என்று குப்புசாமி சொன்னால் ராமசாமி 3 வருஷம் உள்ளே போகவேண்டும். ஏனென்றால் உங்களுக்குத்தான் தண்டனையைக் குறைத்துக்கொடுக்கவே தெரியாதே. குடித்தால் 6 மாதம், மறுபடியும் குடித்தால் ஒரு வருஷம், வேலை நிறுத்தம் செய்தால் 6 மாதம், மறுபடியும் வேலை நிறுத்தம் செய்தால் ஒரு வருஷம், அதேபோல் பசுவை வெட்டுவதற்கு விற்றால் 3 வருஷம், ஆயிரம் ரூபாய் அபராதம். இப்படிப்பட்ட சட்டங்கள் என்ன பண்ணும்?

மாண்புமிகு தோழர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இந்த மாட்டை வெட்டுவதற்கு லைசன்சு வாங்கவேண்டும் பாரத்தில். லஞ்சத்தின் ஆரம்பமே அங்குதான். லஞ்சம் துவங்கியாச்சு. அதை வெட்டுவதற்கு அனுமதி வேண்டுமா 100 ரூபாய், 50 ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற நிலை ஏற்படும். ஒருவரும் வெட்டமுடியாது, பாரத்தைத் தூக்கிக் கொண்டு அலைந்து கொண்டிருக்கவேண்டியதுதான்

திரு. இ. ரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுகின்ற போது பசுவை வெட்டுவதை ஆதரித்துப் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசு மாட்டுக் கறியைச் சாப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: நான் மாட்டுக்கறியும் சாப்பிட்டிருக்கிறேன், பன்றிக் கறியும் சாப்பிட்டிருக்கிறேன். மனிதக் கறியைத் தவிர சகலவற்றையும் சாப்பிட்டவன் நான்.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களின் பதிலைக் கேட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஏற்றுக் கொள்கிறாரா? இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்பதை ஆதரிப்பாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: எனவே இன்றைக்கு இந்திய அரசின் ஜனநாயக, மதச்சார்பற்ற தன்மைக்கே புதை குழி தோண்டப் பட்டிருக்கிறது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய மதிப்பிற்குரிய தோழர் எம். கே. கிருஷ்ணன் அவர்கள் முந்தாநாள் சென்னையில் ஒரு அறிக்கை கொடுத்திருந் தார்கள். எங்கள் கட்சியின் தலைவர், தோழர் திரு. ராஜேஸ்வர ராவ், ஜெனரல் செகரட்டரி ஆப் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் இண்டியா, அவர்கள் விஜயவாடாவிலே ஒரு அறிக்கையிலே குறிப்

பிட்டிருக்கிறார். அதாவது மேய முடியாத மாடுகளை விரட்டிக் கொண்டு போய் வினோபாஜி வீட்டில் விடுங்கள் என்கிறார். அல்லது இந்த சட்டம் கொண்டு வந்திருக்கின்றோமே இந்த மாடு களையெல்லாம் கோட்டையிலே அடைப்பதா? மனிதனையே பாதுகாக்க முடியவில்லை, மாடுகளைப் பாதுகாப்போம் என்கின்ற வேஷம் இப்போது வந்திருக்கின்றது. நாளைக்கு ஆட்டுப்பாலை தான் மகாத்மா காந்தி சாப்பிட்டார். ஆகையால் ஆட்டை வெட்டக் கூடாது என்று சொல்வார்கள். பிறகு கோழி கூட முட்டை தருகிறது. ஆகவே கோழியை வெட்டக்கூடாது என்று சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இன்றைக்கு மாடு, நாளைக்கு ஆடு, இன்னும் கொஞ்சநாள் கழித்து, காடை, கவ்தாரி, புறா, மைனா எல்லாமே உயிரினங்கள்தானே. இவற்றையெல்லாம் வெட்டக் கூடாது என்று வரும். இப்படிப்பட்ட சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருகிறது. நீங்கள் அதை எதிர்க்கவேண்டுமே தவிர இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்ன அவ்வளவு அவசரம்?

[பிற்பகல் 1-30]

லட்சக்கணக்கான மீனவர்களை பாதுகாக்கின்ற சட்டம் இந்த அவையிலே வரும் என்று அறிவித்தீர்கள். ஏன் வரவில்லை? மத்திய அரசு ஜே.பி.க்கு ஒரு தீர்மானம் போட்டால், இங்கே தீர்மானம் வரும். மத்திய அரசு பூட்டோவுக்கு தீர்மானம் போடவில்லையென்றால், இங்கேயும் தீர்மானம் வராது. இன்டஸ்ட்ரியல் ரிலேஷன்ஸ்சிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, குறைந்தது 6 மாதம் சிறை என்றால், அது உடனே வரும். அதைப்போல்தான் இந்த பசுவதைச் சட்டமும் இருக்கிறது. தந்தை பெரியார் இருந்தால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு இந்த அவையின் நேரத்தை நீட்டிக்கின்றேன். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: இதைக் கன்டினியூ பண்ணவேண்டு மென்றால், அடுத்த செஷனில் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இன்றைக்கு மத்திய அரசு இந்தச் சட்டத்தை பொதுப் பட்டியலிலே கொண்டுவருவதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறது. இதை உங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளு மன்றத்தில் எதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 30] [திரு. மு. அம்பிகாபதி]

அதைப்போல, இந்தச் சட்டமன்றத்தில் பரவலான காரணங்களை இன்னும் சொல்ல முடியும். காரண நோக்கங்கள் என்ன? கிராமப் பொருளாதார நலனை முன்னிட்டு பசுக்கள், எருமைக் கன்றுகள் ஆகியவற்றை இறைச்சிக்காக வெட்டுவதை முழுமையாகத் தடை செய்ய வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிறது. மேலும், எந்தவொரு கால்நடையும் அல்லது பசுவும் மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு இடத்திலிருந்தும் இறைச்சிக்காக வெட்டப்படும் பொருட்டு கொண்டு செல்லப்படுவதும் தடை செய்யப்பட வேண்டியது அவசியம் எனவும் கருதப்படுகிறது என்று சொன்னால், இறைச்சிக்காக கொண்டு போகப்படுகிறதா, உழவுக்காக கொண்டு போகப்படுகிறதா அல்லது பால் கறப்பதற்காக கொண்டு போகிறார்களா என்பதையெல்லாம் எந்த டிகிரியை வைத்துப் பார்ப்பீர்கள்? உங்களுக்கு எப்படித் தெரியும்? ஜோஸ்யமா இந்த அரசு பார்க்கிறது? அப்படியே ஓட்டிக்கொண்டு போகிறவனைப் பார்த்து, வெட்டுவதற்காகவா கொண்டு போகிறாய் சண்டாளா என்று கேட்பார்களா? அப்படி மாட்டை ஓட்டிக்கொண்டு செல்பவன் மீது எந்த முறையில், எந்தச் சட்டத்தில் அவன்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க முடியும்? இவைகளையெல்லாம் பார்த்தால், ஏதோ ஒரு சட்டமாக இருக்குமே தவிர, முறையான, சரியான சட்டமாக இருக்குமா? இந்தச் சட்டத்தை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்ப்பதோடு, இது போலித்தனமான ஏமாற்றுவித்தை, லஞ்ச லாவண்யத்திற்கு இடமளிக்கும் இந்தச் சட்டத்தை எதிர்த்து, இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று வலியுறுத்தி, இப்படிப்பட்ட சட்டம் தேவையற்றது, மக்கள் ஏற்காதது என்று மீண்டும் இதற்கு எதிர்ப்பு கூறி அமர்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு ஆணித்தரமான விவாதத்திற்கு இடையிலே நான் இந்தச் சட்டத்தை வரவேற்கத் துணிகிறேன். ஒரு நல்ல நோக்கத்தோடு பசு வதைத் தடைச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆனால், நம் மாநிலத்தில் மட்டும் தடை செய்தால் மட்டும், அந்நோக்கம் நிறைவேறாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சொல்லுகின்ற காரணத்தை நோக்கும்போது, இதனால் கிராமப் பொருளாதார நலனை முன்னிட்டு மாநிலத்திற்கு வெளியே அனுப்புவதை தடை செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போதே அருமை நண்பர்கள் மாநில எல்லைக்குச் சென்று ஒருநாள் நம் மாநிலத்திலிருந்து வெளியேறும் கால்நடை எத்தனை ஆயிரக்கணக்கில் இருக்கின்றன என்பதை அவர்கள் அறிந்திருந்தால், இந்த அளவில் நிச்சயம் பேசியிருக்க முடியாது. பேசிய நண்பர்கள் எல்லாம், கிராமப் பொருளாதாரத்தில், விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டிருந்தால், நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நம் நாட்டிலே

விவசாயிகள் இன்றைக்கு அதிகமான விலை கிடைப்பதால் கால்நடைகளை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த மாநிலத்தின் எல்லைகளிலே சென்று பார்த்தால், இப்படி ஆயிரக்கணக்கான மாடுகள் வெளி மாநிலங்களுக்குச் செல்வதைப் பார்க்கலாம். உதாரணமாக, கம்பம் எல்லையிலே, முணாறு எல்லையிலே, போடி எல்லையிலே, செங்கோட்டை எல்லையிலே, இன்றும் கேரளா எல்லையிலே இன்றைச்கு பல்லாயிரக்கணக்கான மாடுகள் கடத்தப்படுவதைப் பார்க்கலாம். ஆகவே, பெருமளவில் கிராமப் பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு இந்தச் சட்டம் உபயோகப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஏதோ, மத்திய சர்க்கார் கொண்டு வந்துள்ளார்கள் என்பதற்காக எதிர்க்கவேண்டும் என்று சொல்கிறார்களே தவிர, இந்த சட்டத்தைப் பார்த்தால் பொருத்தமாக இருக்கிறது. வேறு வகையில் உங்கள் வாதத்தை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னால், மத்திய சர்க்கார் உங்களுடைய எதிர்ப் புணர்ச்சியை காண்பதற்கு அது பலன் அளிக்கும். அந்தக் காலத்தில் அடிமாடு என்றால் வயதான, விவசாய வேலைக்கு லாயக்கில்லாத மாடுகள் மட்டுமே விற்கப்பட்டன, அடிக்கப்பட்டன. ஆனால், இப்போது நல்ல பசுக்களை எல்லாம் அடிமாடுகள் என்று சொல்லி வெளிமாநிலத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றன. இன்று நல்ல இளம் காளைகளும், நல்ல பசுமாடுகளும் கூட கேரளாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதை காணும்போது, மிகவும் அச்சம் ஏற்படுகிறது. அங்குள்ளவர்களின் தேவைக்கு மட்டுமில்லாது டின்களில் அடைத்து வெளிநாட்டிற்கு எற்றுமதி செய்து அனுப்பவும் இவை பெருவாரியான அளவில் கொல்லப்பட்டு வருகின்றன. கால்நடைச் செல்வம் பொது, விவசாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமான சாணத்திற்கு மிகவும் பயன்படுகிறது. இந்த அளவில் விவசாயிகளுக்கு உற்ற நண்பர்களாக இருப்பது கால்நடை செல்வம். உங்களுக்கெல்லாம் தெரியும். விவசாயிகள் தங்களுக்கு நல்ல மாடுகள் வாங்கும் போது, நல்ல மாடுகள் என்பதற்கான லட்சணங்களை எல்லாம் பார்த்து அதற்குரிய விலை கொடுத்து வாங்குகிறார்கள். இப்போது மார்க்கெட்டில் எப்படியிருக்கிறது என்றால் எத்தனை கிலோ மாமிசம் இருக்கும் என்று பார்த்து அதற்குத் தகுந்தபடி விலை பேசுகிறார்கள். இந்த மாதிரி போய்க்கொண்டிருந்தால், விரைவில் விவசாயிகளுக்கு உழவுத் தொழிலுக்கே பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

பால் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் பசுவதையை தடை செய்துதான் தீரவேண்டும் என்பதை இதில் அக்கறை உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பழைய ''தமிழ் நாடு அனிமல் ப்ரட்டக்ஷன் ஆக்ட்—1958'' இருக்கிறது. இதையும் இந்த நோக்கத்தின் அடிப்படையில் மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் வெளி

1997 ஏப்ரல் 30] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

மாநிலத்திற்கு பசுக்களை கொண்டு போவதை தடுக்க வழியிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால் இதுவரை ஏன் தடை செய்யவில்லை என்று தெரியவில்லை. அந்த விதத்தில் முன்னாள் உள்ள சட்டத்தால் பயன் இல்லை என்று தெரிந்தால், அதை மாற்றுவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

மேலும், விவசாயிகளுக்கு மாட்டுச்சாணத்திலிருந்து ''கோபார் கியாஸ்' உற்பத்தி செய்வதின் மூலம் வீட்டுக்கு விளக்கு, சமையல் செய்ய அடுப்புக்கு எரிபொருளாக பயன்படும் என்றிருக்கிறது. அதற்கு மீதம் உள்ளதை எருவாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, எல்லா விதத்திலும் விவசாயிகளுக்கு லாபகரமாக இருக்கிறது என்பதை புரிந்துகொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதை நாம் வரவேற்கவேண்டியதுதான். சர்டிபிகேட் வழங்கும் விஷயத்தில் இதில் 'காம்பிடன்ட் அத்தாரிட்டி' என்பது யார் யார் என்பதற்கு முழு வியாக்கியானம் கொடுக்கப்படவில்லை. யார் யார் இந்த தகுதியுள்ளவர்கள் என்பதை தெளிவாக சொல்லிவிடுவது நலமாக இருக்கும்.

ஏதோ வினோபாஜி உண்ணாவிரதம் இருக்கிறார் அதற்காக ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்ற கருத்தைச் சொன்னார்கள் காந்திஜி காலத்தில் நேருஜி காலத்தில் எல்லாம் இது அமலுக்குக் கொண்டு வரப்படவில்லை என்று சொல்லுவது பொருத்தமில்லாத வாதம். அவர்கள் காலத்தில் அவ்வப்போது, நாட்டுக்கு தேவையானதை செய்து கொண்டு வந்தார்கள். அப்போது செயல்படுத்தவில்லை என்ற காரணத்தால் இது விரும்பாத செயல் என்று முடிவுக்கு வருவது தவறு. வினோபாஜி இதை மத நோக்கோடு சொல்லவில்லை. சாதாரண பொது நோக்கோடுதான் தெரிவித்திருக்கிறார். அந்த வகையில் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மனிதர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் எல்லாம் கொண்டு வருகின்ற இந்த நேரத்தில், மிருகங்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது வரவேற்கத் தக்கது. மனிதர்களுக்கு எந்த வகையில் பாதுகாப்பு அவசியமோ அந்த வகையில் மிருகங்களுக்கும் தேவை என்ற அடிப்படையில் இங்கு கொண்டுவரபட்டிருக்கின்ற சட்டத்தை நான் வரவேற்கிறேன். இதற்கு பல பின்னணிகள் இருந்து வந்திருக்கின்றன. மாடுகளை வெளி மாநிலத்திற்கு அனுப்பிவிடுவதால் மாடுகளின் விலை அதிகமாகிக்கொண்டே போகிறது. விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு மாடுகளை பயன்படுத்தமுடியாத நிலையில் மாடுகளின் விலை அதிகமாகிக்கொண்டே போவதால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக இந்தச் சட்டத்தில் செக்ஷன் 12-ன்படி வேண்டிய நடவடிக்கைகளை

[திரு, ரா. மார்க்கபந்து] [1979 ஏப்ரல் 30

மேற்கொள்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று திரு. சங்கரய்யா போன்றவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இங்கு இருக்கின்ற சட்டத்தில் செக்ஷன் 5 (3) (பி) என்பதிலும், 5 (4) என்பதிலும் 12 வயதிற்கு மேற்பட்ட மாடுகளை வெட்டலாம் என்று சொல்லுகின்ற நேரத்தில்.

[பிற்பகல் 1.40]

the animal has become permanently incapacitated for breeding, draught or giving milk due to injury, deformity or any other cause என்று சொல்லப்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அப்படி பாதுகாப்பு இருக்கின்ற காரணத்தினால் அச்சப்பட தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும், இதிலே சிறிய கஷ்டம் இருக்கிறது. செக்ஷன் 9-லே, knowing or having reason to believe that such cattle shall be slaughtered
என்கிற முறையிலே ஒரு ஆபத்தும் இருக்கச் செய்கிறது. விற்கின்றவர்கள் விற்கும்போது, வாங்குகின்றவர் வெட்டுவதற்காக வாங்குகிறாரா அல்லது வேறு எந்த பர்பசுக்கு வாங்குவதாகச் சொல்கிறார் என்பது விற்கின்றவருக்குத் தெரியாது. அப்படி வாங்கிச் சென்றவர், அதை பயன்படுத்துகின்ற வகையிலே அதற்கான தண்டனை விற்கின்றவருக்கு என்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது. அதற்குவேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.

அதே நேரத்திலே, பிஞ்சரபோல் என்ற ஸ்தாபனம் வட ஆற்காடு மாவட்டத்திலேயும் இருக்கிறது. பயனற்ற மாடுகளை அங்கே பராமரிக்கின்ற ஒரு இன்ஸ்டிடியூஷனாக அது இருக்கின்றது. அதுபோன்ற அரசாங்கத்தோடு தொடர்புள்ளவையாகவும், தொடர்பில்லாத நிறுவனங்களையும் இந்த அரசாங்கம் அதிகமாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டால் தான் நீங்கள் வைத்திருக்கின்ற இந்தச் சட்டம் சரியான முறையிலே அமல் படுத்த முடியும்.

வயதான மாடுகளை விற்பதற்கு சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்பது வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால், சர்டிபிகேட் கொடுக்கின்றபோதும், அதனை பரிசீலனை செய்யும்போதும், இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களை,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பிலே ஒரு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த பதில் சரியாக இருக்குமானால், தாங்கள் பேசத் தேவையிருக்காது. ஆகவே, அமைச்சர் அவர்களை அதைச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்தார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது, உறுப்பினர்கள் பட்டியலைப் பின்னர் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், இப்போது நேரம் ஒன்றேமுக்கால் ஆகி விட்டது என்று கருதுகிறேன் இதைட்பற்றி எல்லா முனைகளிலும் விரிவாகப் பரிசீலனை செய்யலாம் என்றும் அரசுகருதுகிறது ஆகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அதாவது கூட்டு பொறுக்குக் குழுவிற்குவிட அரசு தீர்மானிக்கிறது. எந்தெந்த உறுப்பினர்களை இதிலே போடலாம் என்ற பட்டியல் பின்னர் தெரிவிக்கப்பட்டு, பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் களுக்கு தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை உறுப்பினர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாக வேண்டும். மேலவை யிலே இத்தனை உறுப்பினர்கள், பேரவையிலே இத்தனை உறுப்பினர்கள் என்பதை அறிவிக்கவேண்டும். இதைப் பின்னர் சொல்லுகிறீர்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவை, மேலவை ஆகிய இரண்டு மன்றங் களையும் சேர்ந்த 26 உறுப்பினர்கள் இடம் பெறும்வகையில், இக்குழு அமைக்கப்பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அமைச்சர் அவர்கள் 26 பேர்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த எண்ணிக்கை சரியாக வராது? காரணம், பேரவை உறுப்பினர்கள் எத்தனை பேர் இக் குழுவில் இருக்கிறார்களோ, அதில் பாதி எண்ணிக்கை மேலவை உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெறுதல் வேண்டும். ஆகவே, 16 பிளஸ் 8 என்று 24 உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெறும் வகையில் அமைக்கலாம். இதற்கு, அதற்குமேல் பெரியகமிட்டித் தேவையில்லை.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சங்கரய்யா அவர்கள் கொண்டுவந்துள்ள திருத் தத்தில் பேரவை, மேலவை ஆகிய இரண்டு மன்றங்களையும் 24 உறுப்பினர்கள் (பேரவை 16 உறுப்பினர்கள், மேலவை 8 உறுப்பினர்கள்) இடம்பெறும் வகையில் அமைத்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

Mr. SPEAKER: The question is: " That the concurence of Tamil Nadu Legislative Council obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members from the Assembly and 8 members from the council) to consider the Tamil Nadu Preservation of Cow Slaughter and Animal Preservation Bill 1979 (L.A. Bill No. 42/79)" (list of names to be given later).

The motion was put and carrled and the Blil was reffered to Jolnt Select Committee.

பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

உ. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

எ. பேரவையின் நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை 9—2—1979 முதல் கூடியது. கூடிய மொத்த நாட்கள் 59. மாலையில் பேரவை நடந்த நாட்கள் 8. மிக அதிக நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது இதுவே முதல் முறை.

அனுமதிக்கப்பெற்று பேரவையில் விடையளிக்கப்பெற்ற உடுக் குறியிட்ட வினாக்கள் 889. இது இந்த நடப்புத்தொடர்க் கூட்டத் தில் மட்டும் விடையளிக்கப்பட்டவைகள் ஆகும். 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையில் 6,402 வினாக்கள் விடையளிக் கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இந்தக் கூட்டத்தொடரில் மட்டும் விடையளிக்கப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் 889.

திரு. அழகிரிசாமி அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இந்தத் தொடர் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு விடையளிக்கப்பட்ட குறுகிய கால வினாக்கள் 56. முந்திய ஐந்தாண்டுகளில் 41; அனுமதிக்கப்பெற்ற மொத்த துணை வினாக்கள் 2,773.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் — வரப்பெற்ற அறிவிப்புக்கள் 627 இந்தத் தொடர் கூட்டத்தில் மட்டும்; முந்திய ஐந்தாண்டு களில் அதாவது 1971—76 வரை 1,326 தான். அவைக்கு அளிக்கப்பெற்றவை 97; முந்திய ஐந்தாண்டுகளில் 271.

இந்தத் தொடர் கூட்டத்தில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரப்பெற்றவை 424, முந்திய ஐந்தாண்டுகளில் 1,270 ; எடுத்துக் கொள்ளப்பெற்றவை 130; முந்திய ஐந்தாண்டுகளில் 530. அவை உரிமை மீறல் பிரச்சினைகள்—வரப்பெற்ற அறிவிப்புகள் 51, முந்திய ஐந்தாண்டுகளில் அவையில் எடுக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டவை 29; முந்திய ஐந்தாண்டுகளில் 42; அனுமதி மறுக்கப்பட்டவை 19, முந்திய ஐந்தாண்டுகளில் 45; வற்புறுத்தப்படாதவை 2.

மானியக் கோரிக்கைகளுக்கு வரப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் 3,882, அனுமதிக்கப்பட்டவை 3,202.

நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் 44; குழுவுக்கு அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகள் 3.

திரு. சோ. அழகர்சாமி : நாங்கள் பல கேள்விகள் கொடுத் திருக்கிறோம். இந்தத் தொடர் கூட்டம் முடிவுற்றவுடன் அவை காலாவதியாகிவிடுமா அல்லது அப்படியே வைக்கப்பட்டு வருகிற கூட்டத்தின்போது பதில்கள் அளிக்கப்படுமா?

1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் அப்படியே தொடர்ந்து இருக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பதில்கள் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வழக்கம் எப்போதும் கிடையாது.

(5) அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாத காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையைத் தொடர்ந்து நடத்திக் கொடுத்து இன்று இந்த அவை முடிய இருக்கிறது. அவர்கள் மன நிம்மதியோடும் நிறைவோடும் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

''பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால் பேரவை இன்றிலிருந்து மீண்டும் கூடும்'' பேரவை விதியில் 16 (1) இன்படி நாள் குறிப்பிடப்பெறாது ஒத்திவைக்கப் பெறவேண்டும்'' என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிந்து பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது. நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை 1–48 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

156. 1978 ஜூலை 25–ஆம் நாளுக்கும் 28–ஆம் நாளுக்கும் இடையே விழுப்புரத்தில் நடந்த கலவரங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. ஆர். சதாசிவம் விசாரணைக் கமிஷனின் அறிக்கை [1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ்).]

157. தமிழ்நாடு அமைச்சர்கள், பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர் ஆகியோருக்கு ஒதுக்கப்பெற்றுள்ள அரசு கார்கள் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 6 (2) பிரிவில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுப் (பணியாளர் அமைப்பு– I) துறையின் 22-11-1978ஆம் தேதியிடப்பெற்ற 2175ஆம் எண், அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*208, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1979).

*209. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1979).

*210. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1979).

*211. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979).

*212. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கேளிக்கைவரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1979).

*213. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1979).

*214. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1979).

*215. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1979).

* 27-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

1979 ஏப்ரல் 30)

*216. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1979).

217. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (1001 முதல் 1250 வரை).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* 27-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

DU — A 87—35

இணைப்பு I

[607ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 1011—க்கான விடையைக் காண்க.]

வருடம்.	அரக்கோணம் உட்கோட்டம் வருட வாரியாக சாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.	அரக்கோணம் உட்கோட்டம் வருட வாரியாக காங்கு கூலிகளின் சம்பளங்கள்.	வாலாஜா உட்கோட்டம் வருட வாரியாக சாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.	வாலாஜா உட்கோட்டம் வருட வாரியாக காங்கு கூலிகளின் சம்பளங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1972-73	2,88,600	74,300	7,63,100	1,67,300
1973-74	3,97,800	94,200	7,54,000	1,96,000
1974-75	3,44,700	1,13,200	7,35,300	2,00,700
1975-76	4,45,700	1,21,700	8,38,900	2,29,700
1976-77	4,43,700	1,34,700	6,04,900	2,17,100
1977-78	5,85,700	1,52,700	9,32,100	2,59,100
மொத்தம் ..	25,06,200	6,90,800	46,28,300	12,69,900

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 30]

இணைப்பு II.

[..607ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 1027-க்கான விடையைக் காண்க]

தொழில் துறை.

(அ) தமிழ்நாட்டில் தற்போது கீழ்க்கண்டயிடங்களில் உப்பளங்கள் இயங்கி வருகின்றன:—

மாவட்டத்தின் பெயர்.	உப்பளங்கள் உள்ள ஊர்களின் பெயர்.
(1) திருநெல்வேலி	1. தூத்துக்குடி, 2. ஆறுமுகநேரி. 3. வேப்பலோடை.
(2) கன்னியாகுமரி	1. இராஜக்கமங்கலம், 2. தாமரை குளம், 3. தட்டாரிபூவோடை.
(3) இராமநாதபுரம்	1. மாரியூர், 2. மோர்குளம். 3. வட்டாணம்.
(4) தஞ்சாவூர்	1. வேதாரண்யம், 2. அதிராமபட்டிணம். 3. தம்பிக்கோட்டை. 4. நீடுவாசல்.
(5) தென்னாற்காடு	1. மரக்காணம். 2. மானம்பாடி. 3. கடலூர்.
(6) செங்கல்பட்டு	1. கோவளம். 2. செய்யூர். 3. சூனாம்பேடு. 4. எண்ணூர்.
(7) புதுக்கோட்டை	1. காட்டுமாவடி.

(ஆ) அதிக அளவில் உப்பை சேகரிக்கவும், காஸ்டிக் சோடாத் தொழிலில் கச்சாப்பொருளாக பயன்படுத்தப்படும் உப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி சுத்தமான உப்பைத் தயாரித்து வழங்கவும், மழைக்காலங்களில் ஏற்படும் உப்பு விரயத்தைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் செலவைக் குறைக்க 5,000 டன்கள் அல்லது அதற்கும் மேலான அளவில் உற்பத்தியாகும் உப்பை கோபுரங்களாகக் குவித்து வைக்கவும் இயந்திரங்களைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு நவீன முறைகளைப் பெரிய அளவில் அமைந்துள்ள உப்பளங்களில் மட்டுமே இலாபகரமாகப் புகுத்த இயலும். இந்த நவீன இயந்திரங்களை வாங்க மத்திய அரசும் உப்பு நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள வெஸ்டர்ன் இந்தியா மேட்ச் கம்பெனி, வேதாரண்யம். மெட்டூர் கெமிக்கல் அண்ட் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன், மேட்டூர் அணை, தூத்துக்குடி சால்ட் அண்ட் மெரீன் கெமிக்கல்ஸ் லிமிடெட், தூத்துக்குடி மற்றும் மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி, திருப்போரூர் போன்ற பெரிய தொழிற்சாலைகள் அனைத்திலும் மிகவும் சுத்தமான உப்பு விஞ்ஞான ரீதியில் தயாரிக்க மேற்குறிப்பிட்ட நவீன வசதிகள் புகுத்தப்பட்டுள்ளன.

இணைப்பு III.

[618ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 1054—க்கான விடையைக் காண்க.]

1977-78ஆம் ஆண்டில் நாளிதழ்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வ. எண்.	நாளிதழின் பெயர்.	நடவடிக்கை எடுக்கப் பட்ட காரணம்.	அரசு ஆணை நிலை எண், தேதி.
(1)	(2)	(3)	(4)
1.	அலை ஓசை	செங்கல்பட்டு மாவட்ட காவல் துறை குறித்து விரும்பதகாத செய்தி ஒன்றை 28-8-77—ல் வெளியிட்டது குறித்து.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 2187, நாள் 6-10-1977.
2.	அலை ஓசை	அரசு நிதித் துறைசெயலர் குறித்து 8-7-77 அன்று ''இது உண்மையா ரூ. 40 லட்சமும் பழனி தொகுதியும்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அவதூறு செய்தி, மற்றும் 10-7-1977 அன்று ''பழனியில் செலவான 40 லட்சத்தின் பின்னணியில்'' என்ற தலைப்பில் வெளியிட்ட அவதூறு செய்தி.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 2246, நாள் 19-10-1977.
3.	அலை ஓசை	முன்னாள் அரசு உள்துறை செயலர் குறித்து 20-7-1977ல் வெளியிடப்பட்ட அவதூறான செய்தி.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 2257, நாள் 17-12-1977.

வ. எண்.	நாளிதழின் பெயர்.	நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணம்.	அரசு ஆணை நிலை எண்., தேதி.
(1)	(2)	(3)	(4)
4.	கரண்ட் ..	தமிழ்நாடு காவல் துறை குறித்து அவதூறான செய்திகள் அடங்கிய சில பத்திகளைக் கொண்ட கட்டுரை ஒன்றை 2-7-1977-ல் வெளியிட்டதற்காக.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண் 2562, நாள் 19-12-1977.
5.	சிகப்பு நாடா	அரசு தேர்வாணைக்குழு பற்றி அவதூறான செய்தி ஒன்றை 4-8-1977-ல் வெளியிட்டது குறித்து.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 2568, நாள் 20-12-1977.
6.	அலை ஓசை.	தமிழ்நாடு காவல் துறை குறித்து அவதூறான செய்திகள் அடங்கிய சில பத்திகளைக் கொண்ட கட்டுரை ஒன்றை 4-7-1977ல் வெளியிட்டது குறித்து.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 2592, நாள் 24-12-1977.
7.	சிகப்பு நாடா.	முதலமைச்சரின் செயலர் குறித்து அவதூறான செய்தி ஒன்றை 30-12-1977-ல் வெளியிட்டது குறித்து.	அரசு பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை நிலை ஆணை எண். 300, நாள் 15-12-1978.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 30

இணைப்பு IV

[620-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா. எண். 1059-க்கான விடையைக் காண்க.]

மருத்துவமனையில் ஒருவருக்கு மரணம் ஏற்பட்டவுடனேயே நோயாளியின் உடல் அங்கு வந்திருக்கும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த ஊரிலுள்ள உறவினர்களுக்கு மரணச் செய்தியைத் தெரிவித்து 24 மணி நேரத்திற்குள் சவத்தை எடுத்துச் செல்லுமாறும், அவ்வாறு செய்யாவிடில் கேட்பாரற்ற பிணமாக கருதப்பட்டு அவ்விடத்திலிருந்து அது அகற்றப்படும் என்றும் தெரிவித்து ஆள் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தகவல் அனுப்பப்படுகிறது. உறவினர்கள் தொலைவில் உள்ள ஓரிடத்தில் இருந்தால் தந்தி மூலம் இறப்புச் செய்தியைத் தெரிவித்து 72 மணி நேரத்திற்குள் சவத்தை எடுத்துக் கொண்டு செல்லுமாறும், அவ்வாறு செய்யாவிடில் அது கேட்பாரற்ற பிணமாகக் கருதப்பட்டு அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்படும். கேட்பாரற்ற பிணங்கள் பிணவறையில் 72 மணி நேரம் வைக்கப்பட்டிருந்துஅதன் பின் கீழ்க்கண்டவாறு அகற்றப்படும்:—

(அ) இறந்தவர் இந்து சமயத்தினராய் இருந்தால் அந்தப் பகுதியின் நகராட்சி ஆணையருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு. உரியவகையில் எரிக்கப்படுவதற்கு அல்லது புதைப்பதற்கு அவர்களிடம் அந்தப் பிணம் ஒப்படைக்கப்படும்.

(ஆ) இறந்தவர் கிறித்துவ சமயத்தினராய் இருந்தால் உள்ளூர் கிறித்துவக் குருமார்களிடம் தொடர்பு கொண்டு, அவர்களிடம் சவம் ஒப்படைக்கப்படும். இதைப்போலவே இறந்தவர் முஸ்லீம் இனத்தவராய் இருந்தால் அந்தச் சவம் உள்ளூர் சமயத் தலைவரிடம் ஒப்படைக்கப்படும்.

(இ) இறந்தவர் எந்தச்சமயத்தவர் என்பது உறுதிப்படுத்தபடாதபோது அல்லது சமயத்தலைவர்கள் இறந்தவரது உடலை எடுத்துச் செல்ல முன்வராத போது அந்தச் சவம், அப்பகுதி நகராட்சி ஆணையரிடம் ஒப்படைக்கப்படும்.

கேட்பாரற்ற பிணங்கள் நல்ல நிலையில் இருந்தால், அந்தப் பிணத்தை அதிகாரிகள் உடற்கூறு இயல் துறைக்கோ அல்லது நோய்க்குறி இயல் துறைக்கோ மருத்துவக் கல்வி கற்பிக்கும் நோக்கங்களுக்காக ஒப்படைக்கின்றனர். மருத்துவ—சட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட பிணங்களைப் பொறுத்த வரையில், பிண அறுவைச் சோதனை முடிந்த பிறகு, காவலர்களிடமிருந்து வேண்டுகோள் கடிதம் பெறுவதன் பேரில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளிடம் பிணம் ஒப்படைக்கப்படும். காவலர்கள், அதன் பின்னர் அந்தப் பிணத்தை சம்பந்தப்பட்ட நபர்களிடம் ஒப்படைப்பார்கள். காவலர்கள் கொண்டு வரும் வெளியூரைச் சேர்ந்த மருத்துவ—சட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட பிணங்களைப் பொறுத்தமட்டில், பிண அறுவைச் சோதனை முடிந்த பிறகு, காவலரிடம் அந்தப் பிணம் ஒப்படைக்கப்படும். காவலர்கள், அந்தப் பிணத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைப்பார்கள்.

1979 ஏப்ரல் 30]

இணைப்பு V.

[621-ம்] பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 1061-க்கான விடையைக் காண்க.]

கோயம்பத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் 1973-ம் ஆண்டில் துவக்கப்பட்ட காடு வளர்ப்புத் துறை, காடு வளர்ப்புப் பற்றிய பிரச்னைகள் மீது ஆராய்ச்சி மேற்கொண்டது. மரங்களைப் பற்றிய பல்கலைக் கழக ஆராய்ச்சி திட்டங்களோடு யூகலிப்டஸ் மற்றும் சவுக்குமர அபிவிருத்தி பற்றி குறிப்பான ஆராய்ச்சி திட்ட வேலைகளும், பின் இத்துறைக்கு சேர்க்கப்பட்டுள்ளன. காடு வளர்ப்புப்பற்றி கீழ்க்கண்ட ஆராய்ச்சிகள் தற்சமயம் இப்பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன:—

(1) அதிக மகசூல் தரும் யூகலிப்டஸ் மர வகைகளின் வளர்ப்பு முறை பற்றிய படிப்பு.

(2) மூங்கில்கள் மற்றும் சவுக்கு மரங்களின் இன அபிவிருத்தி.

(3) மூங்கில்கள், யூகலிப்டஸ் மற்றும் சவுக்கு நாற்றுகள் இருப்பு பற்றிய வேளாண்மை இயல் கல்வி.

(4) நாற்றங்கால்கள் செய்முறை, மற்றும் சில மர இன விதைகளை முன்கூட்டி பாதுகாப்பது பற்றியதுமான கல்வி.

(5) யூகலிப்டஸ் மற்றும் மூங்கில்கள் பயிருக்கான நுட்ப முறைகள் பற்றிய பிரசார கல்வி.

(6) வெட்ப நிலையில் வளரும் பைன் மரங்களில் ''மைக்கோரிசா'' பற்றிய கல்வி.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VI.

[644-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 1104-க்கான விடையைக் காண்க.]

மைய அரசின் நிதி உதவி பற்றிய விவர அறிக்கை.

வரிசை எண். (1)	நிறுவனத்தின் பெயர். (2)	காரணம். (3)	தொகை. (4)
			ரூ.
1972-1973—			
1	மறைமலை அடிகள் நூலகம், சென்னை-1	நூலக கட்டிடம் கட்ட	10,000
1973-1974—			
2	மறைமலை அடிகள் நூலகம், சென்னை-1	ஷை	8,000
3	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்	நூல்கள் மற்றும் தளவாடம் வாங்க.	30,000
4	காந்தி கலை மன்றம், ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம்.	ஷை	1,500
5	டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் நூலகம், திருவான்மியூர், சென்னை.	ஷை	10,000
6	டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் நூலகம், திருவான்மியூர், சென்னை.	சுவடிகளைப் பதிப்பிக்க	16,215
1974-1975			
7	மறைமலை அடிகள் நூலகம், சென்னை-1	நூலக கட்டிடம் கட்ட	3,000
8	ஷை	நூல்களைக் கட்ட மற்றும் நூல்கள் வாங்க	3,000
9	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.	நூல்கள் மற்றும் தளவாடம் வாங்க.	30,000

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	நிறுவனத்தின் பெயர். (2)	காரணம். (3)	தொகை. (4)
1975-1976—			ரூ.
10	தெலுங்கு மகாஜன சமாஜம், சரஸ்வதி கிரி நூலகம், சென்னை—5.	நூல்களை மற்றும் தளவாடம் வாங்க ..	5,000
11	மறைமலை அடிகள் நூலகம்	ஷை	7,000
12	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம்.	அசிடின் (Acetone) செல்லுலோஸ்(Cellulose) தாள் போன்று நூல்களைப் பாதுகாக்க(lamination work) வேண்டியவற்றை வாங்கவும், தளவாடங்கள் வாங்கவும்	50,000
		தனிப்பட்ட மானியம்.	50,000
13	ஷை	சுவடிகளைப் பதிப்பிக்க	1,00,000
14	ஷை	மறுபதிப்புக் கருவிகள் (Purchase of Reprography Equipments) வாங்குவதற்கு	1,00,000
1976-1977—			
15	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.	அச்சடிக்கும் பகுதி துவங்க	50,000
16	ஷை	நூலக கட்டிடத்தை விஸ்தரிக்க	50,000

TAMIL NADU LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	நிறுவனத்தின் பெயர். (2)	காரணம். (3)	தொகை (4)
1976-1977—			
17	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.	நூல்களை மறுபடியும் கட்டுதல் ..	ரூ. 50,000
18	காந்தி கலை மன்றம் நூலகம், ராஜ பாளையம், ராமநாதபுரம் மாவட்டம்.	நூல்கள் மற்றும் தளவாடம் வாங்க.	1,500
19	பஞ்சாப் அசோசியேஷன், சென்னை-14.	ஷை	8,000
1977-1978—			
20	முஸ்லீம் இளைஞர் மஜ்லீஸ் நூலகம், கடயநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.	ஷை	1,000
1978-1979—			
21	தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.	(அ) நூலகக் கட்டிடத்தை பழுது பார்த்து சீரமைக்க	1,00,000
		(இ) அடுக்ககம் வாங்க	50,000
		(உ) இரசாயனப் பொருட்களும் மற்ற பொருட்களும் வாங்க ..	35,000
		(எ) நுண்படச் சுருள் வாங்க	15,000
		(ஐ) அச்சக சாமான்கள் வாங்க ..	50,000

— ——

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS